In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மிகத் திறவுகோல்

யோகம் ♦ ஞானம் ♦ உபதேசம் ♦ பரிகாரம்



மிஸ்டிக் செல்வம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மிகத் திறவுகோல்

யோகம் - ஞானம் - உபதேசம் - பரிகாரம்

ஆசிரியர் :
மிஸ்டிக் செல்வம்

வசை
வெளியீடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விவர அட்டவணை

நூல்	:	ஆன்மிகத் திறவுகோல்
பொருள்	:	ஆன்மிகம்
தொகுப்பாசிரியர்	:	திரு. மிஸ்டிக் செல்வம்
முதற்பதிப்பு	:	2001
மறுபதிப்பு	:	ஜனவரி 2014
		ஜனவரி 2015
உரிமை	:	மிஸ்டிக் இளைய சகோதரர் பண்டிட் பாலன் panditbalan.blogspot.com
பதிப்பாளர்	:	விதை வெளியீடு, ஈரோடு
மொழி	:	தமிழ்
நூலின் அளவு	:	டெம்மி
மொத்தப் பக்கங்கள்	:	304
கணிப்பொறி அச்சு	:	ஸ்ரீ வராஹி பிரிண்டர்ஸ்
ஆக்கம்	:	மதி நிலையம், சென்னை - 86. போன் : 044 - 28111506
விலை	:	ரூ. 225

All rights reserved. No Part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission of the publishers.

விதை வெளியீடு

வள்ளலார் புத்தக நிலையம்

161, வீரபத்திர வீதி, வ.உ.சி. பார்க் ரோடு,

ஈரோடு - 638 003.

போன் : 0424 - 4020047, 9894304225.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்துரை

திரு. பொ.செல்லப்பா 1937இல் சைவவேளாளர் குடும்பத்தில் பிறந்தார். இராசபாளையத்திலேயே உயர்நிலைப் படிப்பை முடித்தார். தமது 19ஆம் வயதில் தமிழக அமைச்சுப் பணியில் சேர்ந்தார். 26 ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்றினார். இவருக்கு மனைவியும் முனீஸ்வரன் என்ற மகனும் உண்டு. 1960ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமி அன்று ஐந்தருவி சங்கரதனநநதாவிடம் அஜபா காயத்ரி உபதேசம் பெற்றுள்ளார். பின் பல்வேறு ஆன்மிக அன்பர்கள், யோகிகள், சாத்திர வல்லுநர்கள், சித்தர்கள் மற்றும் பலவகை மார்க்க அன்பர்களின் நட்பையும் ஆசிர்வாதத்தையும் பெற்றார். தமிழகம் முழுவதும் இவருக்கு ஆன்மிக நண்பர்கள் உண்டு.

சித்தர்மார்க்கம், அஷ்டகர்மம், அஷ்டாங்கயோகம், மானசயோகம், மூலிகை மர்மங்கள், சூட்சும உலகம், மந்திர இரகசியம், கிரக இய்க்கங்கள், பிரபஞ்சக் கதிர் வீச்சுக்கள், சோதி வழிபாடு, சூரிய வழிபாடு, மதங்களின் வணக்கமுறை, சைவம் ஆகியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். தமது 40 ஆண்டுகளை ஆராய்ச்சிகளைப் பல பத்திரிகைகளில் வெளியிட்டு வருகின்றார். இப்பொழுது இவருக்கு வயது 64.

சென்னை அம்பத்தூர் கன்னையயோகி, திருவொற்றியூர் பரஞ்சோதிமகான், கும்பகோணம் காரைச்சித்தர், பாண்டிச்சேரி பாரிஜாதக் கண்ணன், புரவிபாளையம் கோடிசுவாமிகள், பழனி நடராஜசுவாமிகள், பள்ளதூர் பாலசுப்பிரமணிய சிவாசாரியார், வல்ல நாட்டுச்சுவாமிகள், திருநெல்வேலி க்ணபதிசுவாமிகள், இரவணசமுத்திரம் சர்புதீன்ஹசரத், படப்பை துர்க்கைசித்தர், மயிலாப்பூர் சாந்தா அம்மையார், கோயம்புத்தூர் மகரிஷி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தயானந்தஜோதி, மதுரை குருபதவியாளர் ரெங்காச்சாரி, பவானி வேணுகோபால் சுவாமிகள், திருச்செந்தூர் ஜவ்வாது சுவாமிகள், தட்டார்மடம் சித்தர் செந்தில்குமரன், மூணாறு கணபதி சுவாமிகள், குற்றாலம் குடியிருப்பு பாதர் மைக்கேல், தபசுமலை கௌசிகசுவாமிகள், சாயா அதர்வணவேத விற்பன்னர் சென்னை வி.வி.ஸ்ரீதர்குருஜி, திருக்கண்டீஸ்வரம் சாதுசிவராம், ஆப்பூர் ஓம்நாத சுவாமிகள் ஆகியோர்களின் நட்பையும், அன்பையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுள்ளார். கேரளாவில் திருவனந்தபுரம் ஸ்ரீநாராயணபோத்தி, பூஞ்சார் திருமேனி மித்திரன் நம்பூதிரி, வட்டியூர்காவு குருஜி, மாங்காடு சாந்தானந்தகிரி சுவாமிகள், பூந்துரை சுவாமிகள், சித்தவித்யார்த்தி இராமன் சுவாமிகள், குன்னிக்கோடுதங்கள் ஆகிய கேரளச் சித்தர்களின் ஆசிர்வாதத்தையும் பெற்றவர். இன்னும் பல அருளாளர்களின் ஆசியைப் பெற்றவர். இவரது ஆராய்ச்சியைப் பாராடி காகபுஜண்டர் தர்மலிங்கசுவாமிகள் தனது ஆசிரமத்தில் நடந்த விழாவில் 3.5.96இல் இவருக்கு ஆன்மிகச் செல்வம் என்னும் பட்டத்தை திருவாவடுதுறை குருமகா சன்னிதானம் அளித்தார்கள். உலக ஆன்மிக அன்பர்களிடம் தொடர்பு கொள்ள தொடர்பு கொள்ள இவருடைய பெயரை 'மிஸ்டிக் செல்வம்' என மதுரை ஜோதிடபானு சுப்பிரமணியம் பெயரிட்டு ஆசிர்வதித்தார்கள். இவர் ஸ்ரீசொர்ண பைரவர், சிவப்பராக்கிரமம் என இரு நூல்களை எழுதியுள்ளார்.

இரு நூல்களையும் இவர் உடன் பிறந்த இளைய சகோதரரும், அண்ணனின் வாழ்வில் அக்கறை கொண்டவரும், ஸ்ரீவராகி பிரிண்டர்ஸ் உரிமையாளருமான திரு பண்டிட் பாலன் ஆவார்கள்

இவர்கள் இருவரும் பல்லாண்டு வாழ்ந்து சாதனை பல படைக்க வாழ்த்துகின்றேன்.

நீதிபதி உயர்திரு. என்.கிருஷ்ணசாமி ரெட்டியார்

அண்ணாநகர், சென்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்புரை

நாள்தோறும், உலகில் நீங்கள் காணும் பொருள்கள் பலப்பல, பயன்படுத்தும் பொருள்களின் எண்ணிக்கையோ சொல்லி முடியாதது, ஆனால் இப்பொருள்கள் அனைத்திற்கும் மூலகாரணமான, இவையனைத்தையும் உருவாக்கிய அடிப்படைப் பொருள் யாதெனச் சிந்தித்திருக்கிறீர்களா? அத்தகைய உங்கள் சிந்தனையை எழுப்ப சிறந்ததோர்க் கருவியாக இந்த நூல் அமைகின்றது.

ஆம்; இப்புத்தகத்தின்னுள்ளே, உயிர் உள்ளவை முதல், உயிரற்றவை வரை உள்ள, எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமான 'இறைவனை' நீங்கள் காணலாம். 'இறைவன்' என்பது ஒரு சிறு சொல்தான். ஆனால், அதனைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். அது எவ்வளவு பொருள் பொதிந்த, உயிர் மிக்க சொல் என்பது உங்களுக்குப் புலப்படும். இந்த ஒரு சொல்லே, உலகிலுள்ள பொருள்களின் இரகசியத்தை வெளியாக்கும் திறவுகோலாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு ஆன்மிகச் செயலுக்கு ஓர் திறவுகோலாக அமைந்துள்ளது.

உலக ஆன்மிக உண்மைகளை வெளியாக்கும் நூல் என்பதால், பல உண்மைகளை சுவைமிக்க, மிகத் தெளிவான முறையில், பண்டிதர் முதல் பாமரர் வரை அனைவர்க்கும் பயன்படும்படி எளிய பயிற்சிகளை இந்நூலின் வாயிலாக விளக்கிச் சொல்லி இருக்கிறது.

பரமரகசியம்! பரமரகசியம்! என்று மகான்கள் வெளியிடாமல் மறைத்து வைத்திருந்த ஞானப்புதையல்களை ஆண், பெண் இருபாலரும் தெரியும்படி இனிய வசன நடையில் பல செய்திகள் மிக்க வெளிப்படையாக இந்த நூலில் எழுதப் பெற்றிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலில் அனாவசியமான அடைமொழிகள் ஆசைக்குக்கூட காண்பதரிது. எல்லாம் உபதேசம்! எல்லாம் பயிற்சி! எல்லாம் யோகம்! எல்லாம் ஞானம்! இத்தகைய நூலை மேல் நாட்டில் வெளியிட்டுருந்தால் டாலர் மாரி பொழிந்து எனக்கு! உனக்கு! என்று வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொள்வார்கள். நமது தமிழ் நாட்டில் சர்வமத சகோதரர்களாகிய ஆண்பெண் இருபாலரும் வாசிக்கும்படி சொற்ப விலையில் வெளிவந்து உலாவுவதானது இந்திய மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் பெரும் பாக்கியமேயாகும். ஆன்மிகமாக இதழ்களில் வெளிவந்த செய்திகளை மணிமணியாகத் திருத்தியும், விளக்கியும், விட்டுப்போன பல உபதேசங்களையும் ஞானப் புதையல்களையும் இப் பதிப்பில் அற்புதம்! ஆனந்தம்! என்று கண்களில் ஒத்திக் கொள்ளும்படி எழுதப்பெற்றுள்ளது.

இருபது கட்டுரைகளிலும் இருபது வகையான எளிய பயிற்சிகளை ஆசிரியர் விளக்கியுள்ளார். இதுபோன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்தால் பலருக்கும் பயனுள்ளதாக இருக்கும். தாங்கள் மட்டும் இன்புறாமல் பலரும் இன்பமடைய வேண்டும் என்ற நல்லெண்ணம் தோன்றி பலரையும் இந்த நூலினை வாங்கச் சொல்லி அவர்களும் பலனடையச் செய்யலாம்.

இந்த நூலினை முதல் பதிப்பாக ஸ்ரீ வராகி பிரிண்டர்ஸ் வெளியிட்டது. காப்புரிமை பெற்ற அவர்களிடமிருந்து மறுபதிப்பாக ‘விதை வெளியீடு’ மூலம் மீண்டும் இதனைக் கொண்டு வருகின்றோம். ஸ்ரீ வராகி பதிப்பாக உரிமையாளர் பண்டிட் பாலனும் திரு. மிஸ்டிக் செல்வமும் ஓர் தாய் பெற்றப் பிள்ளைகள் ஆம் உடன் பிறந்தவர்கள் என்பது பலருக்கும் தெரியாது. பண்டிட் பாலனின் முதல் 30 ஆண்டுகளில் பலஆயிரம் நாட்கள் மிஸ்டிக் செல்வம் அவர்களுடனேயே வாழ்ந்துள்ளார்கள். இவர்களின் நூலினை வெளியிடுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

விதை வெளியீடு

ஈரோடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

	பக்கம்
ஆராய்ச்சியுரை	9
1. ஆன்மிகம் என்றால் என்ன?	17
2. அருட்பெருஞ்சோதியும் அய்யப்ப சோதியும்	29
3. மஞ்சள் தரும் மங்கல வாழ்வு	48
4. ஞான மூலிகைகள்	63
5. டேனியலும் சைவ உணவும்	83
6. ஸ்ரீ பைரவர்	102
7. சித்தர்களின் தொடர்பு வேண்டுமா?	120
8. கண்திருஷ்டியா	135
9. ஐம்பொன் பூணூல்	149
10. அலையும் ஆவிகள்	162
11. உங்கள் மனோசக்திக்கு ஓர் பரீட்சை	178
12. அறுசுவை உணவு	193
13. வசிய சூத்திரம்	209
14. நீலாஞ்சனக்கல்லும் நெற்றிக்கண்ணும்	226
15. ஸப்தாஹர்ஷணம்	244
16. வேப்பங்குச்சியும் வருங்காலக் காட்சிகளும்	258
17. காலச் சக்கரம்	276
18. சோடசகலை தியானம்	292
19. உபாசனாசக்தி	296
20. வாசியோகம்	301

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆராய்ச்சி உரை

உலகில் தோன்றிய மனிதன் முதலில் இயற்கையான இடி - மின்னல் – காற்று – இருள் ஆகியவைகளைக் கண்டு பயந்தான். பின் நாகம் மற்றும் மிருகங்களைக் கண்டு பயந்தான். அதனால் அவன் பயம் போக ஒரு வழிபாடு தேவைப்பட்டது. பின் நாகவழிபாடு – மிருகவழிபாடு – மரவழிபாடு – நடுகல் வழிபாடு – விக்கிரக வழிபாடு ஆகியவை தோன்றின. தான் உண்ணும் உணவுகளை அவைகளுக்குப் படைத்து வழிபட்டான். தான் உபயோகிக்கும் ஆயுதங்களைத் தெய்வங்களுக்குக் கொடுத்து அழகு பார்த்தான். நரபலி – மிருகபலி ஆகியவை தாராளமாக வழங்கப்பட்டன. இறந்த முன்னோர்கள் குல தெய்வமாக மதித்து வணங்கப்பட்டனர். இது அனைத்து மதங்களிலும் நடைமுறையில் இருந்தது. பின் எழுத்துஅறிவு – எண்அறிவு – இறைஅறிவு வந்தபின் மந்திரம் – தந்திரம் – யந்திரம், வேள்வி முதலியன உண்டாயின. இதுவும் இன்றளவும் அனைத்து மார்க்கங்களிலும் உண்டு. நம்பிக்கைதான் இவைகளுக்கெல்லாம் அடிப்படை முதலீடு.

நம்பிக்கையாளர்களைப் பற்றி பைபிளிலும் குரானிலும் இந்துமத சாஸ்திரங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது. விவேகானந்தர்கூடத் தன்னம்பிக்கை இல்லாதவன் தான் நாஸ்திகன் எனச் சொல்லியுள்ளார். நாளை நமதே – நாளைக்கு நல்ல காலம் பிறக்கும். ஒளிமயமான எதிர்காலம் நமக்கு உண்டு என எண்ணித்தான் அனைத்து இன்னல்களிலும் எதிர்நீச்சல் போட்டு நம் வாழ்க்கையைத் தொடர்கின்றோம். நம்பினோர் கெடுவதில்லை. ஆனால் நம் கோரிக்கை நியாயமானதாக இருக்க வேண்டும். மனிதன் மண்ஆசை – பொன்ஆசை – பெண்ஆசை உடையவன். அதனால்தான் நாட்டில் வாழ்கின்றான். மேற்படி மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசைகளையும் விட்டவனுக்கு நாட்டில் வேலை இல்லை. காட்டில்தான் தவம் செய்யப் போக வேண்டும். வடக்கிருந்து உயிர்விட வேண்டும். மனிதனை ஊக்கப்படுத்துவது ஆசை. மனிதனுக்கு ஆசை வேண்டும். ஆனால் பேராசை கூடாது. பேராசை பெருநஷ்டம். மற்றும் அவமானத்தில் கொண்டு விட்டுவிடும்.

எனவே தான் நம் முன்னோர்கள் 'ஆசைஅறுமின்கள் ஆசைஅறுமின்கள் ஈசனோடு ஆயினும் ஆசைஅறுமின்கள்' எனக் கூறியுள்ளார்கள். ஈசன் என்பது பரமாத்மா. ஜீவாத்மா, பரமாத்மாக் கொள்கையும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒன்றாகும்.

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கூறியபடி நம் ஜீவாத்மாவான சிறு ஜோதியைக் கொண்டுதான் பரமாத்மாவான அருட் பெருஞ் சோதியை நெருங்க முடியும் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. தன்னை அறிந்தவன்தான் தலைவனை அறிவான். இதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். நான் யார்? எதற்குப் பிறந்தோம்? என்ன சாதித்தோம்? என்ன சாதிக்க இருக்கின்றோம்? கடைசியில் எங்கே போகின்றோம்? என்று தெரியாத நிலையில் இறைவனைப் பற்றிய சிந்தனை எப்படி வரும்? நமக்குள் முடங்கிக் கிடக்கும் சக்திகளை விழிப்படைய வைத்துப் பின் ஆன்மிக வாழ்விற்கு நம்மைத் தயார் செய்து தகுதி ஆக்கிக் கொள்ள வேண்டும். மதம் மனித வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது. இந்து மதத்திற்கும் மற்ற மதங்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மறுபிறவிக் கொள்கைதான். மற்றப்படி கர்த்தரைப் பற்றியும், அல்லாவைப் பற்றியும், சிவனைப் பற்றியும் வரும் வர்ணனைகள், குறிப்புக்கள் அனைத்தும் ஒன்றுதான். நபிமார்கள் சரித்திரமும், நாயன்மார்கள் சரித்திரமும் அப்போஸ்தலர்களின் சரித்திரமும் ஒன்றுபோல் தான் இருக்கும். பாஷையும், இடமும், பெயர்களும் வித்தியாசப்படும். இது தான் உண்மை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதியில் ஆபிரகாமிடமும், இப்ராஹிடமும் பின் சிறுத்தொண்ட நாயனாரிடமும் பிள்ளைக் கறி கேட்டது ஒரே தேவன்தான். ஆதியில் எல்லோரும் அசைவ உணவுதான் சாப்பிட்டுள்ளனர். கொல்லாமை - புலால் உண்ணாமை என்னும் கொள்கை புத்த – ஜைன மதங்களில் இருந்துதான் உருவானது. அக்காலத்தில் அதாவது சிலப்பதிகார காலமான கி.பி. முதலாம் நூற்றாண்டில் மக்கள் முழுமுதற் கடவுளாக இந்திரனை வழிபட்டனர். இந்திர விழாக் கொண்டாடினர். அப்போது வழிபாட்டில் 33 பெண் தெய்வங்கள்தான் இருந்தன. சாதாரண மக்களால் அதிகப் பொருட் செலவில் பெரும் யாகங்கள் செய்ய முடியவில்லை. அதனால் புத்த, ஜைன மதங்களை நோக்கி மக்கள் ஓடினர். அதனால் இந்திரனை வணங்கும் வழிபாடு அழிந்தது. பின் தோன்றிய இதர சைவ – வைஷ்ணவ மதங்களும் சைவ உணவிற்கு முக்கியத்துவம் தந்து ஆகம விதிகளை உருவாக்கினர். இது காலத்தின் கட்டாயமானது! மக்களும் எளிய வழிபாட்டு முறைகளை விரும்பினர்.

தானிய உணவான சைவ உணவை மனிதன் சாப்பிட்ட பின் மனிதன் மிருக சுபாவத்திலிருந்து மீண்டு பகுத்தறிவுடைய மனிதனானான். அதுவரை இறந்த ஆவிகளை வணங்கி வந்தான். பின்புதான் ஜீவாத்மா – பரமாத்மாக் கொள்கையை ஏற்றுக் கொண்டான். மற்ற மதங்களில் அதன் ஆதிகர்த்தா இருப்பார். ஆனால் இந்து மதத்திற்கு ஆதிகர்த்தா கிடையாது. யாரால் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது எனவும் தெரியாது. இது ஒரு சனாதனமதம். இப்படித்தான் இறைவனை அடைய வேண்டும் என்னும் கோட்பாடுகள் கிடையா. இந்துவானவன் சுதந்திரமாக அவன் வசதிக்குத் தக்கபடி ஒரு வழிபாட்டு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அந்நிய மதங்களில் இப்படித்தான் இறைவனை வழிபட வேண்டும் என்ற விதிகள் உண்டு. ஆனால் ஒரு இந்து சரியை - கிரியை – யோகம் – ஞானம் – பக்தி இவற்றில் ஏதாவது ஒன்றின் மூலமும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டவனை அடையலாம் என்பதுதான் சிறப்பான அம்சம். மேலை நாட்டு விஞ்ஞானமும் இந்திய நாட்டு ஆன்மிகமும் இணைந்து இந்தியா விரைவில் ஒரு பெரும் வல்லரசு ஆகும் என விவேகானந்தர் தீர்க்க தரிசனம் கூறியுள்ளார்.

கடந்த நாற்பது ஆண்டாக ஆன்மிக ஆராய்ச்சி செய்து வந்தேன். இரவும் பகலும் காடாக மலையாக அலைந்தேன். ஏராளமான தனிப்பட்ட நபர்களையும், ஆசிரமங்களையும், கோவில்களையும் தொடர்பு கொண்டேன். ஏராளமான நடைமுறைச் செயல்களைக் குறித்தேன். தனிப்பட்ட என்னால் எல்லாவற்றையும் ஆராய ஆயுள் போதாது. அதனால் சிலவற்றை என் நம்பிக்கைக்குரிய நண்பர்களிடம் கொடுத்துப் பரிசோதனை செய்தேன். அந்த ஆன்மிக நண்பர்களின் வாக்கு மூலங்களைப் பெற்றேன். அதன்மூலம் பல உண்மைகள் எனக்குப் புலப்பட்டன. பஞ்சபூத அணுக்களால் உருவானவன் மனிதன். அவன் உடலில் உள்ள மண்தத்துவம், நீர்த்தத்துவம், நெருப்புத் தத்துவம், காற்றுத்தத்துவம், வெளித்தத்துவம் ஆகியவை அவனை ஆட்டிப் படைக்கின்றன. ஒரே மந்திரத்தை மேற்படி தத்துவம் உடைய ஐந்து பேர்களிடம் கொடுத்து ஜெபிக்கச் சொல்ல வேண்டும். அதன் முடிவைக் காண அவர்கள் வெவ்வேறு கால அவகாசம் எடுப்பார்கள். ஆனால் எல்லோருடைய முடிவும் ஒன்றாகத்தான் இருக்கும்.

ஒரு பள்ளியில் ஒரு ஆசிரியர் எல்லோருக்கும் ஒன்றுபோல் பாடம் சொல்லித் தருகின்றார். அவரிடம் படிக்கும் மாணவன் வெவ்வேறு மார்க் பெற்றுத் தேறுவது (அல்) தேறாதது ஆகியவற்றுக்குக் காரணம் அவர்களுடம்பில் வித்தியாசமாக இயங்கும் பஞ்ச பூத சக்திகளே. முதல் மாணவன் ஆகாயத் தத்துவமுடையவன். இரண்டாம் நிலை மாணவன் காற்றுத் தத்துவமுடையவன். மூன்றாம் படியிலுள்ள மாணவன் அக்கினி தத்துவமுடையவன். நான்காம் நிலை மாணவன் ஜல தத்துவமுடையவன். கடைசியாக ஐந்தாம் படியிலுள்ள மாணவன் பிருதிவிதத்துவ மாணவன். மண்ணாக இருப்பான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யார் என்ன சொல்லித் தந்தாலும் ஏறாது. ஒரே தொழிலைச் செய்துவரும் சிலர் வெற்றியடைவதற்கும், தோல்வியடைவதற்கும் காரணம் மேற்படி பஞ்சபூத வித்யாசங்கள். நான் நம்புகின்றேன். அதனால் நீங்களும் இதை நம்புங்கள் எனச் சொல்லவில்லை! எத்தனையோ மார்க்கங்கள் உள்ளன. ஆனால் சில அடிப்படை மனித சக்தியை மேம்படுத்தினால் ஆத்ம சக்தியை நோக்கி அடியெடுத்து வைக்கலாம் என்பது என் உறுதியான கருத்து.

ஸ்ரீமகரிஷி தயானந்த ஜோதி மற்றும் ஸ்ரீஜோதிடபானு சுப்பிரமணியம் அவர்களின் ஆசீர்வாதத்தாலும் திரு. S.S. மணியன் மற்றும் திருமதி கமலிஸ்ரீபால் அவர்களின் ஆதரவாலும் என் கட்டுரைகள் ஞானசிந்தாமணி, ஜோதிடபூமி, ஞானமணி, கோகுலம், கதிர் ஆகியவைகளில் வெளி வந்தன. அவர்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன். என் கட்டுரைகளைப் பல ஆயிரக் கணக்கான அன்பர்கள் படித்துள்ளனர். பாராட்டினார்கள். அவைகளை ஒருங்கிணைத்துச் சற்று விரிவாக்கி வேறுசில தலைப்புகளிலும் எழுதி ஒரே புத்தகமாக வெளியிட வேண்டினர். அதன் பயனாக உருவானதுதான் இந்த “ஆன்மிகத் திறவுகோல்” என்னும் நூல். இதைப்படித்து எம்மதத்தைச் சார்ந்தவர்களும் பயிற்சி செய்யலாம். இதற்குத் தேவையானது அமைதியான இடம். ஏதாவது ஒரு தீபம். ஒரு தூபம் (புகை) மற்றும் ஒரு சிறு செம்புப் பாத்திரத் தண்ணீர். மேற்படி மூன்றும் இருந்தால் பயிற்சியின் வேகம் கூடும். சைவ உணவு விரைவில் பலன் தரும்.

இதில் கொடுக்கப்பட்டுள்ள மந்திரங்கள் மனதைச் செம்மைப் படுத்துவதற்காகத்தான். அனைத்துப் பயிற்சிகளையும் உடனே செய்ய முடியாது. முதலில் கட்டுரைகளைத் திரும்பத் திரும்ப மெதுவாகப் படித்துப் பாருங்கள். உங்களுக்கு எது எளிதாகத் தெரிகின்றதோ அதை முதலில் பயிற்சி செய்யவும். பின்பு மற்ற பயிற்சிகளைச் செய்யலாம். அவசரமே வேண்டாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆரம்பிக்குமுன் உங்கள் தெய்வத்தையோ அல்லது இஷ்ட தேவதையையோ அல்லது விநாயகரையோ வணங்கிப் பயிற்சி செய்யலாம். அமாவாசையில் ஆரம்பிக்கலாம். காலவரையறை செய்ய வேண்டாம். பயிற்சி முடிந்ததும் தண்ணீர் அல்லது பால் சாப்பிடலாம். எளிதான பயிற்சிகள். பயம் கிடையாது. உங்கள் சுத்தப் பிரகாசமான மனமே குரு. மனம் எங்கு ஒடுங்குகின்றதோ அங்கு மூச்சு ஒடுங்கும். மூச்சு எங்கு ஒடுங்குகின்றதோ அங்கு மனம் ஒடுங்கும். இதுதான் உண்மை. நமக்கு வேண்டியதை நம் நியாயமான கோரிக்கைகளை நம் நல்ல எண்ணங்களால் பெறலாம். எண்ணிய எண்ணியாங்கு எய்துப - எண்ணியர் திண்ணியராகப் பெறின் என்பது வள்ளுவர் திருவாக்கு.

இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எளிய ஆன்மிகப் பயிற்சிக் கட்டுரைகள் யாருக்கும் எளிதில் விளங்கும். 18 வயதிற்கு மேல் உள்ள எவரும் பயிற்சி செய்யலாம். தங்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் அருகிலுள்ள வயது முதிர்ந்த சிவாச்சாரியார்கள் அல்லது ஹரிபட்டாச்சாரிகள் ஆகியோர்களிடமும் வேத விற்பன்னர்களிடமும் கேட்டுத் தெளிவு பெறலாம். வேறு வழி இல்லை எனில் எனக்குச் சுயவிலாசமிட்ட ஸ்டாம்ப் ஒட்டிய கவருடன் கடிதம் அனுப்பினால் பதில் எழுதுகின்றேன். அனைத்து ஆத்மாக்களும் ஆன்மநேய ஒருமைப்பாடு அடைய அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வணங்குகின்றேன். வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

தென்காசி
15-10-01

இங்ஙனம்
ஆன்மிகத் தொண்டன்
மிஸ்டிக் செல்வம்
ஆன்மிக ஆராய்ச்சியாளர்
தென்காசி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மிகத் திறவுகோல்

KEY TO MYSTICISM

by

MYSTIC CHELLVAM

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶ்ரீம்

ஆன்மிகத் திறவுகோல்

கடவுள் வாழ்த்து

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

- திருமந்திரம்

ஜீவ வணக்கம்

யாவர்க்குமாம் இறைவற் கொருபச்சிலை
யாவர்க்குமாம் உண்ணும் போதொருகைப்பிடி
யாவர்க்குமாம் பசுவுக் கொருவாயுறை
யாவர்க்குமாம் பிறர்க்கின் னுரைதானே.

- திருமந்திரம்

தவ வணக்கம்

தானமும் தவமும் தான் செய்வராகில்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

- ஔவையார்

மானிட வாழ்த்து

வாழ்க அறமுடன்
வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. ஆன்மிகம் என்றால் என்ன?

உலகத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று விண்ணுலகம். இரண்டாவது மண்ணுலகம். விண்ணுலகத்திலுள்ள வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு மனைவி – மக்கள் - பசி – தாகம் – தூக்கம் – வறுமை – கஷ்டம் – சிரமம் எதுவும் கிடையாது. ஆனால் மண்ணால் படைக்கப்பட்டவன் நிலை என்பது தங்களுக்குத் தெரியும். ஆதி ஆணும், ஆதிப்பெண்ணும் ஆண்டவன் கட்டளையை மீறி நடந்து கொண்டதால் அவர்களுக்குப் பூமியில் பிறக்கச் சாபம் கொடுக்கப்பட்டது. இது அனைத்து மதங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனிதன் அவன் உடலில் உள்ள இருளை நீக்கி ஒளியைப் பரப்பி மீண்டும் தன் யதாஸ்தானமான வானுலகை அடைய வேண்டும். அதுவரை பிறப்பு – இறப்பு உண்டு. முன்பு கல்வி அறிவு எல்லோருக்கும் கிடைக்கவில்லை. அதனால் ஆசாரியார்கள் குருமார்கள் மூலம் அனேக சடங்குகள் செய்தனர். பின் கல்விக் கண் திறந்தவுடன் தாங்களே ஆன்மிகப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இறைவனுக்கும் நமக்கும் இடையில் ஒரு ஏஜென்சி முறை தேவையில்லை என்பது பெரும்பாலோர் கருத்து. அவனருள் இருந்தாலே போதும், அவன்தாள் வணங்கலாம்.

மாமிச உணவு உண்ணுவதால் உண்டாகும் தீமைகள் பற்றி அந்த நாளில் வாழ்ந்தவர்கள் அறியவில்லை. அதாவது மாமிச உணவில் இருக்கும் ஒரு வகையான விசத்தன்மை உள்ள பொருட்கள் புற்றுநோய், இருதய நோய் உண்டாகக் காரணமாக இருக்கின்றன, என்றும் இந்த வகை உணவினாலேயே குடல் சம்பந்தமான புற்றுநோய் வர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாய்ப்புள்ளது என்றும் அசைவ உணவில் உள்ள கொழுப்பானது இரத்தக் குழாயில் படிந்து இரத்த ஓட்டத்தைத் தடைசெய்கிறது என்றும் அதனால் இரத்த ஓட்டம் தடைபடுமானால் இருதயச் செயல் இழப்பு ஏற்படும் என்றும் அவர்கள் அறியவில்லை.

சைவ உணவில் குறைவான கொழுப்புச்சக்தி உள்ளதால் மாரடைப்பு உள்ளவர்கள் எக்கவலையுமின்றி இந்த உணவை உண்ணலாம் என்றும் அவர்களுக்குத் தெரியாது. அதிக மாமிசம் உண்பவர்களுக்குக் குடல் வால் நோய் ஏற்படும் என்றும் அசைவ உணவில் நைட்ரஜன் அதிகமாக உள்ளதால் சிறுநீரகத்திற்கு அதிக வேலை ஏற்படுகிறது என்றும் நைட்ரஜன் அதிகமானால் இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகரித்து மூட்டுகளில் படிந்துவிடும் என்றும் அதனால் இவர்களுக்கு மூட்டுவலி ஏற்படுகின்றது என்றும் அந்தக் காலத்தவர்களுக்குத் தெரியாது. சிலவகையான குடல் புழுக்கள் நமதுகுடலில் உண்டாகின்றன என்றும் அவர்களுக்குத் தெரியாது. மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதமானது சைவ உணவில் முழுமையாகக் கிடைக்கிறது என்பதும் அக்காலத்தவர்களுக்குத் தெரியாது. மனதினைச் செம்மைப் படுத்தச் சைவ உணவு தேவை.

மனதை உடையவன் மனிதன். அந்த மனிதன் மாயைக்கு உட்பட்டு அருளைத் தேடாமல் பொருளைத் தேடுகின்றான். எவ்வகையிலாவது பொருளீட்டி விடவேண்டும் என்பது அவன் எண்ணம். உலகம் என்னும் நாடக மேடையில் சிறிது காலம் அப்பாவாகவும், அம்மாவாகவும், அண்ணனாகவும், மகனாகவும், மகளாகவும், தாத்தாவாகவும், நண்பனாகவும், பகைவனாகவும் நடிக்கின்றான். எதற்காகப் பூமிக்கு அவன் அனுப்பப்பட்டானோ அதை மறந்து விடுகின்றான். இறைவனை எண்ண நேரமில்லை! மனிதனின் கடைசிக் கட்டத்தில் எதை எண்ணுகின்றானோ அங்கு அதுவாக மீண்டும் பிறக்கின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுதான் காலச் சுழற்சி என்பதாகும். இதிலிருந்து விடுபட ஆத்மாவைப்பற்றிய சிந்தனை எழுந்தால் போதுமானது. எல்லோரும் மனதை அடக்க வேண்டும் எனப் பிரசங்கம் புரிவார்கள். மனதை அடக்கினால் மனிதன் செத்துப் போவான். மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்.

ஹிப்னாடிசம் பற்றிக் கேட்டிருப்பீர்கள். மனத்திற்கும் ஹிப்னாடிசத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஒரு வீட்டில் தன் மனைவி எண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றதைக் கண்டநாள் முதல் கணவனுக்கு எவ்வித சிறு நெருப்பைக் கண்டாலும் பயமுண்டாகும், உடல் நடுங்கும். காரணமறியாது பல மருந்துகளைச் சாப்பிட்டார். ஆனால் சிறிதும் பயனில்லை. எப்படியோ கேள்விப்பட்டு எனது நண்பரை அணுகினார். ஒருநாள் அவரை லேசான ஹிப்னாடிச நிலைக்கு உள்ளாக்கி ''இனிமேல் எந்த நெருப்பின் பார்வையும் உனக்குப் பயத்தை உண்டாக்காது'' என்ற கருத்தை மனத்தில் பதித்தார். அவ்வளவுதான், அந்த நொடியிலிருந்து அவர் எந்த நெருப்பைக் கண்டாலும் பயப்படவில்லை. எனது நண்பர் ஆழ்மனச் செயலை நிரூபிக்க ஒருவரை ஹிப்னாடிசத் தூக்கத்துக்கு உள்ளாக்கி ''நாளை 10 மணிக்கு உன் கையில் ஓர் கட்டி எழும்பும், 15 நிமிடங்கள் வலியெடுக்கும், பின் பழுத்து, அரைமணி நேரத்தில் உடைந்து ஒரு மணி நேரத்துக்குள் உலர்ந்துவிடும். பிறகு கட்டி வந்த இடமே தெரியாதபடி கை சாதாரண நிலைக்கு வந்துவிடும்'' என்ற கருத்தை மனத்தில் ஊன்ற வைத்தார். அவனுக்கு மறுநாள் குறித்த நேரத்தில் கட்டிவந்தது, மற்றதும் குறித்தபடி நடந்து முடிந்தது.

எல்லாப் பண்பும் ஒழுக்கமுமுள்ள ஒருவனை ஆழ்மன நிலையில் கிடத்தி ''நாளைக்கு உன் நண்பன் கண்ணனை நீ கன்னத்தில் அறைவாய்'' என்று சொல்லி வைத்தால், மறுநாள் அவன் அப்படியே செய்வான். 'ஏன் இந்தப் பெருந்தவற்றைச் செய்தாய்' என்றால், ''ஏன் செய்தேனென்று எனக்குத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரியவில்லை, நான் தொரியாமலேயே இதைச் செய்து விட்டேன்'' என்று சொல்லுவான். சுய உணர்வில் செய்யாத ஒரு காரியத்தை ஹிப்னாடிச நிலையில் அல்லது ஆழ்மன நிலையில் செய்யும்படி சொல்லி வைத்தால், ஏன்? எப்படி? என்பதைத் தெரியாமலே தன்னை மறந்து அதைச் செய்துவிடுவான். கடுமையான பிரசவ வலியின்போது கர்ப்பிணியை லேசான ஆழ்மன .நிலையில் கிடத்திக் கருத்தைப் பதிப்பதன் மூலம் வலியே இல்லாமல் சுகமாகக் குழந்தையைப் பெறச் செய்யலாம்.

உலகில் ஒரு உயிரும் தனக்குத் தீங்கு வரவேண்டு மென்று நினைக்காது. இப்படி நினைத்துச் செயல்பட்டால் தீங்கு வருமென்று தெரிந்தால் யாருமே அப்படி நினைத்துச் செயல்படமாட்டார்கள். அப்படியிருந்தும் பெரும்பாலான மனிதர்கள் தம் வாழ்வில் தீமையைத்தான் அனுபவிக்கிறார்கள். நினைத்து, அதன்படி செயல்பட்டால் தீமையோ, நன்மையோ வராது. நினைப்போ தீமை வரவேண்டுமென்று எழாது. அப்படியானால் மனதில் தவறான எண்ணங்கள் எழும்ப அடிப்படையாய் இருப்பது வேறு ஏதோ சக்தியாயிருக்க வேண்டும். அது மனதில் நல்ல, தீய பலன்களை அனுபவிக்கவல்ல எண்ணங்களை எழுப்பி, அதன்படி செயல்படச்செய்து, நல்லதையோ கெட்டதையோ அனுபவிக்கச் செய்கிறது. இந்த உண்மையைப் புரிந்துகொள்ள ஓரிரு உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒருவன் எதையோ படித்துக் கொண்டிருந்தான். அதுசமயம் அவன் மனதில் "சற்று வெளியே போய்விட்டு வருவோம்'' என்ற எண்ணமுண்டாயிற்று. அதன்படி அவன் படிப்பதை நிறுத்தி வெளியே சென்றான். சற்றுத் தூரத்தில் ஒரு வாகனம் அவனைத் தாக்கி, பெரிய ஆபத்தை உண்டாக்கி விட்டது. படித்துக் கொண்டிருந்தவன் மனதில் சற்று வெளியே போய்வரலாமென்ற எண்ணம் தோன்றாமல் இருந்தால் இந்த ஆபத்து அவனுக்கு நேர்ந்திருக்காது. ஆபத்தை உண்டாக்கும் மனம், அவனுக்கு எப்படி, ஏன் உண்டாயிற்று?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருவன் தன் பெண் திருமணத்தினுக்குப் பணமில்லையே என்ற கவலையுடன் உட்கார்ந்திருந்தான். அவன் மனதில் சற்று இந்தக் கவலையை மறக்கக் கோவிலுக்குப் போய் வருவோமென்ற எண்ணமுண்டாயிற்று. எழுந்து கோவிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். பின்பு தன் பழைய நண்பன் ஒருவனைச் சந்தித்தான். அவன் இவனைத் தழுவிக்கொண்டு, நலம் விசாரித்தான். பின்பு கவலைக்குக் காரணத்தைக் கேட்டான். முன்னவன் அதைச் சொன்னதும், பின்னவன் தன் கைப்பையைத் திறந்து பத்தாயிரம் ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துக் 'கவலைப்படாமல் சென்று பெண்ணின் திருமணத்தை நல்லவிதமாய் முடி' என்று சொல்லிவிட்டு வேகமாய்ப் போய்விட்டான். மணவிழா நல்லவிதமாய் நடந்தேறியது. குறித்த சமயத்தில் "கோவிலுக்குப் போய் வரலாம்" என்ற எண்ணம் எப்படி அவன் மனதில் தோன்றியது?

இதுபோன்ற ஆயிரமாயிரம் நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்ததன் பயனாக மனோதத்துவ வல்லுநர்கள் கண்டுபிடித்த உண்மை இதுதான். மனதில் எண்ணங்களை உண்டாக்குவன இரண்டு காரணங்கள்: ஒன்று புலன்கள். கண்ணில் பார்த்ததும் இது நல்லது அல்லது கெட்டது என்ற எண்ணம் மனதில் தோன்றுகிறது. காதால் கேட்டவுடன் இது இன்ன ராகம், இதன் பயன் இது என்ற எண்ணம் தோன்றுகிறது. இப்படி ஐம்பொறிகள் மனதில் எண்ணங்களைத் தோற்றுவிக்கின்ற ன. மனம் அப்பொறிகளோடு தொடர்பு கொண்டிருக்கும்போது, மேலே சொன்ன இரண்டு எடுத்துக்காட்டுகளில் மனம் பொறிகளோடு தொடர்பு கொண்டிராமல் உள் சிந்தனையில் ஒன்றியிருந்தது, அப்போது அதில் எண்ணங்களைத் தூண்டியது "சித்தம்". மனதில் எ ண்ணங்களை உண்டாக்கும் உள்முகக் கருவி சித்தம். பொறிகளால் எழும் எண்ணங்கள் அப்போதைய நிலையைப் பொறுத்தவை. சித்தத்தின் தூண்டுதலால் உண்டாகும் எண்ணங்கள் பொதுவாகப் பழை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மையானவை. பல ஆண்டுகளுக்கு முன் முடிந்துபோன ஒரு நிகழ்ச்சியை நினைவுபடுத்த முயலும்போது அச்சம்பவத்தின் காட்சிகள் அப்படியே மனக்கண்ணில் தோன்றுகின்றன. இவை எங்கிருந்து மனதுக்கு வந்தன? சித்தத்திலிருந்து. சித்தத்தில் மனிதன் அன்னையின் கருவில் உருவான நாள் முதல் அன்று வரை நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் இருக்கின்றன.

இப்போதைய ஆராய்ச்சியில் "மனிதனின் கடந்துபோன பிறவிகளின் சம்பவங்களும் சித்தத்திலிருக்கின்றன" என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். சித்தத்தில் இச் சம்பவங்கள் "சம்ஸ்கார" வடிவில் பதிந்திருக்கின்றன. "மனிதன் தன் சித்த சம்ஸ்காரங்களைத் தன் உணர்வால் நேர்முகமாய் உணர்ந்தானானால், அவன் இதன்முன் பல யோனிகளில் பிறந்து வாழ்ந்த வாழ்க்கைகளை நினைவுபடுத்துவான்" எனப் பதஞ்சலி யோகம் சொல்கிறது. தற்போது பல துறைப்பட்ட மக்களை ஆழ்மன நிலையில் கிடத்தி அவர்களின் பழைய பிறவிகளைக் கூறச் செய்து, அக்கூற்றுகள் சரியானவைதான் என்று கண்டிருக்கிறார்கள். அவ்வப்போது, திடீரெனப் பலர் தம் முற்பிறவியை அறிந்து சொல்லும் நிகழ்ச்சிகள் பல பத்திரிக்கைகளில் வெளியாகின்றன. ஆழ்மன நிலையில் கிடத்தும்போது மனிதனின் எண்ண மனம் செயலற்றுச் சித்தம் செயல்படத் தொடங்குகிறது. இதனால்தான் பழைய நினைவுகள் வருகின்றன.

ஒரு மனிதனின் சித்த சம்ஸ்காரங்கள் அவனையன்றி வேறு எந்தச் சக்தியாலும் போடப்பட்டதல்ல. அவனவன் போட்டு வைத்தவைதான். மாம்பழத்தைப் பார்த்திராத ஒருவனின் மனத்தில் மாம்பழ சம்ஸ்காரம் இருக்காது. இப்பிறவியிலோ கடந்த பிறவிகளிலோ அவன் ஐம்பொறிகளால் அறிந்திராத எதுவும் அவன் மனத்தில் இருக்காது. சாதாரணமாகப் பார்த்தவை மனத்தில் பதியாது. கவனம் கொண்டு, அக்கறையுடன், கருத்துடன் பார்த்த, கேட்டவைகள்தான் ஒருவனின் சித்தத்திலிருக்கும், இப்படி மனதில் சேர்க்கப்படும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்ஸ்காரங்கள்தான் பிற்கால மனதில் எண்ணங்களாகச் செயல்பட்டு, நல்ல தீய அநுபவத்தை உண்டாக்குகின்றன என்பது எனதாராய்ச்சியின் முடிவாகும்.

தினைவிதைத்தவன் தினையைத்தான் அறுப்பான். அதுபோல் மனதில் கெட்ட கருத்துக்களைப் பதிய வைப்பவனின் மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றித் தீமையை உண்டாக்குகின்றன. நல்ல கருத்துக்களை மனதில் பதிப்பித்தால் அது மனதில் நல்ல எண்ணங்களை எழுப்பி நன்மையை உண்டாக்குகிறது. 'நெருப்பு கொடியது' என்ற கருத்தை மனதில் பதித்தவன் நெருப்பைக் கண்டது அஞ்சுகிறான். 'கட்டி வரும்' என்று மனதில் பதிப்பிக்கக் கட்டி வந்தது. கட்டி ஆறும் என்று மனதில் பதிப்பிக்க ஆறாத கட்டியும் ஆறும்.

மனிதனுடைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் அனைத்தும் அவன் மனதில் போட்ட கருத்துக்களின் பிரதிபலிப்பே. பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்கள், சினிமா, நாடகம், தொலைக்காட்சி முதலியவைகள் நம் மனதில் எப்போதும் புதுப்புதுக் கருத்துக்களைப் பதிப்பிக்கின்றன. அவைகளுக்குத்தகவே மனிதனுடைய வாழ்க்கை அப்படி அமைகிறது. ஸ்ரீசொர்ணபைரவரே நமக்குச் சொர்ணம் தந்து காக்கும் கடவுள் என்ற கருத்தைப் பெற்றோர்கள் தம் குழந்தையின் மனதில் பதிப்பித்துவிட்டால், அதற்கு மாறான கருத்து மனதில் பதியும்வரை, அது ஸ்ரீசொர்ணபைரவர் தவிர வேறு கடவுள் உண்டென்பதை ஏற்றுக் கொள்ளாது, "வெந்நீரில் குளிப்பதுதான் நல்லது" என்ற கருத்தைச் சிலர் மனதில் வேரூன்றச் செய்துவிடுகின்றனர். அதனால் அவர்கள் குளிர் தண்ணீரில் குளிப்பது நல்லதென்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ அவர்கள் மனதில் "குளிர் தண்ணீரில் குளிப்பது தான் மிக நல்லது" என்ற கருத்தைப் பதிவு செய்துவிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவரை வெந்நீரே சுகம் என்று கருதி வந்த அவர்கள் காரணம் தெரியாமலே "தண்ணீர்தான் நல்லது என்று நினைக்கத் தொடங்கிவிடுவார்கள். இப்படிக் கருத்துப் பதிவுகளால் கெட்டவனை நல்லவனாக்கி விடலாம். மனத்தில் மாறுதலை உண்டாக்காமல் எத்தனை முயற்சி செய்தாலும், அடித்தாலும், திட்டினாலும்கூட மனிதனின் நம்பிக்கையை, பழக்க வழக்கத்தை மாற்றிவிட முடியாது. சாஸ்திரங்கள், பெரியோர் உபதேசங்கள் அவர்களுக்குப் பயன்தாரா உபதேசங்கள், சாஸ்திரக்கேள்விகள் இல்லாமலே ஏதாவதொரு வழியில் மனத்தில் சம்ஸ்காரங்களைப் ப்திித்துவிட்டால் மனிதர்கள் நல்லவராக வாழ்வார்கள்.

நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ இருப்பதற்கு உங்கள் படிப்போ, இருக்குமிடமோ, வேறெதுவோ காரணமல்ல. மனச் சம்ஸ்காரமே காரணமென்பதாகும். ஏதாவதொரு வழியில் மனதில் மனிதனுக்கு வேண்டிய கருத்துக்களைப் பதித்து விட்டால், அவன் யாராக, எத்தகையவனாக இருந்தாலும் பதிப்பிக்கப்பட்ட கருத்துக்களின்படி நினைத்து , செயல்பட்டு நல்லதையோ கெட்டதையோ அனுபவிப்பான்.

இவ்வளையும் விளக்கியபின் இப்போது ஓர் பேருண்மையை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கலாம். அதாவது ஒருவன் அவன் மனத்தில் எவ்வழியிலாவது ஓர் நல்ல கருத்தைப் பதித்துவிட்டால், அவனை அறியாமலே அக்கருத்தின்படி அவனது வாழ்க்கை அமைந்துவிடும். அவன் உண்மையில் ஏழ்மையில் இருப்பவனாயினும், மனத்தில் அவன் செல்வந்தனாக இருப்பதான கருத்தைப் பதித்துவிட்டால் எவ்வழியிலாவது, விரைவில் அவன் செல்வந்தனாக மாறிவிடுவான். அடிக்கடி நோய்வாய்ப்படும் ஒருவன் மனத்தில் ஆரோக்கியக் கருத்துக்களைப் பதித்துவிட்டால், எப்படியென்று தெரியாத வியப்பான வழிகளில் அவனுக்கு நோய் விலகி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆரோக்கியம் கிடைக்கும். படிக்காத ஒருவன் படிப்பாளி யாகலாம். எந்தக் கெட்ட பழக்கத்திலிருந்தும் விடுபடலாம். தேவையற்ற தீங்கு பயக்கும் பழக்க, வழக்கங்களை மாற்றி விடலாம். இது நமக்கானது மட்டுமல்ல. நமது குடும்ப நபர்களின் மனத்திலும் வேண்டுமான கருத்துக்களைப் பதித்து, அவர்களைக் கெட்ட பழக்க – வழக்கங்கள், வறுமை, நோய், முதலிய தீமைகளிலிருந்தும் விடுவிக்கலாம். மனிதனின் மன அறிவாற்றலைப்பற்றியும், மனதைப்பற்றியும், இன்று அரிய ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் நடத்தியிருந்தாலும், அவனைப்பற்றி, அவன் வாழ்க்கையின் அடிப்படையைப்பற்றி அவ்வளவாக ஆராயவில்லை, ஆராய முடியவில்லை. ஆனால் பாரதயோகிகளும், சித்தர்களும் இதைப்பற்றித் தம் சூட்சுமக் கருவிகளால் நிறைய ஆராய்ந்து, பல உண்மைகளைக் கண்டுபிடித்தார்கள். அவை சரியா என்பதை ஆராய்ந்தறிய – விஞ்ஞானிகளின் பௌதீகக் கருவிகள் பயன்படவில்லை. உதாரணமாக "மனிதன் தினமும் விழிப்பு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலைகளுக்கு உள்ளாகிறான் என்பதையும், அந்நிலைகளில் அவன் ஆன்மா, உணர்வு என்ன ஆகின்றன, எப்படிச் செயல்படுகின்றன என்பதையும், வேதங்களும், உபநிடதங்களும் விளக்கமாகக் கூறுகின்றன. அவை சரிதானா என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கண்டு கொள்ள முடிய வில்லை. காரணம் அவர்கள் தம் அனைத்து ஆராய்ச்சி களுக்கும் பௌதீகக் கருவிகளையோ நம்பியிருக்க வேண்டி யிருக்கிறது. இந்த உண்மைகள் அதனால் அறியப்படக் கூடியதாயிருக்கவில்லை.

நம் இந்தியா கண்டுபிடித்து, அனுபவித்து வந்த ஓர் பேருண்மை "மனித மனம் எப்போதும் உறங்குவதில்லை, ஓய்வதில்லை, ஆழ்ந்த தூக்கத்திலும் அது இயங்கிக் கொண்டு தானிருக்கிறது, விழிப்பு நிலையில் மனதில் கருத்துக்களைப் புகுத்துவதுபோலவே, தூங்கிக் கொண்டிருக்கும் மனிதனின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனத்திலும் கருத்தைப் புகுத்தலாம்'' என்பதுதான். அவர்கள் கண்ட இந்த உண்மையின் மற்றோர் பகுதி - ''மனித மனம் மனிதன் அன்னையின் கருவில் உருவாகும்போது அதிலிருந்து செயல்படத் தொடங்குகிறது. ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் நான்கு குழந்தைகளின் உடல் நான்கு விதங்களாயிருக்க, அவ்வுடலைக் கருவிலிருந்து உருவாக்கிய மனமே காரணம். கருவிலிருக்கும் மனம் அன்னையின் கருத்துக்களை ஏற்கிறது. அன்றி வெளியிலிருந்து செலுத்தப்படும் பலத்த கருத்துக்களும் கருமனத்தில் பதிகின்றன.'' இந்த அடிப்படையில்தான் இரணியனின் மகனான பிரகலாதன், கருவில் இருக்கும்போது நாரதர் கருவுக்கு உபதேசம் செய்தார். அவ்வுபதேசத்தின் படியே பிரகலாதன் வாழ்க்கை அமைந்தது. இத்தகைய உதாரணங்கள் நம்நாட்டுப் புராணங்களில் மட்டுமல்லாமல் உலகின் எல்லா நாகரீகங்களிலும் காணக்கிடக்கின்றன.

கருவில் இருக்கும், மிகச்சிறிய மூளையில் இருந்தியங்கும் மனமே கருத்துக்களையேற்று மனத்தில் பதித்துக் கொள்கிற தென்றால் வளர்ந்த மனிதனின் பெரிய மூளையிலிருந்து செயல்படும் மனம், மனித உணர்வு விலகித் தூக்கம் என்ற நிலையில் இருக்கும்போதும், இயங்கிக் கொண்டேயிருக்கும் மனம் கருத்துக்களையேற்று, மனத்தில் பதியச் செய்யுமென்று கூறத்தேவையில்லை. இதனாலேயே ''உறங்குமுன் பகவானை நினைத்துப்படு'' என்று நம் நாட்டுப் பெரியவர்கள் சொன்னார்கள். சென்னையில் சூட்சும சக்தி என்ற பயிற்சி வகுப்பு நடக்கின்றது. அதில் ஒரே நாளில் மிக விளக்கமாகப் பயிற்சி கொடுக்கின்றார்கள். அங்குப் பயிற்சி பெற்றவர்கள் பிறரின் ''தூக்கத்தில் மனதில் கருத்துக்களைப் பதிப்பிக்கலாம்''. பயிற்சி எடுத்தவரின் குழந்தைகளில் யாராவது அடம்பிடிப்பவர்களானால், ஓயாமல் அழுபவர்களாக இருந்தால், அவர்கள் தூங்கும்போது அவர்கள் தலைக்குப் பக்கத்தில் அமர்ந்து ''நீ இனிமேல் ஓயாமல் அழமாட்டாய், அடம்பிடிக்கமாட்டாய்'' என்பவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போன்ற கருத்துக்களைத் திட மனத்துடன் பலமுறை சொல்லி வரலாம். இப்படிச் சிலநாட்கள் விடாமல் உறுதியாகச் சொல்லி வந்தால் அக்குழந்தை மெதுமெதுவாய் ஓயாமல் அழுவதை நிறுத்துவதையும், அடம்பிடிப்பதை நிறுத்துவதையும் கண்கூடாகக் காண்பீர்கள். இந்தப் பரீட்சையில் நீங்கள் வெற்றியடைந்தால் பிறகு உங்களுடைய தூக்கத்தின் போதும், உங்களின் மனத்தில் வேண்டுமான கருத்துக்களைப் பதிப்பிப்பதன் மூலமும் உங்கள் பழக்க, வழக்க, நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ளவும், கோடீஸ்வரன் ஆகவும் புகழ் முதலியவைகளைப் பெறவும் செய்யலாம்.

மனம் நான்கு வகைப்படும். இருள்மனம், மருள்மனம், தெருள்மனம், அருள்மனம். இதில் அருள்மனம் கொண்டுதான் புறக்கண்களை மூடி அகக்கண் கொண்டு இறைவனின் அருள் வடிவத்தை காண்பது. இதற்கு முயற்சி செய்ய வேண்டும். மனதில் எதை நினைக்கின்றானோ அதைப் பேசுகின்றான். எதைப் பேசுகின்றானோ அதைச் செய்கின்றான். எதைச் செய்கின்றானோ அதன் பலனையடைகின்றான். மனம் சுழலக் கூடியது. மனமானது சக்தியம்சம். சிவன் நிலையானது. மனச்சக்தி சிவனையடையும் போது சிவசக்தி சம்மேளனம் ஆகின்றது.

நம் சூட்சும உடலுடன் தொடர்புடையது மனம், புத்தி, சித்தம், அகங்காரம். இப்படிச் செய்யலாமா வேறு மாதிரி செய்யலாமா? என்பது மனது. இப்படித்தான் செய்வது என்று முடிவெடுக்கும் அம்சம் புத்தி. நான் இதை முன்பே செய்திருக் கின்றேன், இன்ன மாதிரி பலனை அடைந்திருக்கின்றேன் என எண்ணுவது சித்தம். நானே இதைச் செய்துவிட்டேன் என்பது அகங்கார அம்சம். நல்லது கெட்டது பற்றி அறிவது புத்தி. இதில் புத்தி என்ற அம்சத்தை அதிகமாக உபயோகப்படுத்தினால் அன்றி மனசு ஒழுங்காக வேலை செய்யாது. மனிதனுக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் புத்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிருகங்களுக்கு மேலான அம்சம் இந்தப் புத்தி. இந்திரியங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய மனது இந்திரியங்களின் வழிச் சென்று உழலக் கூடாது. நம் ஜீவாத்மாவான உயிரைப்பற்றி அறிவதுதான் ஆன்மிகம். ஸ்மிருதி, யுக்தி, அனுபவம் கொண்டு ஆன்மிகத்தை அறிய வேண்டும். ஸ்மிருதி என்றால் சாத்திரங்களில் என்ன சொல்லியிருக்கின்றது? என்று பார்த்தல் யுக்தி என்றால் இது நம் வசதிக்கும் சூழ்நிலைக்கும் ஒத்து வருமா? என்று ஆராய்தல் அனுபவம் இவ்விசயத்தில் எப்படி இருந்தது என கேட்டுத் தெளிவு பெறுவது. இது ஆன்மிகப் பயிற்சிக்கு முக்கியம் தேவை. சாத்திரங்களை அதிகம் படிக்கச் சரசுவதி கடாட்சம் கூடும். லெட்சுமி அருள் குறையும். பொறுமை மிகமிக அவசியம் தேவை!

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. அருட்பெருஞ்சோதியும் அய்யப்பசோதியும்

உலகைப் படைத்த ஆண்டவர் பகலையும் இரவையும் உண்டாக்கினார். விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்குப் பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் ஒளியைக் கொடுக்கின்றன. ஆண்டவர் ஜோதி வடிவானவர் என்பது அனைத்து மதத்தவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. ஆதியில் ஆபிரகாம் பலி கொடுத்ததை ஆண்டவர் ஏற்றுக் கொண்டார். அதை ஏற்றதற்கு அடையாளமாக ஓர் அக்கினிச் சட்டியும் ஓர் தீப்பந்தமும் அப்பலியின் நடுவில் சென்றது. இதுதான் முதல் ஜோதி தரிசனம்.

அருட் பெருஞ்சோதி ஆண்டவரின் தரிசனம் சரியை கிரியை முதலியவற்றைக் கடந்து யோக நிலையில் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும். எத்தனையோ கோடியில் ஒருவருக்குத்தான் யோக நிலை கிடைக்கும். அப்படிக் கிடைத்தவர்களில் ஒருவர்தான் வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க சுவாமிகள். சில அருளாளர்கள் செய்த தவத்தினால் தான் உலக இயக்கம் நடைபெறுகிறது. முதலில் அருளாளர்களும் சோதி வள்ளலும் தோன்றிய காலம் பற்றிப் பார்ப்போம்.

இந்திய வரலாற்றில் முகமதியர் படை எடுப்பாலும் ஆங்கிலேயர் ஆட்சியாலும் துன்பப்பட்ட நம்மவர்களின் வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். அந்தச் சூழ்நிலையில், மதவெறியை அழித்து, மதநெறியை வளர்க்கும் மகான்கள் நமக்குத் தேவைப்பட்டனர். இந்து, முகமதியர், கிறித்துவ மதங்கள் ஒன்றுக்கொன்று எதிராகச் செயல்பட்ட அவல நிலையை மாற்றி, அவற்றிடையே சமரச எண்ணத்தை வளர்க்கத் தக்க சன்மார்க்க ஞானியர் தேவைப்பட்டனர். சுருங்கச் சொன்னால்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிற சமயங்களின் படையெடுப்பால் அழிந்துகொண்டிருந்த இந்தியக் கலாசாரத்தைக் காக்கவும், இந்து, முஸ்லிம், கிறித்துவ சமயங்களிடையே ஒருமைப்பாடு காணவும், இந்துக்களிடையே நிலவிய மூடநம்பிக்கைகளை, சாதி வழிப்பட்ட உயர்வு, தாழ்வு மனப்பான்மைகளை, போலி வைதிகர்களின் புரட்டுச் சடங்குகளை அழிக்கவும் சீர்திருத்தவாதிகள் தேவைப்பட்டனர். அக்காலத்தில் இந்துக்களின் குருமார்களாக விளங்கிய அந்தணர்கள், பிற சமயங்களுக்கு எதிராக இந்துக்களிடையே போர் வெறியை வளர்த்தனர். அதற்கு மேல் இந்து மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தவோ, சமரச எண்ணத்தை வளர்க்கவோ, அவர்கள் துணியவில்லை. சுருங்கச் சொன்னால், அந்த நாளைய சமய பீடங்களும் சமயாச்சாரியர்களும் கால மாறுதலை உணர்ந்து செயற்பட முன்வரவில்லை. இந்து மதத்தில் மறுமலர்ச்சி காணச் சந்தர்ப்பம் நிர்ப்பந்தப்படுத்தியும், புரோகிதர்களும் குருமார்களும் மனமாற்றம் அடையவில்லை.

இந்த நிலையில், தேவதூதராலன்றிச் சாதாரண மக்களால் பரிகாரம் காண முடியாத ஒரு பெரும்கேட்டிற்கு இந்தியப் பூர்வ மதம் இரையாகியிருந்தது. இந்தக் குழப்பத்திற்கு நடுவே, 1774–ஆம் ஆண்டு தொடங்கி, 1836–ஆம் ஆண்டு வரையுள்ள ஒரு காலகட்டத்தில் பாரத புண்ணிய பூமியில் தேவ தூதர் நால்வர் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றுகின்றனர். அவர்கள் முறையே, இராசாராம்மோகன் ராய், இராமலிங்கர், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணர் ஆகியோராவர். இந்த உண்மையையே, ''தருமம் அழிந்து அதருமம் தலைதூக்கி மக்கள் அல்லலுற்றழும்போது வெவ்வேறு உருவெடுத்து நான் தோன்றுவேன்'' என்று கண்ணன் கூறியதாக உள்ள கீதையின் வாசகமும் உணர்த்துகின்றது.

பிற்காலத்தில் 'அருட்பிரகாச வள்ளலார்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்ற இராமலிங்கர் கலி 4925 சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21ஆம் நாள் (5–10–1823) அன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றினார். மத மாயை இருளகற்ற வந்த இளஞாயிறு என்பதால் ஞாயிற்றுக்கிழமையன்று தோன்றினார் இராமலிங்கர். இராமலிங்கர் தோன்றுவதற்கு நாற்பத் தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு – அதாவது 1774ஆம் ஆண்டு மேத் திங்கள் 22ஆம் நாளில் மேற்கு வங்கத்திலுள்ள ராதா நகர் என்னும் ஊரில் ராசா ராம்மோகன் ராய் பிறந்தார்.

இராமலிங்கர் தோன்றிய அடுத்த ஆண்டிலேயே பாரதத்தின் வட மேற்கிலுள்ள குஜராத்து மாநிலத்தில் டங்காரா என்னும் ஊரில் 1824ஆம் ஆண்டில் தயானந்த சரஸ்வதி தோன்றினார். இவரது இயற்பெயர் மூலசங்கர் என்பதாம். இராமலிங்க வள்ளலார், தம்முடைய அருள்நெறியைப் பரப்புவதற்கெனச் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்ற ஓர் அமைப்பினை நிறுவினார். அதன் துணை கொண்டு, சாதி, சமய வேற்றுமைகளற்ற, பழைய மூட நம்பிக்கைகளிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்ற ஒரு புத்தம் புதிய மனித சமுதாயத்தை உருவாக்க முடியுமெனக் கனவு கண்டார். அதே காலத்தில், வடக்கே இராம்மோகனர், தயானந்த சரஸ்வதி ஆகிய இரு பெரியார்களும், இந்து சமயத்தவரிடையே புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தத் தனித்தனி இயக்கங்களைக் கண்டனர்.

தயானந்த சரஸ்வதி 'ஆரிய சமாஜம்' என்ற அமைப்பினை நிறுவினார். இந்த மூன்று பெரியார்களின் காலத்திலேயே வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், தம் கொள்கைகளைப் பரப்புவதற்கெனத் தனியாக இயக்கம் எதையும் துவக்கவில்லை. அந்தப் பெரியாருடைய மறைவுக்குப் பிறகு அவருடைய சீடர்களுள் முதல்வரான நரேந்திரர் எனும் விவேகானந்தர், "ஸ்ரீஇராமகிருஷ்ணர் சங்கம்" என்ற அமைப்பினை நிறுவினார். இராம்மோகனார், தம்முடைய பிரம்ம சமாஜத்தின் துணை கொண்டு சமய, சமூகச் சீர்திருத்தப் பணிகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தினார். உருவ வழிபாட்டு முறையை எதிர்த்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டவனை அரூபியாகக் கருதி வழிபடும் முறையை மக்களிடையே பரப்பினார். இராமகிருஷ்ணரும் அவருடைய பிரதம சீடரான சுவாமி விவேகானந்தரும் மனித குலம் முழுவதுமே போற்றத்தக்க மகா ஞானியாராவர். ஆயினும், அவ்விருவரினும் தீவிர சமய, சமுதாய சீர்திருத்தப் புரட்சியாளராகக் காட்சியளிக்கின்றார் இராமலிங்கர்.

இராமலிங்கரின் வாழ்க்கை முடிவிலே அவர் ஒரு தெய்வத் தூதர் என அகிலம் அறிந்தது. இராமலிங்கரின் அவதாரச் சிறப்புப் பற்றி அவரே பாடிய பாடல் வருமாறு :

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித் திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன்...

இந்தப் பாடல் இராமலிங்கர் தற்பெருமையாகப் பாடியதன்று, "என்செயலாவது யாதென்றுமில்லை", என அடக்கம் காட்டி, "எல்லாம் அவன் செயலே", என்பதனை அறிவிக்கும் வாய்மையுரை யாகும். மணிவாசகப் பெருமானும், "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி," எனவும்,

"நானார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல்?...

எனவும் பாடியதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். முகம்மது நபி பெருமான், தம்மை 'ஆண்டவன் தூதர்' என்றார்.

"ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ்சோதி"

"ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக் கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே,"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற வரிகளிலே, இறைவன் திருவருளால் பிறர் ஓதுவிக்காது, தாமே ஓதி உணர்ந்த திறத்தை வள்ளற் பெருமானே அடக்கத்தோடு அறிவிக்கின்றார். ஓதுவிக்காதுணரும் திறன் எல்லோருக்கும் வாய்ப்பதன்று. அது போலவே, அதனைப் புரிந்து கொள்வதும் எல்லோராலும் முடிவதன்று. ஆயினும், இராமகிருஷ்ணர்- இராமலிங்கர் போன்ற சான்றோர்கள் ஓதுவிக்காதுணரும் திறமும் இருப்பதை நம்பாதவர்களும் நம்பும்படியாக நடைமுறையில் காட்டியுள்ளனர்.

பந்தக் கடலை அகற்ற அருள்வள்ளல் விரும்பினார். எனவே தாம் இயற்றிய விண்ணப்பக் கலிவெண்பாவில்,

"அன்புடைய தாயர்களோர் ஆயிரம்பேர் ஆனாலும்
அன்புடையாய் நின்னைப்போல் ஆவாரோ – இன்பமுடன்

ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினும் என்
ஆண்டவனே நின்னைப்போல் ஆவாரோ – பூண்டகைகொள்

ஏனுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன்
ஆணைஎனக்கு உற்றதுணை யாருமில்லை – நாணமுளன்

ஆனேன் பிழைகள் அனைத்தினையும் ஐயா! நீ
தானே பொறுக்கத் தகுங்கண்டாய்!– மேல்நோற்ற

மாற்றனக்கும் எட்டா மலர்க்கழலோய் நீஎன்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க!– பாற்றவள

நந்தக் கடற்புவியில் நான்இன்னும் வன்பிறவிப்
பந்தக் கடல்அழுந்தப் பண்ணற்க!"

என்றெல்லாம் பாடிப்பாடி, இறைவன் அருளை வேண்டிவேண்டி, அழுவாராயினார். இல்வாழ்க்கையில் தமக்கிருந்த வெறுப்பை இறைவனிடம் விண்ணப்பித்துப் பாடுங்கால்,

"– எள்ளலுறு
மாலைபாய்ந் தின்னும்என்ன வந்திடுமோ! என்றுநெஞ்சம்
ஆலைபாய்ந்து உள்ளம் அழிகின்றேன் – ஞாலமிசைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோட்பார வாழ்க்கைக் கொடுஞ்சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன் – மீட்பாகும்

ஆற்றி லொருகாலும் அடங்காச் சமுசாரச்
சேற்றிலொருகாலும் வைத்துத் தேய்கின்றேன் – தோற்றுமயற்

பாகமுறு வாழ்க்கைஎனும் பாலைவனத்து உன் அருள்நீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன்

என்னும் வரிகளிலே, தம் நெஞ்சில் கடவுள் அருள்வேட்கை யன்றிக் காமவேட்கை சிறிதேனும் இல்லாத நிலையைச் சித்திரித்துள்ளார். துறவுக் கொள்கையை அப்போதே அடிகள் கருதி யிருந்தது புலனாகும். அடிகளார் செல்வச் செருக்குடையவர்களை வெறுத்தார். அவர்கள் வலிய வந்து உதவிபுரிந்தபோதும் அதனை ஏற்க மறுத்தார். திரு. சோமு செட்டியார் என்ற செல்வர் ஒருவர் தாம் வருந்தும் வகையில் நடந்து கொண்டபோது அவரைப் பற்றித் திரு. இரத்தின முதலியார்க்கு அடிகள் எழுதிய கடிதப் பகுதி வருமாறு :

"நான் சோமு செட்டியார்க்குக் கடிதம் எழுதவே மாட்டேன். அவர் கல்யாணத்துக்கு எனக்கொரு கடிதம் எழுதினார். அதற்குப் ப திலாகவும், அவர் அன்பைச் சோதிக்கும் பொருட்டாகவுமே எழுதித் தம்மாற் கண்டு கொண்டது. இவரைப்போல ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம். நமக்கு இவர்களெல்லாம் ஒரு திரணமாகத் தோற்றுகின்றார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவதில்லை. நாம் இறைவன் திருவடிகளுக்கு அடிமையானோம். நமக்கு ஒரு விதத்தாலும் குறைவில்லை, இது உண்மை"

- பா. பி. ப. 5:35

இராமலிங்கரின் நாவசைந்தால் அவருக்குச் சொர்ணாபிஷேகம் நடத்த அவர்பால் பேரன்பு கொண்ட செல்வந்தர் சிலர் காத்துக் கிடந்தனர். தேவையின்மையாலோ, தகுதியறிந்து உதவி கேட்கும் தன்மையாலோ, அவர்கள் வலுவில் வழங்க வந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதவியையும் வாங்க மறுத்தார் அடிகளார். ஞானமார்க்கத்தில் ஈடுபடுவோர் தக்க ஆசானை அணுகி, ஞான தீக்ஷை பெறுவது சமய மரபு. சமய பேதங்களெல்லாம் தொலைய வேண்டுமென்று விரும்பியதாலோ, வேறு எதனாலோ அடிகளார் எவரிடமும் தீக்ஷை பெற்றாரல்லர். பிள்ளைப் பருவத்தே, தாம் தில்லைப்பதி சென்று அங்கு நடராசப் பெருமான் கோயில் அம்பலத்திலே ஓர் மூலையில் நின்று அழுததைச் சொல்லுங்கால்,

"அந்நாளில் அடிச்சிறியேன் அம்பல வாயிலிலே
அருளைநினைந்து ஒருபுறத்தே அயர்ந்து அழுதுநின்றேன்
முன்னாளில் யான்புரிந்த பெருந்தவத்தால் எனக்கு
முகமலர்ந்து மொழிந்தஅருள் மொழியை நினைந்து....."

என்று பாடுகின்றார். பின்னொரு நாள் தாம் தெருவில் விளையாடித் திரிந்த நாளில், இறைவன் வலிய வந்து ஞான தீக்ஷை தந்த செய்தியை,

"தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் தனக்கே மெய்ஞ்ஞான
சித்தியளித்த பெருங்கருணைத் தேவே......"

என்னும் வரிகளிலே கூறுகின்றார். ஆம், சின்னஞ்சிறு வயதில், இறைவன் வலியவந்து அடிகளாரை ஆட்கொண்டதால், அவருக்குத் தீக்ஷை தேவைப்படவில்லை. அடிகளார் ஆடையலங்காரத்தை வெறுத்தது, உலகியல் வாழ்விலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவே யென்பதற்கு மற்றொரு சான்றுமுண்டு. சபாபதி முதலியார் என்ற அன்பர், தம் வீட்டில் நடந்த திருமணம் ஒன்றிற்கு வருமாறு அடிகளாரை வற்புறுத்தியபோது, தம் நெஞ்சுக்குச் சொல்வார் போல,

"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயில்லை நல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறாப்பு மில்லை விவாகமது
நாடில்லைநீ நெஞ்சமே! யெந்த வாறு இனி நண்ணுவையே"

என்று பாடினார் இராமலிங்கர். 'போகாத இடந்தனிலே போக வேண்டா' என்னும் நீதி துறவிகளுக்கும் பொருந்துவதுமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமய, சமுதாயத் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களைக் காண இல்லறத்தாருடன் தொடர்பு கொண்டிருந்தாரெனினும், அவர்களுடன் இரண்டறக் கலந்து விடவில்லை. இல்லறத்தாரோடு கலந்து பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள துறவிகள், வள்ளலாரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொள்வார்களாக! இராமலிங்கர் தம் தவவலிமையால் 'பிரணவதேகம்' பெற்றிருந்தார். அதனை, 'ஒளி உடல்' என்பர். தம் திருமேனியைப் படமாக்கவோ, சிலையாக்கவோ அடிகள் யாரையும் அனுமதிக்கவில்லை. அன்பர்கள் சிலர் கூடி, அடிகளாரைப் புகைப் படம் எடுக்க முயன்றனர். என்ன வியப்பு! எட்டு முறை முயன்றும் அவரது திருமேனியைப் படமாக்க இயலவில்லை . இதனை அடிகளார் செய்த சித்தென்பதா? அவரது பொன் மேனியின் புதுமையென்பதா? பண்ணுருட்டியிலுள்ள சிற்பத் தொழிலாளரொருவர், அடிகளார் மீது வைத்த பக்தியால், அவர் போன்று ஓர் உருவம் அமைத்து, அதனை அழகுபடுத்தி, அவரிடமே காட்டினார். அடிகளாரின் பாராட்டுதலை எதிர்பார்த்தார் தொழிலாளி! அவரோ, அதனைத் தம் கையால் வாங்கி, "பொன்னான மேனி மண்ணானதே!" என்று வருந்தினார்.

இராமலிங்கர், தெய்வம் தெளிந்த மெய்ஞ்ஞானியரைத் தேடியலைந்தார். அத்தகையோர்க்குத் தொண்டு செய்ய விழைந்தார். இதனை,

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று அவர் பாடியதால் அறிகிறோம். இந்தப் பாடலிலே, சாதி சமயம், இன்னபிற வேற்றுமைகள் பாராட்டாதவராய், தம்முயிர் போலப் பிற உயிர்களையுங் கருதி அன்பு செலுத்துபவராய், உள்ளத்தால் ஒருமைப்பாட்டினை விரும்புகின்றவராய் உள்ள உத்தமர் எவரோ, அவருடைய திருவுள்ளமே இறைவன் நடம் புரியும் இடம் என்றும், அத்தகைய சித்தர்களுக்குத் தொண்டு புரியத் தம் உள்ளம் விரும்புவதாகவும் கூறுகின்றார். பொதுவாக, தாயுமானவரிடத்தில் அளவற்ற பற்றும் பக்தியும் உடையவர் அடிகளார். அவருடைய அறிவுரைகளைத் தம் பக்தர்களுக்கு எழுதிய கடிதங்களிலேயும், உபதேச மொழிகளிலேயும், அருட்பாக்களிலேயும் எடுத்தாண்டுள்ளார் வள்ளலார்.

ஒருவன் சாதாரண மனிதனாயிருந்து பூரண சன்மார்க்கியாவது வரை மூன்று உடல் பெறுகிறான் என்கிறார் இராமலிங்கர். ஒருவன், எல்லா உயிர்களையும் சமமாகக் கருதி, அவற்றிடையே மாறாத அன்பு செலுத்தி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால், அவன் அன்புடல் பெறுகிறான். பின் பக்தியாலும் மாறாத தியானத்தாலும் அவன் உள்ளத்தில் இறைவன் தங்கும் நிலைபெற்றபோது, முன்பு பெற்ற அன்புடல் அருளுடலாக மாறுகின்றது. அதற்குப் பின், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுங்கால், அருளுடல் பேரின்ப முத்தியிற் கலந்த இன்புடலாகின்றது. இதனை, ஸ்வர்ணதேகம் (பொன் மேனி) என்றும் கூறுகிறார் வள்ளலார். வள்ளலார் துவக்கிய சமரச சுத்த சன்மார்க்க சங்கம், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றிற்கு எதிராகப் போரிட முயற்சி செய்யாமல், அவற்றிற்கு அப்பாற்பட்ட சமயங் கடந்த சமுதாய அமைப்பாக தோன்றியது.

தமிழகத்தின் வரலாற்றிலே முதன் முதலில் தோன்றிய சமய, சமூகச் சீர்திருத்த அமைப்பு, வள்ளலார் துவக்கிய சமரச சன்மார்க்க சங்கமேயாகும். "ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, புலால் உணவை வெறுத்து, தயவுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனத்தினர் எல்லோரும் சன்மார்க்க சங்கத்தில் சேரலாம்,'' என்றார் வள்ளலார்.

மனிதர் எல்லாருமே ஒரே இனத்தவராக அதாவது, சுத்த சன்மார்க்க இனத்தவராக மாறிவிடுவர் என்பது இராமலிங்கரின் நம்பிக்கை.

"எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண
இவ்வுலகில் எந்தை எனக்களித்தான் – எவ்வுயிரும்
சன்மார்க்க சங்கம் தனைஅடையச் செய்வித்தே
என்மார்க்கம் காண்பேன் இனி.''

வள்ளலார் சன்மார்க்க சங்கம் கண்டது, இறைவன் அருள் கைவரப் பெற்ற காலத்திலாம். சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகளை அடிகளார் பட்டியல் தொகுத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. அவற்றைக் கீழ்வருமாறு தொகுத்துப் பார்க்கலாம் :

(1) உயிர்க்குலம் அனைத்துக்கும் தெய்வம் ஒன்றே என்று நம்புதல்.

(2) அந்தத் தெய்வத்தை விக்கிரக வடிவில் அல்லாமல் ஒளி வடிவிலே வழிபடுவதே சிறந்ததென உணர்தல்.

(3) சாதி, சமய, வருண பேதங்களை அறவே விடுத்து, மொழி வழிப்பட்ட இனங்கள், நாடுகளிடையே ஒற்றுமை கண்டு, ஆன்மநேய ஒருமைப் பாட்டினை உருவாக்கல்.

(4) உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினுக்கேயன்றி, இந்திய நாட்டில், மொழிவழி இனங்களிடையே சகோதர உணர்வை வளர்த்து, அவற்றிடையே உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு காணல்.

(5) உடைமையாளர், வறுமையாளர் (பணக்காரர், ஏழை) என்ற பொருளாதார ஏற்றத்தாழ்வைத் தொலைத்து, எல்லோரும் வயிறார உண்டு, உடம்பார உடுத்து வாழும் சமதர்ம சமுதாயத்தைப் படைத்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(6) ஆண், பெண் என்ற பால் வேற்றுமையின்றி, மக்கள் எல்லோருக்குமே கல்வி அளித்தல், குறிப்பாக ஞானமார்க்கக் கல்வியைப் பெண்களுக்கும் அளித்தல்.

(7) மரணமிலாப் பெருவாழ்வு வாழும் பேற்றினைப் பெறுவதற்கான வழிவகைகளை மக்களுக்கு அவரவர் தாய்மொழியின் வாயிலாகவே, குறிப்பாக தமிழருக்குத் தமிழின் வாயிலாகவே பயிற்றுவித்தல்.

(8) புலால் உண்ணுதல், தெய்வத்திற்கு உயிர்ப்பலி தருதல் ஆகிய தீய பழக்க, வழக்கங்களை அடியோடு ஒழித்தல்.

(9) உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி, அவற்றிடையே இரக்க உணர்வும் தயையும் காட்டத்தக்க ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மக்களுக்குப் போதித்தல்.

(10) கருணையிலாத் துன்மார்க்கர் அரசியல் நடத்துவதை உலகெங்கணுமிருந்து ஒழித்து, அருள் நெறி வழிப்பட்ட சுத்த சன்மார்க்கர் ஆட்சி தோன்றச் செய்தல்.

அருட்ஜோதி இராமலிங்க வள்ளலார் சத்திய ஞானசபை, சத்திய தருமச்சாலை, சித்தி வளாகம், சமரச வேத பாடசாலை ஆகிய கிளை அமைப்புகள் பலவற்றைச் சமரச சுத்தசன்மார்க்க சங்கத்தின் நிழலிலே நிறுவினார். வள்ளலார் தருமம் மணக்கும் தெய்விகப் புதுவுலகைப் படைக்க விரும்பினார். ‘பாம்பன் சுவாமிகள்’ என்று அழைக்கப் பெற்ற குமரகுருதாச சுவாமிகள், வள்ளலார் காலத்தில் வாழ்ந்தவ ராவார். அம்முனிவர், கீழ்வரும் பாடலில், சிவ ஞானியர்களின் வாழ்க்கை முடிவினை மூன்று வகையாகப் பிரித்துரைக்கின்றார்.

"எடுத்ததூ லத்தினை விடுத்தரிய பரகதியை
எய்துநெறி உண்டென்பதற்கு
ஏனாதி, மெய்ப்பொருளர், பெருமிழலை யார்கரி;
எடுத்ததூ லத்தொடு அருள்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்தமுதம் உற்றதற்கு ஆரூரர், சோதியில்
அடைந்தற்கு அமணசிங்கம்,
அமலலிங் கத்துழி அடைந்ததற்கு ஆள்அரையர்,
ஆக்கைவேறு ஆயதற்கு
நடித்ததிரு நந்தனார் சாட்சி,முத் தாவரமும்
ஞாலமிசை வீழாமலே
ஞானவெளி உற்றதற்கு ஏசில்சுகர், வாதவூர்
நாயனார் கரியாம்;உப
நிடதத்தின்முடி வானஎம் பெருமஇவை களில்உனை
நினைக்கும்எற்கு ஏதுவருமோ?
நித்தநக ராலய சிதானந்த சோதியே
நிட்களா னந்தகுகனே."

பாம்பன் சுவாமிகள், ஆன்மாவானது வினைகளிலிருந்து விடுபட்டு, பருவுடலை நீத்து, தெய்வத் திருவருளில் கலக்கும் நெறி ஒன்று உண் டென்பதற்கு, அத்தகு நிலையினை அடைந்த ஏனாதிநாதர், மெய்ப் பொருள் நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார் ஆகிய அடியார்களைச் சான்று காட்டியுள்ளார். பூத உடம்பொடு இறையருளில் கலக்கும் நெறி உண்டென்பதற்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சான்று காட்டுகின்றார். பூத உடலொடு சோதியில் கலக்கும் நெறி உண்டென்பதற்கு திருஞான சம்பந்தப் பெருமானைச் சான்று காட்டுகின்றார். உடம்பொடு சிவலிங்கத்துடன் ஐக்கியமானதற்கு திருநாவுக்கரசரைச் சொல்லுகின்றார். உடம்பினை மாற்றிக்கொண்டு சிவத்தொடு சேர்ந்ததற்கு நந்தனாரைக் கூறுகின்றார். பரு வுடல் கொண்டே பரம்பொருளுடன் ஐக்கியப்பட்டதற்கு வாதவூரரைச் சான்று காட்டுகின்றார். இப்படி, பல்வேறு நெறிகளைச் சொல்லி, அவற்றுள் தமக்கு எது வருமோ என்று ஏங்கி, மரணமிலாப் பெருவாழ்வே வரவேண்டும் என்ற விருப்பத்தைச் சொல்லாமல் சொல்லுகின்றார் பாம்பன் சுவாமிகள். இதனாலும் மரணமிலாப் பெருவாழ்வு உண்டென்பதனைச் சைவ உலகமும் ஒப்புக் கொண்டிருப்பது உறுதிப்படுகின்றது. வள்ளலார் வாழ்ந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்நாட்களில் ஓர்நாள், வெற்றிப் பெருமிதங் கொண்டு, பேரின்ப வெறிபிடித்து, ஆனந்தப் பரவசமாகிப் பாடினார்.

"துய்யன்அருட் பெருஞ்சோதி துரியநட நாதன்
சுகஅமுதன் என்னுடைய துரைஅமர்ந்திங் கிருக்க
வையமிசைத் திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே
மணியாலும் பொன்னாலும் மலராலும் வியந்தே."

"தனித்தலைமைப் பெரும்பதிஎன் தந்தைவரு கின்ற
தருணமிது சத்தியங்காண் சகதலத்தீர் கேண்மின்."

"சத்தியவான் வார்த்தைஇது தானுரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலைஇதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும்அத் தினங்களெலாம் இன்பம்உறுதினங்கள்."

"என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேர்உடம்பிற் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம் சத்தியமே."

அத்துவிதத் தத்துவத்தின் உண்மையை அறிந்தவர்களே அடிகளாரின் வாக்கிலுள்ள உண்மையை உணர முடியும்.

வடலூர்ச் சித்தர், தாம் பெற்ற இன்பம் ஒவ்வொரு ஆன்மாவும் பெறவேண்டுமென்று விரும்பினார். அதனால் தமக்குக் காட்சியளித்துத், தம்மிற் கலந்த அருட்ஜோதிக் கடவுள், அனைத்துயிர்களுக்கும் காட்சியளிக்க வல்லது என்றும் கூறினார். அடிகளாரைப் போன்று ஒவ்வொருவரும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, ஆண்டவனை வழிபட்டால், அவர்களுக்கு அருட்ஜோதி காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருட்பெருஞ்சோதி ஆண்டவர் நமக்கு என்னென்ன அருளைத் தருவார் என்பதைத் தமது திருவருட்பா அகவலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்திய கொல்லாமை, புலால் உண்ணாமை, உயிர்களின் மேல் இரக்கம் காட்டுதல் ஆகிய கருத்துக்களையே வள்ளலாரும் வலியுறுத்திச் சொல்கின்றார். மேலும் ஜோதி வழிபாட்டைக் கடைசியில் விளக்குகின்றார். வள்ளலாரின் கொள்கை சமயங்களைக் கடந்தது. மனித நேயத்தையும் இதர ஜீவராசிகளின் மேல் செலுத்தப்படும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டது. அனைவராலும் வள்ளலாரின் உயர்ந்த கொள்கையை முழுவதுமாகப் பின்பற்ற இயலாது. அதற்கேற்ற பக்குவம் மனிதனுக்குப் படிப்படி யாகத்தான் வரும். அதுவரை மனிதன் காத்திருக்க இயலாது. அதனால் அதே கொள்கையை உடைய அய்யப்பனை கிரியா மார்க்கத்தில் வழிபடுகின்றான். சபரிமலையில் யோக மார்க்கத்தில் நின்று அருள்பாலிக்கும் அய்யப்பனைக் கொல்லாமை, புலால் உண்ணாமை விரதம் மேற்கொண்டு அன்னதானம் செய்து தன்னைத் தகுதிப்படுத்தி கொண்டு பின் சபரிமலை சென்று ஜோதி தரிசனம் காண்கின்றான். கேரளா பரமேஸ்வரன் பிள்ளை எழுதிய மஹாசாஸ்து கல்பம் என்னும் நூல் அய்யப்பன் ஆறு ஆதாரங்களிலும் எப்படிச் செயல்படு கின்றான் என்பதை விரிவாக விளக்குகின்றது. இது ஒரு பெரிய யோகநிலை விளக்கமாகும். கடைசியில் ஸ்தூலம் மறைந்து மகர ஜோதி தரிசனத்தில் முடிகின்றது. இதன் வெளிப் பயணம்தான் சபரிமலை யாத்திரை. தைமாதம் அய்யப்பன் கோவில் சென்று ஜோதி தரிசனம் செய்வது உலக க்ஷேமத்தின் பொருட்டேயாகும்.

ஒவ்வொரு பக்தனும் பகவானுடைய அனுக்கிரகம் கிடைக்கும் வழியில் வாழ்க்கைத்தரத்தை அமைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். விரதம் நடத்தும் நாட்களிலும் மற்ற சமயங்களிலும் மனிதன் அனுசரிக்க வேண்டிய சில

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறைகள் இருக்கின்றன. விரதம் இருக்கும் பக்தன் காலையில் குளித்துத் தானோ அல்லது தன்னைப்போல் விரதம் கொண்டிருக்கும் மனிதனாலோ தயார் செய்யப்பட்ட ஆகாரம்தான் உண்ண வேண்டும். மனத்தினாலோ வாக்கினாலோ செய்கையாலோ ஒரு பிராணியையும் துன்புறுத்தக் கூடாது. ஒரு பொழுதும் பொய் கூடாது. உயர்வு, தாழ்வு பாராட்டாமல் தன் வீட்டில் அதிதியாக வருபவர்களுக்கு உணவு படைத்து உபசரித்தல் வேண்டும் பகலில் தூங்கக்கூடாது. அப்படித் தூங்கினால் எழுந்த பிறகு குளிக்க வேண்டும். பெண்களை நினைக்கவே கூடாது. முக்கரணங்களாலும் (மனம், வாக்கு, செய்கை) பிரம்மசர்யத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எத்தகைய வேலை செய்யும்பொழுதும் 'அய்யனே' என்றே சொல்ல வேண்டும். ஆபாசமும் கெட்டதுமானப் பேச்சுக்கள் பேசக்கூடாது. உலகத்தில் தென்படும் எல்லாப் பொருள்களையும் இறைவன் என்று நினைக்க வேண்டும். அப்படித்தான் கூப்பிடவும் வேண்டும். சபரிமலை யாத்திரைக்கு முன் ஒரு பூசை செய்யவேண்டும்.

இப்பூசைக்கு தாகம் வைப்பு (வெள்ளம்குடி) என்று பெயர் சொல்லுகின்றார்கள். பரிசுத்தமான இடத்தில் வைத்துத்தான் வெள்ளம் குடி (பூசை) செய்ய வேண்டும். விரதம் செய்பவருக்குத் தகுந்த விருந்து வைக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் சரியான பூசை, சுத்தம், சத்தியம், சாந்தி, திருப்தி விஷயவாசனையில் பற்றின்மை இவைகளை ஒவ்வொரு விரதமிருப்பவரும் அனுசரிக்க வேண்டும். இந்துமத சித்தாந்தங்கள் (கொள்கைகள்) ஆத்மாவை நேருக்கு அறிவதற்கும் முக்திக்குமாக பலபல காரியங்களைக் காண்பிக்கின்றன. இவைகளில், விரதம், ஜபம், தோத்திரங்கள் இம்மூன்றும் லகுவாகச் செய்யக் கூடியவை. தவத்தின் வேறுவகைதான் பிரம்மசர்யம். தீர்த்த யாத்திரைக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபரிமலை தீர்த்த யாத்திரை காரணமாகப் பலபல ஆசாரங்கள் செய்வதிலே விரதமிருப்பவர்கள் முனைந்திருக்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபரிபீடம் சபரியால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு வித்யாபீடம் இருந்ததாகவும் ஸ்ரீராமனும் பரசுராமனும் இதை வணங்கின தாகவும் இதற்கு ஐந்து ஆயிரம் வருஷங்கள் பழமை இருப்பதாகவும் சரித்திர நூல் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஸ்ரீசபரி 'சேரமர்' என்ற வகுப்பைச் சேர்ந்தவள் என்று சிலர் சொல்லுகிறார்கள். அய்யப்பன்மார்கள் இவ்விடம் வந்தால் ஸ்ரீராமன், ஸ்ரீசபரி, மற்றும் முனிவர்களைத் தியானித்து சூடம் ஏற்றி வணங்குவார்கள். சன்னிதான மலை நடை அய்யப்பன்மார்கள் அய்யப்பன் கோவிலுக்குள் ஏறும் பொழுது தாங்கள் அதுவரை அனுபவித்த துன்பங்களெல்லாம் மறந்து விடுகின்றனர். ஏதோ ஒரு வாழ்க்கையின் லட்சியம் (ஸாயுஜ்யம்) அடைகின்றனர் மிகவும் வழுவழுப்பானதும் அகலம் குறைந்ததுமான பதினெட்டாம்படி ஏறும்பொழுது அவர்களுடைய தொண்டையிலிருந்து வெளிவரும் 'சரணம்' என்ற சத்தம் ஒன்றுதான் உண்மையிலேயே அவரைப் படியின்மேல் ஏற்றுகிறது. படியின் கீழ் ஒரு அய்யப்பன் நின்றால் அவன் அறியாமலே மக்கள் கூட்டம் அவனையும் எடுத்துக்கொண்டு படியின்மேல் ஏற்றிவிடும். படிவழியாக இரைந்துவரும் மனித சமுத்திரம் ஒழுகி மேல்பரப்பிலே வந்துசேருகிறது. இதற்கிடையில் சரணம் போடுகிற சத்தமும், சங்கு, பெரும்பறை முதலியவைகளின் கோஷங்களும் யாவரையும் பிரமிக்கச் செய்யும்.

மலையாத்திரை எண்ணிக்கைப்படி படிகளில் தேங்காய் உடைக்க வேண்டும். பிறகு படியைத்தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு படி ஏற வேண்டும். பள்ளிக்கட்டு இன்றிபடி ஏறவோ இறங்கவோ கூடாது. படியின் மேல் ஏறினதும் கோவிலைச்சுற்றி வலம் வந்து கட்டைத் தலையில் வைக்காமல் ஐயப்பனுக்கு நேராக நின்று காணிக்கை போட்டுத் தரிசனம் செய்யவேண்டும். பிறகு கன்னிமேல் கணபதி, நாகர், உள்ளிருக்கும் மாளிகைப்புறம். கடுத்த சுவாமி இவர்களை வணங்கி பெரிய அம்பலம் இவைகளை வலம் செய்து மேற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடைவாயிலாகவோ வடக்குநடை வாயிலாகவோ கீழே போக வேண்டும். பிறகு நெய்த்தேங்காய் உடைத்து ஒரு பாத்திரத்தில் வைத்து ஆலய அதிகாரிகளுடைய சம்மதத்துடன் உள்ளே அபிடேகத்திற்குக் கொடுக்கலாம். அத்துடன் மற்ற வழிபாடுகளையும் உள்ளே செய்ய ஏற்பாடு செய்யலாம். இங்கு "உலக்குழி தீர்த்தம்" என்ற ஒரு முக்கியமான இடம் இருக்கிறது. இங்குதான் குளிக்க வேண்டும். ஆனால் அது யாவருக்கும் சாத்தியமானதல்ல. அதனால் அத்தோட்டில் (கால்வாய்) குளித்தாலும் அந்தப் பலன் கிடைக்கும். மகா சங்கிரமத்தன்றுதான் மகரவிளக்கு அன்று சாயங்காலம் பந்தளத்திலிருந்து திருவாபரணம் வருவதைக் காணபதற்கு அய்யப்பன்மார்கள் கூட்டம் கட்டுக்கடங்காது. திருவாபரணம் தலையில் தாங்கித் துள்ளிக் கொண்டு வருவது பக்தியை வளர்த்துகிற காட்சியாகும்.

அன்றிரவு மாளிகைப் புறத்திலிருந்து யானைமேல் எழுந்தருளவைத்துக் கோயிலைச்சுற்றி மூன்று தரம் வந்து திரும்பிப் போகிறது. வாவருடைய பரம்பரைகள் ஆயுதம் தரித்துக் கூறவருவது வழக்கமாகும். மகரவிளக்கு கடக்கும்பொழுது பொன்னம்பலமேட்டில் விளக்கு காணப்படுவதுண்டு. இது சாஸ்தாவின் தாரகபிரம்ம சைதன்யத்தைத் தேவர்கள் செய்யும் பூஜை என்று நம்பப்படுகிறது. தனிப்பட்ட நபர்களுக்குப் பலன் கிடைக்க வேண்டுமானால் அவரவர் ஜென்ம மாதத்தில் சபரிமலை சென்று ஜோதி அய்யப்பனை யோக நிலையில் தரிசிப்பதுதான் சிறந்தது. முதல் மூன்று வருடம் செல்பவர்கள் குருவின் அடையாளமாக மஞ்சள் ஆடைகளை அணியலாம். அதன்பின் 15 ஆண்டுகளுக்குக் கருநீல ஆடை அணிந்து சபரிமலையானைத் தரிசிக்கலாம். 18 ஆண்டுகள் தரிசனத்தை முடித்தவர்கள் யோகநிலையில் இருக்கும் அய்யப்பனை முழுவதும் காவியுடையணிந்து தரிசனம் செய்தால் சிறப்பு என ஒரு வயது முதிர்ந்த நம்பூதரி பிராமணர் எனக்குச் சொன்னார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருப்பமுள்ளவர்கள், நம்பிக்கை உள்ளவர்கள் மேற்படி முறையைக் கையாளலாம். அய்யப்பன் அன்னதானப் பிரியர். அதனால் அனாதைகளுக்கு அன்னதானமிட்டுப் பின்பு புனிதப்பயணம் மேற்கொள்ள வேண்டும். மலைமேல் ஏறும் பொழுது நவதானியங்களை வனத்துள் தூவ வேண்டும். அல்லது பச்சரிசி வெல்லம் கலந்த கலவையை வனத்துள் தூவ வேண்டும். இப்படிச் செய்வதால் அத்தானியங்கள் சிறு புழு பூச்சிகளுக்கு உணவாகும். இதன்மூலம் பாவங்கள் அகலும். நோய் நீக்கம் வேண்டுபவர் துளசி விதைகளைத் தூவ வேண்டும். மனிதர்களின் கால்கள்படும் இடத்தில் அவைகளைத் தூவக்கூடாது.

வள்ளலாரைப் பற்றிச் சிந்திக்க அருள்நிலை பெற வேண்டும். மேலும் அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை எனச் சொல்ல ஒரு தகுதி வேண்டும். அருட் பெருஞ்சோதி என வள்ளலார் கூறுவது புறத்தில் சூரியனைப் பற்றியதாகும். சூரியனின் கருணையால் 84 லட்சம் யோனிபேதங்களுக்கும் வாழ்வு கிடைக்கின்றது. சூரியனின் கதிர்களால் ஸ்தூல, சூட்சும ஜீவிகளும் பயன் அடைகின்றன. பூச நட்சத்திரம் ஒளி நட்சத்திரம். கடகராசியில் இருப்பதாலும் சனி ஆதிக்கத்தில் இருப்பதாலும் சிறிதே நீலம் கலந்து பெட்ரோமாக்ஸ் லைட் மாதிரி ஒளி வீசும். இது ஆத்ம ஒளிக்கு சமம். இதுவே அகச் சூரியன் எனப்படுவது. வடலூரில் காலதேச வர்த்தமானப்படி அக்காலத்திலிருந்தே தைப்பூசம் மட்டும் திரைகள் நீக்கப்பட்டு அருள்ஜோதி தரிசனம் காட்டி வருகின்றார்கள். ஆகம கோட்பாடுகளைக் கொண்ட கோவில்களே அனேக விதிகளைத் தளர்த்தி மாற்றியமைக்கின்றார்கள். பக்தர் வசதிக்காக இக்கிரியா மார்க்கத்தில் சிறிய மாறுதல் செய்வது தவறல்ல. மாயத்திரைகள் 7ம் நீக்கி அருள் ஜோதி தரிசனத்திற்கு கீழ்க்கண்டபடி ஏற்பாடு செய்யலாம் என்பது என் பணிவான கருத்து. தைப்பூசம் மற்றும் மாதப் பூசங்கள், ஒவ்வொரு மாதப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறப்பு, அமாவாசை தினங்கள், பௌர்ணமி தினங்கள், ஞாயிறுதோறும், கார்த்திகையில் உத்திரத்தில், உத்திராடத்தில், மகாசிவராத்திரி மற்றும் மார்கழி திருவாதிரை மேற்படி தினங்களில் முழுஜோதி தரிசனம் வடலூரில் பக்தர்களுக்கு கிடைக்கச் செய்யலாம்.

ஜோதிமலையான திருவண்ணாமலை அல்லது வடலூர் சென்று அருட்பெருஞ்சோதி ஆண்டவரைத் தரிசனம் செய்து பின் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளலாம். அய்யப்ப குருமார்கள் மேற்படி தர்மகாரியங்களைத் தங்களின் சீடர்களுக்கு விளக்கிச் சொல்வது பெரும் புண்ணியம். எங்கும் செல்ல இயலாத முதியோர்கள் மற்றும் வறுமையில் வாடுபவர்கள், தங்கள் வீட்டில் மாலையில் திருவிளக்கு ஏற்றி அதன்பின் ஒரு நிலைக்கண்ணாடி வைக்க வேண்டும். அந்த நிலைக்கண்ணாடியில் தெரியும் ஒளியை ஏதாவது ஒரு ஆசனத்தில் அமர்ந்து பார்க்க வேண்டும். விளக்கிற்கும் பயிற்சி செய்பவருக்கும் உள்ள இடைவெளி 5அடி தூரம் இருக்க வேண்டும். விளக்குத் தீபம் மூன்று அடி உயரத்தில் இருக்க வேண்டும். கண்ணாடியில் தீபஒளியைப் பார்த்து "அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி" எனத் தினம் 27 தடவை ஜெபிக்க வேண்டும். 90 தினங்களில் ஒளி ஒரு வழிகாட்டும். சைவ உணவு விரைவில் பலன் தரும்.

அருட்பெருஞ்சோதி ஆண்டவரும் அய்யப்பசோதித் தெய்வமும் அன்னதான வள்ளல்களுக்கு அருளாசி தருவர் என்பது உறுதி.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. மஞ்சள் தரும் மங்கல வாழ்வு

உலகில் புல் பூண்டுகள் தோன்றியபின் விருட்சங்கள் தோன்றின. முதலில் தோன்றியது அறுகம்புல் ஆகும். அதனால்தான் ஆதிகணபதிக்கு அறுகம்புல் மாலை போடுகின்றார்கள். முற்காலத்தில் மூலிகைகளும் மற்றும் மரங்களும் மனிதனிடம் பேசியுள்ளன. பின் ஏதோ முனிவர் சாபத்தால் அவை பேசவில்லை எனப் புராணங்களில் குறிப்பு வருகின்றது. கேரளாவில் நாய்கள் குரைப்பதில்லை, காக்கை கரைவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தர்ப்பைப் புல்லை அனைத்துக் காரியங்களுக்கும் உபயோகிப்பது வேதகாலத்திலிருந்து நடைமுறையில் உள்ளது. நீங்கள் ஒரு தர்ப்பைப் புல்லைக் கையில் வைத்து மனச்சங்கல்பத்தால் இதர லோகங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

மனிதனின் கிரஹஸ்த வாழ்க்கைக்கு அத்தியாவசிய மானது உப்பும் மஞ்சளும். ஆண்களுக்கு உப்பும், பெண்களுக்கு மஞ்சளும் பலம் தரும். பெண்களின் அடக்க சக்திக்கும் மனவலிமைக்கும் மஞ்சள்தான் காரணம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யூத மன்னர்களின் மனைவியர் அந்தப்புரத்தில் மஞ்சள் குளியல் தொட்டிகள் அமைத்து அதன் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

மஞ்சள் செடி கிழங்குப் பிரிவைச் சார்ந்தது. சமசீதோஷ்ணப் பகுதிகளில் செழிப்பாக வளரும். மஞ்சள் செடி சுமார் மூன்றடி உயரம் வரை வளரும். இதன் தண்டு கூவைச் செடியின் தண்டைப் போன்றது. இலை, கூவைச் செடியின் இலையைப் போன்றுமிருக்கும். சாதாரணமாய் மஞ்சள் கிழங்கை நாம், வீடுகளில் கறி வகைகளுக்கும், உடல் பூச்சுக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபயோகப்படுத்துகிறோம். உடல் நலத்துக்கு மிகச் சிறந்தது. இதன் இலையைக் கசக்கி முகர்ந்தால், மாங்காய் வடுபிஞ்சு மணம் உடையதாய் இருக்கும், மஞ்சளின் சுவை கார்ப்பும், துவர்ப்பும் கலந்தது. மஞ்சளில் பல இனங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானதும், பயன்படக் கூடியதுமான, (1) கறி மஞ்சள், (2) கஸ்தூரி மஞ்சள், (3) மரமஞ்சள், (4) காட்டு மஞ்சள், (5) குரங்கு மஞ்சள், (6) பலா மஞ்சள், (7) காஞ்சிரத்தின் மஞ்சள், (8) நாக மஞ்சள் வகைகளாக அறியமுடிகின்றது. மேலும் வேறுசில பிரிவுகளும் இருக்கின்றன. அவைகள் பொன்குறட்டு மஞ்சள், கடுக்காய் மஞ்சள், பழுக்காய் மஞ்சள், குட மஞ்சள் முதலியனவாகும்.

இறந்த ஆவிகள் சுத்தமில்லாத பெண்களைப் பற்றிக் கொண்டு ஆடுவதும் பாடுவதும் கணவர்களோடு சண்டைபோட வைத்துச் சூட்சுமத்தில் அந்தப் பெண்களுடன் வாழ்க்கை நடத்துவதும் காலங் காலமாக நடந்து வருகின்றது. இது அனைத்து ஜாதி மதங்களிலும் உண்டு. இதைத் தவிர்க்க மன அமைதியையும் குடும்ப சுக வாழ்க்கையையும் வழங்குகிறது மஞ்சள் எனக் கண்டு கொண்டனர். எனவே மஞ்சளைப் பல வழிகளில் உபயோகிக்கத் தொடங்கினர். மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுகின்றனர். தீய ஆவிகள் சாந்தி முகூர்த்தத்தின் போது படுக்கை அறைக்குள் வராமலிருக்க மணமகனுக்கும் மணப்பெண்ணுக்கும் மஞ்சள் காப்புக் கட்டுகின்றனர். மணமேடைகளில் இருக்கும் பொழுது மஞ்சள் தோய்த்த ஆடைகள் உடுத்துகின்றனர். திருமாங்கல்யக் கயிறும் மஞ்சள்தான். மணமக்களுக்குத் திருஷ்டி படாமலிருக்க புரோகிதரும் மற்றும் இதர உறவினர்களும் மஞ்சள் கலந்த அட்சதையைத் தூவுகின்றனர். மஞ்சள் பொட்டு அணிகின்றனர். மாரியம்மன் கோவிலில் பிரதான பிரசாதம் மஞ்சளும் எலுமிச்சம் பழமும்தான். மஞ்சள் பொடி போட்ட எலுமிச்சைச் சாதம் மாரியம்மனுக்கு மிகவும் பிடித்தமானது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஞ்சள் குங்குமம் என்பது மஞ்சள்பொடி, எலுமிச்சைச் சாறு, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், பசுநெய்போட்டுத் தயார் செய்வது. இது நெற்றியில் வடு ஏற்படுத்தாது. பெண்கள் கர்ப்ப காலத்திலும் பிரசவத்திற்கு முன்பும் பின்பும் மஞ்சள் உபயோகித்து வந்தனர். அதனால் அவர்களுக்கு வசீகர சக்தியும் பொன்நிறக் குழந்தைகளும் பிறந்தன. எல்லோர் வீடுகளிலும் துளசிச் செடிபக்கம் மஞ்சள் செடி வைத்து வளர்த்தார்கள். பச்சரிசி மாக்கோலம் மஞ்சள் பொடி கோலம் போட்டு வீட்டை அலங்கரித்தனர். சில ஆண்டுகளுக்கு முன்பு குற்றாலம் பராசக்தி பெண்கள் கல்லூரியில் "இந்துமத சடங்குகள்" என்னும் தலைப்பில் ஆறு தினங்கள் வகுப்பு நடத்தினேன். அதில் M.A., M.Phil., PH.D. மாணவிகள் கலந்து கொண்டு பாடம் கற்றனர். கேள்விகள் கேட்டனர். அதில் மஞ்சள் பிரதானமாக இருந்தது.

கந்தகம் தான் ஆதிபராசக்தி. அருள்வாக்கு சொல்ல, நிலத்தடி நீர் கண்டுபிடிக்க, தேவி உபாசனை செய்ய, ஆண்களை வசீகரம் செய்யக் கந்தகம் அவசியம் வேண்டும். இக்கந்தகம் மஞ்சளில்தான் அதிகம் உண்டு. பெண்கள் மட்டும் மஞ்சள் அதிகம் உபயோகிக்கலாம். ஆண்களுக்கு ஏற்படும் சாமியாட்டத்தைப் போக்க மஞ்சள் பால் கொடுத்து சாமியை மலை ஏறவைப்பார்கள். மஞ்சள் பட்டிற்கும் இதே குணங்கள் உண்டு. மஞ்சள் சேலை அணிந்தாலும், கனக புஷ்பராகம் அணிந்தாலும், மஞ்சள் பட்டுத்துண்டு அணிந்தாலும் எதிரிகளின் அபிசார பிரயோகங்களான ஹோமங்கள் பயனற்றுப் போய்விடும். எவ்வளவு உயர்ந்த படிப்புப் படித்திருந்தாலும் வளமான செல்வங்கள் இருந்தபோதும் கணவன் மனைவிக் கிடையே கருத்து வேறுபாட்டிற்குக் காரணம் பெண்கள் மஞ்சள் தேய்த்துக் குளிக்காததாலும், அசைவ உணவு சாப்பிடுவதாலும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேற்படிக் காரணங்களால் பெண்களின் உடலில் எதிர்ப்புக் கதிர்வீச்சுகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூடுதலாகிப் பெண்களுக்கே உண்டான வசீகர சக்தி மற்றும் ஆகர்ஷண சக்தி குறைகின்றது. சர்வோதய சங்கங்களில் நயம் மஞ்சள் கலந்த குளியல் பவுடர் கிடைக்கின்றது. அதைத் தேய்த்துக் குளித்துப் பின் தங்களுக்குப் பிடித்த சோப்புத் தேய்த்துக் குளிக்கலாம். இயற்கையான மஞ்சள் பட்டுத் துணியில் மின்சார சக்தி உள்ளது. இரண்டு கைகளுக்கிடையே ஒரு சிறிய மஞ்சள் பட்டுக் கைக்குட்டையை வைத்து என்ன மந்திரம் ஜெபித்தாலும் அம்மந்திரத்தை ஈர்த்துக் கொள்ளும் சக்தி அக்கைக்குட்டைத் துணிக்கு உண்டு. மேலும் மேலும் உள்ளங்கைகளுக்கிடையில் வைத்து சக்தியூட்டிப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டால் நமக்குப் பாதுகாப்பு. நற்காரியங்கள் வெற்றி பெறும். மேற்படி உருவேற்றிய மஞ்சள் பட்டுக் கைக்குட்டையை நீரில் நனைக்கக் கூடாது. துவைக்கக் கூடாது. வேறு எந்தவகையிலும் சலவை செய்யக்கூடாது. செய்தால் அதன் மந்திர சக்தி போய்விடும். பெண்கள் எப்போதும் கைப்பைக்குள் வைத்துக் கொள்ளலாம். முன்பு தெய்வ ஓவியங்களை மஞ்சள் பட்டுத் துணியில் வரைந்து அதை வழிபட்டு வந்துள்ளனர். அமெரிக்கக் கிறிஸ்துவ மிஷினரிகள் நம் கோரிக்கைகளை மஞ்சள் பட்டுக் கைக்குட்டைகளில் உருவேற்றி உலக முழுவதுமுள்ள வேண்டுதல்காரர்களுக்குத் தபாலில் அனுப்புகின்றனர். யந்திரம் தேவையில்லை. இங்கு மஞ்சள் பட்டு எனக் குறிக்கப்படுவது இயற்கையான மஞ்சள் பட்டு. செயற்கைப் பட்டு அல்ல. மின்சார சக்தியுடன் கூடிய இயற்கை மஞ்சள்பட்டு காதி மற்றும் சர்வோதய சங்கங்களில் கிடைக்கும்.

மஞ்சளில் சிலவகைகள் உண்டு என முன்பே கண்டோம். முதலில் ஒவ்வொரு இன மஞ்சளின் இலக்கணத்தையும், அதன்பின் அதன் குணத்தைப்பற்றியும் மருத்துவ வகைக்காக இங்கே கொடுத்துள்ளேன். மஞ்சள், இலை, கரி, புகை என ஒவ்வொரு வகைக்கும், ஒவ்வொரு மஞ்சளுக்கும் ஒவ்வொரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயனுண்டு. கறிமஞ்சளின் வகைகளை முதலில் பார்ப்போம். இது இருவகையாம். அவை, பச்சை மஞ்சள், விரல் மஞ்சள் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கறிமஞ்சள், இடத்திற்கு இடம் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இது கொச்சி மஞ்சள், விரல் மஞ்சள், திற்பரப்பு மஞ்சள் எனவும், வலநாட்டு மஞ்சள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகளில் பச்சைக்கும் உலர்ந்ததுக்கும் வெவ்வேறு தனிக் குணங்கள் உண்டு. கறிமஞ்சளில் ஆண் பெண் என இருவகையுண்டு. குடம் போன்ற வடிவமான மஞ்சளை பெண்ணென்றும், விரல் போன்ற மஞ்சளை ஆணென்றும் சாதாரணமாய் நாம் அழைக்கின்றோம். பொன்னிறமான மஞ்சள் கிழங்குக்கு அசைவத்தின் துர்நாற்றத்தை அகற்றும் தன்மையுண்டு. பெண்கள் மஞ்சளைப் பூசி நடமாடினால், பித்தம், வாந்தி, தோசங்கள், வாதம் முதலிய நோய்கள் நீக்கும். மேலும் தலைவலி, நீர் ஏற்றம், கொடிய மேக நோய்கள், பீனிசம், உடலில் ஏற்படும் வலிகள், கடி விசம், விரணங்கள் முதலானவற்றைப் போக்கும் பொதுக் குணங்களும் மஞ்சளுக்கு உண்டு.

விரல் போன்று நீண்டு உருண்டு இருக்கிறதை வறட்டு மஞ்சள் அல்லது விரலி மஞ்சள் என அழைக்கின்றோம். இது உடம்பில் ஏற்படும் சொறி சிரங்கு, நீர் தோசங்கள், உள்வலிப்பு, விசம், உடல்சூடு, கண்சூடு முதலிய நோய்களை அகற்றி உடலை அழகுபடுத்தவும் செய்கின்றது.

மஞ்சளில் குட மஞ்சள் என்ற ஓர் வகையுண்டு. குடமஞ்சளைப் பெண்கள் தொடர்ந்து பூசிவர, முகத்தில் மினுமினுப்பு உண்டாகும், உடலிலுண்டான சிலந்தி நோய் போகும். பெண்கள் குட மஞ்சளை உடலில் பூசிவந்தால், ஆடவர்கள் பெண்களின் அழகில் வசீகரப்படுவார்கள், உடலில் தோன்றும் துர்வாடை நீங்கும். உடலைப் பொன்னிறமாக மாற்றும். தினமும் இந்த மஞ்சள் பூசி நீராடிவந்தால் தூக்கத்தில் இனிய சுகம் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக கறிமஞ்சளுக்கென குணங்கள் உண்டு. இந்த மஞ்சள் செடியின் இலைக்கு மூக்கிலிருந்து வடியும் நீர், பீனிசம், தீராத சொறி சிரங்குகள், மேகம், கரப்பான், வெண்குஷ்டம், தோல் கிருமி, வெட்டை, விசம், வலிகள், புண்புரைகள் போன்ற பல நோய்களைக் குணப்படுத்தும் தண்மையுண்டு. கறிமஞ்சள் சாற்றினால், புழுக்கிருமி, துர்வாடை, முதலியவகைகளை உடலில் புகாது விரட்டும். மேலும் முகச் சிலந்தி, மூக்கிலிருந்து வடியும் நீர், தலைக் கனம், முகவலிப்பு, வாதம் முதலியவைகளைக் குணமாக்கும் இயல்பு உண்டு.

கறி மஞ்சளில் பச்சை மஞ்சள் ஒன்றுண்டு. பச்சை மஞ்சளுக்கு ஊறல், சொறி, சிறுவர் உடம்பில் எழும் பொக்களம், புலால் வாடை, சீழ்வடிதல் தலையிலிருந்து உற்பத்தியாகும் பீனிசம் முதலிய நோய்க ளை அகற்றும் குணம் உண்டு. கேடுகளை நீக்கி, நீண்ட வாழ்வை இது கொடுக்கும். பச்சை மஞ்சள் சாறு, தீராத பீனிசம், வலி, நீரேற்றம் போன்ற நோய்கள் நீங்கும். இது உடலைப் பொன்னிறமாய் மாற்றும். பச்சை மஞ்சளை நன்றாய் அரைத்து, விசத்தன்மையுடைய உயிரினங்கள் கடித்த, இடத்தில் பூச, விசம் நீங்கும். அம்மை நோய், மண்ணன், சொறி சிரங்கு இவைகளை விரைவில் குணப்படுத்தும் தன்மையுடையது. இந்த பச்சை மஞ்சளை பசுமையாய் அரைத்து சிறிதளவு சில நாட்கள் தொடர்ந்து உண்டுவர குடல் நோய், குழந்தை பிறந்த பின்பு தாய்க்கு வரும் வலி, சூதகம் போன்ற நோய்கள் அண்டா. உடலுக்குப் பளபளப்பு நிறத்தை தரும். இது ஆண் பெண் இருவருக்கும் நல்லது.

பொதுவாக மஞ்சளை தீயிலிட்டு, அதிலிருந்து எழும் புகையை உட்கொள்ளக் கஞ்சா தின்று அதனால் ஏற்பட்ட வெறி அதாவது போதை நீங்கும். இதை, மூக்கு வழி உட் கொள்ளத் தலைவலி, கொடிய நச்சுப் பாதிப்பு முதலியன அகலும். மஞ்சளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரைத்துத் தின்றால், சுண்ணாம்பினால் எழுந்த வேகம் போகும். சுக்கில நோய்கள் அகலும். பெண்களின் குடல் வீக்கத்தைத் தணிக்கும், வாய்வை நீக்கும் தன்மையும் மஞ்சளுக்குண்டு. மஞ்சளை வறுத்து, பின் பொடித்த தூளுக்கு, உடம்பில் வரும் புண், புரைகள், குளிர் சுரம் இவைகளைப் போக்கும் இயல்புண்டு. குடல்நோய், கிராணி, துர்நாற்றம் இவைகளை அகற்றும். வெட்டுண்ட புண்களைக் குணப்படுத்தும். தீயால் ஏற்படும் பொள்ளல். அதன் வேகம் இவைகளைத் தணிக்கும். மஞ்சளைத் தீயிலிட்டு எரித்துக் கரியாக்கிப் பொடியாக்க வேண்டும். இடித்த பொடிக்கு அதிசாரக் கழிச்சல், கிராணி, மேகப்புண், துர்நாற்றம், உடலில் ஏற்படும் தடிப்பு, ஊறல், தோல் கிருமிகள் இவைகளை போக்கும். மஞ்சளை வறுத்துக் கரியாக்கிப் பயன்படுத்தும் முறையும் உண்டு. பாத்திரத்தை அடுப்பேற்றி, அதில் மஞ்சளையிட்டுக் கரிய வறுத்து, பொடித்த தூளைச் சிறிதளவு சில நாட்கள் உட்கொள்ள, பெண்களைத் தழுவிய மேக நோய்கள் விலகும். புண் கறணை இவைகளை அகற்றிப் புண்களில் ஏற்படும் உறுத்தல், நோவுகள் நீங்கும். மேலும் மண்டையிடி, அதிசாரம், மார்பு வலி, மாரடைப்பு இவைகள் போகும்.

மஞ்சள் கசாயத்தை முன்னோர்கள் பயன்படுத்தியுள்ளனர். அதாவது பாத்திரத்தைக் காய வைத்து, இரண்டு தம்ளர் அளவு தண்ணீர் ஊற்றி, அதில் மஞ்சளைப் பொடித்துப் போட்டு நன்றாய்க் கொதிக்க வைக்க வேண்டும். அது கிழாயமாகக் குறுகியபின் இறுத்தெடுக்க வேண்டும். இதைக் குழந்தை பெற்ற பெண்களுக்குக் கொடுக்க, அவர் வயிற்றில் கட்டுப்பட்ட விச நீர்கள், குடல் தன்னிலையிலிருந்து விலகியதால் ஏற்பட்ட வயிற்றுப் பொருமல் போன்றவைகள் போகும். உடலில் எழும் காந்தல் மாற, மஞ்சளை நன்றாய் அரைத்து, தண்ணீரில் கலக்கி வடித்து எடுக்கவும். இதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளவோடு குடிக்க வேண்டும். மேலும் இதில் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்து உபயோகிக்கப் புண் புரைகள் அகலும். மஞ்சளைச் சுட்டு எரித்தெடுத்துச் சாம்பலாக்குவர். இது உடலில் ஏற்பட்ட பலவிதப் பற்பங்களின் (நீற்று மருந்துகளின்) வேகங்களைத் தணிக்கும். முன்னாட்களில் மஞ்சள் உப்புத் தயாரிப்பார்கள். மஞ்சளை நன்றாய் அரைத்துத் தண்ணீரில் கலக்குவர். அதைப் பாத்திரத்தில் இறுத்தெடுத்து, பிறகு அடுப்பேற்றி, நெருப்பு மூ ட்டி வற்றச் செய்வர். அதனை உப்பாக எடுப்பர். இந்த உப்பு நெடுநாட்கள் கெடாது இருக்கும். புழுக்கிருமி மலத்துடன் அதிகமாக வெளிவந்தால், இந்த உப்பைக் கொடுக்கலாம். மேலும், குடலில் தங்கிய நீர், ஓங்காரிப்பு, நாசியிலிருந்தும் வாயிலிருந்தும் அளவுமீறி சுரக்கும் நீர் வகைகளை இந்த உப்பு கட்டுப்படுத்தும்.

பெண்கள் முன்னாட்களில் தினமும் மஞ்சளைக் கல்லில் அரைத்து உடலெங்கும் பூசி நீராடுவர். இதனால் உடலில் காணும் காந்தல், தூக்கமின்மை இவைகள் போகும். மேலும் உடல் சுத்தியும், முகத்தில் களையும் தோன்றும். அளவுக்கு மிஞ்சிய வியர்வை தடைப்படும் வியர்வையால் வரும் துர்நாற்றம் மறையும். பொதுவாக மஞ்சளை அரைத்துப் பூசி நீராடி வருபவர்களைத் தொத்து வியாதிகள் தாக்கா. உடம்பில் ஓடும் தோல் கிருமிகள், சொறி சிரங்குகள் வாரா. உடம்பில் ஓடும் இரத்தம் சுத்தியாகும்.

இன்றளவு சிலர் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டும் மஞ்சள் உடை தரிக்கின்றனர். மஞ்சள் பொடியை நீரில் கலக்கி, அதில் நாம் உடுத்தும் துணியை நனைத்து உலர்த்தி உடுத்து வந்தால் நீர்க்கடுப்பு, காசம், விசசுரங்கள், உடல்சூடு, மலக்கட்டு இவைகள் மாறும். மேலும் தொத்து நோய்கள், ஆண்குறியில் எழும் மேகம் சம்பந்தப்பட்ட பழுப்பு, புண் முதலிய நோய்களும், சீல்விசத்தால் ஏற்படும் கேடுகளும் அகலும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஞ்சள் வகைகளில் கஸ்தூரி மஞ்சள் என்ற ஓர் வகையுண்டு என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தோம். கஸ்தூரி மஞ்சள் மிக வாசனையுடையது. இதன் இலை தண்டின் நடுவில் ஓர்விதச் சிவப்பு நிறமாய் இருக்கும். இதன் இலைச் சாற்றால், கிரந்திபுண், கரைப்பான், சில்விசங்கள், சிரசுரோகம், வீக்கம், வலிகள் போன்றவகைகள் போகும். கஸ்தூரி மஞ்சளுக்கு நீர் நோய்கள், மேகம், துர்நாற்றம், புண் புரைகள் போன்றவற்றைப் போக்கடிக்கும் குணமுண்டு. இந்த மஞ்சளுக்கு, குழந்தையின் உடலில் வரும் கரைப்பான், நீர்தோசங்கள், வயது வந்தவர்களின் மேக நோய்கள், வெண்குஷ்டம், புண்புரைகள் போன்றவற்றை மாற்றும் குணம் உண்டு. இதனைப் பயன்படுத்துவதால் அக்கினி சம்மந்தப்பட்ட ரோகங்கள் இவைகள் தீரும், உடல் மினுமினுப்போடு தோற்றமளிக்கும், சுக்கிலம் இறுகும், அறிவு விருத்தி அடையும். கஸ்தூரி மஞ்சளை இடித்துப் பிழிந்து சாறாக்குவர். இந்தச் சாற்றால் மேகம், கரப்பான் இவைகள் விட்டோடும். கஸ்தூரி மஞ்சள் சாற்றுக்குக் கபத்தை மாற்றும் சக்தியுண்டு.

முற்காலத்தில் குழந்தைகளை நீராட்டும் முன்பு, இச்சாற்றை உடம்பில் தேய்த்து விடுவர். பின்பு நீராட்டுவர். இதனால் குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சியும், முகத்தில் கவர்ச்சியும், செய்கையில் சுறுசுறுப்பும், உடம்பெங்கும் பொன்னிற மயமான பளபளப்பும் வந்தடையும். அதிகத் தொந்தரவு தரும் சொறி சிரங்குகள் உடலை விட்டுப்போகக் கஸ்தூரி மஞ்சளைக் கருந்துளசியுடன் சேர்த்து அரைத்து, உடல் எங்கும் தினமும் தேய்த்து வெந்நீரில் குளித்துவர வேண்டும். கஸ்தூரி மஞ்சளை நெருப்பிலிட்டு, அதில் வரும் புகையை மூக்கினுள் உறிஞ்ச, மூக்கிலிருந்து வடியும்நீர், தீராத பீனிசம், உள்இரைப்பு , சன்னி, காசம் போன்ற பல நோய்கள் சிறுகச்சிறுக நம்மை விட்டகலும். கஸ்தூரி மஞ்சள் செடியின் இலைச் சாற்றால் கொடிய கிரந்தி, புண்கள், கரப்பன், சிரசில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரும் நோய்கள், பல்வலி, வீக்கம் போன்றவைகள் காததூரம் ஓடிவிடும். கஸ்தூரி மஞ்சள் இலைச் சாற்றை எப்பொழுதும் உபயோகித்து வருபவர்களுக்கு, தொத்து நோய்கள் வாரா. உடம்பு வசீகரமாகும், உடல் பலம் அதிகமாகும், நல்ல சக்தி உண்டாகும்.

மஞ்சள் வகைகளில் மரமஞ்சள் என்ற ஓர்வகையுண்டு என முன்பே கூறியிருந்தோம். இந்த மரமஞ்சள் செடி, கொடியினத்தைச் சார்ந்தது. இதன் இலை, வடிவத்தில் உலத்திப் பனையிலையைப் போன்று இருக்கும். அதைவிடச் சிறியதாய் இருக்கும் மரமஞ்சள். சுவையில் புளிப்புமாக இருக்கும். மரமஞ்சள் புண்புரைகள், கண்நோய், சுரம், அம்மைநோய் போன்ற பல நோய்களை மாற்றும், மேலும் நல்லெண்ணெயில் மரமஞ்சளையிட்டுக் காய்ச்சிக் குளித்து வந்தால் பீனிசம் மாறும். மரமஞ்சளுக்கு மூல நோய்களைப் போக்கும் தன்மையுண்டு. இது நல்லபசியை ஏற்படுத்தும். நாவுக்கு ருசியை உண்டாக்கும். இது கண்நோய், சுரம் போன்றவற்றை அகற்றும். மரமஞ்சள் இட்டுக் காய்ச்சிய நல்லெண்ணெயினை உடம்பில் தோன்றும் கறுப்பு மறுவுகளைப் போக்கும். இதனால் சுரங்கள் வாரா உடலில் வெப்பம் தணியும். வாய்வு அகலும் கிராணிநோய் குணமாகும். மரமஞ்சளின் வேரை வெந்நீரில் பசுமையாய் அரைத்து, அளவோடு உட்கொள்ள, விஷக்கடிகள், மேக நோய், அடிவயிற்றில் உண்டாகும் வீக்கம் இவைகள் போகும். இதனைச் சிறுநீரில் அமுரியில் உரைத்துக் கொடுக்கக் கடிவிஷங்கள் மறையும். இதைப் பூச்சாகப் பூசிடத் தலைவலி, விரியுற்ற புண்கள் உடனடியாக மறையும். மரமஞ்சளைத் தீயிலிட்டுக் கரித்துப் பொடிக்க வேண்டும். அந்தப் பொடியுடன், வெடிமருந்தையும், காரத்தையும் சேர்த்தரைத்து வெடியாக(பட்டாசாக)க் கொளுத்தி வெடிக்கலாம். மரமஞ்சளை அரைத்துக் காய்ச்சி உப்பு எடுக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். இந்த உப்பு எட்டு வரை குட்டநோய்களைக் குணமாக்கும். இந்த உப்பைத் தண்ணீரிலிட்டுக் கரைத்து, கண்களை சில தடவைகள் கழுவிவரக் கண்நோய்கள் அகலும்.

மஞ்சள் வகைகளில் பலா மஞ்சள் என ஓர் வகையுண்டு என முன்பே கூறியிருந்தோம். பலாமஞ்சள் பலாமரங்களில் ஓர்வித கட்டையாகவும், மஞ்சள் நிறமாகவும் பிடித்திருக்கும். இதற்கு இலை, வேர் முதலியவைகள் இல்லை. இது சுருண்டு, மரத்தில் கட்டை கட்டையாகப் பற்றியிருக்கும். பலா மஞ்சளை அரைத்துப் பூச அம்மைக்கட்டு, அதிசாரம், மற்றுமுள்ள வீக்கங்கள், இளமையில் தோன்றும் ஈரல்நோய், காசம், மேகம் போன்ற நோய்கள் குணமாகும். கண்களுக்கு நல்ல பார்வையைக் கொடுக்கும். பிற மருந்துகளின் வேகத்தைத் தணித்து உடலைத் தன்னிலைக்குக் கொண்டுவரும். விசசுரங்கள், வைசூரி, குஷ்ட நோய், வெப்பு, விசக் கரப்பான் இவைகளை அடியோடு போக்கும் குணம் இம்மஞ்சளுக்குண்டு.

பலா மஞ்சளை வறுத்து, கரித்து, பொடி செய்து பயன்படுத்த வைசூரி நோயால் உண்டான மறுக்கள் மாறி, பொன்னிறமாய் உடம்பு நமக்குக் கிடைக்கும். பலா மஞ்சளை வறுத்துக் கரித்த சாம்பலாக்க வேண்டும். அதனை உடலில் தேய்த்துவரக் கொடிய விஷம் விலகும். உடலில் காணும் முள் (தாமரை முள் வகைகள்) மறையும். பலாமஞ்சளை அரைத்து உடலில் பூசிக் குளித்து வந்தால், உடல் பொன்னிறமாக மாறும், முக அழகு கூடும். பலாமஞ்சள் பொடியைப் பயன்படுத்தினால் சோம்பல், சொறி, சிரங்கு, கிருமி, சீழ், ரத்தம், மூலமுளை இவைகள் அறவே போகும். மலக்கட்டு மாறும். வயிற்றில் எந்தவித நோயும் வராது. சூடு தணியும். சோம்பல் அகலும். பலா மஞ்சளைத் தீயிலிட்டு, எரித்த புகையை உறிஞ்ச வைசூரி, உள்விரணங்கள், வீக்கங்கள், புண்களிலிருந்து வடியும்நீர் இவைகள் அகலும். இன்னும் கை கால் குடைச்சல், உடல் நோவுகள், உடலசதி இவைகள் நம்மைவிட்டகலும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஞ்சள் வகைகளில் காஞ்சிரை மஞ்சள் என்பதும் ஒன்றாகும். காஞ்சிரை மஞ்சள், காஞ்சிரை என்று வழங்கப்படும் எட்டி மரத்தின் கிளைகளில் பற்றிக் கணுக்களாகக் காணப்படும். இது வெண்மஞ்சள் நிறமுடையதாய் இருக்கும். காஞ்சிரம் மஞ்சளுக்கு, பலவகையான பூச்சி, விலங்குகளின் கடிவிஷங்களை மாற்றும் தன்மை உண்டு. இது வாதம், சுரம், விக்கல் போன்ற நோய்களைப் போக்கும். கீரைபூச்சி, கிருமி இவைகளை வயிற்றிலிருந்து வெளிப்படுத்தும். வயிற்றுப் பொருமல், கொடிய வலி, நோவுகள் இவைகளைத் தணிக்கும். காஞ்சிரை மஞ்சளை அமுரியில் உறைத்துத் தடவ, உடலில் அடி, இடி, உதை இவைகளால் ஏற்படும் வர்மங்கள் மற்றும் ஈடு நோய்கள் போகும். தலையில் தோன்றும் நோவுளைச்சல், மற்றும் பீனிசம் போன்றவைகளும் அகலும்.

தலையில் தேய்க்கும் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் காஞ்சிரை மஞ்சளைப் பொடித்துக் காய்ச்சிப் பயன்படுத்தினால், வாதசூலை குணப்படும். இந்த மஞ்சளைப் பொடித்துத் தண்ணீரிலிட்டுக் கொதிக்கவைத்துக் கிழாயம் செய்ய வேண்டும். இதை அளவோடு குடிநீராகக் குடித்து வரவேண்டும். இதனால் சில விஷங்களால் ஏற்படும் வேதனை மாறும். இன்னும், பீனிசம், பல்வலி, ஈறுவீக்கம் போன்றவைகளும் விட்டோடும்.

மஞ்சள் வகைகளில் காட்டு மஞ்சள் என்ற ஓர் வகையும் உண்டு. இந்தக் காட்டு மஞ்சள் இலை கச்சோலத்தின் இலையைப் போன்று இருக்கும். இது பூண்டு இனத்தைச் சேர்ந்தது. காட்டு மஞ்சள் வயிற்றுவலி, குன்மம், வெட்டுக் காயங்களால் ஏற்படும் புண்கள், முதலியவைகளை மாற்றும். அம்மைநோய், வாதம், உடல் எரிவு போன்றவற்றினைக் குணப்படுத்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தக் காட்டு மஞ்சள் இலைக்கு எனத் தனிக்குணமுண்டு. இந்த மஞ்சள் செடியில் இலைகளைத் தண்ணீரில் கஷாயமிட்டு தர நீர்த் தோசம், சுரம், உள்விறையல் (குளிர்), உள்வலிப்பு, தாகம், ஓங்காரம், வியர்வை, கபம் இவைகள் போகும்.

மஞ்சள் வகைகளில் குரங்கு மஞ்சள் என்பதும் ஒன்று. குரங்கு மஞ்சள் செடி பூண்டு இனத்தைச் சார்ந்தது. இதன் இலை இருண்ட பச்சை நிறமாகவும் இருக்கும். குரங்கு மஞ்சள் செடி காடுகளில் அடர்த்தியாகச் செழித்து வளரும். இதன் காய் நல்ல மிளகிலிருந்து சிறிது பருமனாய் இருக்கும். குரங்கு மஞ்சளால், ஊறல், பற்று, தழுவணை. குரு குருப்பு இவைகள் மாறும். பித்தம், கண் புகைச்சல் இவைகளும் நீங்கும். குரங்கு மஞ்சள் காயைத் தின்றால், மனக் கலக்கம், தலைக் கிறக்கம் உண்டாகும். காயை உண்டால் மரணம் ஏற்படும். சிலர் மீன்களைப் பிடிக்க உபயோகப்படுத்துவர். குரங்குகள் இதன் சாயத்தை விரும்பி முகத்தில் பூசிக் கொள்ளும். எனவேதான் இதற்குக் குரங்கு மஞ்சள் என்ற பெயர் வத்தது.

இந்தக் குரங்கு மஞ்சள் இலைக்கு எனத் தனிக்குணம் உண்டு. இந்த மஞ்சள் இலையை அளவோடு எடுத்து அரைத்துத் தினம் ஒரு கழஞ்சு அளவு நாற்பது நாட்கள் உள்கொள்ள நீரொழிவு, நீரிறக்கம், நீர்த் தாரையில் வந்த புண்கள், காந்தல் இவைகள் தீரும். இதனைச் செய்யும் முன்பு கற்றுத்தேறிய வைத்தியரின் உதவியுடனேயே செய்ய வேண்டு ம்.

மஞ்சள் வகைகளில் இக்கட்டுரையில் இறுதியாக நாம் அறியவிருப்பது நாகமஞ்சள் என்பதாகும். நாக மஞ்சள் ஒருவிதக் கொடி இனத்தை சார்ந்தது. நறுநன்றி போன்ற சிறியகிழங்கு வேர்களை கொண்டது. இவ்வேரை உரைத்துப் பார்த்தால் தங்கத்தின் நிறம் போல் தோன்றும். நாக மஞ்சள் கொடியின் பக்கத்தில் சென்றால் ஒருவித வாசனைவீசும். செடியின் இலைகள் வாட்டமுற்றுக் காணும். நாக மஞ்சளுக்கு, சன்னி, வலி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீதளம், கடிதான கோபம் இவைகளை போக்கும் குணங்கள் உண்டு. வெட்டு, குத்து காயங்களை விரைவில் குணப்படுத்தும். மற்றவைகளைப் போல இந்த நாகமஞ்சள் இலைக்கென தனிக்குணமுண்டு. இந்த மஞ்சள் செடியின் இலைகளை அரைத்துப் பூசினால், மகோதரம், நீராம்பல் போன்றவைமாயும். இதன் வாசனையால் பெரும் நோய்கள், வீக்கம், நீர்வடிதல் போன்றவைகள் நம்மை விட்டகலும். நாக மஞ்சளைத் தீயிலிட்டு அதிலிருந்து எழும் புகையை பிடிக்க, கிரந்தி, குட்டம், ஊறல், வலிவகைகள் இவையாவும் போகும். நாகமஞ்சளை வாயிலிட்டு வாயில் ஒதுக்கி மனத் திடமுடன் இருக்க காணாமல் போன பொருட்கள் தென்படும். வசியத்துக்கு இந்த ஒரே மஞ்சளே பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரளத்தில் சிலர் இதனைப் பயன்படுத்துவதாக ஆராயப்பட்டுள்ளது. இந்த மஞ்சள் இலைச்சாற்றால் விசங்கள், கரைப்பான் போன்றவைகள் விலகும். வெட்டுப்பட்டதினால் ஏற்பட்ட புண்களில் காணும் ஊறல் உடனடியாக மறையும். நாக மஞ்சளைத் தீயிலிட்டுச் சுட்டு எடுத்த கரியைப் பயன்படுத்தப் புண் புரைகள் அகலும். இதை ஆமணக்கு எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி உபயோகிக்க மூலமுளை கரையும். நல்லெண்ணெயில் சேர்த்து உபயோகிக்க, இந்த எண்ணெயால் சரும நோய்கள் நீங்கும். மேலும் இந்த எண்ணெய் விஷநோய், திமிர் வாதம், விச சுரம் போன்ற நோய்களுக்கு உபயோகப்படுத்தலாம். நாக மஞ்சள் கரியைத் தேங்காய் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி தலையில் தேய்த்துவரச் சன்னி வலிப்புபோன்ற நோய்கள் நீங்கும், மேலும் வாரா.

பெண்கள் ஆகர்ஷண சக்தியும் மன அமைதியையும் பெற ஓர் எளிய பானம் தினம் இரவு சாப்பிடலாம். இதைப் பெண்கள் மட்டும்தான் சாப்பிட வேண்டும். 300மில்லி பசும்பாலைச் சுடவைக்க வேண்டும். பால் கொதிக்கும்போது அதில் ஐந்து மிளகைத் தட்டிப் போட வேண்டும். ஒரு கிராம் சுத்தமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரலிமஞ்சள் பொடியைப் பாலில் போட வேண்டும். இரண்டு பரும் வெள்ளைப் பூண்டு தோலுரித்து அப்பாலில் போட்டுப்பின் இறக்க வேண்டும். லேசான சூட்டில் இரண்டு ஸ்பூன் பனங்கற்கண்டு போட்டுக் கலக்கி இரவு படுக்குமுன் சாப்பிட்டு வரவும். எவ்விதப் பத்தியமும் கிடையாது. மஞ்சள் பற்றிப் பதார்த்த குண சிந்தாமணி என்னும் ஏட்டில் பல அரிய செய்திகள் உள்ளன.

பலபேர் பல்வேறு அனுபானங்களிலும் அனுபவங்களிலும் மஞ்சளின் உபயோகப் பிரயோகங்களை உணர்ந்துள்ளனர். திருமதி கமலிஸ்ரீபால் தங்களின் கோகுலம் கதிர் பத்திரிகை மூலம் பெண்களுக்குண்டான அரும்பொருட்கள் பற்றிய விளக்கமான கட்டுரைகள் பதிப்பித்துச் சேவை செய்து வருகின்றார்கள். மஞ்சள் உபயோகிக்கும் பெண்களுக்கு மங்கல வாழ்வு மட்டுமல்லாமல் ஆன்மீக வாழ்வும் கிட்டும் என்பது உறுதி.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. ஞான மூலிகைகள்

உலகின் முதன் முதலாக உணரப்பட்ட மருத்துவப் பொருள் மூலிகைகளே. நாம் பயன்படுத்தும் கீரை, காய்கள், கனிகள் எல்லாமே ஒவ்வொரு வகையில் சித்த மருத்துவப் பொருள்களே. அதனால் சித்த மருத்துவம் என்பது உணவு மருத்துவம் எனவாகும். மூலிகை மருந்துகள் எளிதில் விரைவாக உடம்போடு கலந்து நோயைக் குணப்படுத்துகின்றன. மிகவும் பயன்படக் கூடிய மூலிகைகள் கிராமங்களில் வயல் வரப்புகளிலும் வேலிகளிலும் தாமே தழைத்து வளருகின்றன. பல மூலிகைகளை நாமே இனங்கண்டு கொள்ளலாம் தவறான மூலிகைகளைப் பயன்படுத்தினாலும் பெருந் தீங்கு ஏற்பட்டு விடாது. தற்காலத்தில் மாறுபட்ட நகரப் பழக்க வழக்கங்களாலும், சுற்றுச் சூழல் சீர்கேட்டாலும் மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டுத் துன்பப்படுகின்றனர். மேலை நாட்டு மருத்துவத்திற்காகும் செலவு நடுத்தர மக்களாலும் ஏழை, எளிய மக்களாலும் தாங்கக் கூடியதாக இல்லை. மேலும் அம்மருந்துகள் நோயை முற்றிலும் நீக்கக் கூடியதல்ல, பின் விளைவு தரக்கூடிவையாகவும் அவைகள் உள்ளன. மூலிகை மருத்துவம் என்பது ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமின்றி யாவராலும் கைக்கொள்ளக் கூடிய ஒன்றாகும்.

உலகில் தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி மக்களே. அவர்கள் அறிந்த மருத்துவமே மூலிகை மருத்துவம். தமிழ் மருத்துவம் மிகவும் பழமையானதும், சிறப்புடையதும் ஆகும். தமிழ் மருத்துவமே சித்த மருத்துவம், நாட்டு மருத்துவம் என்று அழைக்கப்படுகின்றது. இந்தியாவில் வழங்கப் பெறும் மற்ற மருத்துவ முறைகளும் சித்த மருத்துவத்தின் வேறுபாடே ஆகும். இம்மருத்துவ முறையில் மருந்துகள் இயற்கை மருந்துகள், செயற்கை மருந்துகளென இருவகைப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்கள் பிணியைப் போக்குவதற்கு வேண்டிய மூலிகைகளை மலை மற்றும் வயல் வெளிகளிலிருந்து கொண்டு வந்து நாட்டு மக்களிடையே அறிமுகம் செய்தும், உணவாகப் பயன்படுத்தவும் சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக இஞ்சி, ஓமம், கடுகு, சீரகம், மஞ்சள், மிளகு, பூண்டு, போன்ற வற்றையும் கரிசாலை, கறிவேப்பிலை, துவரை, புடலை போன்ற காய்கறி போன்றவற்றையும் நம் முன்னோர்கள் தினசரி உணவில் சேர்த்துள்ளனர். அனைத்து நோய்களுக்கும் மூலிகை மருத்துவத்திலேயே தீர்வு கண்டு வந்த நிலையில், ஆங்கில ஆட்சியின் போது மேற்கத்திய மருத்துவமுறை புகுத்தப்பட்டு உள்ளூர் மருத்துவ முறை வெளி மோகங் கொண்டவர்களினால் புறக்கணிக்கப்பட்டது. அதனால் வீட்டு மருத்துவமாக விளங்கி வந்த மூலிகை மருத்துவப் பயன்பாடு மக்களிடையே சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது.

ஆங்கில மருத்துவத்தில் இரத்தச் சர்க்கரை, இரத்தக் கொதிப்பு, இரைப்பிருமல், பக்க வாதம், மண்டையிடி, வெளிமூலம், மண்டைக் கரப்பான், கிராணி போன்ற நோய்களுக்கு நிலையான குணமளிக்கும் வழி ஏதும் இல்லை. மூலிகைகளைப் பயன்படுத்தும் சமயம் புகைபிடித்தல், வெயிலில் திரிதல், மிகுகாற்றில் இருத்தல், மிதமிஞ்சிய உடலுறவு கொள்ளல் ஆகியவை ஆகாச் செயல்களாக மூலிகை வைத்தியர்கள் கூறுவர். பொதுவாக எல்லாக் காலங்களிலும் இதனைத் தவிர்த்தல் நல்லது.

மூலிகை வைத்தியம் எடுத்துக் கொள்ளும் சமயம் பத்தியம், இச்சாப்பத்தியம், கடும்பத்தியம், மிகக்கடும் பத்தியம், உப்பில்லாப் பத்தியம் எனக் கூறப்படும் பத்தியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றுள் இச்சா பத்தியம் என்பது கடுகு நல்லெண்ணெய், வெண்பூசணி, பரங்கி, மாங்காய், பலா, தேங்காய், பெருங்காயம், வெள்ளைப் பூண்டு, அகத்தி, ஆகியவற்றை விலக்கி மிகுதியாக உண்ணாதிருப்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடும்பத்தியத்தில் மருந்துண்ணும் நாட்களில் உப்பு, புளி, காரம் நீக்கியும் மருந்து நிறுத்திய பின் நாட்களில் புளியைச் சுட்டுச் சேர்த்துக் கத்தரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு ஆகியவற்றால் காய், குழம்பு, முதலியன செய்து மறுபத்திய மாகக் கொள்ள வேண்டும். மிகக் கடும்பத்தியத்தில் மருந்து உண்ணும் நாட்களில் உப்பு, புளி, காரம் நீக்கியும் மருந்து நிறுத்திய பின் நாட்களில் புளியைச் சுட்டுச் சேர்த்து கத்தரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு ஆகியவற்றால் காய், குழம்பு, முதலியனசெய்து மறுபத்தியமாகக் கொள்ள வேண்டும். மிகக்கடும்பத்தியம் என்பது உண்மையில் மிகக் கடுமை யானது. வைத்தியம் செய்பவர் கூற்றுப்படி நடக்க வேண்டும்.

உலகம் தோன்றிய உடனே அறுகம்புல்லும் தோன்றி விட்டது. அதனால் ஆதிகடவுளான விநாயகருக்கு அறுகம்புல் சூட்டி வழிபாடு செய்கின்றோம். பின் நாட்களில் அனைத்துத் தாவரவர்க்கங்களும் உலகில் தோன்றின. பூ, கனி, இலை ஆகியவைகளையும் வழிபாட்டில் பயன்படுத்துகின்றோம். இது அனைத்து மதங்களிலும் உண்டு. தீப, தூப, நைவேத்தியம் உலக மதங்களின் வழிபாட்டில் முக்கிய பங்காக இருந்து வருகின்றது. 3000 ஆண்டுகளுக்கு முன்பே ராஜாசாலமன் (சுலைமான்நபி) மூலிகை ரகசியங்களை வெளியிட்டுள்ளார்.

அறுகம்புல் குறுகலான நீண்ட இலைகளையும், நேராய் வளரும் தண்டுகளையும் உடைய யாரும் பயிர்செய்யாமல் வயல் வரப்புகளிலும் பிற வெளிகளிலும் வளரும் ஒரு புல் வகை. நம் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் வளர்கிறது. அறுகம்புல் உடல் தாதுவெப்பினை அகற்றித் தாகம் தணிப்பானாகவும், சிறுநீர் பெருக்கியாகவும் உதவுகின்றது. மேலும் நோய் நீக்கி உடல் தேற்றியாகவும், தோகை காமம் பெருக்கியாகவும் செயல்படுகின்றது.

வெள்ளை, மேக அனல், உடல் வறட்சி, சிறுநீர்த் தாரையில் உள்ள புண்ணால் நீர்க்கடுப்பு, சிறுநீருடன் இரத்தம் போதல் போன்றவை அகல அறுகம்புல் சமூலம் 60 கிராம், கீழாநெல்லிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமூலம் 30 கிராம் இவற்றை மையாய் அரைத்துப் பசுமோரில் கலக்கிக் காலையில் குடிக்க வேண்டும்.

அறுகம்புல் 20 கிராம் எடையில் எடுத்து அரைத்துப் பசுவின் பாலில் கலந்து பருகி வர இரத்த மூலம் குணமடையும்.

காது, மூக்கு, ஆசனவாய் இரத்த ஒழுக்கு நிற்கவும், வெப்பம் தணிக்கவும், மாதவிலக்குச் சிக்கல் நீங்கவும், கணுநீக்கிய அறுகம்புல் 60 கிராம், மாதுளை இலை 60 கிராம் 1லிட்டர் நீரில் போட்டு ½ லிட்டராகக் காய்ச்சி 50 மி.லி. அளவாக 2 மணி நேரத்திற்கு ஒரு முறை குடித்து வந்தால் குணம் தெரியும்.

உடல் தளர்ச்சி நீங்கி உறுதிப்படவும், அறிவு வளர்ச்சி பெறவும் முக வசீகரம் உண்டாகவும், கணு நீக்கிய அறுகம்புல் சமூலம் 60 கிராம் வெண்ணெய்போல் அரைத்து 60 கிராம் வெண்ணெய் கலந்து 20 முதல் 40 நாள்கள் சாப்பிட நலமுண்டாகும். சிறு கிராமங்களில் அறுகம்புல் தைலம் தயாரிக்கின்றனர். அறுகம்புல் சாறு ½ லிட்டர், தேங்காய் எண்ணெய் ¼ லிட்டர் அதிமதுரப்பொடி 20 கிராம் இவற்றை ஒன்று சேர்த்துக் கலந்து சிறு தீயில் காய்ச்சி வடித்துத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் பொடுகு, புழுவெட்டு ஆகியவை தீரும். சொறி, சிரங்கு, நமைச்சல் ஆகியவற்றுக்கும் இத்தைலத்தைத் தடவ விரைவில் மேற்சொன்ன நோய்கள் குணமாகும். சனிக்கிழமை தேய்த்துக் குளிக்க வேண்டும்.

கண் நோய்கள் தீர அறுகு சமூலம் 50கிராம், மிளகு 30 கிராம், சீரகம் 25 கிராம் இடித்து ½ லிட்டர் நல்லெண்ணெயில் போட்டு 15 நாள்கள் கடும் வெயிலில் வைத்து 45, 90, 150 நாள்கள் தலையில் தடவி வரவேண்டும்.

மதுமேகத்தால் உண்டான மிகு தாகம் தணிய அறுகம்வேர், நன்னாரி வேர், ஆவாரம் வேர்ப்பட்டை, குமரிவேர் முதலியவற்றில் வகைக்கு 50 கிராம் வீதம் எடுத்து 2 லிட்டர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீரில் போட்டு ½ லிட்டராகக் காய்ச்சி வடித்து 100 மி.லி. யாக நாளைக்கு 5 வேளை கொடுக்கக் குணமாகும்.

கடும் மருந்துகளை உட்கொள்வதால் உண்டாகும். வாய் வயிறு குடல் வெந்து போதல் குணமாக அறுகம்வேர் 60 கிராம், சிறுகீரை வேர் 30 கிராம், மிளகு 10 கிராம், சீரகம் 10 கிராம் இரு லிட்டர் நீரில் சேர்த்து ¼ லிட்டராகக் காய்ச்சிப் பால், கற்கண்டு கலந்து பருக வேண்டும், வீறு தணியும்.

சொறி, சிரங்கு, அடங்காத தோல் நோய், வேர்க்குரு, தேமல், சேற்றுப்புண், அரிப்பு, வேனல் கட்டி முதலியன நீங்கச் சிறிதளவு அறுகம்புல் எடுத்து அதில் பாதி அளவு மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் தடவி சிலமணி நேரம் கழித்துக் குளித்து வர வேண்டும்.

தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் அம்மான் பச்சரிசி என்னும் சிறு செடி இனம் உள்ளது. இதனை சித்திரப் பாலாடை என்றும் சிலர் கூறுவர். சிறு ஈரமுள்ள இடங்களில் தானே வளரும். இது ஈட்டிவடிவ இலைகளையுடையது. பால் உள்ளவை.

அம்மான் பச்சரிசி இலையைச் சமைத்து உணவுடன் உண்ண நாவறட்சி போகும். வாய், நாக்கு, உதடு முதலியவற்றில் தோன்றும் வெடிப்பு மற்றும் ரணம் தீரும்.

அகத்தி என்பது பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. கீரை, பூ, பிஞ்சு ஆகியவை தமிழகமெங்கும் சமைத்து உண்ணப்படுகின்றன. இலை, பூ, வேர், பட்டை முதலியவற்றில் மருத்துவப்பயன் அதிகம் உள்ளது.

அகத்தி இலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்கு 2 லிட்டர் கலந்து, பதமுறக்காய்ச்சி வடிப்பதற்கு முன் கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி, கிச்சிலிக் கிழங்கு, விளாமிச்சம் வேர் வகைக்கு 40 கிராம் தூள் செய்து மேற்படி எண்ணெயில் கலக்கி அதனை வடிகட்டி வாரம் ஒருமுறை தலையில் தேய்த்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குளித்து வரப் பித்தம் போகும். தலைவலி நீங்கும். கண்கள் குளிர்ச்சி பெறும்.

அகத்தி மரப்பட்டையுடன், வேர்ப்பட்டையைச் சேர்த்துக் குடிநீராக்கிக் குடித்துவர சுரம், தாகம், உடல் எரிவு, மார்பு எரிச்சல், நீர்க்கடுப்பு, அம்மை சுரம் ஆகியவை தீரும்.

அகத்திக் கீரையை வாரம் ஒரு முறை சமைத்து உண்ண உடலில் ஏற்படும் வெப்பம், மலச்சிக்கல் போகும். இலையை தண்ணீரில் போட்டு சூடுபடுத்திக் குடிப்பதால் பித்தம் தீரும்.

நம் தமிழ் நாட்டில் 18 சித்தர்கள் பாடல்களில் பல மூலிகைகளைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. வெல்லும் மூலிகை எது? கொல்லும் மூலிகை எது? என்பது பற்றியும் எழுதியுள்ளார்கள். அஷ்டகர்மங்களுக்கென மோகனம், வசியம், தம்பனம், ஆகர்ஷணம், உச்சாடனம், பேதனம், வித்வேஷணம், மாரணம் ஆகிய எட்டுத் தொழிலுக்கும் எட்டுவித மூலிகைகள் உண்டு. போர்க் காலத்தில் மூலிகை தடவிய அஸ்திரங்களை ஏவியுள்ளனர். தர்ப்பைபுல் அதில் பிரதான பங்கு வகுத்துள்ளது. கேரளாவில் மறைவுமை மற்றும் உருமாறும்மை ஆகியவைகளை அபூர்வ மூலிகைகளைக் கொண்டு எம்பிரான் திரி என்னும் சாதியினர் இன்றும் தயார் செய்கின்றனர்.

மந்திர, யந்திர, தந்திரங்கள், ஆவி நிலைகள், பூத வழிபாடுகள் அனைத்து மதத்திலும் உண்டு. ஆதியில் மர வழிபாடு இருந்தது. பின் நாட்களில் அது மறைந்துவிட்டது. அதன் நினைவாகக் கோவில்களில் கொடி மரம் வைக்கின்றோம். முன் காலத்தில் செடி கொடிகள் மனிதருடன் பேசியுள்ளன. மூலிகை மந்திர பிரயோகங்களில் அவைகளுக்குச் சாப நிவர்த்தி செய்து பின் காப்புக் கட்டிப் பொங்கலிட்டு எடுப்பர். புல்லுருவியில் சிறப்பான ஒருவகை உண்டு. அது கொடி போல் இருக்கும். அது மரத்தின் மேல் வளரும். இப்புல்லுருவி மரத்தின் சத்தை உறிஞ்சி வளரும். அது பல்வேறு மரங்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளரும். அவை தரையில் முளைக்காததால் பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து விடுபட்டுள்ளது. அதனால் அதற்குச் சில அபூர்வ சக்திகள் உண்டு. அதைக் காப்புக் கட்டிப் பின் எடுத்து வந்து குளிசமாடிக் கையில் கட்டிக் கொள்வர்.

மரங்களை வெட்டிய பாவம் நீங்கப் புது வீடு கட்டியவுடன் தச்சு கழிப்பார்கள். கிராமப் பஞ்சாயத்துத் தீர்ப்புகள் இன்றும் ஆலமரத்தடியில் வழங்கப் படுகின்றன. மிருக வாழ்விலிருந்து விடுபட்டு மனித வாழ்வுக்கு வந்தபின் மனிதன் ஜீவாத்மா பரமாத்துமாவைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டான். அதற்குச் சில மூலிகைகள் தேவைப்பட்டன. அவை ஞான மூலிகைகள் என அழைக்கப்பட்டன. பதார்த்த குண சிந்தாமணி என்னும் ஏட்டில் இவைகளைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. மனிதன் உடல் வாத, பித்த, சிலேத்துமம் என்ற கூறுகளால் ஆனவை. அதில் சிலேத்துமம் என்பது கபம். கபம் என்பது யமன். கடைசிக் காலத்தில் கபத்தினால்தான் அனேக மனிதர்கள் இறக்கின்றனர். வல்லாரை, தூதுவளை, கரிசாலை என்ற மூன்று மூலிகைகள் மனிதனின் அறிவைப் பிரகாசப் படுத்துகின்றன.

ஞானம் கிடைக்க அறிவு வளர்ச்சி தேவை. தெளிவான அறிவு பெற சில மூலிகைகளை அக்காலத்தவர்கள் பயன்படுத்தி யுள்ளனர். பின்னாட்களில் அந்த இலைகள் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்திப் பயன்படுத்தும்படி முன்னவர்கள் செய்துள்ளனர். அறுகம்புல்லினைக் கணபதி என்னும் விநாயகருடன் தொடர்பு செய்து கூறிய நம்மவர்கள் துளசியினைப் பெருமாளுடனும், வில்வத்தினைச் சிவனுடனும் தொடர்புபடுத்தி நம்போன்றவர்கள் பயன்படுத்தும் படி செய்துள்ளனர். அக்காலத்தவர்கள் தினமும் கோயிலுக்குச் சென்று வந்தனர். கோயில் இம்மூலிகைகளைப் பிரசாத மாகவும், தீர்த்தமாகவும் வழங்கி வந்துள்ளனர். இவைகள் அனைத்தும் ஞான மூலிகைகளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமாள் கோயில்களில் துளசியிலையைப் பிரசாதமாகக் கொடுப்பார்கள். இது கற்பூர மணம் பொருந்தியது. இது நெருங்கிய இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துகளையும் உடைய செடி. இதனைத் துழாய், துளவம் என்றும் அழைக்கின்றோம். திருமாலுக்கும் தாயாருக்கும் பூசனை மூலிகையாகப் பயன்படுத்தப்படுகிறது. தமிழகமெங்கும் தானே வளர்கிறது. வீடுகளில் வழிபாட்டிற்காக வளர்ப்பதும் உண்டு. துளசியின் இலை, பூ, விதை ஆகியவை மருத்துவப் பயனுடையவை. நல்துளசி, கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி எனப் பல இனங்கள் துளசியில் உள்ளன.

பித்தக் காய்ச்சல் 3 நாள்களில் குணமாக ஓர் எளிய முறையுண்டு. துளசி இலை 10, தோல் நீக்கிய இஞ்சி 2 கிராம் சிதைத்து 100 மி.லி. நீரில் போட்டு 50 மில்லியாகக் காய்ச்சித் தினம் 3 வேளை ஒரு மடக்கு வீதம் குடித்து வர வேண்டும்.

துளசி 100 கிராம், மிளகு 40 கிராம் இவற்றினை மையாக அரைத்துச் சுண்டைக்காய் அளவு மாத்திரையாக்கிக் காலை, மாலை வெந்நீரில் இழைத்துக் கொடுக்க அனைத்துக் காய்ச்சலும் தீரும்.

காச நோய் காய்ச்சல் தீர 1 பிடி இலையைச் சிதைத்து 1 லிட்டர் நீரில் இட்டு ½ மி.லி.யாகக் காய்ச்சி வடிகட்டி 30 கிராம் கற்கண்டும் 4 தேக்கரண்டித் தேனும் கலந்து தினம் 4 வேளைக்கு ஒரு வாயளவு வீதம் குடிக்க வேண்டும்.

துளசி விதை 10 கிராமும், அரச விதை 10 கிராமும் சேர்த்து அரைத்துச் சுண்டைக் காயளவு மாத்திரையாக்கிக் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் பசும் பாலில் உறைத்துச் சாப்பிடக் கணச்சூடு தீரும்.

இலைச்சாறு 1மி.லி. யும் தேன் 5 மி.லி.யும் மற்றும் வெந்நீர் 5 மி.லி.யும் சேர்த்துக் காலை, மாலையாக 40 நாள்கள் தொடர்ந்து சாப்பிட இதய நோய் தீரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதயம், கல்லீரல் ஆகியவற்றைப் பலப்படுத்துவதற்கும் சளியை அகற்றவும் தாய்ப்பாலை மிகுதியாக்கவும் இலைகளைப் பிட்டவியலாய் அவித்துப் பிழிந்த சாறு 5 மி.லி. காலை, மாலை சாப்பிட்டு வரப் பசியை அதிகரிக்கும்.

காது மந்தம் தீரத் துளசி இலைக் கதிர்களை வாட்டிப் பிழிந்து சாறு எடுத்து, அதனைக் காலை, மாலை இருதுளி வீதம் காதில் விட்டு வரச் சில நாள்களில் குணமாகும். காதுவலி, இரத்தம், சீழ்வடிதல் ஆகியவை குணமாகத் துளசிச்சாறு, கரிசாலைச்சாறு இரண்டும் கலந்து காதில் விட்டு வரவும்.

துளசி விதையைச் சூரணம் செய்து 5 அரிசி எடையளவு தாம்பூலத்துடன் சேர்த்துக் கொள்ளத் தாது கட்டும்.

துளசிப் பூ, வசம்பு, திப்பிலி இவற்றினைச் சம அளவு சூரணித்து 4 பங்கு சர்க்கரை கலந்து ஒரு சிட்டிகை வீதம் தேனில் சாப்பிட நாட்பட்ட கக்குவானும் தீரும்.

கருந்துளசி இலை 50, செம்பரத்தம் பூ4, இவற்றினை 1 லிட்டர் நீரில் போட்டு ½ லிட்டராக்கி 2 மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு வாயளவு வீதம் 10 நாள்கள் குடிக்க இதயத்தில் தோன்றும் குத்துவலி, பிடிப்பு வலி ஆகியவை முழுமையாகப் போகும்.

இலை 1 பிடி, இஞ்சி 1 துண்டு, தாமரை வேர் 40 கிராம் இவற்றினை அரைத்துக் கொதிக்க வைத்து இளஞ்சூட்டில் பற்றிட விலாவலி போகும்.

இதய வலி குறையக் கருந்துளசி 1 பிடி, மருதம்பட்டை 40 கிராம் இவற்றினைச் சேர்த்தரைத்துப் போட்டு 1 லிட்டர் நீர் சேர்த்து ¼ லிட்டராகக் காய்ச்சி வடித்து 2 தேக்கரண்டி தேன் கலந்து ஒரு வாயளவு வீதம் ஒரு நாளைக்கு 6 முறை வீதம் சில நாட்கள் சாப்பிட்டு வரச் சீரற்ற இதயத் துடிப்பு சீராகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்வமானது மூன்று கூட்டிலைகளைக் கொண்டது. இது உருண்டையான மணமுடைய சதைக்கனிகளைக் கொண்டது. இது முட்களுள்ள பெரிய மரமாகும். இலக்கண இலக்கியத்தில் இது கூவிளம் என்றும் குறிப்பிடப்படுகிறது. சில இடங்களில் அரிதாக ஐந்து கூட்டிலைகளை உடைய வில்வம் மரமும் உண்டு. இது மகா வில்வம் எனப்படும். தமிழகமெங்கும் தானே வளர்ந்துள்ளது. குறிப்பாக அனைத்துச் சிவாலயங்களிலும் வளர்க்கப்படுகிறது.

குடைச்சல், தொண்டைக்கட்டு, காசம் போன்ற நோய்கள் தீர இலையை உலர்த்திப் பொடித்து ½ தேக்கரண்டித் தேனில் குழைத்துக் காலை, மாலை கொடுக்க வேண்டும்.

அனைத்து வகைக் காய்ச்சல் தீர ஒரு பிடி இலையுடன் சுக்கு, சீரகம், மிளகு வகைக்கு 20 கிராம் இடித்து 1 லிட்டர் நீரில் போட்டு 100 மி.லி.யாக வற்றக் காய்ச்சிக் கொடுக்க வேண்டும்.

வில்வத் தளிரை வதக்கி இளஞ்சூட்டில் கண் இமைகளில் ஒத்தடம் கொடுக்கக் கண்வலி, கண் சிவப்பு போன்ற கண் நோய்கள் அகலும்.

பெரும்பாடு தீர வில்வ இலை விழுது கொட்டைப் பாக்களவு கொடுத்துக் குளிர் நீரில் முழுகி வரவேண்டும்.

குழந்தைகளுக்கு வரும் வயிற்றுக் கடுப்பு, சீதபேதி, புண் ஆகியவை போக விளாம் பிஞ்சை அரைத்துத் தயிரில் கொடுக்க வேண்டும்.

வில்வச் சூரணம் ஒரு தேக்கரண்டியுடன் ஒரு தேக்கரண்டி கரிசலாங் கண்ணிச்சாறு கலந்து கொடுக்க மஞ்சள் காமாலை அதி விரைவில் குணமாகும்.

பசியின்மை தீர விளாம் பழச்சதையை உலர்த்திப் பொடித்து அதில் சிறிது சர்க்கரையைக் கலந்து மூன்று வேளையாகச் சாப்பிட்டு வர வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்வ இலைச் சூரணம் ½ தேக்கரண்டி வெண்ணெயில் கலந்து காலை, மாலை உண்ணப் பித்தம், எரிச்சல், வயிற்றுவலி, பசியின்மை, மலச்சிக்கல், வயிற்றுப்புண், குன்ம எரிச்சல், வெள்ளைவெட்டை இவைகள் குணமாகும்.

தாது பலப்படப் பத்து கிராம் பச்சை வில்வ வேர்ப்பட்டையை 1 கிராம் சீரகத்துடன் சேர்த்து அரைத்துப் பசும்பாலில் கலக்கி வடிகட்டித் தினமும் காலையில் சாப்பிட்டு வரவேண்டும்.

நெஞ்செரிச்சல் தீர நன்கு கனிந்த வில்வப் பழத்தை நீர் விட்டுப் பிசைந்து வடிகட்டிச் சமஅளவு சர்க்கரை கலந்து தேன் பதமாய்க் காய்ச்சி 30 மில்லியாகக் கொடுக்க வேண்டும்.

'ஆயகலைகள் 64 நான்கும்' கைவர வல்லாரை நமக்கு உதவும். வடநாட்டில் இதற்குப் பிரம்மி எனச் சொல்வார்கள். பிரம்மி மால்ட் ஆயுர்வேத மருந்துக்கடைகளில் கிடைக்கும். வல்லாரை மாத்திரை, சூரணம், லேகியம், சர்பத் பல இடங்களில் கிடைக்கின்றது. ஜோதிடர்கள், ஓவியக்கலைஞர்கள் சிற்பக் கலைஞர்கள், புலவர்கள், கணிதவல்லுநர்கள் ஆகியோருக்குச் சிறப்புப் பலன் தந்து கை தூக்கிவிடும். சிறந்த சித்தவைத்தியரோடு கலந்து ஆலோசித்துச் சிறிது சிறிதாக உடலுக்குள் சேர்க்கவும்.

வல்லாரை வட்டமாகவும் அரை வட்ட வெட்டுப் பற்களுடனும் கை வடிவ நரம்பு அமைப்புடனும் நீண்ட காம்புடைய ஆழமான இதய வடிவ இலைகளைக் கொண்ட மூலிகையாகும். இதன் கணுக்களில் வேர்விட்டுத் தளிர்க்கும். இது தரையோடு தரையாகப் படரும் சிறு செடியாகும். ஆற்றுப் பாசன நிலங்களில் தானே வளர்கின்றது. கருவல்லாரை என்ற ஓரினமும் மேற்குத் தொடர்ச்சியில் உள்ள மலைப்பாங்கான இடங்களில் அதிக அளவு வளர்கின்றது. இலையே அதிக மருத்துவப் பயனுடையவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வல்லாரை இலையை உலர்த்திப் பொடித்து 5 அரிசி எடையளவு காலை, மாலை நெய்யில் சேர்த்து உண்டால் யானைக்கால், அண்ட வீக்கம், வாயு, வாதம், மேகரணம், கண்டமாலை, நெறிக்கட்டி, குட்டம், சூதகக்கட்டு தீரும், மூளைப் பலத்தையும், சுறுசுறுப்பையும், சிந்தனைத் திறனையும் தரும்.

வல்லாரையுடன் சமஅளவு உத்தாமணி அரைத்துக் கழற்சிக்காய் அளவு 4 நாள் வெந்நீரில் கலக்கிக் குடித்துவரச் சூதகச்சிக்கல் தீரும்.

வல்லாரை, மிளகு, உத்தாமணி சமன் அளவு கூட்டி அரைத்துக் குண்டுமணி அளவு மாத்திரை செய்து தினமும் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் வெந்நீரில் கொடுக்கப் பலவகையான காய்ச்சலும் தீரும்.

வல்லாரை, கீழாநெல்லி இவற்றினைச் சமன் அளவு எடுத்து அரைத்துச் சுண்டைக்காய் அளவு காலை மட்டும் தயிரில் கலக்கிக் குடித்துவர நீர் எரிச்சல் தீரும்.

யானைக்கால், விரைவாதம், நெறிக்கட்டி, அரையாப்பு, கண்டமாலை முதலியன குணமாக வல்லாரை இலையை விளக்கெண்ணெயில் வதக்கி நோய் குணமாகும் அளவு கட்டிவர வேண்டும்.

க்ஷயரோகத் தொண்டைக் கம்மல், சுவாச உறுப்புகளில் சளித்தேக்கம் நீங்க வல்லாரை சம அளவு எடுத்துத் தூதுவேளையுடன் கசக்கிய சாறு பிழிந்து 5,6 துளி அல்லது இரண்டின் பொடி 1 தேக்கரண்டி 50 மி.லி. காய்ச்சிய பாலில் கொடுத்து வர வேண்டும்.

வல்லாரை இலைச் சாற்றில் 7 முறை ஊற வைத்து உலர்த்திய அரிசித் திப்பிலியை உண்டுவர மூளை சுறுசுறுப்பாக இயங்கும். தொண்டைக் கரகரப்பு நீங்கும். நல்ல சாரீரம் உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழங்காலச் சித்தர்கள் வல்லாரை நெய்யும் தயாரித்துள்ளனர். வல்லாரைச்சாறு 1 லிட்டர், பசுவின் பால் 1லிட்டர், இளநீர் ½ லிட்டர், நெய் ½ லிட்டர், சீதேவி செங்கழுநீர்ச் சாறு ¼ லிட்டர் முதலியவற்றினை ஒன்று சேர்த்துக் கலந்து அதிமதுரம், கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, பச்சைக் கற்பூரம் கோரோசனை வகைக்கு 3 கிராம் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிச் சிறுதீயில் எரித்து வடித்தெடுத்துக் காலை, மாலை 5மி.லி. சாப்பிட்டு வர ஈளை இருமல், தொண்டைக் கம்மல், சிறு விஷக்கடி, உடம்பெரிச்சல், நாவறட்சி தீரும், ஞானம் உண்டாகும்.

தூதுவளை யோக நிலையில் அட்டமாசித்தி பெற, ஒலியலைகளை வசப்படுத்த உதவும். மாத்திரை, சூரணம், லேகியம், சாக்லேட் ரூபத்தில் கிடைக்கும். வைத்தியர் உதவியுடன் நல்ல நிறுவனத்தில் வாங்கிப் பயன்படுத்த வேண்டுகின்றேன்.

தூதுவளை நெய் செய்து பண்டைய சித்தர்கள் மக்கள் பயனடையக் கொடுத்துள்ளனர். தூதுளை வேர், இன்புறாவேர், கருந்துளசி வேர், மணித்தக்காளி வேர், சிறுகீரை வேர், மிளகரணை வேர், முசுமுசுக்கை வேர், அமுக்கிராவேர், ஆடாதொடை வேர் முதலியவற்றின் வகைக்கு ½ லிட்டராகக் காய்ச்சி ½ கிலோ சுத்தமான பசுநெய் விட்டுப் பதமுறக் காய்ச்சி வடித்து எடுத்து இத்துடன் 50கிராம் கற்கண்டுப் பொடி கலந்து நெய் தயாரிக்கவும்.

கபநோய்கள், கைகால் எரிவு, இருமல், ஈளை, காசம் முதலியன குணமாக இதைக் காலை, மாலை 5 மில்லி சாப்பிட்டு வரவும்.

கரிசாலை என்னும் கரிசலாங்கண்ணி மூலிகைகளில் குறிப்பிடத் தகுந்ததாகும். எதிரடுக்கில் அமைந்த வெள்ளை நிற மலர்கள் உடையது. இது மிகக் குறுஞ்செடியினம். சில

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடங்களில் தரையோடு படர்ந்து வளர்வதுண்டு. கரிசாலை, கரிப்பான், கையான், கையாந்தகரை ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. ஈரமான நிலத்தில் தானே வளர்வது. இதில் மஞ்சள் நிற மலர்களையுடைய ஓர் இனம் உண்டு. இதனை மஞ்சள் கரிசலாங்கண்ணி, பொற்றலை, பொற்றலைக் கரிப்பான், பொற்கொடி என்ற பெயர்களாலும் சித்தர்கள் அழைத்துள்ளனர். இச்செடி நீர்வளம் மிகுந்த இடங்களில் மட்டுமே வளரும்.

கரிசலாங்கண்ணியின் மருத்துவப் பயன் கருதித் தற்காலத்தில் வீடுகளில் வளர்க்கின்றனர். இஃது ஓர் கற்ப மருந்து, எல்லாப்பிணிகளையும் நீக்கவல்லது. இலைகளே மருத்துவப் பயனுடையவை.

மஞ்சள் காமாலை, பாண்டு, சோகை முதலிய நோய்கள் அகல ஐந்து கிராம் கரிசாலை இலையுடன் 1 கிராம் மிளகு சேர்த்து வெண்ணெய் போல் அரைத்துப் பசுவின் மோரில் கலக்கி காலை, மாலையாகச் சாப்பிட்டு வர வேண்டும்.

இருமல், சளி, காசம், குரல் கம்மல், இரைப்பிருமல் தீர இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 லிட்டர், அதிமதுரத் தூள் 20 கிராம் சேர்த்து பதமுறக் காய்ச்சி வடிகட்டிக் காலை மாலை 1 தேக்கரண்டி சாப்பிட வேண்டும். இந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து வாரம் ஒருமுறை குளித்தும் வரலாம்.

தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, உடல் வெப்பம், பீனிசம், காது கண்ணோய்கள் தீர, கரிசாலைச்சாறு ½ லிட்டர், நல்லெண்ணெய் ½ லிட்டர் கலந்து அதில் குமரிச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு வகைக்கு 100 மி.லி. சேர்த்துக் கஸ்தூரி மஞ்சள் சாதிக்காய் வகைக்கு 50 கிராம் பசும் பாலில் நெகிழ அரைத்துக் கலக்கிப் பதமுறக் காய்ச்சி வடித்து இத்தைலத்தால் வாரம் ஒரு முறை தலையிலிட்டுக் குளிக்கவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இளவயதில் தோன்றும் நரை மாறக் கரிசாலை, பூக்காத கொட்டைக் கரந்தை ஆகியவற்றின் சமன் சூரணம் கலந்து தினமும் காலை, மாலை ½ தேக்கரண்டி தேனில் கலந்து சாப்பிட்டு வர வேண்டும்.

முடி கறுத்து வளர வெள்ளைப்பூ, கரிசலாங்கண்ணி இலையை அரைத்து அடை தட்டிக் காய வைத்துத் தேங்காய் எண்ணெய் ஊற வைத்துத் தேய்த்து வரவேண்டும்.

மஞ்சள் காமாலை தீரக் கரிசாலை இலை, தும்பை இலை, கீழாநெல்லி சமஅளவு அரைத்துக் கொட்டைப் பாக்களவு பசு மோரில் காலை, மாலை கொடுத்து வர வேண்டும்.

காமாலை, ஊது, மகோதரம், குன்மம், நீர் ஏற்றம், பித்தப்பாண்டு, இரத்தத்தில் மிகு பித்தம், இரத்தசோகை, பித்த நீர் சுரப்பின்மை, மண்ணீரல் நோய்கள், கல்லீரல் ஆகியவை தீரக் கரிசலாங்கண்ணி இலை 10, வேப்பிலை 6, துளசி இலை 5, ஒரு சிறு கீழாநெல்லி செடி ஆகியவற்றைக் கழுவிக் காலை, மாலை வெறும் வயிற்றில் மென்று தின்னவும்.

கரிசலாங்கண்ணித் தைலம் தயாரிக்கும் மற்றொரு வகையும் உண்டு. இப்பகுதியில் குறிக்கப்படும் தைலம் மிகவும் பயனுள்ளதாகும். கரிசலாங்கண்ணிச்சாறு ½ லிட்டர், நெல்லிக்காய்ச்சாறு ½ லிட்டர், பொன்னாங்கண்ணிச்சாறு ½ லிட்டர், பசும்பால் ½ லிட்டர், நல்லெண்ணெய் வகைக்கு ½ லிட்டர் கலந்து அதில் 25கிராம் சந்தனம், 25கிராம் கோஷ்டம், 25கிராம் அதிமதுரம், 25கிராம் வெட்டிவேர், 25கிராம் சித்தரத்தை, 25கிராம் விளாமிச்சை வேர், 25கிராம் கடுகுரோகிணி முதலியவற்றைப் பொடித்துப் பசும்பாலில் அரைத்துக் கலந்து 3 நாள் வெயிலில் வைத்துச் சூரியபுடமிட்டுப் பின்னர் சிறு தீயில் மெழுகு பதமுறக் காய்ச்சி வடித்து 40 நாள் நெல் புடமிட்டு எடுத்துப் பயன்படுத்தலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தைலத்தால் வாரம் ஒரு முறை தலை முழுகி வரப் பித்த நோய், தலை நோய், கண்ணோய் முதலியன குணமாகும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும். அத்தைலம் பயன்படுத்தும் சமயம் பகலில் தூங்காமலும் வெயிலில் அலையாமலும் இருந்து புளி நீக்கி உணவு உண்ண வேண்டும்.

கரிசாலை என்னும் கரிசலாங்கண்ணியானது ஞான சித்தருக்கான மூலிகை. வள்ளலார் இதன் பெருமைகளை மிகப் புகழ்ந்து சொல்லியிருக்கின்றார். உடலில் உள்ள 9 வகையான விஷத்தை நீக்கும். உள்ளொளியைக் கொடுத்து உடலைப் பொன் போலாக்கும். தன்னையறியாமல் சித்துக்களை வெளிப் படுத்தும். உயர்ஞானத்தை (Supreme Wisdom) கொடுக்கும். இது சூரணம், நெய் என இரு ரூபத்தில் கிடைக்கும். மஞ்சள் பூ கரிசாலை மிகவும் சிறந்தது. வைத்தியரிடம் ஆலோசனை கேட்டுச் சாப்பிட வேண்டும். பண்ருட்டியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் திருக்கண்டீஸ்வரம் என்னும் ஊர் உள்ளது. அங்கே சாது சிவராம் என்பவர் வள்ளலார் அன்னதான சாலை, வள்ளலார் மருத்துவச்சாலை, வள்ளலார் போதனா சாலை என்னும் நற்பணிச் சாலைகள் நடத்தி வருகின்றார்கள். அவர்களுக்கு இந்த மஞ்சள் கரிசலாங் கண்ணியின் முழு இரகசியமும் தெரியும்.

கீழாநெல்லி என்னும் மூலிகை பற்றி ஆங்கில மருத்துவர்களும் நன்கு அறிவர். மாற்றடுக்கில் இரு சீராய் அமைந்த சிறு இலைகளை உடையது. இது குறுஞ்செடி வகையைச் சேர்ந்தது. இலைக் கொத்தின் அடிப்புறத்தில் கீழ் நோக்கிய காய்கள் இருக்கும். ½ மீட்டர் உயரத்திற்கு வளரும் தன்மை கொண்டது. இதனைக் கீழ்க்காய் நெல்லி, கீழ்வாய் நெல்லி எனவும் அழைப்பர்.

கீழ்வாய்நெல்லி வேர், அத்திப்பட்டை, அசோகுப்பட்டை ஆகியவற்றை இடித்துத் தூள் செய்து சமனளவு கலந்து ஒரு வேளைக்கு 10 கிராம் வீதம் காலை, மாலை வாயிலிட்டு வெந்நீர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருந்த 40 நாட்களில் பெரும்பாடு, வெள்ளை, மாதவிடாய் தாமதம், உதிரச் சிக்கல் முதலிய நோய்கள் அகலும்.

சூடு, சுரம், தேக எரிச்சல் அகல சமூலம் 60 கிராம், 8 மிளகுடன் சிதைத்து 4 குவளை நீரில் போட்டு 2 குவளையாகக் காய்ச்சி 3 வேளையாகக் குடித்து வரவேண்டும்.

மாலைக்கண், பார்வை மங்கல், வெள்ளெழுத்து முதலியன குணமாகக் கீழாநெல்லி இலை, மூக்கிரட்டை இலை, பொன்னாங்கண்ணி இலை சம அளவு அரைத்துக் கழற்சிக்காய் அளவு மோரில் கலக்கி 45 நாள்கள் குடித்து வரவேண்டும்.

சிரங்கு, நமைச்சல் போகக் கீழாநெல்லி இலையில் உப்பு சேர்த்து அரைத்துத் தடவிக் குளிக்க வேண்டும்.

கீழாநெல்லி இலைச்சாறு, பொன்னாங்கண்ணிச்சாறு, சமஅளவு கலந்து நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சித் தலை முழுகப் பார்வைக் கோளாறு நீங்கும்.

பிரண்டை எனும் மூலிகைச் செடி ஆற்று ஓரங்களிலும் மணல் பாங்கான மலைப் பகுதிகளிலும் காணப்படும். இது சதைப்பற்றான நாற்கோண வடிவத் தண்டுகளையுடையதாகும். கொடியினத்தைச் சேர்ந்தது இது. பற்றுக் கம்பிகளும், பசுமைமிக்க இலைகளும் கொண்டிருக்கும். இதன் சாறு உடலில் பட்டால் நமைச்சல் ஏற்படும். சிவப்பு நிற உருண்டையான சிறிய சதைக்கனியுடையது. மூங்கிற் பிரண்டை அல்லது கோப்பிரண்டை என்ற இனமும், முப்பிரண்டை என்ற இனமும் பரவலாகக் காணப்படுகின்றன. இதற்கு வச்சிரவல்லி என்ற பெயரும் உண்டு. இதன் வேர், தண்டு, இலை ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

பிரண்டை உப்பினை ஜாதிக்காய் சூரணத்துடன் நெய்யில் கொடுக்க நரம்புத் தளர்ச்சி, பலவீனம், தாது இழப்பு தீரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரண்டை உப்பை 1 குண்டு மணி அளவு பசு நெய்யில் 1 மண்டலம் கொடுக்கச் சூதகச் சிக்கல், சூதகவலி தீரும்.

வாய்ப்புண், வாய் நாற்றம், உதடு, நாக்கு வெடிப்பு ஆகியவை தீரப் பிரண்டை உப்பு, தயாரித்து அதில் 3 அரிசி எடை வெண்ணெயில் கொடுக்க வேண்டும்.

சதைப் பிறழ்ச்சி, அடிபட்ட வீக்கம், எலும்பு முறிவு வீக்கம், எலும்பு முறிவு ஆகியவை போகப் பிரண்டைச் சாற்றில் புளி, உப்பு கலந்து காய்ச்சிப் பொறுக்கும் சூட்டில் பற்றிட வேண்டும்.

பசியைத் தூண்டப் பிரண்டை இலைத் துவையல் நல்லது. நமது உடலில் கொழுப்புச் சத்துக் கூடுவதால் தேவையற்ற இடங்களில் சதைப் பிடிப்பு வருகின்றன. பலர், குறிப்பாகப், பெண்கள் இதனால் துன்பப்படுகின்றனர். இது ஓர் புறமிருக்க, என்ன செய்தாலும் சிலருக்குச் சதையே பிடிப்பதில்லை. அதனால் வற்றிய உடலுடன் பலர் துன்பப்படுகின்றனர். டெல்லி, பம்பாய், சென்னை, மதுரை போன்ற நகரங்களில் அமெரிக்கா போன்ற நகரங்களிலிருந்து மூலிகை (Herbal) பெயரால் பல மருந்துகள் வருகின்றன. மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு நான்காயிரம் செலவு செய்து அதனை வாங்கி உண்டு வருகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நம் சித்தர்கள் இதற்கும் மூலிகைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

சதைப்பற்று அடையச் சித்தர்கள் நமக்கு காட்டிய வழி மிகவும் எளிமையானதாகும். சாம்பல் பூசணியை 3 மாதம் தொடர்ந்து மூன்று வேளையும் சமைத்து உண்டு வர இளைத்த உடல் பெருக்கும். சில குழந்தைகள் எவ்வளவு உணவு உண்டாலும் வளர்ச்சியின்றி இருக்கும் அதற்கு சாம்பல் பூசணிக்காயை துருவிப்பிழிந்து பிட்டவியலாக்கிச் சர்க்கரைப் பாகில் கிளறிச் சுக்குத்தூள் கலந்து அல்வா போலச் செய்து எலுமிச்சங்காயளவு இரவில் படுக்குமுன்பு கொடுத்து வரக் கணச்சூட்டால் மெலிந்த குழந்தைகள் நல்ல வளர்ச்சி பெறுவர். பலம் கூடும். உடல் பருமன் உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடல் மெலிவு பெறவும் சித்தர்கள் நமக்கு வழிகாட்டி உள்ளனர். பல வழிகள் இருப்பினும் முக்கியமாக, எளிமையான நான்கு வழிகளைக் கூறுகின்றோம்.

முள்ளங்கியை தினமும் சமைத்து உண்ண பருத்த உடம்பு குறையும். அதே போல மந்தாரை வேர் 100கிராம், 500 மி.லி. நீரிலிட்டு அது ¼ லிட்டராகும் படி காய்ச்சித் தினம் குடித்துவரப் பருத்த உடல் மெலியும்.

நீர்முள்ளிச் சமூலத்தை நன்கு அலசி இடித்து 400 கிராம், 4 லிட்டர் நீரில் போட்டு நெருஞ்சில் விதை, சோம்பு, கொத்துமல்லி வகைக்கு 100 கிராம் இடித்துப் போட்டு ½ லிட்டராகக் காய்ச்சி வேளைக்கு 100 மி.லி. வீதம் தினம் நான்கு வேளை குடித்து வர ஊதிப் பெருத்த உடம்பு கண்டிப்பாக குறையும். தினமும் பப்பாளிக் காயை சமைத்து உண்டு வர தடித்த உடம்பு குறையும்.

பாகல் என்பது கூட்டிலைகளையும் இருபால் மஞ்சள்நிற மலர்களையும் சொர சொரப்பான நீண்டு உருண்டை காய்களையும் உடையது. இது மென்மையான பற்றுக் கம்பிகளை யுடைய ஏறு கொடியினம். கொம்புப்பாகல் மிதிப்பாகல் என இரு வகைகள் உள்ளன. காய்கள் கசப்புச் சுவையுடையவை; இலை, காய், பழம் ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

பாகல் இலைச்சாற்றை உள்ளங்கால்களில் தடவக் கால் எரிச்சல் தீரும். பாகல் இலைச்சாறு 20 மி.லி. குடிக்க வயிற்றுப் பூச்சி கழியும். பாகல் இலையை விளக்கெண்ணெயில் வதக்கி ஆசனவாயில் கட்டி வர 40 நாளில் வெளி மூலம் தீரும். பாகல் இலைச்சாறு 100மி.லி. வீதம் 15 நாட்கள் சாப்பிட்டு வரச் சிறுநீர்ச் சர்க்கரை குறையும்.

மூலிகைகளின் பயன்பற்றிப் பெரிய அளவில் நூற்களே எழுதலாம். மூலிகை இலைகளின் தன்மை போல அவற்றின் வேர், பட்டை, தண்டு, பழம், காய் முதலியவற்றினுக்கும் பல குணங்கள் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள் உறுப்பு புண்கள் குணமாக விளாமரத்தின் பிசின் எடுத்து அதனை உலர்த்தித்தூள் செய்து காலை, மாலை 1கிராம் வெண்ணெயுடன் கலந்து சாப்பிடக் குணமாகும்.

பெண்களின் குரல் குயிலின் குரலுக்கு இணையாகக் கூறுவர். சிலருக்குக் குரல் இனிமையாக இருப்பதில்லை. அவர்கள் ஆடாதொடை, மணப்பாகு 10 மி.லி. சமஅளவு எடுத்து வெந்நீரில் கலக்கி 40 நாட்கள் சாப்பிட்டு வரக் குரல் இனிமை உண்டாகும். வேறு ஓர் முறையும் உண்டு. கரிசலாங்கண்ணி சாறு 1 லிட்டர், நல்லெண்ணெய் 1 லிட்டர், அதிமரத்தூள் 40 கிராம் சேர்த்துப் பதமுறக்காய்ச்சி வடிகட்டி காலை, மாலை 5மி.லி. சாப்பிட்டு வரக் குரல் இனிமை பெறலாம்.

காக்கை வலிப்பு தீர வசம்பு 200 கிராம், பெருங்காயம் 200 கிராம், கடுக்காய்த்தோல் 200 கிராம், அதிவிடயம் 200 கிராம், கருப்பு உப்பு 200 கிராம், முதலியன ஒன்று சேர்த்துப் பொடி செய்து 1 தேக்கரண்டி காலை, மாலை உண்டு வரக் காக்கை வலி தீரும்.

உடல் நாற்றம் என்பது பலருக்குப் பலவகை பிரச்சனையை உண்டு பண்ணும். இதற்கு ஆவாரம் பூவைச் சூரணமாகச் சாப்பிடவும் அல்லது குடிநீராக்கிப் பசும்பாலில் கலந்து சாப்பிடவும் அல்லது இதழ்களைக் கறிகூட்டாக நாள்தோறும் பயன்படுத்த உடல் நாற்றம் தீரும். வேறு ஓர் முறையும் உண்டு. அதாவது பற்பாடகத்தைப் பாலில் அரைத்துத் தடவிக் குளித்து வர எப்படிப்பட்ட உடல் நாற்றமும் தீரும்.

மேற்படி மூலிகைகளைச் சாப்பிட்டு வரவும். பச்சையாகக் கிடைத்தால் துவையலாகக் கொள்ளலாம். சைவ உணவு சிறப்பானது. எப்படிச் சாப்பிட்டாலும் தினமும் பசும்பால் சாப்பிட வேண்டும். மனிதனுக்குத் தடையாக உள்ள கபம் போன்ற பிணிகள் நீங்கி நாளாவட்டத்தில் அருள் நிலை கை கூடும். இது பெரியோர் வாக்கு. அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் திருப்பாதங்களை வணங்குவோம்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. டேனியலும் சைவ உணவும்

உலகில் முதன்முதலில் தோன்றிய ஆதிமனிதன் வேட்டையாடித்தான் தன் உணவினைத் தேடவேண்டிய திருந்தது. மிருக வேட்டை கிடைக்காத விடத்து மனிதவேட்டை நடந்தது. அயல் மனிதர்களையும் நோய் வாய்ப்பட்ட மனிதர்களையும் கொன்று சாப்பிட்டுப் பசி தீர்ந்தான். பின் அவனுக்குக் கடவுளைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டது. கடவுளுக்கும் திறந்த வெளி பலி பீடத்தில் தான் உண்ணும் மாமிசத்தைப் படையல் செய்தான். பின்பு படையலைத் தான் உண்டான். இதில் அவனுக்கு ஒரு மன நிறைவு ஏற்பட்டது.

பச்சை மாமிசங்களைத் தின்ற மனிதனுக்குப் பின் சிக்கிமுக்கிக் கல்லும் அரணிக் கட்டையின் உபயோகமும் தெரியவந்தன. அதன் உதவியால் நெருப்புண்டாக்கிப் பல்வேறு வகை மாமிசங்களை நெருப்பில் வதக்கிச் சாப்பிட்டு மகிழ்ந்தான். வதக்கிய மாமிசங்களையும் இறைவனுக்குப் படையல் செய்தான். தினமும் இதுமாதிரி வேட்டை கிடைக்க வேண்டும் என ஆண்டவனை வேண்டினான். அவன் வேண்டுதல் ஏற்கப்பட்டு அவனுக்கு அவ்வப்போது மாமிச உணவு கிடைக்க ஆதி கடவுள் அருளினார். சில சமயங்களில் மாமிச உணவுகளைப் போராடிப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. சிறியவர்களாலும் வயோதிகர்களாலும் வேட்டையாட முடியவில்லை. இதற்கு மாற்று வழி என்ன? எனச் சிந்திக்க தொடங்கினர்.

பின் மரங்களின் கனிவகைகளை உண்ண ஆரம்பித்தான். அறுசுவைக் கனிகளைச் சாப்பிட்டதால் அதில் உள்ள லாக்டோஸ் மற்றும் குளுகோஸ் அவன் மூளை வளர்ச்சிக்கு உதவியது. விஷப்பூண்டு எது? நல்ல தாவரம் எது? என அறிந்தான். பின் தானியங்களைப் பயிரிட்டு அறுவடை செய்யக் கற்றுக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டான். திராட்சை பயிரிட்டு அதன் ரசத்தைப் பருகிக் களிப்புற்றான். இறைவனைத் திருப்திப் படுத்தினால்தான் நமக்கு உணவு கிடைக்கும் என எண்ணினான்.

வேத காலத்தில் இறைவனை வணங்க யாக குண்டங்கள் இருந்தன. இந்திரன் தான் முழுமுதற்கடவுள் எனச் சிலர் நம்பினர். அவரை மகிழ்விக்கப் பல்வேறு மிருகங்களின் ஊன் ஆகுதியாகக் கொடுக்கப்பட்டது. கடைசியில் யாகப்பசு என்னும் ஒரு கன்னிச் சிறுவனும் பலி கொடுக்கப்பட்டு அவயங்கள் யாக குண்டத்தில் போடப்பட்டன. இவை கி.மு. 100 வரை நடந்தது.

யாகம் வளர்க்க அதிகப் பொருட் செலவானது. ஏழைகளால் யாகம் வளர்க்க இயலவில்லை. இந்நேரம்தான் புத்த சமண மதங்கள் தோன்றின. அஹிம்சையைப் பற்றியும் யாகங்கள் இல்லாமல் இறைவனை அடையும் மார்க்கத்தைப் பற்றியும் கர்மாவைப் பற்றியும் போதித்தன. அதன் விளைவாக மக்கள் அனைவரும் மேற்படி புது மதங்களை நோக்கி ஓட ஆரம்பித்தனர். இதே கால கட்டத்தில் இயேசு கிறிஸ்து தோன்றினார். அன்பையே வேண்டுகின்றேன். மிருகபலியை அல்ல! என உபதேசித்தார். (I want kindness not animal sacrifice) அதன்பின்தான் "புதிய ஏற்பாடு" என்னும் வழிபாட்டு முறை தோன்றியது. வழிபாடுகளில் சைவ உணவு படைக்கப்பட்டது. இந்து மதத்தில் சைவ மத சிவாச்சாரியார்களும் வைஷ்ணவ மத பட்டாசாரியார்களும் சைவ உணவை ஆகாரமாக கொண்டனர். யாகங்களில் நரபலிக்குப் பதில் சாம்பல் பூசணிக்காயைப் பலி கொடுத்தனர். பின் தேங்காய், வில்வக்காய், வாழைப்பழம், எலுமிச்சங்காய் ஆகியவை மிருகங்களுக்குப் பதிலாகப் பலி கொடுக்கப்பட்டு வருகின்றது. ஊனுக்கு பதிலாகப் பசு நெய்யால் ஆகுதி செய்தனர். அவை இன்று வரை தொடர்கின்றன.

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் எருசலேமிலிருந்த நெபுகத்னேசர் என்னும் பாபிலோனிய மன்னன் அவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரண்மனைப் பணிக்குச் சகல கல்வியிலும் ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற இளைஞர்களை அமர்த்த விரும்பினான். இதற்கு இஸ்ரவேலர்களான இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அதில் டேனியல் எனப்படும் அடிமை இளைஞனும் அவன் நண்பர்களும் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் வேறு யாருடனும் தொடர்பு கொள்ளாமல் இருக்கச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு அரசன் மூன்று ஆண்டுகள் பயிற்சியளித்தான். அவர்களுக்கு அரண்மனை உணவையும் உயர் மாமிச உணவு வகைகளையும் மதுவையும் தினம் கொடுக்க அரசன் ஆணையிட்டான். சிறைக்காவலர்களும் அரசன் சொல்படி செய்தனர். டேனியல் கடவுள் அருளைப் பெற்றவன். அவன் சிறைக் காவலர்களுக்கு அசைவ உணவு வகைகளைக் கொடுத்து வந்தான். அவர்கள் மூலம் தனக்கு வேண்டிய சைவ உணவையும் தண்ணீரையும் வாங்கிச் சாப்பிட்டு இறைவனின் அருளைத் தொடர்ச்சியாகப் பெற்று வந்தான்.

முதலில் பயந்த சிறைக் காவலர்கள் டேனியலின் உடல் வன்மையையும் ஒளியையும் அமைதியையும் கண்டு வியந்தனர். அரசன் ஒரு கனவு கண்டான். அதை விளக்கிச் சொல்ல அரச சபையிலிருந்த மந்திரவாதிகளாலும் மாயவித்தைகாரர்களாலும் முடியவில்லை. இந்நேரம் டேனியலை ஆண்டவன் வெளியுலகிற்குத் தெரியப்படுத்த எண்ணினான். காவலர்களின் ஆலோசனைப்படி சிறையில் இருக்கும் டேனியல் மற்றும் அவனது மரக்கறி உணவு நண்பர்கள் அரச சபைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களின் முக தேஜசையும் வாக்குவன்மையையும் உடல் வாகுவையும் கண்டு அரசன் வியப்புற்றான். அரசன் கண்ட கனவுகளுக்கு டேனியல் தன் அதீதசக்தியால் தக்க விளக்கமளித்தான். அவனது நுண்ணறிவை பாராட்டி அரசன் அர்சசபையில் சேர்த்துக் கொண்டான்.

பைபிள் பழைய ஏற்பாட்டில் "டேனியல்" என்னும் பகுதியில் இச்சம்பவம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. காய்கனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணவு மூலம் இறைவன் அருளைப் பெறலாம் என்பது அக்காலத்திலியே நிரூபிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களுக்கு அருளைக் கொடுக்கக் கூடியது கோதுமை அப்பமும் திராட்சை ரசமும். இதைச் சாப்பிடுபவர்களால் மட்டும் அன்பைப் பற்றி அதிகமாக பிரசங்கம் செய்யலாம். இனி வருங்காலங்களில் வர்க்கம் இரண்டாகப் பிரியும். ஒன்று மாமிசம் சாப்பிடும் அசைவர்கள். இரண்டாவது தானியம் மற்றும் காய்கனிகள் உண்ணும் சைவர்கள். சைவ உணவில் தானிய உணவு, பருப்பு வகை உணவு காய்வகைகள், கிழங்கு வகைகள், கீரை வகைகள் எனப் பிரிக்கலாம். இச்சைவ உணவில் இல்லாத சத்துக்களே இல்லை.

கிழங்குகள் தரைக்குள்ளே மண்ணில் விளைகின்றன. உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சேமைக்கிழங்கு, காரட்கிழங்கு, முள்ளங்கி, பீட்ரூட், வெங்காயம், வெள்ளைப்பூண்டு முதலியவை நாமறிந்த கிழங்குகளாம். கிழங்குகள் சத்துள்ளவை. பலவகை வைட்டமின்களும் சத்துக்களும் இவற்றில் உள்ளன. சாதாரணமாகத் தினமும் இவற்றினை உணவில் சேர்த்து உண்ண வேண்டும். இரத்த அழுத்தம் உள்ளவர்களும் சர்க்கரை நோய் உள்ளவர்களும் கண்டிப்பாக இவற்றை உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

கிழங்கு வகைகளைப் போன்றே ஒவ்வொரு காயினுக்கும் ஒவ்வொரு வகைக் குணமுண்டு. முற்றிய வெண்டைக்காய் கறிக்கு உதவாது. பிஞ்சுக்காயாக இருப்பது நலம். இதில் பி. சி. விட்டமின்கள் உண்டு. சூட்டை ஆற்றும். மந்தப்படுத்தும். மிளகு, சீரகம் சேர்த்து உண்ண வேண்டும்.

முருங்கைக்காய் தாது புஷ்டியை உண்டாக்கும். குடல் தழைக்கும். நெய் அல்லது புளி சேர்த்து உட் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகற்காயில் கொம்புப் பாகற்காய் என்றும் மிதிபாகற்காய் என்றும் இரு முக்கிய வகைகள் உண்டு. கசப்புச் சுவையுள்ளது. இதை வேக வைத்து நீரைக் கொட்டிவிட்டுச் சமைக்க வேண்டும். சூடு உண்டாக்கும். தீனிப்பையிலுள்ள பூச்சிகளைக் கொல்லும். புளி சேர்த்துச் சமைக்க வேண்டும். சர்க்கரை நோயுள்ளவர்கள் வேக வைத்த நீரைக் குடிக்க வேண்டும். அறுசுவை உணவில் நாம் கசப்புச் சுவை சேர்ப்பதே இல்லை. எனவே தான் பல நோய்கள் வருகின்றன.

பயற்றங்காய் கபத்தைப் போக்கும். தீபனம் உண்டாக்கும். நீரைப் பெருக்கும்.

வாழைக்காயில் பலவகை உண்டு. இதில் மொந்தன் வாழைக்காய் மட்டும் கறி சமைப்பது வழக்கம். இதில் மாவு சத்து அதிகம் உண்டு. இரும்புச்சத்து இதில் உண்டு. தேகம் பருக்கும். தழைப்புண்டாகும். தீபனத்தை அடக்கும். மிளகு சீரகம் சேர்க்க வேண்டும். வாழைப்பிஞ்சு பத்தியத்திற்கு உதவும். வாழைக்காயின் மேல்தோலை மெல்லியதாகச் சீவிப் போட்டு விட்டு உள்தோலுடன் சிலர் சமைப்பர். உணவு விடுதிகளில் மேல் தோலையும் உணவுப் பொருட்களாகத் தயாரிப்பர்.

தேங்காய் தொடர்ந்து உண்டால் தாது விளையும். ஈரலுக்கு வலிமை கொடுக்கும். குடலிலும் வாயிலும் உள்ள புண்கள் ஆறும். இது பிற காய்கறிகளின் சுவையை அதிகப்படுத்தும். ஆகையால் காய்கறிகளுடன் சேர்த்துச் சமைப்பது வழக்கம். இதில் ஏ.பி. வைட்டமின் சிறிதளவு உண்டு. தேங்காயெண்ணெய் இதிலிருந்தே எடுக்கிறார்கள். தேங்காய் வழுக்கையில் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் மூலச்சூடு போகும். உடல்தோல் வழுவழுப்பாகும். காந்த உடலைக் கொடுக்கும்.

புடலங்காய் உடம்பின் அழலையைப் போக்கும். உடல் சூட்டைக் குறைக்கும். நா வற்றட்சியைப் போக்கும். தேகம் தழைக்கும். குளிர்ந்த தேகத்துக்கு உதவாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூசணிக்காயைப் பறங்கிக்காய் என்றும் அழைப்பர். இதில் பி.சி. வைட்டமின்கள் சிறிதளவு உண்டு. சூடு நீக்கும். பித்தம் போகும். பசி உண்டாகும். தேகபுஷ்டி உண்டாகும். இது இனிப்புச்சுவை உடையது.

மக்கள் முக்கிய உணவாகக் கொள்ளும் அரிசியும் கோதுமையும்தான் இந்தியாவில் பெரும்பான்மையான மக்களின் முக்கிய உணவாக இருக்கிறது. ஆனால் நம் ஊர்க் கடைகளில் விற்கும் அரிசியும், கோதுமையும் தவிடு போக்கியவைகளாக உள்ளன. தவிடு நீக்கியதால் தசைகளுக்கு உரமளிக்கிற தவிடு அவற்றில் இல்லை. ஆனால், உடல் நலத்திற்கு அவசியமான ஸ்டார்ச் என்னும் மாவுப் பொருள் அதில் உண்டு. மாவுப் பொருள்களே தானியங்களில் முக்கியமாகவுள்ளன. மாவுப் பொருள்களாகிய அரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், கோதுமை முதலிய உணவுகளை உண்ணும்போது வாயில் சுரக்கும் உமிழ் நீரோடு கலந்து குழப்பி உண்ண வேண்டும். ஏனென்றால், உமிழ் நீருக்கு மாவுப் பொருள்களைச் செரிக்கச் செய்கிற தன்மை உண்டு.

தானிய வகைகளில் மிகச் சத்துள்ளது கோதுமை. தவிடு முழுமையாக அகற்றப்படாத எடுபடாத முழுக் கோதுமையைத் தான் இங்குக் கூறுகிறோம். எந்திரங்களில் குத்தித் தவிடு போக்கிய கோதுமையில், அரிசியைப் போலவே, சத்துக் கிடையாது. கடைகளில் விற்கப்படும் கோதுமை மாவு கோதுமை ரவை முதலியவை தவிடு எடுபட்டவை. இவைகளில், தசைகளுக்கு உரம் அளிக்கிற சத்துப்பொருள் இல்லை. உடம்புக்கு வெப்பம் அளிக்கிற மாவுச் சத்துமட்டும் இருக்கிறது. எனவே கோதுமையை விரும்புவோர் கடையில் மாவாகவும் நொய்யாகவும் வாங்காமல், முழுக் கோதுமையை வாங்கி நாமே அரைத்துக் கொள்ள வேண்டும். நம்மால் அரைக்கப்பட்ட முழுக் கோதுமை மாவு அல்லது நொய்யில் தசைகளுக்கு உரமளிக்கும் தவிடு, உடலுக்கு வெப்பம் அளிக்கும் மாவுப் பொருளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருக்கின்றன. எனவே இது மிக நல்ல உணவாகும். கோதுமையில் பிசுப்புத் தன்மை அதிகம் இருப்பதனால் இதை நம்மால் ரொட்டி செய்ய முடிகிறது. அரிசி, கம்பு, கேழ்வரகில் இவ்வளவு பிசுப்புத்தன்மை இல்லை. கோதுமையால் பூரி, சப்பாத்தி, உப்புமா போன்றவை செய்து உண்ணலாம். தவிடு போகாத கோதுமை, தானிய வகைகளில் முதன்மையானது!

கோதுமையே சிறந்த உணவு. வெறும் கோதுமையை முக்கிய உணவாகக் கொள்ளும் வட நாட்டினர் வெறும் கோதுமை ரொட்டியை மட்டும் உண்பதில்லை. கோதுமை ரொட்டியோடு, பருப்பு வகைகள் மற்றும் வெண்ணெயைத் தொட்டுக் கொண்டு உண்கிறார்கள். பூரி, சப்பாத்தியாகச் செய்து உண்ணும் வட நாட்டினர் அவற்றை நெய்யில் சுட்டுச் சாப்பிடுகிறார்கள். கோதுமையை எந்த விதமாகச் சாப்பிட்டாலும், அதனுடன் பருப்பு வகைகள், நெய் அல்லது வெண்ணெய் சேர்த்துக் கொள்ள வேண்டும். எண்ணெய் மட்டும் சேர்த்துக் கொண்டால் போதாது.

நெய், வெண்ணெய் சேர்க்காமல் கோதுமையை நெடுங்காலம் பயன்படுத்துபவர்களுக்கு மாலைக்கண், கல்லடைப்பு என்னும் நோய்கள் உண்டாக வாய்ப்புண்டு. இக்காரணம் பற்றித்தான் கோதுமையை முக்கிய உணவாகக் கொள்கிறவர்கள் நெய் அல்லது வெண்ணெயை உபயோகிக் கிறார்கள். தமிழகத்தில் பலர் இரவில் கோதுமையை உணவாகக் கொண்டு வருகின்றனர். நெய் அல்லது வெண்ணெய் சேர்க்கா விட்டால் கண் எரிச்சலும், மலச்சிக்கலும், உண்டாகி உடல் நலம் கெடுவதையும், நல்ல நெய் சேர்த்துக் கெள்வதால் உடல் நலம் இருப்பதையும் காணலாம். ஆகவே, கோதுமையை வழக்கமாக உண்ணும் பழக்கம் உள்ளவர் வெண்ணெய் அல்லது நெய்யைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெண்ணெய் அல்லது நெய் சேர்க்கா விட்டால் கோதுமை உணவினால் தீமையே உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோளம் நாம் உண்ணும் அரிசியை விடச் சத்துள்ள உணவாகும். கோதுமையில் சுடுவதுபோல் சோளத்திலும் ரொட்டி சுடலாம். கேழ்வரகு, கம்பு போலவே, சோளமும் சத்துள்ள நல்ல உணவு. தவிடு எடுபடாத சோளத்தில் தசைகளுக்கு உரமளிக்கும் சத்தும், உடம்புக்கு வெப்பம் அளிக்கும் ஸ்டார்ச் பொருளும் உண்டு.

கேழ்வரகு என்னும் தானியமே பலராலும் பயன்படுத்தப் படுகின்றது. கேழ்வரகை அரைத்து மாவாக்கிக் களியாகவும், பிட்டாகவும், கூழாகவும், அடையாகவும் செய்து சாப்பிடலாம். தசைகளுக்குப் பலந்தருகிற தவிடு கேழ்வரகில் அதிகஅளவு சேர்ந்திருக்கிறது. எனவே இது நல்ல பலந்தருகிற உணவாகும். தசைகளுக்கு உரமளிக்கிற தவிடும், உடல் நலத்துக்கு வேண்டிய வெப்பம் அளிக்கிற மாவும் கேழ்வரகில் இருக்கிற படியால், கேழ்வரகு அரிசியை விடச் சிறந்த உணவு ஆகும். எனவேதான் கேழ்வரகு உண்பவர் உடல் உரம் பெற்றுக் கடின வேலைகள் செய்வதையும் நன்றாக இருப்பதையும், அரிசி உண்பவர் அவ்வாறு இல்லாமல் இருப்பதையும், கண்கூடாகக் கண்டு வருகிறோம். சிலருக்குக் கேழ்வரகு உணவு உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை. அப்படிப்பட்டவர் நெய், பால், தயிர் இவைகளைக் கேழ்வரகுடன் சேர்த்துக் கொண்டால், உடம்புக்கு ஒத்துப் போகும். கேழ்வரகில் கால்சியம், இரும்பு என்னும் சத்துக்களும் உள்ளன.

கேழ்வரகுக்கு அடுத்தபடியாக உள்ள தானியம் கம்பு. அரிசியைவிட அதிகச் சத்துள்ள தானியம் இது. கம்பிலுள்ள தவிடும் எடுபடாமல் அதிலேயே இருப்பதனால், கேழ்வரகைப் போலவே இதுவும் சத்துள்ள உணவு. இதைப் பலவகை உணவாகச் செய்து உண்கிறார்கள். இதிலிருந்து உடல் நலத்துக்குரிய உயிர்ச்சத்துப் பொருளை உண்டாக்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொத்துமல்லிக் கீரை மணம் உள்ளது. சாம்பார், குழம்பு, இரசம், கூட்டு முதலியவைகளில் இதைச் சேர்ப்பது உண்டு. இதனைத் துவையல் செய்தும் உண்ணலாம். இருதயத்துக்கு நல்லது. தலையையும் மூளையையும் தாக்கும் சூட்டை மாற்றும். ஜீரணம் உண்டாக்கும்.

கீரைத்தண்டில் வெண்மை, சிவப்பு என்னும் இரண்டு வகை உண்டு. இரண்டுக்கும் ஒரே குணந்தான். இந்தக் கீரையில் எலும்புக்கு உரம் கொடுக்கின்ற கால்சியம் என்னும் சுண்ணாம்புச் சத்து உண்டு. இரும்புச் சத்தும் உண்டு. இக்கீரை உடல் சூட்டை குறைக்கும். நீர்சுருக்கு, வெட்டை இவற்றைப் போக்கும். குளிர்ந்த தேகத்தோருக்கு உதவாது. வெள்ளைப் பூண்டு சேர்த்துச் சமைப்பது நல்லது.

முட்டைக்கோசுக் கீரை மேல்நாட்டுக் கீரை இனத்தைச் சேர்ந்தது. தற்பொழுது நமது நாட்டில் குளிர்ப்பகுதிகளில் பயிரிடப்படுகிறது. இதில் ஏ.பி.சி. என்னும் உயிர்ச் சத்துக்கள் இருக்கின்றன. சமைத்து உண்பதால் இந்தச் சத்துக்கள் பாதியளவு குறைந்துவிடுகின்றன. சமைக்காமல் மேல் பக்கமுள்ள பச்சை இலையைத் தின்றால் ஏ.பி.சி. உயிர்ச் சத்துக்களை அதிகமாகப் பெறலாம்.

முருங்கைக் கீரை என்பது முருங்கை மரத்தின் இலை. முருங்கைக் கீரை தாது புஷ்டி தருகிற கீரைகளில் ஒன்று. இரத்தத்திற்கும் எலும்புக்கும் உரம் அளிக்கும் உயிர்ச்சத்து மற்றும் கால்சியம் என்னும் பொருளும் இதில் உண்டு.

சிறுகீரை கீரைத்தண்டு இனத்தைச் சேர்ந்தது. இதன் இலைகள் சிறியவை. கீரைத்தண்டிலும், முளைக்கீரையிலும் இருப்பதுபோலவே, இந்தக் கீரையிலும் கால்சியம் என்னும் சுண்ணாம்புச் சத்து உள்ளது. இது பல் மற்றும் எலும்பை வளர்க்கிற சத்தாகும். கண் புகைச்சல், காசம், சோகை ஆகிய நோய்களை இக்கீரை போக்கும். உடல் சூட்டைத் தணிக்கும். இதில் இரும்புச் சத்து உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூதுவளைக் கீரை முள் உள்ள கொடி. இலையிலும் முள் உண்டு. இலையைக் குழம்பு செய்தும் துவையல் செய்தும் சாப்பிடலாம். சிறு கசப்பு உண்டு. சீதளத்தைப் போக்கும். அறிவுக்குக் கூர்மையுண்டாகும். இது தாதுபுஷ்டி தருகிற கீரையாகும். தினமும் உண்ணக் கூடாது. மாதத்திற்கு இரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஓர் முறை உண்ணலாம். மாதவிலக்குள்ள பெண்கள் இச்செடியின் அருகில் சென்றாலே இச்செடி பட்டுவிடும்.

பருப்புக் கீரை கோழிக்கீரை என்றும் கூறுவர். இதனை உண்டால் தேகம் குளிரும், கண்களுக்கு ஒளி உண்டாகும், பித்தம் போகும், குளிர்ந்த தேகத்தோருக்குச் சீதளம் செய்யும். இதனை மிளகும் சீரகமும் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவது நலம்.

பொன்னாங்கண்ணி என்பதை பொன்னாங்காணி என்றும் கூறுவர். ஈரமான சதுப்பு நிலங்களில் படரும். இதைச் சாப்பிட்டால் கண்களுக்கு ஒளி உண்டாகும். கண்புகைச்சல், காசம், வாதம், அனல் முதலிய நோய்கள் தீரும்.

பொதினாக் கீரையைப் புதினா என்றும் கூறுவர். மணமுள்ள இது கொடியாகத் தரையில் படரும். சாம்பார், குழம்பு முதலியவைகளில் வாசனைக்காகப் போடுவது வழக்கம். இதனைத் துவையல் செய்து உண்ணலாம். வாயுவைப் போக்கும். பசி உண்டாகும். அஜீரணத்தை மாற்றும். தீனிப்பைக்கும் குடலுக்கும் வலிவு கொடுக்கும். இதன் இலைச் சாற்றால் பாகு காய்ச்சி உண்ணலாம்.

முளைக்கீரையில் கால்சியம் என்னும் சுண்ணாம்புச் சத்து உண்டு. தண்டுக்கீரை, சிறுகீரை, முருங்கைக் கீரைகளை விட இந்தக் கால்சியம் இதில் அதிகம் உண்டு. இது உடம்பின் வெப்பத்தைத் தணிக்கும். நீரைப்பெருக்கும். பசியை உண்டாகும். குளிர்ந்த உடம்புக்குச் சீதளம் பண்ணும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளைப் பூண்டு சேர்த்துச் சமைத்துச் சாப்பிடலாம். இதில் இரும்புச்சத்தும் உண்டு.

கறிவேப்பிலையை மணத்துக்காகக் குழம்பு சாம்பார், காய்கறிகளில் சேர்ப்பது உண்டு. துவையல் செய்தும் உண்ணலாம். சுரம், பித்தம் முதலிய தீரும். பசியை உண்டாக்கும். தீனிப் பைக்கு வலிவு கொடுக்கும். இத்துடன் நெய் சேர்த்துக் கொள்வது நல்லது. தற்காலத்தில் பொடி யாகவும் குழம்பாகவும் (பேஸ்ட்) ஆகவும் கடைகளில் கிடைக்கின்றன.

வசளைக் கீரையை கொடிவசளை என்றும் குத்து வசளை என்றும் இருபிரிவாகக் கூறுவர். கொடி வசளை கபம் உண்டாக்கும். ஆகவே அதனுடன் மிளகு சீரகம் சேர்த்துச் சமைக்க வேண்டும். இக்கீரைகளில் ஏ.பி.சி. என்னும் உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இரும்புச் சத்தும் உண்டு. இரும்பு இரத்தம் பெருகுவதற்கு அவசியமானது. உடல் வளர்ச்சிக்கு வேண்டிய பாஸ்பரஸ் சத்தும் இதில் உண்டு. வசளைக்கீரை சூட்டைத்தணிக்கும். தாது உண்டாகும். பசி உண்டாகும்.

பசலைக்கீரை தோட்டக்கால்களில் தாரையில் படர்ந்து வளரும். இலைகள் மிகச் சிறியவை. மெல்லிய கொடி இனத்தைச் சேர்ந்தது. கொடியும் இலையும் சேர்த்துச் சமைப்பது தமிழர்களின் வழக்கம். நீர்க்கடுப்பு, நீரடைப்பு இவற்றினை இது போக்கும். மேகவெப்பு சாந்தியாகும். குளிர்ச்சி யுண்டாக்கும்.

கலவைக்கீரைக் கூட்டு என்பதும் ஒன்றாகும். அதாவது கலவைக்கீரை என்பதும் பலவகையான கீரைகள் சோந்தது எனப் பொருள்படும். முளைக்கீரை, அரைக்கீரை, சிறுகிரை, மணலிக்கீரை, முள்ளிக்கீரை, கானாங்கீரை முதலிய கீரைகளின் கலப்பு இது. கலவைக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டால் வாதம், பித்தம், மலக்கட்டு, குடல்வாதம் முதலியன அகலும். மலம் போகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெந்தயக் கீரையைக் கூட்டு செய்தும், குழம்பு செய்தும் உண்ணலாம். மந்தம், வாயு, கபம், இருமல் இவைகள் தீரும். வாயுவைக் கண்டிக்கும். இடுப்புவலி தீரும், மூலவாயு போகும். சூடு அதிகரிக்கும். குளிர் உடம்பு உள்ளவர்களுக்கு மூட்டுவலி, வாயுப்பிடிப்பு, உடல் அசதியைக் கொடுக்கும்.

மணித்தக்காளிக் கீரையை வாய் வேக்காடு என்னும் வாய்ப்புண் உள்ளவர் இலையைச் சமைக்காமல் மென்று தின்றால் புண் ஆறும். சமைத்தும் உண்ணலாம். சூட்டை ஆற்றும். நீரைப் பெருக்கும். கபம் போகும்.

ஆப்பிள் பழம் குளிர்ப்பாங்கான பகுதிகளில் பயிராகிறது. தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரிடம் போகவேண்டியதில்லை என்று ஒரு பழமொழி உண்டு. இது நோய் வராமல் தடுக்கிறது. இதன் மேல்தோல் விரைவில் சீரணிக்கிறது. எனவே பழத்தை நன்றாக மென்று தின்ன வேண்டும். இது சீரண சக்தியை உண்டாக்கும். இரத்தம் சுத்திகரிக்கும். இரத்தத்துக்கு உரம் தருகிற சி. உயிர்ச்சத்து இதில் அதிக அளவில் இருக்கிறது.

பம்பளிமாசுப் பழம் பித்தச் சூட்டை அகற்றும். தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும். இரத்தத்தைச் சுத்தியாக்கும். பசி உண்டாகும். பழச்சக்கை சிலர் உண்பர். இது விரைவில் சீரணம் ஆகாது.

மாதுளம் பழம் இருதயத்துக்கும் வயிற்றுக்கும் வலிவு தரும். பித்தம் போகும். பி.சி. விட்டமின்கள் சிறிதளவு இதில் உண்டு.

மாம்பழத்தில் சிறிதளவு 'ஏ' வைட்டமினும் சற்று அதிகமாக 'பி' வைட்டமினும் உண்டு. இப்பழம் இருதயத்துக்கும் மூளைக்கும் வலிவு கொடுக்கும். வயிறு சுத்தமாகும். மலசுத்தியாகும். சூடு பண்ணும். அதிகமாக உட்கொண்டால் தினவு, கரப்பான், சிரங்கு உண்டாகும். மிதமாக உண்ண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். பால் சேர்த்துக் கொள்வது நல்லது. இராஜபாளைய மாம்பழம், சேலத்து மாம்பழம், ஆந்திர மாநில பங்கனப்பள்ளி மாம்பழம், ருமாணி மாம்பழம் முதலியன உலகப்புகழ் பெற்றதாகும்.

வாழைப்பழத்தில் பலவகை உண்டு. பி.சி. வைட்டமின்கள் சிறிதளவு இப்பழத்தில் உண்டு. இதனை உண்டால் தேகம் தழைக்கும். உடல் வலிவு பெறும். குடல் பருக்கும். அதிகம் உண்டால் மந்திக்கும். தேன் அல்லது சர்க்கரை சேர்த்துக் கொள்வது சிறப்பானது. வாதநோய் உள்ளவர்களுக்கு வாழைப்பழம் ஆகாது. பச்சை வாழைப்பழம் மலத்தைக் கட்டும். குடலில் புழுக்களை உண்டு பண்ணும்.

பலாப்பழம் முக்கனிகளில் ஒன்று. தலை நரம்புகளுக்கு வலிவைக் கொடுக்கும். மந்திக்கும், வயிறு வலிக்கும். சூடு பண்ணும். பசுநெய் சேர்த்து உண்ண வேண்டும்.

முலாம்பழத்தை உண்டால் தேகம் தழைக்கும். இது நீரைப் பெருக்கும். அதிகம் உண்டால் மந்திக்கும். விரைவில் சீரணம் ஆகாது. இதனுடன் சர்க்கரை சேர்த்து உண்ணுவது உடலுக்கு நல்லது.

பேரீச்சம் பழத்தில் 'பி' விட்டமின் சிறிதளவு உண்டு. கார்ப்போஹைட்ரேட் மிகுதியாக உண்டு. இதில் இரும்புச் சத்து இருக்கிறது. இது மார்புக்கு வலிவைக் கொடுக்கும், தேகம் தழைக்கும். பாலில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் முதியவருக்கும் தாது வளரும். வாதுமைப் பருப்புடன் கலந்து உண்ணத் தேகம் தழைக்கும். அதிகமாக உண்டால் கண்களும், பற்களும் பாதிக்கும். ஆகையால் பழத்துடன் நெய் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

புளியம்பழம் என்னும் புளி சாம்பார், குழம்பு முதலியவைகளில் அதிகமாக உபயோகிக்கிறார்கள். இதில் பி.சி. வைட்டமின் போன்ற உயிர்ச் சத்துகள் சிறிதளவு உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும். இதில் இரும்புச் சத்து உண்டு. அதிகம் உண்டால் தாது புஷ்டியைக் குறைக்கும். ஆகையால் இதை அதிகமாகச் சாப்பிடுவது கூடாது. மேலும் அதிகமாகச் சாப்பிட்டால் இரத்தத்தை அசுத்தமாக்கும்.

வெவ்வேறு வகைப் பருப்பு பயறு வகைகளும் நமது நாட்டில் கிடைக்கின்றன. தானிய உணவுக்கு அடுத்தபடியாகப் பருப்பு வகைகள் நமது உணவில் முக்கிய இடம் பெறுகின்றன. பருப்பு, பயறுகளில் தசைகளுக்குப் பலம், உடம்புக்கு உரம் அளிக்கிற பொருள்கள் உள்ளன. அரிசி கோதுமை ஆகிய தானியங்களின் அதன் மேலே உள்ள மெல்லிய தோல் போன்ற தவிட்டில், தசையை வளர்க்கும் சத்து உண்டு, ஆனால், எந்திரங்களில் அதனைத் தீட்டுவதால் அத்தானியங்களின் தவிடு எடுபட்டுப்போய் வெறும் வெள்ளை அரிசியும் வெள்ளைக் கோதுமையுந்தான் நமக்குக் கிடைக்கின்றன.

அதனால் தசை வளர்க்கும் சத்து அரிசியிலும் கோதுமையிலும் இல்லாமற் போகின்றன. தவிடு உள்ள அரிசி கிடைத்தாலும், அதை உலையில் இட்டுச் சமைப்பதற்கு முன்னமே தண்ணீரில் ஊறவைத்துப் பல முறை கழுவி விடுகிறபடியால், அரிசியில் உள்ள சிறிதளவு தவிடுங்கூட அறவே போய்விடுகிறது. இவ்வாறு அரிசியிலிருந்து எடுபட்டுப்போன தசை வளர்க்கும் சத்தைப் பருப்புகளும் பயறுகளும் நிறைவு செய்கின்றன. எனவே, தசைகளை வளர்க்கிற பருப்பு வகைகள் நமது உணவில் கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும். தானிய உணவுகள் உடம்புக்கு வெப்பம் அளித்து ஊக்கந் தருகின்றன. பருப்புகளும் பயறுகளும் தசைகளுக்கு உரம் அளித்து உடலைப் பலப்படுத்துகின்றன. பருப்புகளிலும் பயறுகளிலும் தசைகளுக்கு உரம் அளிக்கும் பி வைட்டமின் என்னும் உயிர்ச்சத்து இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பருப்பு வகைகளில் மட்டும் அல்லாமல், வேர்க்கடலை, முந்திரிப்பருப்பு, வாதுமைப் பருப்பு, முதலிய பருப்பு வகைகளிலும் தசைகளுக்கு உரம் அளிக்கும் உயிர்ச் சத்துகள் நிறைய உண்டு.

வேர்க்கடலை இதற்கு நிலக்கடலை என்றும் ஓர் பெயருண்டு. இது பண்டைக் காலத்தில் நமது நாட்டில் கிடையாது. 16ஆம் நூற்றாண்டுக்குப்பிறகு, ஐரோப்பியர்களால் இது நமது நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. தற்பொழுது இது நமது நாட்டுப் பயிராகிவிட்டது. நிலக்கடலையிலிருந்து எண்ணெய் எடுத்து உணவுக்காக உபயோகிக்கிறோம். வேர்க்கடலையிலிருந்து பலவகையான பலகாரங்கள் செய்து உண்கிறோம். இதில், தசைக்கு உரம் அளிக்கும் உயிர்ச்சத்து நிறைய உண்டு. உள்ள உறுதியைக் கொடுக்கும் வல்லமை இதில் உள்ளது. காந்தியடிகள் தினமும் வேர்க்கடலை உண்பார் என்பது பலருக்குத் தெரியாது.

அவரை, மொச்சை இவைகளில், தசை வளர்க்கிற புரோட்டின் சத்தும், வெப்பந் தருகிற கார்போஹைட்ரேட் என்னும் சத்தும் அதிகம் உள்ளன. பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச் சத்து முதலியவைகளும் இவற்றில் அதிகம் உண்டு. அவரைக் கொட்டை, மொச்சைக் கொட்டைகளில் தசையை வளர்த்து உடம்புக்கு உரம் தருகிற சத்துக்கள் அதிகம் உள்ளன. இவைகளையும் அடிக்கடி உண்ண வேண்டும். இவற்றில் தசை வளர்க்கும் உயிர்ச்சத்துக்கள் நிறைய உண்டு. இவற்றினைப் போலவே பச்சைப்பயறு, பயத்தம்பயறு, காராமணி, பட்டாணி, மலைத்துவரை முதலிய பயறு வகைகளிலும் தசை வளர்க்கும் உயிர்ச் சத்துக்கள் உள்ளன.

உளுத்தம்பருப்பு, உளுந்தைத் தோல்நீக்கி உளுத்தம் பருப்பு உண்டாக்கப்படுகிறது. பருப்பு வகைகளில் உளுத்தம் பருப்பு அதிகச் சத்துள்ளது. ஆகவே இது, தசை வளர்க்கும்

7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணவுப் பொருள்களில் முதன்மையானது. உளுத்தம் பருப்பைப் பருப்பு வகைகளில் முதன்மையாகக் கூறுவர்.

அந்தணர்கள் இறந்தவர் நினைவு நாட்களாகிய 'சிராத்தம்' என்னும் "திவச" நாட்களில் உளுந்து வடை செய்வது வழக்கம். ஏனென்றால், உளுந்து சத்துள்ளது. வேத காலத்தில் அனைவரும் மாமிச உணவுகளைச் சாப்பிட்டார்கள். சிராத்த நாட்களில் பலவகையான இறைச்சிகளைச் சமைத்துச் சாப்பிட்டார்கள். கல்கத்தாவில் இன்றும் மீன் சைவ உணவாகக் கொள்ளப்படுகின்றது. சமண சமயமும் பௌத்த மதமும் செல்வாக்குப் பெற்று. மாமிச உணவு உண்பது இழிவானது என்னும் கருத்துப் பரவியபோது சிலர் இறைச்சி உண்பதை முழுமையாக நிறுத்திச் சைவ உணவை மட்டும் உண்ணத் தொடங்கினார்கள். இறைச்சி உணவை விட்ட பிறகு, அதற்குச் சமமான மாற்று உணவு உளுத்தம்பருப்புதான் என்பதை அக்காலத்திலேயே கண்டறிந்து அதை அதிகமாகச் சாப்பிடத் தொடங்கினார்கள். அசைவ உணவு சாப்பிடாதவர்கள், உளுந்துப் பண்டங்களை அதிகமாக உண்கிறார்கள். உண்மை யாகவே. உளுந்து தசைகளுக்கு உரம் தருகிற சிறந்த உணவு.

அரிசியில் தவிடு போய்விடுகிறபடியினால், தசைகளுக்கு உரம் அளிக்கிற சத்தை இழந்துவிடுகிறோம். அவ்வாறு இழந்துபோன தவிட்டுச்சத்தை உளுந்து ஈடு செய்கிறது. அரிசியுடன் உளுந்து சேர்த்துச் சமைக்கும் பண்டங்கள் உடலுக்கு உரம் அளிக்கின்றன. இதனைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்களே. இதனால்தான், தோசை மாவு, இட்டலி மாவு அரைக்கும்போது அதனுடன் உளுந்து சேர்த்து அரைத்துப் புளிக்க வைத்துத் தோசை, இட்டலி சுடுகிறார்கள். எனவே, தோசையும், இட்டலியும் தசைகளுக்கு உரம் அளிப்பதோடு உடம்புக்கு வெப்பம் கொடுத்து உடலை நன்னிலையில் வைக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவரையைத் தோல் நீக்கினால் துவரம் பருப்பு என அழைக்கின்றோம். துவரம்பருப்பைச் சமைத்துச் சோற்றில் இட்டு நெய்விட்டுப் பிசைந்து உண்கிறோம். குழந்தைகளுக்குப் பருப்புச் சோறு ஊட்டுகிறோம். பருப்பு வகைகள் எல்லாவற்றிலும் இருப்பது போலவே துவரம் பருப்பிலும் தசைகளை வளர்க்கும் உயிர்ச்சத்து அதிகம் உள்ளது. துவரம்பருப்பைச் சாம்பார், குழம்பு, மற்றும் வேறுவிதமாகச் சமைத்தும் உணவுடன் கலந்து உண்கிறோம். துவரம்பருப்பைக் குறைந்த அளவாகச் சாப்பிட வேண்டும். அதிக அளவு சேர்த்துக் கொண்டால் உடல் நலம் பலவகைகளிலும் துன்பப்படும். துவரம்பருப்பை வேகவைத்து நீரைமட்டும் எடுத்துக் கொண்டு திப்பியை நீக்கிவிடுவது சிலரது பழக்கமாகும்.

கடலைப்பருப்பு சத்துள்ள உணவு. தசை வளர்க்கும் சத்து இதில் அதிகமாக உண்டு. முகம்மதிய மருத்துவர்கள் கடலைப்பருப்பைத் தாதுபுஷ்டியளிக்கும் பொருளாகக் கருதுகிறார்கள். முழுக்கடலையைச் சுண்டல் செய்தும், எண்ணெயில் வறுத்தும், வடை செய்தும், தமிழகத்தோர் உண்பார். வெங்காயம் சேர்த்து எண்ணெயில் சுட்ட மசால்வடை பலமளிக்கும் பண்டமாக நம்முன்னோர்கள் கருதினர். கடலைப்பருப்பு மாவினால் “பஜ்ஜிகள்” “மைசூர்ப்பாகு” செய்கிறார்கள். கடலைப்பருப்பு தசை வளர்க்கும் சிறந்த உணவு என்பதில் ஐயமில்லை. சிலருக்குக் கடலைப்பருப்புப் பலகாரங்கள் வயிற்றுக்கு ஒத்துக் கொள்வதில்லை. அப்படிப் பட்டவர் குறைந்த அளவாக உண்ணலாம்.

உடம்புக்குள்ளே உள்ள உறுப்புகளில் மூளை, நுரையீரல் (சுவாசப்பை), இருதயம், இரைப்பை, குடல்கள், ஈரல் போன்றவை சதா இயங்கிக் கொண்டே உள்ளன. நாம் உண்ணும் உணவினால் இந்த உறுப்புகள் வலிமை பெறுகின்றன. இவற்றிற்கு வலிமை தருகிற சிறப்பான சைவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணவுப் பொருள்களும் உள்ளன. அவ்வகை உணவுப் பொருள்களை உபயோகித்து நலம் பெறலாம்.

திராட்சைப்பழம், மாதுளம்பழம், காசினிக்கீரை, ரோசாப்பூ, பிஸ்தாப் பருப்பு, முதலியவை ஈரலுக்கு வலிமை தருவன. சாதிக்காய், கோரைக்கிழங்கு, இலவங்கப்பட்டை, கிச்சிலிக்கிழங்கு, ஏலக்காய், அகிற்கட்டை முதலியவைகளும் வலிமை தருவன. மூலிகைவைத்தியர்களை கொண்டு இவற்றை மருந்தாகச் செய்து உபயோகிக்கலாம்.

வெள்ளாட்டுப்பால், வாதுமைப்பருப்பு, சுரைவிதை, நெல்லிக்காய், நாரத்தம்பழம், ரோசாப்பூ, இஞ்சி முதலியன மூளைக்கு வலிமை கொடுக்கின்றன. மேலும் கோரைக் கிழங்கு, அகிற்கட்டை, சந்தனம், இலவங்கம், கஸ்தூரி, முத்து முதலியவைகளும் மூளைக்குப் பலம் தரும் பொருள்களே.

நெல்லிக்காய், புதினாஇலை, மிளகு, நாவல்பழம் முதலியனவும் சாதிக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கம், ஏலக்காய், கோரைக்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, ரோசாப்பூ, அகிற்கட்டை முதலியனவும் இரைப்பைக்கு உரம் அளிப்பன.

நெல்லிக்காய், மாதுளம்பழம், கொத்தமல்லி, ரோசாப்பூ, நாரத்தம்பழம், வெற்றிலை, சீமையத்திப்பழம் முதலியனவும் சந்தனம், முத்து, பவழம், வெள்ளி, கிச்சிலிக்கிழங்கு, கோரைக்கிழங்கு, குங்குமப்பூ, ஏலம், ஏலக்காய், இலவங்கம் முதலிய பொருள்களும் இருதயத்திற்கு வலிமை தருவன.

ஒரு நோய் சைவ உணவு உண்பவருக்கு வந்தால் ஒரு டோஸ் மருந்தில் குணமாகும். அதே நோய் பறவைகள் பட்சிகள் மீன்கள் சாப்பிடுபவர்களுக்கு வந்தால் இரண்டு டோஸ் மருந்து கொடுக்க வேண்டியதிருக்கும். அதேநோய் ஆடு மாடு மாமிசம் சாப்பிடுபவருக்கு வந்தால் மூன்று டோஸ் மருந்து கொடுக்க வேண்டியதிருக்கும். மாரடைப்பு நோய் முக்கியமாக அசைவ உணவினால்தான் வருகின்றது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைத்து மதத்திலும் ஆன்மிகத்திற்கும் அருள் நிலை பெறுவதற்கும் அடிப்படைத் தகுதி கொல்லாமை மற்றும் புலால் உண்ணாமை. அன்பைப் பற்றி அனைத்து மதங்களிலும் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆனால் அசைவ உணவைச் சாப்பிடும் அம்மதங்களின் பிரசாரகர்களே அதைக் கடைப்பிடிப்பதில்லை. இதுதான் உண்மை! நம் ஆன்மாவைக் கடைத்தேற்றுவதே பெரிய காரியம். அசைவ உணவைச் சாப்பிடுவதால் மற்றொரு ஆன்மாவின் கர்மத்தையும் சேர்த்துச் சுமக்கின்றார்கள். அசைவ உணவாளர்கள் இரண்டு ஜாதகம் பார்க்க வேண்டியுள்ளது. ஒன்று அவர்களுக்கு. மற்றொன்று அவர்கள் சாப்பிட்ட மற்றொரு ஜீவனுக்கு. இப்படிப் பார்த்தால்தான் ஜாதகக் கணக்கு சரியாகவரும்! மனிதமேம்பாட்டை வேண்டித்தான் திருவள்ளுவர், திருமூலர், இராமலிங்க சுவாமிகள் கருணை மார்க்கத்தைப் போதித்தனர். கொல்லாமை, புலால் உண்ணாமை, இரக்க குணம் ஆகியவைகளை வலியுறுத்தி மனிதன் மனிதனாக வாழ உபதேசித்தார்கள்.

இராணுவம், காவல்துறை தவிர மற்ற அனைத்து மதமக்களும் இனிச் சைவ உணவு உண்டு அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அன்பையும் அருளாசியையும் பெறுவோமாக. அன்பே சிவம். அன்பே கர்த்தர். அன்பே அல்லா.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. ஸ்ரீபைரவர்

உலகில் தோன்றிய ஆதி மனிதன் மிருக வாழ்க்கை நடத்தினாலும் இயற்கைச் சீற்றங்களைக் கண்டு மிகவும் பயந்தான். அவன் பயத்தைத் தெளிவித்து அவனுக்குத் தைரியத்தைக் கொடுக்கக் கூடிய தெய்வம் ஒன்று அவனுக்குத் தேவைப்பட்டது. அதனால்தான் உபயோகிக்கும் ஆயுதங்களைத் தன்னைப் பாதுகாக்கும் தெய்வத்திடம் கொடுத்து அதை வணங்கி வரலானான். அப்படி உருவானவர் தான் ஸ்ரீபைரவர். மூவாயிரம் ஆண்டுகளாக இந்துக்களாலும், கிறிஸ்தவர்களாலும், புத்தமதத்தினராலும், சைவம் மற்றும் வைணவ மார்க்கத்தின ராலும் பல்வேறு பெயர்களில் இன்றுவரை வழிபடப்பட்டு வருகின்றார் ஸ்ரீ பைரவர். சிவனின் அம்சங்களில் ஒருவர்.

சிவனின் அம்சம் என்பதும் மூர்த்தம் என்பதும் ஒன்றாகும். அவதாரம் என்பது இறைவனை மனிதனாகப் பிறந்து வளர்ந்து நல்லது செய்வதாகும். அது சமயம் அக்கடவுளின் இடம் காலியாக இருக்கும். மூர்த்தம் என்பது அப்படி அல்ல. எங்கும் அந்த இறைவன் இருப்பவர். நைமிசாரண்ணியம் என்பது வடஇந்தியாவிலுள்ள ஓர் புண்ணியத் தலமாகும். ஒளிமயமாகிய சிவபெருமானே பரம்பொருள் என்று உணர்ந்த பலவாயிர முனிவர்கள் அத்திருத்தலத்தே வாழ்ந்து வந்தனர். திருமேனி முழுதும் திருவெண்ணீறு பூசித் திரிபுண்டரமணிந்து, அக்கமாலை சூடிச் சிவத்தியானத்தில் மூழ்கி வேதாகமங்களால் இம்முனிவர்கள் சிவனைத் துதித்து வாழ்ந்து வந்தனர்.

ஓர் சமயம் சூதபுராணிகர் நைமிசாரண்ணியத்திற்கு எழுந்தருளினார். அங்கிருந்த முனிவர்கள் “தங்களைத் துன்புறச் செய்யும் இடுக்கண் களைந்து இஷ்டசித்தி அருளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறுபத்துநான்கு மூர்த்தமாகிய சிவபராக்கிரமத்தை விளக்கிக் கூற வேண்டுகிறோம்'' என்று கேட்டுக் கொண்டனர். அதனை ''ஒரு வகையாக உங்களுக்குக் கூறுகின்றேன்'' எனக்கூறிச் சிவபராக்கிரமப் புகழைக் கூறலானார்.

சிவபராக்கிரமம் என்பதும் அட்டாட்ட விக்கிரக லீலை என்பதும் சிவபிரான் அறுபத்துநான்கு திருவுருவமைந்து அடியார்களுக்கு அருள்செய்த திருவிளையாடல் எனப்படும். இவ்விக்கிரக லீலையை வேதாகம புராணங்களுள் வேதம் தியானம் ரூபமாகவும், ஆகமம் அதனை விரித்து உருவத் திருமேனியில் அடியவர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுக் கிரியா உருவமாகவும், புராணங்கள் அவ்வாறு வழிபட்டுப் பேறு பெற்றோர் இவரெனக்குக் கதை வடிவமாகவும் கூறும் இன்னும் பலவாகக் கூறும் சரித்திரங்களையும் யாம் வெளியிட்ட சிவபராக்ரமம் என்ற நூலில் கொடுத்திருக்கின்றோம்.

அறுபத்துநர்ன்கு மூர்த்தங்களுக்குரிய சிறப்பான அறுபத்து நான்கு கோயில்கள் எங்குள்ளன, அங்கு எப்படி வழிபட வேண்டும், அந்த அறுபத்து நான்கு மூர்த்தங்களுக்கும் என்னென்ன பரிகாரங்கள் செய்ய வேண்டும் எனவும், எவ்வகையில் நமக்கு நன்மை கிடைக்கும் எனவும் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளோம். சிவாச்சாரியர்கள், ஆன்மிகச் சொற்பொழி வாளர்கள், அன்பர்கள், சோதிடர்கள் போன்றவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அந்த நூலினை அமைத்துள்ளோம். அந்த நூலினையும் ஈசுவர் லேசர், சென்னை 18 மூலமே வெளியிட்டுள்ளோம்.

இலிங்க மூர்த்தி, இலிங்கோற்பவ மூர்த்தி, முகலிங்க மூர்த்தி, சதாசிவ மூர்த்தி, மகாசதாசிவ மூர்த்தி, உமாமகேச மூர்த்தி, சுகாசன மூர்த்தி, உமேச மூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, இடபாரூட மூர்த்தி, இடபாந்திக மூர்த்தி, புசங்கலளித மூர்த்தி, புசங்கத்திராச மூர்த்தி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்தியாந்ருத்த மூர்த்தி, சதாந்ருத்த மூர்த்தி, சண்டதாண்டவ மூர்த்தி, கங்காதர மூர்த்தி, கங்காவிசர்சன மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, கல்யாணசுந்தர மூர்த்தி, அர்த்தநாரீசுவர மூர்த்தி, கஜயுத்த மூர்த்தி, ஜ்வராபக்ன மூர்த்தி, சார்த்தூலகர மூர்த்தி, பாசுபத மூர்த்தி, கங்காள மூர்த்தி, கேசவார்த்த மூர்த்தி, பிட்சாடண மூர்த்தி, சிம்கக்ன மூர்த்தி, சண்டேச அனுக்ரக மூர்த்தி, தட்சிணா மூர்த்தி, யோகதட்சிணா மூர்த்தி, வீணாதட்சிணா மூர்த்தி, காலாந்தக மூர்த்தி, காமதகன மூர்த்தி, லகுளேசுவர மூர்த்தி, பைரவ மூர்த்தி, ஆபதோத்தாரண மூர்த்தி, வடுக மூர்த்தி, சேத்திரபால மூர்த்தி, வீரபத்திர மூர்த்தி, அகாராஸ்திர மூர்த்தி, தட்சயக்ஞத மூர்த்தி, கிராத மூர்த்தி, குரு மூர்த்தி, அசுவாரூட மூர்த்தி, கஜாந்திக மூர்த்தி, ஜலந்தரவத மூர்த்தி, ஏகபாதத்திரி மூர்த்தி, திரிபாதத்திரி மூர்த்தி, ஏகபாத மூர்த்தி, கௌரீவரப்ரத மூர்த்தி, சக்ரதான மூர்த்தி, கௌரிலீலாசமன்வித மூர்த்தி, விசாபகரண மூர்த்தி, கருடாந்திக மூர்த்தி, பிரம்ம சிரச்சேத மூர்த்தி, கூர்மசம்கார மூர்த்தி, மச்சசம்கார மூர்த்தி, வராகசம்கார மூர்த்தி, பிரார்த்தனா மூர்த்தி, ரத்தபிச்சாப்ரதான மூர்த்தி, சிஷ்யபாவ மூர்த்தி. மேலே கூறியவைகளே அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்களாகும். இதில் ஒன்றே ஸ்ரீபைரவ மூர்த்தமாகும்.

திருமூலர் காலத்திற்கு முன்பு ஆறு சமயங்கள் வழக்கில் இருந்துள்ளன என்பது தெரிய வருகிறது. 1)பாசுபதம், 2)மாவிரதம் (மஹாவ்ரதம்), 3)காபாலம் (காளம்), 4) வாமம் (சாக்தேயம்), 5) பைரவம் (வைரவம்), 6)ஐக்கியவாத சைவம் என்பனவே அச்சமயங்களாகும்.

'காபாலிகம்' பாசுபத சமயம் போல மிகவும் பழமையான ஒன்றாகும். இக்கொள்கையைக் 'காலம்' எனும் தத்துவத்தில் உருவாக்கியவர் உருத்திரர் ஆவார். உடம்பெல்லாம் திருநீறு பூசி, தலைமாலை அணியும் சமயத்தவர் காபாலிகர். சாம்பலை உடலில் பூசிக் கொள்ளுதல், பைரவர் வழிபாடு ஆகியவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுப்பதாக எண்ணினார். கபாலிக மதமும் பைரவ மதமும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் தோன்றும். பைரவ சமயக் கொள்கை என்பது பைரவரே பரம்பொருள் என்றும் அவரடியிற் சேருவதே வீடுபேறு என்பதும் ஆகும். உயிர்களுக்குப் பந்தமும் வீடும் பைரவக் கடவுளிடமிருந்து எட்டுத்தலைகள் தோன்றி அளிக்கும். இவர்கள் கொள்கை போக மார்க்கமே முக்தியைத் தரும் என்பதாகும். இவர்களுக்கு நரபலி இடுதல், மண்டையோட்டில் உணவருந்துதல், மது அருந்துதல் ஆகிய பழக்கம் உண்டு. படைவீரர்கள் தலைகளை அரிந்து கொற்றவையையும் பைரவக் கடவுளையும் வழிபட்டனர் என்றும் பைரவி மந்திரத்தைச் செபம் செய்தனர் என்றும் தமிழ்ப் புலவர் ஒட்டக்கூத்தர் தமது தக்கயாகப் பரணியில் கூறுகின்றார்.

நல்லவை தோன்றும்பொழுது அல்லவையும் சேரத்தான் செய்யும். பைரவ வழிபாடு எங்கும் பரவியிருந்த சமயம் சிலரின் வன்னிலை வழிபாடும், பைரவ வழிபாட்டுடன் சேர்ந்தது. அமைதி வாழ்க்கை மேற்கொள்ள விரும்பிய சைவ சமயத்தினர். இவ்வன்னிலை வழிபாட்டை ஒதுக்கத் துவங்கினர். சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் பைரவத்தில் சேரலாம், அனைவரும் பைரவக் கடவுளின் முன்பு சமமே என்ற பைரவமதத்தின் கொள்கை, சிலகுறிப்பிட்ட சாதியினருக்குப் பிடிக்கவில்லை.

வன்நிலை வழிபாட்டினை மட்டும் ஒதுக்கிவிட்டுச் சிறந்திருந்த பைரவ வழிபாட்டினை மட்டும் சுத்தசைவ முறைப்படி தொடர்ந்திருக்கலாம் என்பது எமது கருத்தாகும்.

காசியில் வழிபாட்டுமுறை செய்பவர்கள் பண்டாக்கள் என்னும் பண்டாரங்கள். பழனியில் வாழும் பைரவருக்குப் பெயர் சுப்ரமண்ய பைரவர் என பைரவர் அஷ்டோத்திரத்தில் வருகின்றது. பழனியில் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்புகூடப் பண்டாரங்கள் தான் வழிபாடு செய்து வந்தனர். பிற்காலத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழ்நாட்டில் ஸ்ரீபைரவர் என்னும் கடவுளை வைரவர் எனவும் அழைக்கின்றனர். இவரே கிராமக் காவல் தெய்வமாக நின்று தந்திர சாத்திரப்படி பலி ஏற்கின்றார். மேலும் இவர் கோவில்களில் காவல் தெய்வமாக இருந்து ஆகமசாத்திரப்படி பூசையும் நைவேத்யமும் பெறுகின்றார். முதலில் தொடங்கும் காலை பூசையும் இறுதியாக நடக்கும் இரவு பூசையும் இவருக்கே உரித்தானவை. பைரவருக்கெனத் தனியாகப் புராணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பல்வேறு புராணங்களில் இவர் பாடலால் பெருமை பெறுகின்றார்.

இலங்கையில் சிவன்மலை என்ற சிவன் ஒளி மலை உள்ளது. இம்மலையின் உச்சியில் சூரியன் உதயமாகும் காலத்தில் வானவில்லின் நிறமுடைய ஒளி தோன்றுகின்றது. இச்சிவவழிபாடே சில இடங்களில் பைரவ வழிபாடாக மாறியது. இலங்கையில் பல இடங்களில் இவரே ஸ்ரீபைரவராக வணங்கப்படுகின்றார். உலகக்காவல் தெய்வமும் மக்கள் வணங்கிய உடனே பலன் வழங்குபவரும் ஸ்ரீபைரவரே.

பெண்களும் கோழைகளும் பைரவ உபாசனை செய்யக் கூடாது என்பது பண்டைய பெரியோர்கள் கருத்து. பக்திவழியில் சாதிமத வேறுபாடு இல்லாமல் யார் வேண்டுமானாலும் வணங்கலாம். அந்தக் காலத்தில் முள்ளு பாதிரிக்குச்சியைக் கையில் வைத்துக் கொண்டு ஸ்ரீபைரவர் கோயிலின் முகப்பில் அமர்ந்து குறி சொல்வார்களாம். "பைரவ" ராகம் என்ற ஓர் ராகம் உண்டு. பலிபீடத்திற்கு அபிசேகம் நடக்கும்போது பைரவ ராகம் நாதஸ்வரத்தில் வாசிப்பார்கள். பைரவருக்குண்டான பொதுக் காயத்திரி மந்திரம் ஜெபம் செய்தும் அவர் அருள் பெறலாம்.

பைரவர் காயத்ரி

சுவாநத் வஜாய வித்மஹே
சூலஹஸ்தாய தீமஹி
தந்தோபைரவ : பிரசோதயாத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருளைப் போக்கி ஒளியைத் தருபவர். திரிசூலம் அவருக்கே உண்டான சிறப்பான ஆயுதம். திரிசூலத்தை மனக் கண்ணினால் எண்ணினாலே போதும். நம் பயம் மற்றும் இக்கட்டான நிலையிலிருந்து ஸ்ரீபைரவர் நம்மைக் காப்பாற்றுவார். முற்காலத்தில் வீட்டில் பைரவர் சிலை வைக்க மாட்டார்கள். சுவரில் மஞ்சள் பொடி அல்லது குங்குமத்தால் திரிசூலம் போட்டு அதன்முன் குத்துவிளக்கு வைத்து வழிபடுவர். அதுவும் ஸ்ரீபைரவருக்குண்டான வழிபாடுதான். கிராமக் காவல் தெய்வமும் அவரே. கோவில் பொக்கிஷ ஆவரண தெய்வமும் அவரே. கோவில் திறந்த உடனும் கோவில் நடை இரவில் சாத்தப்படும் பொழுதும் இருநேர பூஜையை அவர் ஏற்கின்றார்.

தேவர்கள் பயப்படும்படி யமன் போன்ற அந்தகன் என்னும் பெயருடைய அசுரன் பலகாலம் கடுமையான தவம் செய்தான். அவ்வசுரனது தவத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த சிவபெருமான் ''யாது வரம் வேண்டும்? ஓதுக'' என அவனிடம் கேட்டார். அசுரன் ''அருள் வள்ளலே! அரி அயன் முதலிய தேவர்களாலும் ஆவிசோராமையும், அகற்ற வொண்ணாதே ஆற்றலும் அடியேனுக்கு அருள வேண்டும்'' என வரம் கேட்டான். பக்தி வலையில் விழுந்த சிவபெருமான் ''அவ்வாறே ஆகட்டும்'' என அவனுக்கு அருளினார்.

சிவபெருமான் அளித்த அந்த வரத்தால் தேவர் குழுவை துன்புறுத்திக் கொடுமை செய்து வந்தான். அத்தீயோனுடன் போரிட்டு வென்றோர் தேவர்களில் எவரும் இலர். இந்த அசுரனால் இடைவிடாது பட்ட துன்பத்தால் தேவர்கள் மனம் நொந்தனர். தேவர்கள் திருமாலை முன்செல்ல விட்டு, தாம் அனைவரும் கூடிப்பின் சென்று அந்தகனை நோக்கி, ''அரசே! உன்னுடன் போர் செய்து வெல்ல இவ்வுலகத்தில் ஒருவர் உளரோ? இனி நீ போடும் கட்டளையை ஏற்று நீ சொன்ன வண்ணமே தொழில் செய்கின்றோம்; எங்களைக் காக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும்'' என வேண்டினார்கள். தேவர்களைக் கண்களில் மைதீட்டி, பெண்களைப் போலச் சேலை உடுத்தி, பெண்களுக்குரிய மணிகளை அணிந்து, வாழ்நாளைக் கழிப்பீர்களாக; என்று அசுரன் கூறினான். தேவர்கள் அந்தகனுக்குப் பயந்து அவனுடைய ஆணைக்கு அடிபணிந்து வெட்கத்துடன் பெண் வடிவம் ஏற்று வெளியிடங்களில் வாழத் தொடங்கினர். திருமால் முதலிய தேவர்கள் கயிலாய மலையை அடைந்தனர். அங்கே சன்னிதானத்தின் வாயிலுக்குச் சென்று சிவத்தியானம் செய்து சிவனிடம் முறையிட்டனர். அருட் கடலாகிய சிவபெருமான் தம்மால் தோற்றுவிக்கப்பட்ட பைரவக் கடவுளுக்குத் தேவர் துயர் தீர்க்கும்படி கூறினார். பின் அவனுடைய வலியையும், அவனுடைய உயிரைப் போக்கும் வழியையும் பைரவக் கடவுளுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

பைரவருக்கும் அந்தகனுக்கும் கடும் போர் நடந்தது. பிறகு பைரவக் கடவுள் அந்தகனைக் கழுவேற்றியது போலச் சூலத்துடன் தம் திருக்கரத்தில் ஏந்திச் சிவபெருமானின் திருச்சன்னிதி அடைந்தார். அந்தகனின் அகந்தை நீங்கி அவன் அனந்த வகையாகச் சிவபெருமானைத் துதித்தான். பைரவரைப் பற்றி வேறு சீர்புராணச் செய்தியும் உண்டு. பிரமன் தனக்குச் சிவபெருமானைப் போலவே ஐந்து தலை இருப்பதால் தானே சிவபெருமானுக்குச் சமமானவன் எனக் கருதினான். இதை அறிந்த சிவபெருமான் கோபம் கொண்டு பைரவக் கடவுளைத் தோன்றச் செய்து ''பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றை உன் நக்தால் கிள்ளி எடுத்துவிடு'' என்று கட்டளையிட்டார். உடனே பைரவர் சிவபெருமானின் கட்டளைக்கு அடிபணிந்து பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்தார்.

உலக பிரளய காலத்தில் ஒடுங்குகின்றார். ஒய்வு எடுக்கின்றார். மீண்டும் சிருஷ்டி காலத்தில் வெளிப்படுகின்றார் என சாஸ்திரங்கள் சொல்கின்றன. பைரவருக்கு என தனியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணம் இருப்பதாக தெரியவில்லை. ஸ்ரீபைரவாஷ்டகம், பிருகு முனிவர் எழுதிய பைரவர் இருபத்தைந்து, ஸ்ரீபைரவ ஆகர்ஷணம், ஆனந்த கந்தம் மற்றும் தந்திர ஆகம சாஸ்திர ஏடுகள் ஸ்ரீபைரவரைப் பற்றி விளக்கி சொல்கின்றன. அந்த சாஸ்திரங்கள் காலத்தின் கோலமாக பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. ஸ்ரீபைரவர் பாலன் என்னும் நிலையில் ஆரம்பித்து எட்டு நிலைகளை தாண்டி ஒன்பதாவதாக யோகன் என்னும் யோக பைரவராக ஒடுங்குகின்றார்.

மிருகண்டு மகரிஷியை சனி சிக்கலில் மாட்டிவிட்டான். அவர் கோபம் கொண்டு சனிக்கு சாபமிட்டு விட்டார். அதனால் சனிக்கு வாதநோய் வந்து விட்டது. சனி ஸ்ரீபைரவரின் காலில் விழுந்து வணங்கினார். ஸ்ரீபைரவர் சனிக்குண்டான வாத நோயை மதுரை பக்கம் உள்ள திருவாதவூரில் தீர்த்து அருள் செய்தார். ஏழைரை சனி, அட்டம சனி, அர்த்தாஷ்டம சனி பிடித்துள்ளவர்கள் ஸ்ரீபைரவரை வழிபாடு செய்வதில் மூலம் மட்டும் விடுபடுவர். இது பல பேரின் அனுபவத்தில் உணரப்பட்டது. சனிக்கு குரு பைரவரே. பரணி நட்சத்திரம் பைரவருக்கு உகந்தது. அன்று ஸ்ரீபைரவ விரதம் இருக்கலாம்.

இறைவனையடைய சரியை, கிரியை, யோகம், ஞானம், பக்தி என்னும் ஐந்து படிகள் உண்டு. எல்லோராலும் யோகத்திற்கும் ஞானத்திற்கும் செல்ல இயலாது. அதனால்தான் தெய்வங்களை கிரியை மற்றும் பக்தி மார்க்கத்தினால் வழிபடுகின்றனர். 64 கலைகளில் 64 பைரவர் தம் சக்திகளுடன் வினை ஆற்றுகின்றார்.

64 பைரவர்களும் 64 சக்திகளும்

1. நீலகண்ட பைரவர் – ஜயா, 2. விசாலாக்ஷ பைரவர் – விஜயா, 3. மார்த்தாண்ட பைரவர் – ஜயந்தி, 4. முண்டனப்பிரபு பைரவர் - அபராஜிதா, 5. ஸ்வஸ்சந்த பைரவர் – திவ்ய மோகினி, 6. அதிசந்துட்ட பைரவர் – மகாயோகினி, 7. கேசர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பைரவர் சித்த மோகினி, 8. சம்ஹார பைரவர் – சண்டிகை, 9. விஸ்வரூப பைரவர் – பிரேதாசின்யை, 10. விரூபாச பைரவர் – டாகினி, 11. நானாரூப பைரவர் – காளி, 12. பரம பைரவர் – சாளராத்ரி, 13. தண்டகர்ண பைரவர் – நிசாசரி, 14. ஸீதாபாத்ர பைரவர் டங்கார்ரி, 15. சிரீடன் பைரவர் – வேதாள்யா, 16. உன்மத்த பைரவர் – ஸ்ரீவராகி, 17. மேகநாத பைரவர் – ஊர்த்துவகேசி, 18. மனோவேக பைரவர் – விருபாசி, 19. சேத்ரபாலக பைரவர் – கட்காங்கீ, 20. கராள பைரவர் – நரபோஜினி, 21. நிர்பய பைரவர் – பட்சார்ரி, 22. பிசித பைரவர் – வீரபத்ரா, 23. பிரேசத பைரவர் – தூம் ராட்சி, 24. லோக பால பைரவர் – கலசப்ரியா, 25. கதாதர பைரவர் – கோரரக்தாக்ஷி, 26. வஜ்ர அத்த பைரவர் – விச்வரூபி, 27. மகாகால பைரவர் – அபயங்கரி, 28. பிரகண்ட பைரவர் – வீரகௌமாரி, 29. பிரளய பைரவர் – சண்டிகை, 30. அந்தக பைரவர் – வராகி, 31. பூமிகர்ப்ப பைரவர் - முண்டதாரிணி, 32. பீடண பைரவர் – சாமுண்டி, 33. சம்கார பைரவர் – பைரவி, 34. குலபால பைரவர் – திவாங்சிணி, 35. ருண்டமாலா பைரவர் – தூம்ராங்கி, 36. ரத்தாங்க பைரவர்– பிரேதவாகினி, 37. பிங்களேட்சண பைரவர் – கட்கினி, 38. அப்ரரூப பைரவர் – தீர்க்க பைரவி, 39. தராபாலன பைரவர் – மாலினி, 40. பிரஜாபாலன பைரவர் – மந்திர யோகினி, 41. குல பைரவர் – காளி, 42. மந்திர நாயக பைரவர் – சக்ரிணி, 43. ருத்ர பைரவர் – கங்காளி, 44. பிதாமக பைரவர் – புவனேஸ்வரி, 45. விஷ்ணு பைரவர் – திரோடகீ, 46. வடுகநாத பைரவர் – மகாமாரி, 47. கபால பைரவர் – யமதூதி, 48. பூதவேதாள பைரவர் – காளி, 49. திரிநேத்ர பைரவர் – கேசினி, 50. திரிபுராந்தக பைரவர் – மர்த்தினி, 51. வரத பைரவர் – ரோம ஜங்கே, 52. பர்வதவாகன பைரவர் – நிர்வாணி, 53. சசிவாகன பைரவர் – விசாலி, 54. கபால பூடண பைரவர் – விசாலி, 55. சர்வக்ஞ பைரவர் – தோத்யமிமை, 56. சர்வதேவ பைரவர் அதோமுக்யை, 57. ஈசான பைரவர் – முண்டாக்ர தாரிணி, 58. சர்பூத பைரவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

– வியாக்ரிணி, 59. கோரநாத பைரவர் – தூங்ட்சிணி, 60. பயங்கர பைரவர் – பிரேதரூபிணி, 61. புத்திமுக்தி பலப்ரத பைரவர் – தூர்ஜட்டை, 62. காலாக்னி பைரவர் கோர்யா, 63. மகாரௌத்ர பைரவர் – கராளி, 64. தட்சிணாபித்தித பைரவர் – விடலங்க்யா. மேலே கூறிய 64 பைரவர்கள் தவிர அப்பாலுக்கு அப்பாலாக ஆகாய பைரவர் இருக்கின்றார். இவர் அனைத்து இடங்களிலும் ஊடுருவி நிற்கின்றார். அனைத்து அண்டங்களும் இவரைக் கண்டு நடுங்குகின்றன.

சிலகோயில்களில் அட்டபைரவர் என்னும் எட்டு பைரவர்கள் இருக்கின்றார்கள். சில நூற்களிலும் சிவபுராணங்களிலும் வெவ்வேறு பெயர்களுடன் அட்ட பைரவர்கள் குறிப்பிடப்படுகின்றார்கள். எதிரிகள் விலக மகா பைரவரை வணங்க வேண்டும். உலக இயக்கத்தைத் தம்பனம் செய்ய ஸ்ரீகுரூர பைரவரை வழிபாடு செய்ய வேண்டும். ஆபிசார பிரயோகத்தையும் பூர்வஜென்ம தோஷத்தையும் நீக்க ஸ்ரீகாலபைரவரின் அருள் வேண்டும். புதையல் இருக்கும் இடம் காட்டக், குறி சொல்ல ஸ்ரீபீஸன பைரவர் அனுசரணை வேண்டும். சுபகாரியங்களைத் துவங்க ஸ்ரீசண்ட பைரவரை ஆராதிக்க வேண்டும். ஸ்ரீஉன்மத்த பைரவர் எதிர்த்து வரும் எதிரியைப் பைத்தியம் பிடிக்கச் செய்வார். நம் ஆயுளை நீட்டிக்கச் செய்பவர் ஸ்ரீ காலபைரவரே, வீட்டில் வைத்து வணங்கத் தகுந்தவர் ஸ்ரீசொர்ண பைரவர்தான். யோகமார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் விரும்புபவர்கள் ஸ்ரீபைரவ காயத்திரியை ஜெபித்து யோக பைரவரையும் ஆகாச பைரவரையும் வழிபடலாம். ஒரு மனிதனுக்குள் சூட்சுமமாக இருந்து அவனுக்குத் தைரியத்தைக் கொடுக்கும் காவல் தெய்வம் ஸ்ரீ பைரவரே.

ஸ்கந்த புராணத்தில்(ப.170.4849) எட்டு வகையான பைரவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. 1. தண்டபாணி, 2. விக்ராந்தன், 3. மகா பைரவர், 4. படுக்கன், 5. பாலகன், 6.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்தி, 7. கால பைரவர், 8. சேத்திரபாலன் என அவர்கள் அழைக்கப்படுவர். பைரவர் தமது அம்சமாக எட்டுப் பைரவர்களாகப் படைத்தார் என்று (தந்திரசாரா) என்ற நூல் கூறுகிறது. அவை : 1. சிதாங்க பைரவர், 2. ரூரு பைரவர், 3. சண்ட பைரவர், 4. குரோத பைரவர், 5. உன்மத்த பைரவர், 6. காபால பைரவர், 7. பீடண பைரவர், 8. சங்கார பைரவர்.

இலங்கையிலிருந்து வெளிவந்துள்ள 'சிவபராக்கியம்' என்னும் நூல் அஷ்ட பைரவர் என்னும் எட்டு பைரவர்களைப் பற்றிக் கூறுகிறது. அதில் மற்ற நூல்களில் இருந்து சில பெயர்கள் வேறுபட்டு உள்ளன. அவை : 1. கால பைரவர், 2. கல்பாந்த பைரவர், 3. க்ரோதந பைரவர், 4. காபால பைரவர், 5. ஸம்ஹார பைரவர், 6. உந்மத்த பைரவர், 7. சண்ட பைரவர், 8. உக்ர பைரவர்.

வாமனபுராணம் வேறு வகையான எட்டுப் பைரவர்களைப் பற்றிப் பேசுகின்றது. சிவனுக்கும் அந்தகாசுரனுக்கும் நடந்த போரில் சிவனின் தலையிலிருந்து பெருக்கெடுத்து இரத்தம் எட்டு வடிவங்களைத் தாங்கியது. அந்த எட்டும், எட்டுப் பைரவ வடிவங்களாக ஆயின எனக் கூறுகின்றது. அவை : 1. வித்யாராஜா, 2. காலராஜா, 3. காமாராஜா, 4. சோமராஜா, 5. ஸ்வச்சந்தர ராஜா, 6. லலிதராஜா, 7. விக்னராஜா, 8. சிவா.

பொதுவாகத் திருக்கோயில்களில் எந்த வகைப் பைரவர் இருந்தாலும் பொதுவான அஷ்டோத்ர சதநாமவளியே கூறப்படுகின்றது.

1. ஓம் பைரவாய நம:
2. ஓம் பூதநாதாய நம:
3. ஓம் பூதாத்மனே நம:
4. ஓம் பூதபாவநாய நம:
5. ஓம் க்ஷேத்ரதாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. ஓம் க்ஷேத்ர பாலாய நம:
7. ஓம் க்ஷேத்ரக்ஞாய நம:
8. ஓம் க்ஷத்ரியாய நம:
9. ஓம் விராஜே நம:
10. ஓம் ஸ்மசானவாசினே நம:
11. ஓம் மாம்ஸாசிநே நம:
12. ஓம் ஸர்ப்பராசயே நம:
13. ஓம் ஸ்மராந்தக்ருதே நம:
14. ஓம் ரக்தபாய நம:
15. ஓம் பானபாய நம:
16. ஓம் ஸித்தாய நம:
17. ஓம் ஸித்திதாய நம:
18. ஓம் ஸித்தஸேவிதாய நம:
19. ஓம் கங்காளாய நம:
20. ஓம் காலசமனாய நம:
21. ஓம் கலாய நம:
22. ஓம் காஷ்டாய நம:
23. ஓம் தநவே நம:
24. ஓம் கவயே நம:
25. ஓம் த்ரிநேத்ரே நம:
26. ஓம் பஹுநேத்ரே நம:
27. ஓம் பிங்களலோசனாய நம:
28. ஓம் சூலபாணயே நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29. ஓம் கட்கபாணயே நம:

30. ஓம் கங்காளிநே நம:

31. ஓம் தூம்ரலோசனாய நம:

32. ஓம் அபீரவே நம:

33. ஓம் பைரவாய நம:

34. ஓம் நாதாய நம:

35. ஓம் பூதபாய நம:

36. ஓம் யோகிநீபதயே நம:

37. ஓம் தநதாய நம:

38. ஓம் தநஹாரிணே நம:

39. ஓம் தநவதே நம:

40. ஓம் ப்ரீதிபாவனாய நம:

41. ஓம் நாகஹாராய நம:

42. ஓம் நாகபாசாய நம:

43. ஓம் வ்யோம கேசாய நம:

44. ஓம் கபால ப்ருதே நம:

45. ஓம் காலாய நம:

46. ஓம் கபால மாலிநே நம:

47. ஓம் கமநீயாய நம:

48. ஓம் கலாநிதயே நம:

49. ஓம் த்ரிலோசனாய நம:

50. ஓம் ஜ்வலந் நேத்ராய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

51. ஓம் த்ரிசிகிநே நம:

52. ஓம் த்ரிலோகபாய நம:

53. ஓம் த்ரிநேத்ரதநயாய நம:

54. ஓம் டிம்பாய நம:

55. ஓம் சாந்தாய நம:

56. ஓம் சாந்த ஜனப்ரியாய நம:

57. ஓம் வடுகாய நம:

58. ஓம் வடுவேஷாய நம:

59. ஓம் கட்வாங்கவரதாரகாய நம:

60. ஓம் பூதாத்யக்ஷாய நம:

61. ஓம் பசுபதயே நம:

62. ஓம் பிக்ஷுதாய நம:

63. ஓம் பரிசாரகாய நம:

64. ஓம் தூர்தாய நம:

65. ஓம் திகம்பராய நம:

66. ஓம் சூராய நம:

67. ஓம் ஹரிணாய நம:

68. ஓம் பாண்டுலோசனாய நம:

69. ஓம் ப்ரசாந்தாய நம:

70. ஓம் சாந்திதாய நம:

71. ஓம் ஸித்தாய நம:

72. ஓம் சங்கராய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

73. ஓம் ப்ரியபாந்தவாய நம:

74. ஓம் அஷ்டமூர்த்தயே நம:

75. ஓம் நிதீசாய நம:

76. ஓம் க்ஞான சக்ஷுஷே நம:

77. ஓம் தபோமயாய நம:

78. ஓம் அஷ்டாதாராய நம:

79. ஓம் ஷடாதாராய நம:

80. ஓம் ஸர்ப்பயுக்தாய நம:

81. ஓம் சிகீஸகாய நம:

82. ஓம் பூதராய நம:

83. ஓம் பூதராதீசாய நம:

84. ஓம் பூபதயே நம:

85. ஓம் பூதராத்மஜாய நம:

86. ஓம் கங்காலதாரிணே நம:

87. ஓம் முண்டினே நம:

88. ஓம் நாகயக்ஞோப வீதவதே நம:

89. ஓம் ஜ்ரும்பணோ மோஹற நம:

ஓம் ஸ்தம்பீ மாரணஹ நம:

ஓம் க்ஷோபணாயந நம:

90. ஓம் ஸுத்த நீலாஞ்சன ப்ரக்யாய நம:

91. ஓம் தைத்யக்நே நம:

92. ஓம் முண்ட பூஷிதாய நம:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

93. ஓம் பலிபுஜே நம:

94. ஓம் பலிபுங் நாதாய நம:

95. ஓம் பாலாய நம:

96. ஓம் அபால விக்ரமாய நம:

97. ஓம் ஸர்வாபத்தாரணாய நம:

98. ஓம் துர்க்காய நம:

99. ஓம் துஷ்டபூத நிஷேவிதாய நம:

100. ஓம் காமினே நம:

101. ஓம் கலாநிதயே நம:

102. ஓம் காந்தாய நம:

103. ஓம் காமினீ வசக்ருதே நம:

104. ஓம் வசினே நம:

105. ஓம் ஸர்வ சித்திப்ரதாய நம:

106. ஓம் வைத்யாய நம:

107. ஓம் ப்ரபவே நம:

108. ஓம் விஷ்ணவே நம:

ஸ்ரீபைரவர் உபாசனை தங்க வியாபாரிகளுக்கும், உயர்நிலை அதிகாரிகளுக்கும், சிவபூஜகர்களுக்கும், மடாதிபதிகளுக்கும், காவல்துறை மற்றும் இராணுவத்துறை அதிகாரிகளுக்கும் அவசியமானது. காவல் துறை மற்றும் இராணுவத்துறையினரைத் தவிர இதரர்கள் ஸ்ரீபைரவருக்குச் சைவ உணவை நிவேதிக்க வேண்டும். மது மாமிசம் என்பது கொட்டை நீக்கிய பேரீச்சம்பழமும், தேனும் கலந்த கலவையாகும். பக்தர்களுக்குத் தினப் பொற்காசுகள், பொன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாம்பாளம், புதையல், அட்சய பாத்திரம் கொடுத்து ஆதரிப்பவரும் ஸ்ரீ சொர்ண பைரவரே. இரவில் படுக்கப் போகுமுன் கைகால் முகம் கழுவ வேண்டும். பின் வலதுகை ஆள்காட்டி விரலால் நெற்றியில், மார்பில், இடது புஜத்தில், திரிசூலம் இடவேண்டும். வலது புஜத்தில், இடது கை ஆள் காட்டி விரலால் திரிசூலம் இட வேண்டும். கிறிஸ்தவர்கள் சிலுவை இடுவதுபோல். இப்படிச் செய்துவிட்டுப் பின் படுத்தால் துர் ஆவிகள் வாரா. நல்ல உறக்கம் வரும். என்னுடைய ஸ்ரீசொர்ண பைரவர் என்னும் ஆராய்ச்சி நூலைப் படித்தால் விரிவான விளக்கங்கள் ஸ்ரீ பைரவரைப் பற்றி அறியலாம்.

இந்த ஸ்ரீசொர்ணபைரவர் அறுபத்தி நான்கு பைரவர்களுக்கும் அப்பாற்பட்டவர். ஒவ்வொரு வீட்டுப் பூசை அறையிலும், ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும், ஒவ்வொரு நகைக் கடைகளிலும், குறிப்பாக சொர்ணம் (தங்கம்) இருக்க வேண்டிய இடங்களில் இவரது படமும், டாலரும் இருக்க வேண்டியதாகும். மனதில் பயம் ஏற்படாது. வீட்டிலே பொன் மழை பெய்யும்.

ஸ்ரீசொர்ண பைரவர் கலர்ப் படத்தினை பூசை அறையில் வடக்கு நோக்கி வைத்து வணங்குதல் வேண்டும். படத்துக்குக் காய்ந்த மலர்கள் அல்லது செயற்கை மலர்கள் அணிவித்தல் கூடாது. அன்று மலர்ந்த மல்லிகை, தாமரை போன்ற மலர்கள் அணிவிக்கலாம். பெரிய அளவுகளில் படங்களை மாட்டி வழிபடக் கூடாது. ஆகர்சண சக்தி அதிகம் என்பதால் நாம் அச்சக்தியைத் தாங்கும் அளவுகளிலேயே உள்ள படங்களை வணங்க வேண்டும். ஸ்ரீசொர்ண பைரவர் ஸ்டிக்கரை வீட்டில் பீரோவின் உள்ளே ஒட்டி வைத்துக் கொள்ளலாம். அலங்காரத்துக்காக வெளியே ஒட்டக் கூடாது. குறிப்பாகக் கார், மோட்டார் பைக்கில் இவைகளிலும் வீட்டின் அறைகளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகப்புகளிலும் ஒட்டக் கூடாது. ஸ்ரீசொர்ண பைரவர் நாணயத்தை வீட்டில் பணம் வைக்கும் இடத்தில் அல்லது தங்க நகை வைக்கும் இடத்தில் வைத்துக் கொள்ளலாம். ஸ்ரீசொர்ண பைரவர் படம் (சிறியது) இதனை ஆண்கள் சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளலாம். பெண்கள் கைப்பையில் வைத்துக் கொள்ளலாம். (பெண்கள் மாதவிலக்கின்போது வைத்துக் கொள்ளக் கூடாது.)

ஸ்ரீசொர்ணபைரவர் புத்தகம் கிடைக்குமிடம் : ஈசுவர் லேசர், ஆழ்வார் ப்ளாட்ஸ், 150, ஆழ்வார்பேட்டைத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி : 044 – 4335524.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. சித்தர்களின் தொடர்பு வேண்டுமா?

தென்னாடுடைய சிவனே போற்றி. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவவணக்கம் தென்னாட்டில் இருந்துள்ளது. லெமூரியாக் கண்டம் கடலால் அமிழ்ந்து பட்டபின் சிவவணக்கம் உலகமனைத்தும் பரவியது. சீனா நாட்டிலிருந்து போகரும், கொங்கண நாட்டிலிருந்து கொங்கண முனிவரும், இமயமலை அடிவாரத்தில் உள்ள காகபுசுண்டி என்னுமிடத்திலிருந்து காகபுசுண்டரும், ரோமாபுரியிலிருந்து ரோம ரிஷியும், நேபாளத்திலிருந்து கோரக்கரும், நாகாலாந்திலிருந்து பாம்பாட்டி சித்தரும், பாலஸ்தீனத்திலிருந்து யாக்கோபு முனிவரும், சிவன் பிறந்த தென்னாட்டை நோக்கி வந்து தமிழ் கற்று, மணி, மந்திர, மருத்துவ நூல்களை இயற்றினர். இதில் குறிப்பிடத் தக்கவர்கள் 18 சித்தர்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம், அஷ்டகர்மம், அஷ்டாங்க யோகம் ஆகியவைகளைத் தாங்கள் உணர்ந்து பின் மற்றவர்களுக்கு உபதேசம் செய்தனர். கிரக நிலைகளுக்கு அப்பால் இயங்கும் பஞ்ச பூதங்களைத் தங்களின் தவவலிமையால் தங்களது சித்தத்தின்படி இயக்கியதால் சித்தர்கள் என அழைக்கப்பட்டனர். தங்களது சீடர்களுக்கு மந்திர தீட்சை, நயன தீட்சை, ஸ்பரிஷ தீட்சை, வாசக தீட்சை, யோக தீட்சை, மானச தீட்சை ஆகியவைகளைக் கொடுத்து அவர்களை உலகிற்குத் தொண்டு செய்ய அனுப்பினர்.

சித்தர்கள் தங்களுக்குள்ளும் தங்களது சீடர்களுடனும் தொடர்பு கொள்ளும் சமயம் பலபரிபாசைகளைப் பயன் படுத்தினர். பிற்காலத்தவர்கள் அதனை மேலும் கடின மாக்கினர். 27 நட்சத்திரங்களின் பெயர்களைப் பின்வருமாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைத்தனர். அஸ்வினியைப் புரவி என்றும், பரணியை அடுப்பு என்றும், கார்த்திகையை ஆரல் என்றும், ரோகிணியைச் சகடு என்றும், மிருகசீரிடத்தை மான்றலை என்றும், திருவாதிரையை மூதிரை என்றும், புனர்ப்பூசத்தைக் கழை என்றும், பூசத்தைக் கொடிறு என்றும், ஆயில்யத்தை அரவு என்றும், மகத்தைக் கொடுநுகம் என்றும், பூரத்தைக் கணை என்றும், உத்திரத்தை உத்தரம் என்றும், அஸ்தத்தைக் கை என்றும், சித்திரையை அனுபை என்றும், சுவாதியை விளக்கு என்றும், விசாகத்தை முறம் என்றும், அனுஷத்தைப் பனை என்றும், கேட்டையைத் துலங்கொலி என்றும், மூலத்தைக் குருகு என்றும், பூராடத்தை முற்குலம் என்றும், உத்திராடத்தைக் கடைக்குலம் என்றும், திருவோணத்தை முக்கோல் என்றும், அவிட்டத்தைக் காக்கை என்றும், சதயத்தைச் செக்கு என்றும், பூரட்டாதியை நாழி என்றும், உத்திரட்டாதியை முரசு என்றும், ரேவதியைத் தோணி என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அதே போல மாதங்களில் சித்திரையை மேழம் என்றும், வைகாசியை விடை என்றும், ஆனியை ஆட்வை என்றும், ஆடியைக் கடகம் என்றும், ஆவணியை மடங்கல் என்றும், புரட்டாசியைக் கன்னி என்றும், ஐப்பசியைத் துலை என்றும், கார்த்திகையை நளி என்றும், மார்கழியைச் சிலை என்றும், தையைச் சுறவம் என்றும், மாசியைக் கும்பம் என்றும், பங்குனியை மீனம் என்றும் இவற்றினையே தமிழ்ப் பெயர்களாக இன்றும் தமிழ்க் காவலர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதே போல மூலிகைகளையும் பரிபாசையால் அழைத்துள்ளனர்.

வரலாற்று ஆசிரியர்கள் சித்தர்களின் காலத்தைக் கி.பி.800 முதல் கி.பி. 1000 வரை இருக்கலாம் என அபிப்பிராயப் படுகின்றனர். ஒரு தட்ஸ்வ யோனியில் பிறந்த சித்தர்கள் திரும்ப யோனியில் பிறப்பதில்லை. நாம் பழுதடைந்த வீட்டை விட்டுப் புது வீட்டுக்குக் குடிபோவதுபோல் அவர்கள் பழுதடைந்த உடலை விட்டுப் பரகாயப் பிரவேசம் என்னும் முறையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னொரு உடலில் தொப்புள் மூலம் பிரவேசித்து எழுகின்றார்கள். இதனால் சித்தர்களுக்கு இறப்பு என்பது கிடையாது. பாம்பு சட்டையைக் கழற்றுவது போல் சித்தர்கள் வருடா வருடம் சட்டையைக் கழற்றியதால் சட்டை நாதர் என அழைக்கப்பட்டனர். தென்னாட்டுக்கும் ஆகாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றபடியால் தென்னாடு செவ்வாய் பூமி அல்லது ஞானபூமி என அழைக்கப்படுகின்றது. தமிழ் மொழிக்குச் சக்தி அதிகம். ஆகையால் உலகம் முழுவதிலிருந்தும் சித்தர்கள் இங்கு வந்து தமிழ்கற்றுத் தமிழ் மந்திரம் ஓதி இங்கேயே சமாதி யடைந்தனர். தென்னாட்டில் உள்ள அனேக கோவில்களில் சமாதியாகியிருப்பது சித்தர்கள்தான். கோவில் வழிபாடு என்பது ஒருவகை ஆவி வழிபாடுதான். சித்தர்கள் வேறு. ஞானிகள் வேறு. சித்தர்கள் பிச்சை எடுப்பதில்லை. ஒரே சித்தர் எட்டு இடங்களில் சமாதி ஆகலாம் எனப் போகர் கூறியிருக்கின்றார். அவர்களின் வழிச்சுவட்டை நாம் பின்பற்றுவதால் வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டம் என வள்ளலார் கூறினார்கள்.

இப்பூமியில் வழிகாட்டி மரமாக இருந்து சீடனுக்கு ஆன்மிக வழி காட்டுபவர் காரணகுரு. அதன்படி சீடன் சாதனை செய்து ஒரு நிலையை அடைந்தபின் அவன் தியானத்தில் தோன்றி அவனைச் சூட்சுமலோகங்களுக்குக் கூட்டிச் செல்பவர்கள் காரிய குரு என்னும் சித்தர்.

உண்மை என்று தோன்றியதோ அன்றே பொய்யும் தோன்றியுள்ளது. உண்மைக்குருவை மக்கள் தேடினர். அப்பொழுது சில பொய்க் குரு, உண்மைக்குரு போல நடித்துள்ளனர். மக்கள் நலனுக்காகப் பொய்க்குரு மற்றும் உண்மைக்குரு பற்றித் திருமூலர் தம் மந்திரத்தில் கூறியுள்ளார். பொய்க்குரு பற்றிக் கீழ்க்கண்ட பாடல்களில் திருமூலர் கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

தக்க அறிவு நலத்தால் அறிவீனத்தை அகற்றும் சற்குருநாதரைச் சிலர் அடையவும் மாட்டார்கள். இவர்கள் அந்தகாரமான அறியாமையைக் களையாத குருவையே இவர்கள் கொண்டிருப்பார்கள். இது எப்படியிருக்கிறது என்றால் பார்வையற்றவர்கள் இருவர் சேர்ந்து, பார்வையில்லா நோக்குடன் அங்குமிங்குமாய் ஆடியலைந்து பின்பு இருவரும் பாதாளக்குழியில் வீழ்ந்துபட்டது போலானதாகும் என்று திருமூலர் கூறுகின்றார். அதாவது பக்குவமில்லாதவர்கள், உத்தம ஆச்சாரியனை அடையாமல் கெடுவர் என்பதாகும்.

மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே

மனத்தில் சிந்தனை செய்வது எல்லாமே தக்கவாறு பிரதிபலிக்கும் படியான காரணாதியே உடம்பாகும், சிந்தனைகளின் தொகுதியாகிய உள்ளம் கொண்டவர் அந்தக் காரண உடலின் நிழலையும்கூடப் பொருந்தியிருந்து, தன் அனுபவம் கொள்ளமாட்டார்கள், நினைப்பினால் விளைந்த தான கர்மவினைத் தொகுதியை மாறு படுத்திக் கொள்ளவும் மாட்டார்கள். தத்தம் அறிவீனத்தால் மீண்டும் காமக்கசடினைப் பற்றியே, விரும்பியவாறு, பல்வேறு வழிகளைக் கடைப்பிடித்து, சதா சிந்தனைகளை அடுக்கடுக்காய்ப் பெருக்கிக் கொண்டே இருக்கின்றனர் என திருமூலர் கூறுகின்றார். அதாவது தக்க பக்குவமில்லாதவர்கள், அவர்தம் அறியாமையால் பல்வேறு வழிகளைக் கடைப்பிடித்து, வெளியே திரிந்து கெடுவர் என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மைக்குருவான திருமூலர் அனைத்துக்கும் காரணமாக இருப்பவர் பரமனே என்றும் அவனது கிருபை உயர்ந்தது என்றும் நமக்குக் கூறுகின்றார்.

ஏயெனில் என்ன மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மாதுரமூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளோர்
ஊனிலை செய்யும் உருவிலி தானே.

மனிதர்கள் அனைவரும் "ஏய்" என்றழைத்த உடனே "என்ன" வென்றே பதில் சொல்லாதது இவ்வுலக இயல்பாகும் என்பது. குழந்தையின் வாயில் தாயானவள் தன்னுடைய கொங்கையை வைத்திடப் பாலானது எப்படிப் பிரவகிக்கிற தென்பதை நம்மால் உள்ளவாறே தெரிந்து கொள்ளவியல வில்லை. அப்படிப் பால் சொரிந்து மாமிசக்கூடாகிய உடலினுள் ஜீவனை ஸ்திதி பண்ணுபவன் அந்த உருவமில்லாத பரமன் என்றே தெளிவது உத்தமம் என மூலர் கூறுகின்றார். அதாவது இங்கே தாயுமாய் விளங்கும் பரமனின் கிருபை கூறப்பட்டது.

சில சித்தர்களின் கருத்துக்கள் முதலில் கசக்கும். மேலும் அவர்களின் கருத்துக்கள் பைத்தியக்காரரின் கருத்துப் போல இருக்கும். உண்மையை உணர்ந்தால் நாம் அவற்றினை ஏற்காததே பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.

வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து
தீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே.

திண்மை மிக்கதான பெருந்தன்மைக் குணமுள்ள மனப்பாங்குடையவரே, வாய் எதையோ பேச, உள்ளம் மற்றதைப் பற்றி நினைக்க, நீங்கள் அவற்றோடு பொருத்தமில்லாத தன்மையுடைய செயலை மேற்கொள்ளாதிருப்பீர்களாக. மனம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாக்கு, உடல் என்பதான முக்கரணாதிகளும் பரமசுத்தியோடு இருக்குமாயின், நீவீர், ஒளி மிக்கதான சிவக்கனலுடன் பொருந்தியவரென்றே இவன் உரைப்பான். அப்படி, தெளிவுற்றதான பிறகு, என்னுடைய கருத்தானது, பைத்தியக் காரனின் கருத்தென்று மற்றவர்கள் சொல்லமாட்டார்கள்.

ஒரு நாடு செழிப்பாக இருக்க எத்தகையவர்கள் வாழ வேண்டும் எத்தகையவர்களை நாடு கடத்த வேண்டும் எனவும் அன்றே சித்தர் கூறியுள்ளார்.

பஞ்ச துரோகத்திப் பாதகர் தம்மை
யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடிற்
பஞ்சத்து ளாய்புவி முற்றும்பா ழாகுமே.

கொலை, களவு, கள்ளுண்ணல், காமம்,பொய்யுரைத்தல் என்பதான பஞ்சமாபாதகச் செயல்களைப் பண்ணுபவர்களைக் கூடிப் பயப்படும் வண்ணம், தக்க நேரத்தில் தெளிந்தே, ஓர் மன்னன் மிக்க, தண்டனையை அவர்களுக்குத் தந்து, அவர்களை நாட்டை விட்டுக் கடத்த வேண்டும். அரசன் அவ்வாறு செய்யவில்லை என்றால் அந்த நாடானது கடுமையான பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு முற்றிலுமாகப் பாழாகிப்போகும் என்று அரசன் செய்ய வேண்டியன பற்றித் திருமூலர் கூறுகின்றார்.

தபசிகள் எவ்வாறு இருக்க வேண்டும் எவ்வாறு இருக்கக் கூடாது; பிறவாமை எனும் அல்லலில் மாட்டாமல் எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கீழேயுள்ள பாடலில் திருமூலர் கூறுகின்றார்.

தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்
சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயரிய தவசு என்றதன் தன்மையில் நிலைக்கப் பெற்றவர்கள் யாவரும், தாம் நுகரும் கன்மம். பரசிவப் பொருளினால் நுகர்ந்து, கழிவதற்காகவே நிர்ணயிக்கப் பெற்றதென்ற தன்மையைக் குறித்து, வானத்தினரும் தெளிய மாட்டார்கள். உத்தம தவத்திலாழ்ந்து, நிலைத்தே அறிந்து கொள்ளாதவர்கள் அனைவரும், பிறப்பாகிய அல்லலில் மாட்டிக் கொண்டு, வருந்திக் கொண்டே இருப்பார்கள் எனத் தவசிகள் பற்றித் திருமூலர் கூறுகின்றார்.

பக்குவமான வாழ்வு நாம் வாழ்வதில்லை என்பது திருமூலரின் எண்ணம் பக்குவம் என்றால் என்ன எனத் தெரியாதவர்களுக்காக அகற்ற வேண்டிய ஒன்பது செயல்களைக் கீழே கூறுகின்றார்.

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே.

பிறரைக் காரணமின்றிக் கோபித்துக் கொள்வதும் எப்பொழுதும் எதைப் பற்றியாவது எண்ணிக் கொண்டிருத்தலும் கர்மவினைகளாற்றிக் கொள்ளலும், எப்பொழுதும் கொறித்துக் கொண்டிருத்தலும், சித்திரான்னங்களை மிகவிரும்பிச் சுவைத்தலும், மற்றவர்களுக்குக் கெடுதல் செய்தலும், தன்னிலையில் பின்வாங்குதலும், வீண் வாழ்வு வாழ்தலும், தற்பெருமை கொள்ளுதலும் ஆகிய இந்த 9 வகைகளும் பரிபக்குவமடையாதவர்களின் செயல்களாகும் என்று போலி வாழ்வு பற்றித் திருமூலர் கூறுகின்றார்.

குருட்டு வாழ்வு வாழும் குருடர்களைக் கண்களைத் திறக்கச் செய்து பரவொளி விளக்கினை இங்கே சித்தர் நமக்குக் காட்டுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்
கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கது வாமே.

சிலர் தமக்குத் தேவையானவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் மாட்டார்கள். பரவெளிகாந்தியைக் காணவும் மாட்டார்கள். தனக்கே உரித்தான அந்தப் பரவெளியில் துலங்கும் தன்னுணர்வில் மனத்தைப் பொருத்தும் நோக்கினைக் கொள்ளமாட்டார்கள். பரவெளியில் பரசிவ வஸ்து உள்ளது. அதைக் கண்ணுற்று உய்வு அடையுங்கள் என இப்பாடலில் அனைவரும் உய்வு அடையத் திருமூலர் வழிகாட்டுகின்றார்.

சற்குருவே மெய்க்குரு. இவரையே சீடர்கள் அணுக வேண்டும். மெய்க்குரு துணையிருந்தால் வீடுபேறு கிடைக்கும். இதில் மாறுபட்ட கருத்தில்லை.

தொழுதறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்
அழிவற வர்ம றையல்லா தாவரே.

ஆராதனை புரியும் பரிபக்குவமடைந்த சீடர்கள், திருமறைகளில் கூறப்பட்ட வழிகளைக் குறித்துத் தெளிந்தும், குறைவில்லாத தன்மை கொண்டவரான உத்தம சற்குரு நாதரை தேடியே தெளிந்துணர்வர். இவர்கள் உயர் வீடுபேற்றை விரும்பும் அறிவுச் செறிவுடையோரேயாம். அதற்கு வேறாகவுற்றதான வேறு ஒன்றையும், மோட்சகதியை விரும்பாத, லௌகீக ஸ்திதியில் திளைப்பவர்கள் கெட்டழிந்தே போகும் படியான வழியைப் பற்றியே தெரிந்து கொண்டிருப்பார்கள் என்றவாறு. நல்ல சற்குரு உபதேசம் சீடர்களை உய்விக்கும் என்பது திருமூலரின் அசைக்க முடியாத கருத்தாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமனை விரும்புவோருக்கும் ஐக்கியமாக விரும்புவோருக்கும் போலியாக வாழும் இவ்வுலக வாழ்வினால் இன்பம் கிடைக்காது; ஞானத்திலேயே மென்மேலும் விருப்பு உண்டாகும். எனக் கீழே உள்ள பாடலில் திருமூலர் கூறுகின்றார்.

பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி
யதைத்தொழிந் தேன்இனி யாரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர
உதைத்துடை யாயுகந் தாண்ட ருளாயே.

அனைத்திற்கும் மூர்த்தியானவரான பரமனே! இறைவா! உன்னையே எனக்குற்றவனாகி வரித்துக் கொண்டமையால் என்னுடைய பதைபதைப்புகள் அனைத்தும் அகலப் பெற்றேன். உலக வாழ்விலும் சலித்தேன். இதற்கு மேலும், எந்த விதத்திலும் மற்றவருடன் யாதொரு தொடர்பையும் வைத்துக் கொள்ள மாட்டேன். இவனின் கர்மவினைத் தொகுதியின் விளைவுகளையெல்லாம் களைந்தே, துன்பங்களை அகற்றும் படியாக மாற்று வித்து, என்னைத் தடுத்தாட்கொண்ட பரமனே, ஆனந்தத்தோடு எம்மையும் உன்னிடத்தில் சேர்த்து அருள் புரிவாயாக. ஞான பக்குவிகளுக்குச் சாதாரணமாக உலக வாழ்வில் சலிப்பும், ஞானத்தில் விருப்பும் சதா இருந்தவாறிருக்கும் என்பது திருமூலரின் கருத்தாகும்.

உலக வாழ்வே பரபரப்பானது. இதில் சீடன் மனதை ஒரு முகப்படுத்த வேண்டும். அது சமயம் குருவானவர் உபதேசம் செய்து ஞான தீட்சை தருதல் வேண்டும் என மூலர் கூறுகின்றார்.

பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சஞ்சல பாவனையான பரபரப்புடன் வாழுவதே வாழ்க்கை. அதில் உயர்வான பரம்பொருளினை, நல்குகின்ற காந்தியை சற்குருவின் நந்தனத்தில் நிறுத்த வேண்டும். அங்கு தியானம் செய்ய வேண்டும். அது சமயம் சிதறும்படியான சிஷ்யனின் உள்ளத்தை ஒரு குருவானவர் முனைப்படுத்தி, தன் உணர்வோடு பொருந்தப் பண்ண வேண்டும் இறை அன்புள்ளம் கொண்ட சிஷ்யருக்கு, உயர் ஞானோபதேசத்தைக் குரு நல்கலாகும் என்பது. இது ஞானதீட்சை தொடர்பானதாகும்.

உயர்குணமுடைய குருவை எப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும், சீடன் அவருக்கு என்ன செய்ய வேண்டும், சிவபரம் எப்படிக் கிடைக்கும் எனக் கீழே மூலர் விளக்குகின்றார்.

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபரந் தானே.

உயர்குணமுள்ள சீலரைச் சற்குருவாக ஏற்றுக் கொள்க; தன்னிடமுள்ள சகல உடைமைகளையும், சம்பத்துகளையும், தமது சரீர பாவனையையும் உயிரையும் குருவுக்கு ஈதல் வேண்டும். நேரம் கடத்தாமல் தடங்கல் ஏதுமின்றி அவர் கூறிய நல்வழிப்படியே நிலைத்திருந்து, தெளிதல் வேண்டும். பின்பு தன்னுணர்வினால் உயர் சிவகதி விளைவதை சித்தியாக்கிக் கொள்ளல் வேண்டும். உத்தம குருநாதரின் கடாட்சத்தால் சிவபரம் சித்தியாகும்.

சீடன் கேட்டவுடன் கடைச் சரக்குப்போல உபதேசத்தினை உண்மைக் குருவானவர் உடனடியாகக் கொடுக்க மாட்டார்கள். உபதேசம் செய்ய நாளும் நட்சத்திரமும் உண்டு என்பதைக் கீழே விளக்குகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தானென்று
நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது
ஆதியும் ஏதும் அறியகி லானே.

சுவாதி, விசாகம் என்னும் இரண்டு நட்சத்திரங்களும், உயர்வான விருச்சிகம், கடகம் என்னும் இரு ராசிகளும், உயர் குருவுபதேசம் செய்யவும் சீடன் ஏற்றுக் கொள்ளும் காலமாகும். இதற்கான தக்க காரணங்களும் பிறர் தெரியவியலாது.

குரு உபதேசம் கிடைத்த உடனேயே உள்ளம் பரிசுத்த மாகும். காந்தி ஆண்டவன் உறைவான். கர்மங்கள் அகன்று இறை தரிசனம் கிடைக்கும் எனத் திருமூலர் கீழே உள்ள பாடலில் கூறுகின்றார்.

தொழிலார மாமணித் துய்தான சிந்தை
எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே
விழலார் விறலாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே.

உயர்ந்த குருவுபதேசம் பெற்றுய்ய, ஒளிமிக்க மாமணியைப் போலவும், பரிசுத்தமான உள்ளத்தில், சோதி மிகுந்த ஆண்டவன் உறைந்தருளுவார். அத் தருணத்திலே, விருப்பப்பட்டவர்களின் திண்மைமிக்கதான கர்மவினைகள் அகலும். ஆண்டவனின் திருப்பாதங்கள் என்னும்படியான பிரேமையுணர்வு அடைவர். அது நிலைத்து, பரமனின் திவ்ய கடாட்சத்தைப் பெற்றுய்யலாம்.

சீடன் எப்படி இருக்க வேண்டும் என்பதே முக்கியம். குருஉபதேசம் செய்தாலும் ஏற்கும் பக்குவம் சீடனுக்கு வேண்டும் என்று கீழே உள்ள மூன்று பாடல்களில் சீடனின் தன்மையைக் கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாத்திக னாய்ப்பர தத்துவந் தானுன்னி
ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே
ஆர்த்த யுறவியி னஞ்சி யுறநெறி
சாத்தவல் லானவன் சற்சீ ட னாமே.

சத்துவகுணத்துடனும், பரசிவ தத்துவப் பொருளையே சதா தியானம் செய்தும் இருக்க வேண்டும். வேதாத்யாயனம் பண்ணியவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மகத்தான வழியைப் பின்பற்றி வாழ வேண்டும். கர்ம பாந்தத்தால் பிணைக்கப்பட்ட பிறப்பிற்கு அஞ்சி இருக்க வேண்டும். சீலம் பொருந்திய தர்ம மார்க்கத்தை மேற்கொள்ள வேண்டும். அவர்களே தக்க பரிபக்குவமான சீடர் என்றுரைக்கப்பட்டது.

சத்தும் அசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியில் தருவோன்சற் சீடனே.

புறவாழ்வில் நிலையானவை மற்றும் நிலையில்லாதவை எவை என்று தன்னுணர்வினால், தெளிந்து இருக்க வேண்டும். பின்பு பரசிவப் பொருளையே எண்ணி வாழ வேண்டும். பரசிவத்தினுடைய வல்லமையானது பொதியப் பெற்றவனாய் இருக்க வேண்டும். சிவத்தின் தன்மையைத் தெளிவிக்க, தெளிவிக்கவே, சிரஞ்சீவி வஸ்துவான பரசிவத்தினிடமிருந்தே, உயர் சிவப்பெரும் பரம்பொருளறிவை அடையப் பணிய வேண்டும். பரமானந்தமே வடிவான சிவசக்தி ஐக்கியத்தின் விருப்பத்திற்கேற்றவாறு தன்னைப் பரிபக்குவமடைந்தவனாக்கிக் கொள்ள வேண்டும். இத்தகையவர்களே உத்தம சீடர்களாம்.

அடிவைத் தருளுதி யாசானின் றுன்னா
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சத்தி யாலே
அடிபெற்ற ஞானத்த னாசற்று ளோனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருநாதரே இன்றைக்கு தம் திருப்பாதங்களைத் தரித்தவாறு கிருபை பெற்றிடச் செய்யுமென்று எண்ண வேண்டும். அந்தச் சற்குருவின் வடிவைத் தமது தலையில் தரித்தவாறே தியானம் செய்ய வேண்டும். வஞ்சகமான இந்தப் பிறப்புத் தன்மையை ஆட்சேபிக்கின்ற கிருபாசக்தியால், கிருபையடைந்த ப்ரம் பொருளறிவு சித்தியானவரே, மாசற்ற உத்தம சீடன் எனப்படுவான். குருவின் கருணையிருந்தால் இறைவனையடையலாம் என்பதே இப்பாடலின் கருத்து.

சீராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்
ஆராயும் ஞானத்த னாமடி வைக்கவே.

சீலம் பொருந்தியதான தன்னுடைய அனுபவ ஞானத்தின் கண் மிகவும் விருப்பப்பட்டு, அதுவரைக்கும் தெரியாத பிரேமையாகிய இறையன்பைச் சற்குருபரனாகிய பரசிவத்தின் மேல் கொள்ளவேண்டும். அதுவரைக்கும் பொருந்தாததான சீலம். நோன்பு, செறிவு, அறிவு என்பதான 4 வகைகளும் தம்மிடம் பொருந்தி இருப்பதைக் கண்ணுற்றேன். சற்குருவின் திருவடி தீட்சைக்குப் பின்னர், பரம் பொருளறிவின் தன்னுணர்வின் அனுபவ நோக்கை நன்கு ஆய்வு செய்பவன் அவனேதான் என உணரலாம். ஒழுக்க நெறியிருந்தால் மேன்மையடையலாம் என்பதே இதன் கருத்தாகும்.

அக்காலத்திய குரு, சீடன் எப்படி இருக்க வேண்டும் எனத் திருமூலர் கூறிய கருத்துக்களைப் பார்த்தோம். பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரே திருமூலர். இச்சித்தர்கள் நம் மூதாதையர்கள். கண்டிப்பாக நம் உறவினர்களாக இருப்பர். அவர்களுக்கும் குலம் கோத்திரம் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதனால் நாம் 18 சித்தர்கள் கோத்திரங்களில் ஏதாவது ஒன்றில் தொடர்பு உள்ளவர்களாக இருப்போம். தியானத்தில் நாம் ஒரு நிலையை அடைந்தபின்தான் நாம் எந்தச் சித்தர் குழுவைச் சேர்ந்தவர் என்பது விளங்கும். பக்தி மார்க்கத்தில் 18 வயதுக்கு மேல் உள்ளவர்களும் சித்தர்களுடன் தொடர்பு கொள்ளலாம். ஞானக் கோவை என்னும் சித்தர்கள் பாடல்கள் படித்தால் அதில் உள்ள சித்தர்களில் யாராவது ஒரு சித்தரிடம் உங்களுக்கு ஒரு ஈர்ப்பு சக்தி ஏற்படும்.

ஏதாவது ஒரு சித்தருடன் தான் தொடர்பு கொள்ள வேண்டும். ஒரு திருவிளக்கை எட்டடி தூரத்தில் வைக்க வேண்டும். விளக்கில் பசு நெய்விட்டுத் தாமரை நூல் திரி போட்டு எரிய விட வேண்டும். ஆசனத் துணி அல்லது பலகையில் அமர வேண்டும். புருவ மையத்திற்கு நேர் கோட்டில் அந்த விளக்கு ஒளி எட்டு அடி தூரத்தில் தெரிய வேண்டும். ஒரு சிறு காசிச் செம்பில் நீரும் விளக்குமுன் வைக்க வேண்டும். உங்களுக்கு எந்தச் சித்தர் பிரியமோ அவர் பெயரை மனதால் உச்சரிக்க வேண்டும். சித்தர்களுக்குண்டான ISD கோடு வார்த்தை இதுதான்.

ஓம் சிங் ரங் அங் சிங்

மேற்படி மந்திரம் ஞானக்கோவை என்னும் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுபவத்திலும் அனேகரால் உணரப்பட்டது.

மேற்படி மந்திர வார்த்தையை அமைதியாக மனதால் ஜெபித்துக் கண்களால் தீபத்தைப் பார்த்து வந்தால் பூர்வஜென்ம வினைப்படி 90 தினங்களுக்குள் சித்தர் தொடர்பு உண்டாகும். அந்தச் சித்தரையே நம் குருவாக ஏற்று வழி நடக்கலாம். திருமூலர் 'குரு - சீடன்' உறவுகள் பற்றிக் கூறியதை முன் பகுதியில் சித்தர்களை வணங்கிக் குருவாக ஏற்றுக் கொள்ளவும். வழிபாட்டினை அமாவாசையில் ஆரம்பிக்க வேண்டும். தினம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரவு 8 முதல் 9 க்குள் முடிந்த மட்டும் மந்திர ஜெபம் செய்யவும். 9 மணிக்குப்பின் படையல் செய்த கனிகளைச் சாப்பிட்டுக் காசிச் செம்பில் உள்ள நீரைக் குடிக்கவும். இரவில் பால் சாதம் சாப்பிடுவது நல்லது. சைவ உணவு உடலுக்கு ஈர்ப்புச் சக்தியைக் கொடுப்பதாகும். மேலும் சைவ உணவு மன அமைதியைத் தரும். ஒவ்வொருவர் உடல் பூதியங்கள் நட்சத்திரங்கள், பிறக்கும் இடங்கள் மாறுபடுவதால் அனுபவங்களும் சிறிது மாறுபடும். ஒரே செடி பல்வேறு மண்ணில் பல்வேறு நிறப் பூக்களைப் பூப்பது போலத்தான் ஆன்மிகம் இடத்துக்கு இடம் சிறிது மாறுபடும். பொதுவாக மருந்துண்ணும் பொழுதும், தியானம் செய்யும் பொழுதும் உப்பு, புளி, காரம் ஆகியவைகளைக் குறைத்தல் நல்லது. அதனால் நம் மனபலம் கூடும். இது பொதுவிதி. சிலபேர் எந்தச் சாதனையும் செய்யாமல் தர்க்கத்திலேயே ஈடுபடுவதால் அவர்களின் வாழ்நாள் வீணாகிவிடுகின்றது. வாதத்திற்கு மருந்துண்டு. விதண்டாவாதத்திற்கு மருந்தில்லை. நமக்குள்ள வசதியைப் பொறுத்து ஏதாவது ஒரு சாதனை செய்து வருவது நல்லது.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. கண்திருஷ்டியா?

உலகைப் படைத்த கடவுள் மனிதனை தன் சாயலாகவே படைத்தார் எனப் பைபிள் கூறுகின்றது. எண்சாண் உடலுக்குத் தலையே முக்கியம். அதில் முக்கியமானது கண்கள். வலது கண்விச கலையை உடையது. இடது கண் அமிர்த கலையை உடையது. உடலில் எல்லா உறுப்புகளும் வளரும் தன்மையுடையன. ஆனால் கண்கள் மட்டும் பிறக்கும் பொழுது இருந்த அளவாகக் கடைசி வரை இருக்கும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும். ஒருவன் கண்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசினால் எதிரிலிருப்பவன் குணங்கள் நமக்குத் தெரியவரும். கண்கள் ஆனந்தக் கண்ணீரையும், சோகக் கண்ணீரையும் வெளிப்படுத்தும். காது ஒலியலைகளைக் கேட்கும் திறன் மிகக் குறைவானது. ஆனால் கண்களால் பலகோடி மைல்களுக்கு அப்பால் உதித்து எழும் சூரியனைப் பார்க்கின்றோம். மெஸ்மரிஷம் மற்றும் ஹிப்னாட்டிஸத்துக்கு மிகவும் தேவைப் படுவன கண்கள். மனிதனின் நல்ல எண்ணங்களையும், கெட்ட எண்ணங்களையும் வெளிப்படுத்துவன கண்களே.

பலவித வண்ணங்களை இந்தக் கண்களால் கண்டு களிப்படைகின்றோம். வானவில்லின் நிறமாலைகள் நமக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றன. பலவித நிறப் பூக்களால் புத்துணர்ச்சி பெறுகின்றோம். சிவப்பு நிறத்தைக் கண்டால் கோபம் வருகின்றது. கறுப்பு பேட்ஜ் அணிந்து துக்கத்தைக் கொண்டாடுகின்றோம். மஞ்சள் ஆடைகள் அணிவித்துத் திருமணம் நடத்துகின்றார்கள். வாஸ்து சாஸ்திரப்படி வீட்டுக்கு வேண்டிய கலர் பெயிண்ட் அடிக்கின்றார்கள். கோவில் வெளிச்சுவர்களில் காவி மற்றும் வெள்ளைப் பட்டைக் கோடுகள் போடுகின்றனர். குழந்தைகள் பல நிறப் பாசி மணிகளைக் கழுத்தில் அணிகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளை ஆடைகள் சாந்தத்தைத் தருகின்றன. பச்சை ஆடைகள் விவேகத்தைத் தருகின்றன. நீல ஆடைகள் மனோபலத்தை அளிக்கின்றன. கடைசியில் காவி நிற உடை துறவறத்திற்கு இட்டுச் செல்கின்றது. இதிலிருந்து மனித வாழ்க்கையில் கண்கள் மூலம் அறியப்படும் நிறங்களின் முக்கியத்துவம் தெரிகின்றது. இன்றைய அரசியல் கட்சிக் கொடிகள் பல நிறம் கொண்டதாக உள்ளன. மனிதன் மட்டுமல்ல; இதர உயிரினங்களும் நிறங்களை உணர்கின்றன. கறுப்பு நிறத்தைக் கண்டு மாடு மிரளுகின்றது. வெள்ளை நிறம் குதிரைக்குப் பிடிப்பதில்லை. சிவப்புச் சாயம் பூசப்பட்ட கோழிக் குஞ்சுகளைப் பருந்து தூக்கிச் செல்வது இல்லை. கறுப்புத் துணிப் பக்கம் காகம் வருவதில்லை. வெள்ளைத் துணிப்பக்கம் கொசுக்கள் வருவதில்லை. பசுமையான மரம் செடிகொடிகளில் தான் எல்லாப் பறவைகளும் அமர்கின்றன. பச்சோந்திதன் நிறத்தைச் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றிக் கொள்கின்றது. இதிலிருந்து நிறங்களின் சக்தியை நாம் அறிகின்றோம்.

மனிதர்களிலும் வெள்ளையர்கள், கறுப்பர்கள், செவ்விந்தியர், மஞ்சள் நிறத்தவர் எனப் பலவகையினர் உண்டு. அவர்களின் வாழ்க்கைமுறை குணநல பாவங்கள் வித்தியாசப் படும். ஞானிகளும் கண் திருஷ்டியால் (EVIL EYE) பாதிக்கப்படுவார்கள் என வல்ல நாட்டுச் சித்தர் கூறியிருக்கின்றார். சில உற்சவமூர்த்திகள் வீதி வலம் வந்து முடிந்த பின்னர்க் கோவிலுக்குள் மீண்டும் செல்லுமுன், அவைகளுக்குத் திருஷ்டிப் பரிகாரம் அர்ச்சகர்களால் செய்யப் படுகின்றது. முன்பு குழந்தைகளுக்குத் திருஷ்டிவராமல் இருக்க வேங்கை மரப்பால் பொட்டு வைப்பார்கள். சாம்பிராணி புகை காட்டுவார்கள். அரைஞாண் கயிற்றில் நாய், திறவுகோல், தாயத்துக் கட்டுவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம் வீட்டுக் குழந்தைகள் தம்மைச் சுற்றிலும் உள்ளவர்களின் ஒழுக்க பழக்கங்களைத் தம்மை அறியாமலே கற்றுக்கொள்ளுகின்றனர். மேலும் ஓர் தகப்பன் தன் பிள்ளை நல்ல குணமுள்ளவன், பெற்றோர்க்குக் கீழ்ப்படிதலும் மரியாதை செய்தலும் பிள்ளையின் சிறந்த குணங்கள் என்று எப்பொழுதும் தன் பிள்ளையின் நற்சுபாவங்களைக் குறித்துப் புகழ்ந்து பேசிக்கொண்டிருப்பானானால் அந்தப் பிள்ளை நல்லவனாகவே வளருவான். ஆனால் ஒருவன் தன் பிள்ளையை எப்பொழுதும் திட்டி, இவன் முரடன், அடங்காதவன் என்று சொல்லிக் கொண்டிருப்பானாயின் அவன் நிச்சயமாகவே அடங்காதவனாகிவிடுவான். ஆதலால் பெற்றோர் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய முக்கிய விசயம் என்னவென்றால் உங்கள் பிள்ளை எவ்விதமாக வளரவேண்டுமென்று விரும்புகின்றீர்களோ அவ்வித வார்த்தைகளையே அதனிடம் உபயோகிக்க வேண்டும். ஒவ்வொருவர் வாயினாலும் எப்பொழுதும் நன்மையானவைகளும், மற்றவர்களுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் தூண்டி விடுபவைகளுமான வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும். முகத்தினைச் சாந்தமாக வைத்துக் கொண்டு குழந்தைகளின் கண்களைப் பார்த்தபடி நல்ல சொற்களைச் சொல்லி அச்சொற்கள் அவர் கண்கள் வழிச் சென்று அவர்கள் மனதில் பதிவதாகச் சித்தம் செய்து கூற நல்ல பயன் கிட்டும். இதில் கண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஐரோப்பா, அமெரிக்கா போன்ற கண்டங்களில் வியாபார விற்பனைக்காகப் பழக்குவிக்கப் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். யோசனைக் குறிப்புகளையும் கண்கள் மூலம் எண்ணங்களையும் உபயோகிக்க வேண்டிய விதங்களைக் கற்பிப்பதே அவர்கள் தொழில். அவர்கள் கூறும் பாடங்கள் என்னவென்றால், வியாபாரம் வாங்க வருகிறவனின் கவனத்தைக் கவரத்தக்கதாகப் பொருள் அவன்முன் விரித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைக்க வேண்டும். அப்புறம் அச்சாமான்களின் உபயோகத்தைப் பற்றி அவன் கண்களைப் பார்த்து அவனுக்குத் தெரியச் செய்து அவன் விருப்பத்தைக் கிளப்பிவிட வேண்டும். உடனே விற்பனை செய்து காரியத்தை முடிக்க வேண்டும். நமது பொருள்களை விற்பனை செய்யும் பொருட்டு விளம்பரம் போடும் நாம் இதைக் கவனிக்க வேண்டிய தவசியம். எப்பொழுது ஒருவன் ஓர் பொருளைக் கண்களால் கவனிக்கின்றானோ அப்பொழுது அவனுடைய மனமானது அந்தப் பொருளை ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படுகிறது. எப்பொழுது அதைப்பற்றிய நினைவு மனதில் தோன்றியதோ அப்பொழுது அதைப்பற்றி அதிகமாயறிய விரும்புகின்றான். விருப்பமுண்டானவுடன் அவன் அதனை வாங்கியே தீருவான். எனவே வணிகர்கள் பிறரிடம் கண்கள் வழியே பேச வேண்டும். வாங்குகின்றவர்களின் கண்களைக் கவரும்படி பொருள்களை அலங்கரித்து விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் ஒரு சில மாதங்களில் ஓராண்டில் வரவேண்டிய இலாபம் அடையலாம். இதிலும் கண் முக்கிய இடம் பெறுகின்றது.

வணிகர்கள் கவனிக்க வேண்டிய மற்றோர் விவரமும் ஆசனத்தைக் குறித்தது. வியாபாரம் வாங்குவதற்காக வந்திருப்பவனுக்கு உடனே ஓர் தாழ்ந்த ஆசனங்கொடுத்து உட்காரவைத்துக்கொண்டு, தான் ஓர் உயர்வான ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு அல்லது நின்றுகொண்டு பேசுவது பழங்கால வணிகர்களுக்கு வழக்கம். இதற்குக் காரணம் தாழ்ந்த ஆசனத்திலிருப்பவன், உயர்ந்த ஆசனத்தில் இருப்பவனை அண்ணாந்து பார்த்துக்கொண்டு பேச வேண்டியது வரும். அப்பொழுது அவனுடைய கண் சக்தியில் பாதிகுன்றித் தாங்கும் சக்தியே அதிகமாயிருக்கும். உயர்ந்த ஆசனத்திலிருப்பவன் தன்னிலுள்ள காந்த சக்தியைக் கண்கள்வழி அதிக வலிமையுடனும் அதிகாரத்துடனும் உபயோகித்துத் தாழ்ந்த ஆசனத்திலிருப்பவனைத் தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருப்பப்படி இணங்கச் செய்யலாம். இதற்காகவே வியாபார இடங்களில் வியாபாரிகளுக்கு மேடைகள் போடப்பட்டு இருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் நாற்காலிகளை மேடைகளில் போடுவது வழக்கம். நீதி மண்றங்களில் நீதிபதிகள் முன்பாக லாயர்கள் நின்று கொண்டு பேசுவது அவர்களுக்கு மிக்க பலனுண்டாகும். அவர்கள் அதனாலுண்டாகும் பலனை அறியாமலே அப்படிச் செய்கிறார்கள். ஆனால் நீதிபதிகள் உயர்ந்த ஆசனத்தில் தான் உட்கார்ந்திருப்பர். வழக்கறிஞர்கள் நின்று கொண்டு நீதிபதிகளின் கண்களைப் பார்த்துப் பேச வேண்டும்.

உங்கள் நண்பன் வரும்பொழுது அவனுக்குத் தெரியாமல் ஒரு சமயம் உயர்ந்த இருக்கையிலும் மற்றோர் சமயம் உங்களை விடத் தாழ்ந்த இருக்கையிலும் வைத்துப் பேசுவாயாயின், அவற்றால் உண்டாகும் பலன்களை அறிந்து கொள்ளலாம். ஆதலால் நீங்கள் எவ்விடஞ் சென்ற பொழுதிலும், அங்கே உங்களுக்குத் தாழ்வான இருக்கை கொடுப்பாராயின், உட்காராமல் நின்றுகொண்டு பேசுக. அப்பொழுது உங்கள் வார்த்தை மேலும், அவர்கள் வார்த்தை கீழுமாகவிருக்கும். இது ஓர் அற்ப ஆலோசனை என்றாலும் எத்தனையோ மடங்கு அதிக லாபமுண்டென்பதை நீங்களே அறிந்து கொள்ளலாம். கண் திருஷ்டி என்ற பகுதியில் இக்கருத்துக்களை ஏன் சேர்க்க வேண்டும் என்ற எண்ணங்கள் வரலாம். சிலர் கண் திருஷ்டியை நம்புவதில்லை. கண்களுக்கு அதிக சக்திகள் உண்டு என்பதை விளக்கவே இப்பகுதியை விளக்கினோம். வெறும் விளக்கமாக மட்டும் அமையாமல் கண் பயிற்சியைப் பற்றியும், செலுத்தும் சக்தி, தாங்கும் சக்தி, வணிக முன்னேற்றம் பெறுவது எப்படி, நின்று கொண்டு பேசுவதால் எவ்வகை நன்மைகள் உண்டாகின்றன என்ற சுய முன்னேற்றக் கருத்துக்களையும் கொடுத்துள்ளோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனிதனுக்கு விஷகலை அதிகம். அமிர்தகலை குறைவு. மனிதன் எண்ணம் நெகட்டிவ் பாயிண்டில் அதிகம் ஈர்க்கும். பாஸிடிவ் பாயிண்டில் ஈடுபடாது. புளி அதிகம் உபயோகிப்பதால் மனிதனுக்குப் பொறாமைக் குணம் அதிகம். அடுத்தவர்களை அல்லது அவர்கள் பொருட்களை விஷப்பார்வையுடன் பெருமூச்சு விடும்போது அந்த நபரும் அந்தப் பொருள்களும் பாதிக்கப்படுகின்றன. இதை நான் பல இடங்களில் கண் கூடாகப் பார்த்திருக்கின்றேன். மின்சாரத்தால் ஓடும் இரும்பு மிஷின்களே கண் திருஷ்டியால் பாதிக்கப்பட்டன.

என் 40 ஆண்டுகால அனுபவத்தை எழுதப் பல புத்தகங்கள் தேவைப்படும். ஒரு நிகழ்ச்சியை மட்டும் எழுதுகின்றேன். நான், என் நண்பர், அவர் மனைவி மூவரும் ஒரு வீட்டுக்குச் சென்றோம். அந்த வீடு என் நண்பரின் நண்பர் வீடு. அந்த வீட்டுக்காரப் பெண்மணி மிக அழகான புதுச் சேலைகட்டி, கிரைண்டரில் மாவு அரைத்துக் கொண்டிருந்தாள். என் நண்பரின் மனைவி அதைப் பார்த்து இம்மாதிரி அழகான சேலையை நான் எந்தக் கடையிலும் பார்க்க வில்லையே எனச் சொன்னாள். உடனே பெருமூச்சும் விட்டாள். அவ்வளவுதான் அடுத்த கணம் புது சேலை கிரைண்டரில் சிக்கி இழுக்க நாங்கள் அந்தப் பெண்ணை இழுக்கக் கடைசியில் சேலையைக் கிழித்து அந்தப் பெண்ணை மீட்டோம். சேலையைக் கிரைண்டர் துண்டு துண்டாக்கி விட்டது. கண் திருஷ்டிக்குக் காலம், நேரம், சாதி, மதம் எல்லாம் கிடையா. உடன் நொடிப் பொழுதில் கெடுதல் செய்யும். இதைப் படிக்கும் வாசகர்களும் பல அனுபவத்தை பெற்றிருப்பர். அனுபவம் முந்தியது; சாஸ்திரம் பிந்தியது. சைவ உணவு உண்பவர்களைக் கண்திருஷ்டி அதிகம் பாதிப்பதில்லை. கண்களுக்கெனத் தனியாக ஓர் சக்தி உண்டு. வானத்தில் பறக்கும் கொக்கினையும் எரிக்கும் சக்தி உண்டு. கண்கள் பற்றிய சில உண்மைகளையும் பயிற்சிகளையும் முதலில் அறிவது நல்லது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காந்தக்கவர்ச்சி (Magnetism) என்னும் அற்புத நரம்புசக்தி மனித உடலில் பரவி இருக்கின்றது. இது பாயுஞ் சக்தி (Positive), தாங்குஞ் சக்தி (Negative) என இருவகைப்படும். சில மனிதரின் உடலில் பாயுஞ் சக்தி அதிகமாகவும் வேறு சிலரில் தாங்குஞ் சக்தி அதிகமாகவும் இருக்கும். உதாரணமாக, சில மனிதரை நாம் கண்டவுடனே அவர்களின் பார்வைக்கு எதிர்விழி விழிக்கச் சக்தி அற்றவர்களாய் நாம் நமது கண்களைக் கீழே பார்த்துக் கொண்டு, அடங்கி மரியாதையுடன் நிற்கிறோம். நமது மனமும் அவர்கள் பேரில் இடையறாது சென்று பற்றிக் கொள்ளுகிறது. ஆண், பெண்களுக் குள்ளிருக்கும் அந்நியோந்நியத்திற்குக் காரணமிதுவே.

தாம் செய்வது இன்னது என்றறியாமலே மற்றவர்கள் உனக்கு வசியமாகுஞ் சக்தி சிறப்பாக உங்கள் பார்வையிலேயே அமைந்திருக்கிறது. இன்னொரு மனிதன் அல்லது பெண்ணின் முகத்தில் நேராய் நிமிர்ந்து பார்க்குஞ் சக்தியை அடையாதவன் மாந்திரீகத் தொழிலில் (Hypnotism) சித்தியடையமாட்டான். குறுவிழி வேண்டாம். ஆனால் மற்றவர்களின் கண்களுக்குள் நேராய்ப் பார்த்துப் பேசப்பழகுங்கள். உங்கள் மனதிலுள்ள திடசித்தம் உங்கள் கண்கள் மூலமாகவே வெளியாக வேண்டும். உங்கள் மனதில் எதைத் தீர்மானித்திருக் கின்றீர்களோ அது உங்கள் பார்வையால் விளங்கும். அனாவசியமாய்ப் பார்க்குங் கண்களையும், காரியமில்லாது கண்டமட்டும் விழித்துக்கொண்டிருக்கும் நேத்திரங்களையும் உடைய எவனும் இவ்வுலகில் அரும் பெருங் காரியங்கள் செய்வதரிது. ஆதலால் அமர்ந்து ஆழ்ந்து மற்றவர்கள் நெஞ்சை ஊடுருவச் செல்லத்தக்கதும், மற்றவர்களின் பார்வைக்கு அஞ்சாமல் எதிர்த்து நோக்கக் கூடியதுமான பார்வையை அடைய அடிக்கடி பயிற்சி செய்ய வேண்டும். முதல்முதல் நீங்கள் பழக வேண்டிதேதெனில், கண்கள் களைப்படையாமல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெகுநேரமாக ஒரு மனிதனை அல்லது ஓர் பொருளை நேராய் நிமிர்ந்து பார்க்கச் செய்வதே. நேராய் நிமிர்ந்து பார்க்கப்பழகும் வழிகள் பல உள்ளன.

ஓர் இடத்தில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு உங்கள் கண்ணிமைகளைத் தட்டாமல் தூரத்திலுள்ள ஓர் பொருளை உங்களால் கூடிய அளவு பத்து அல்லது பதினைந்து நிமிடம் வரை பார்த்துக் கொண்டிருக்கப் பழகுங்கள். சீறிச்சினந்து பார்க்க வேண்டாம். சாதாரணப் பார்வையே போதும். அதிகாலையில் மூளை புத்துணர்ச்சியுடனும், மனம் தெளிவாகவும் உள்ள சமயமாதலால் அதுவே இவ்வித பயிற்சிக்குத் தகுந்த சமயம். ஆரம்பத்தில் கண்கள் கரித்துத் தண்ணீர் ஓடும். வரவரக் கண் விழிகள் உறுதியாகி விடுமாதலால் யாதொரு சங்கடமுமில்லாமல், எந்தப் பொருளையும் எவ்வளவு நேரமும் பார்க்கப் பழகிக் கொள்வீர்கள். எந்தச் சமயம் உங்கள் கண்கள் கரித்துக் கண்ணீர் ஓட ஆரம்பிக்கின்றனவோ அப்பொழுது நிறுத்தி விட்டு மற்ற வேலைகளைப் பாருங்கள். உங்கள் கண்கள் நோவெடுத்தால் அல்லது கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தால் உடனே குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். மாலை நேரத்தில் அப்படியே தீபத்தை நோக்கிப் பார்த்துப் பழகலாம். இவ்விதப் பயிற்சி செய்துவரும் பொழுது பின்வரும் மந்திரத்தை உறுதியுடன் உச்சரிக்க வேண்டும்.

"என் கண்கள் காந்தக் கண்கள்; அவைகள் வரவர உறுதியாகின்றன. என் கண்கள் காந்தக் கண்கள். என் திருஷ்டி மிக்க வலிது." இந்த மந்திரத்தை அடிக்கடி உச்சரித்துவர, கண்களில் காந்தக் கவர்ச்சி அதிகரிக்கும். காந்தப் பார்வையைப் பயிற்சி செய்பவர்கள் அதனாலடையும் பயனை நடைமுறையில் கண்டு கொள்ளலாம். இவ்விதப் பயிற்சி செய்து வருகையில் எவரையும் நேரில் நோக்கி அவர்கள் கண்களுக்குள் பார்த்துப் பேசுவோமானால் அவர்களுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அல்லது உங்களுடைய அந்தரங்க ஆத்துமாவில் ஓர்வித அசைவு தோன்றும். பாயுஞ் சக்தி உங்களிடமும் தாங்குஞ் சக்தி அவர்களிடமும் அதிகரிக்குமானால் அவர்கள் மனதில் ஓர்வித அசைவுதோன்ற, உங்கள் பார்வையைத் தாங்க முடியாதவர்களாய்த் தமது பார்வையை அப்புறப்படுத்திக் கீழாக அல்லது பக்கத்தில் வேறு ஓர் பொருளைப் பார்ப்பார்கள் . அவர்களிடத்தில் பாயுஞ் சக்தி அதிகமாயிருக்குமாயின் உங்களால் தாங்கமுடியாது. இந்த அற்புத சக்தியின் வல்லமையை அடிக்கடி சோதனை செய்து பார்க்கலாம்.

இதன்பின், காந்தக்கண் தன்மையை அதிகரிக்கச் செய்ய ஏதாவது ஒரு செய்தியை மனதில் தீர்மானித்துக் கொண்டு பார்க்கப் பழகுக. நீங்கள் எந்தச் செய்தியை உங்கள் கண்கள் மூலமாக வெளியாக்க எண்ணங்கொள்ளுகிறார்களோ, அதைப்பற்றிச் சிறிது நேரந் தியானித்து, அந்த எண்ணத்திற்குத் தகுந்த குறி உங்கள் முகத்தில் தோன்று மட்டும் உங்கள் கண்கள் அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருக்கட்டும். அவ்விதஞ் செய்யின், சிறிது நேரத்திற்குள் உங்கள் கண்களே வெளிப்படுத்தும். இவ்விதம் பழகி வருவீர்களானால் சீக்கிரத்தில் அன்பு, அனுதாபம், வல்லமை, தைரியம் முதலிய சகல சற்குணங்களையும் உங்கள் பார்வையின் மூலமாகவே வெளியாக்கி, மற்றவர்களை சீர்திருத்தவும், உங்கள் விருப்பப்படி நடக்கச் செய்யவும் தக்க சக்தியைப் பெறுவீர்கள்.

கடைசியாக நீங்கள் எவருடன் பேசினாலும் அவர்கள் கண்களுக்குள் நேராய் நிமிர்ந்து பார்த்துப் பேசப் பழகுக. எப்பொழுதும் உங்கள் எண்ணங்களையெல்லாம் உங்கள் கண்கள் மூலமாகவே யோசிக்க வேண்டும். அந்தரங்க ஆலோசனைகளெல்லாம் வெளியே செல்லும் வழி உங்கள் கண்களே என்று நினைக்கவும். இப்படிச் செய்துவரின் உங்கள் திருஷ்டியின் மகிமையை அளவிட எவராலும் முடியாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீங்கள் எவர்களை நோக்கிப் பார்த்தாலும் உங்கள் பார்வையானது இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல அவர்கள் இருதயத்தை ஊடுருவச்செல்ல அவர்கள் பலன்குன்றி உங்களுக்குள் அடங்குவார்கள். கண்களே ஆத்மாவின் வாசல் என்பதை மனதில் வைத்து மற்றவர்களின் இருதயத்திலுள்ள கருத்துக்களையும் அவர்கள் கண்கள் மூலமாயறிந்து கொள்ளலாம்.

பயிற்சியின் ஆரம்பத்தில் சிறிது துன்பங்களை அனுபவித்தவுடன் சோர்வு அடைவோம். சந்தேகம் மனதிற்புக வாய்ப்புண்டு. இவ்வுலகில் எந்தப் பயிற்சியைக் கற்கும் பொழுதும் சிறிது துன்பங்கள் நேரிடும். அவற்றால் மனச் சோர்வடையும். பேதைகள் அரிய பெரிய செயல்களை எக்காலத்துஞ் செய்யக் கூடாதவராவர். விவேகிகள் எவ்விதத் துன்பத்தையுங் கவனிக்காமல் தாம் ஆரம்பித்த தொழில் சித்தியாகும் வரை சொல் அறிவுடன், சுய அறிவையையுங் கையாடி, கருமமே கண்ணாயிருந்து எவ்விதத்தும் தமது செயல்களைக் கைகூடச் செய்வர். யானும் உங்களைப்போல் இருந்து, பல சாஸ்திரங்களைக் கற்று வருங்காலத்தில் இடம், பொருள், ஏவல் முதலியவற்றின் குறைவுகளினால் பல இன்பதுன்பங்கள் நேர்ந்தன.

அக்காலத்தில் இரவும் பகலும் உட்கார்ந்திருக்கும் போதும், நடந்து கொண்டிருக்கும் போதும், படுக்கும் பொழுதும், விழிக்கும் பொழுதும், நான் உச்சரித்து வந்த மந்திரம் ஒன்றுண்டு. அஃதியாதெனில்,

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

இவ்விதமாக எவ்விதத் துன்பங்களையும் பாராட்டாது உழைப்பவனே உத்தம மனிதனாவான். எடுத்த செயலையும் முடிக்கக்கூடிய தீரனாவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீங்கள் ஒவ்வொரு தடவை வாசிக்கும்பொழுதும் உங்கள் மனதில் வெவ்வேறு விதமான தோற்றங்கள் உண்டாகும். நீங்கள் பல ஆயிர ரூபாய் செலவிட்டாலும் இவ்விதப் பாடம் உங்களுக்கு எங்கும் கிட்டாது. ஆதலினால் இந்தப் பயிற்சியை லேசாய் எண்ணாமல் நன்றாய்க் கவனித்து, அதிற் சொல்லிய ஒவ்வொரு செயல்களையும் படிப்படியாய் அப்பியசிக்கப் பழகுக. நான் உங்களுக்குப் பயிற்சி சொல்லி வைத்த உடனேயே உங்களுக்குள் காந்த திருஷ்டி வந்து விட்டது என்று எண்ண வேண்டாம். அப்படியே காந்த திருஷ்டி உங்களுக்குள் இயற்கையாய்க் குடிகொண்டிருந்தாலும் மூடத்னமாகப் பிற பெயர்களின் மீது பயன்படுத்தக் கூடாது. தன் மாமிச இச்சைகளை அடக்கி வெற்றி கொள்ளும் வீரனே மகா வீரனாவான்.

தன்னையறிதல், சுயமதிப்பு, தன்னடக்கம் ஆகிய மூன்றுமே ஒருவனை வெற்றி வேந்தனாக்கக் கூடியவை. நமக்குள்ளிருக்கும் இழிவானதும் உடலையும் ஆத்துமாவையும் கெடுக்கக் கூடியதுமான கெட்ட எண்ணங்களை அறவே அகற்றி வெற்றி கொள்வதற்கு உடல் வலிமையும் மனோ சக்தியும் அத்தியாவசியம். மனிதப் படைப்பில் மூன்று அம்சங்கள் பொருந்தியுள்ளன. அதாவது சிங்கக்குணம், பூதக் குணம், மனிதத்தன்மை என்பவைகளே. இவற்றில் சிங்கம்போலக் கெர்ச்சித்தெழும்பும் ஆபாசங்களை அடக்கி, நான் என்னும் பலதலை பூதத்தைத் தன் பாதத்தின்கீழ் நசுக்கி வெற்றி பெற்றவனே மனித தன்மையை வென்ற வல்லவனாவான். ஆரம்பத்திலேயே மாமிச இச்சையை நசுக்குக. மற்றவர்களை அடக்கியாளும் தன்மையை அடைவதற்கு உடல் ஆரோக்கியமும் மனோ சக்தியும் அவசியம். இவைகளுள்ளவனுக்கு மட்டுமே காந்த சக்தி அதிகரிக்கும். உன் மனோசக்தி கூடும் பொருட்டு நீங்கள் உங்களைவிட அதிகத் திறமையுள்ளவர்களோடும் பழக வேண்டும். மேலும், மனிதரிலும், இயற்கை அமைப்புகளிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசீகரமும், மாட்சிமையும், மேன்மையும் பொருந்திய தன்மைகளை எப்பொழுதும் வியந்து கொண்டாட வேண்டும். உணவு வகைகளை மட்டுப்படுத்தி இருக்கவும்.

ஞானக் கும்மி

குதிரை கட்டிய லாயத்திலே மனக்
கோட்டையிலே சந்தைப் பேட்டையிலே
எதிரிதான் வந்து தட்டுகிறானதை
ஏதென்று கேளடி ஞானப் பெண்ணே.

காமனவருக்கு மூத்தவனா மவன்
கற்றிடும் வித்தைகள் மெத்தவுண்டாம்
தாமதமான குரோதனும் லோபனுந்
தம்பியாங் கேளடி ஞானப் பெண்ணே.

மோகமத மிரண்டு பிள்ளைகளா மொரு
மூர்க்க மகசியக் காரனொடு
சேகர வீரராம் டம்பனுஞ் சம்பனுஞ்
சினேகித மாமடி ஞானப் பெண்ணே.

சினேகினுக் கேற்ற உறவாளி பொல்லாத்
தீயவனா மோசாங் காரி
அனேகத்தைச் செய்ய மதியில் ரோஷனு
மத்தை மகனடி ஞானப் பெண்ணே.

பெண்ணே கேளு பதின் மூன்று
பேர்களுண்டு பகையாளி
ஒன்றை யொன்று வசமானா லவ
ரொடுங்குவாரடி ஞானப் பெண்ணே.

ஒடுக்கமில்லா இவராலே பல
னோட்டமெலா மனக் கோட்டை யிலே
படுக்களத்துக்கு மேய்ந்துவரப் பசு
பற்றுகிறாரடி ஞானப் பெண்ணே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்பிருக்குது புற்றுக்குள்ளே சக
பந்த மிருக்கிது நெஞ்சுக்குள்ளே
வீம்பை யடக்கி உயர்ந்தாக்காற் பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப் பெண்ணே.

பித்துப் பிடித்த மனக்குரங்கு வெறிப்
பேயும் பிடித்துக் கொண்டாட்ட மிட்டால்
அத்தை யடக்க மருந்து செய்தாற் பரி
யன்று நடத்தலாம் ஞானப் பெண்ணே.

கண்திருஷ்டியால் எல்லோரும் பாதிக்கப்படுவர். பறவைகள் மற்றும் நாய்கள் பார்க்க நாம் சாப்பிட்டால் நமக்கு உடனே வயிற்று வலி வரும் என்பது எல்லோரும் அறிந்தது. சாலைகளின் மேல் இருக்கும் கடைகளில் நின்று கொண்டே சாப்பிடுபவர்கள் பலர் வயிற்று வலியால் துன்பப்படுகின்றனர். சிறு கடையானாலும் உள்ளே சென்று ஒரு ஓரத்தில் சாப்பிடுவதால் திருஷ்டி ஏற்படாது. என்றைக்குப் பிரவிர்த்தி என்பது உண்டோ அன்றைக்கே நிவர்த்தி என்பதும் உண்டு. இதுவும் இறைவனால் அருளப்பட்டது. பாவ நிவாரணம் போல் மனிதனின் தினத் தொழில்கள் தங்கு தடையின்றி நடைபெறக் கண் திருஷ்டி நிவாரண வழி உண்டு.

பல நிறங்களைக் கண்ணால் காண்பதால் ஒரு மனிதனின் விசத்தன்மை பலமிழக்கின்றது . கல்யாண வீடுகளில் ஒளிவீசும் பலகலர் பேப்பர்கள் கட்டுகின்றனர். மணமக்களுக்கு மஞ்சள் ஆடை அணிவிக்கின்றனர். அட்சதை என்னும் பச்சரிசி மஞ்சள் பொடி தூவுகின்றனர். கண் திருஷ்டி பொட்டு வைத்து மருதோன்றி என்ற மெஹந்தி இடுகின்றனர். வீடு கட்டும் போது திருஷ்டிப் பொம்மை கட்டுகின்றார்கள். தர்பூசணியில் படம் வரைந்து கட்டித் தொங்க விடுகின்றனர். வீடுகளில் பல் வண்ணங்களில் சுழலும் மேஜை விளக்குகள் வைக்கின்றார்கள். நுழை வாயிலில் கண்ணாடி கட்டிப் பொருத்தி வருபவரின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்வையை, எண்ணத்தைத் திருப்புகின்றனர். கடைகளில் கேலிச் செட்டியார் பொம்மை வைத்திருக்கின்றனர். சில இடங்களில் மாட்டி இருக்கும் பூத வடிவம் நம் கண்களைத் தாக்குகின்றது. முகம் பார்க்கும் கண்ணாடிகள் ரசம் பூசப்பட்டிருப்பதால் மனிதனின் விசப்பார்வையைப் பலவீனப்படுத்துகின்றது. பலவகைப் பல நிற அலங்காரப் பூக்கள் நம்மை சாந்தப்படுத்தி வரவேற்கின்றது.

பூசணிக்காய் உடைத்தல், எலுமிச்சம்பழம் நறுக்கிப் போடுதல். சூடன் கொளுத்துதல், உப்பு மிளகாய் கடுகு சுற்றி நெருப்பில் போடுதல் தேங்காய் உடைத்தல் மற்றும் பல பரிகாரங்கள் கண் திருஷ்டியைப் போக்கச் செய்யப்படுகின்றன. வீடுகளில் அல்லது வியாபார தலங்களில் விட்ட பெருமூச்சு நீங்க வேண்டுமானால் இரவில் தினம் அவ்விடங்களில் சாம்பிராணி புகை அல்லது அறுபது வகை மூலிகைச் சேர்க்கையால் செய்யப்பட்ட மூலிகைப்புகை போடுவது நல்லது. இசுலாமியர்கள் இதைத் தினம் செய்கின்றனர். சிலர் கண் திருஷ்டி விநாயகர் படம் மாட்டுகின்றனர். சிலர் மூன்று திருகு சங்குக் கம்பளிக் கயிற்றில் கட்டித் தொங்க விடுகின்றனர். மயில்தோகை விசிறி வீட்டில் வைத்திருப்பதும் அதைக் கொண்டு ஓய்வு நேரத்தில் நாம் சிறிது வீசிக் கொள்வதும் பலவிதங்களிலும் நன்மை பயக்கும்.

பாண்டிச்சேரி அன்னையின் கண்களை மட்டும் காட்டும் படத்தை வாயிலில் மாட்டலாம். பல வழிகளில் கண் திருஷ்டியை நீக்கலாம். மிகக் குறுகிய காலத்தில் ஜோதிடபூமி பல ஆயிரம் வாசகர்களைப் பெற்று வருகின்றது. இப்பத்திரிகையின் ஆசிரியரும் என்னுடைய நண்பருமான ஜோதிடபானு சுப்பிரமணியன் ஐயாவுக்குக் கண்திருஷ்டி ஏற்பட்டு விடக்கூடாது! இறைவனை வணங்குகிறேன்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. ஐம்பொன் பூணூல்

உலகைப் படைத்த ஆண்டவன் ஐம்பூதங்களையும் இயங்கச் செய்தான். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சசக்திகள் புல் பூண்டு முதல் எல்லா உயிரினங்களிலும் ஊடுருவி அவைகளை இயக்கி வருகின்றன. அனைத்துத் தெய்வங்களும் இந்தப் பஞ்சபூத சக்திக்கு உட்பட்டதுதான். நாம் வணங்கும் நவக்கிரகங்களும் ஐம்பூதங்களுக்கு உட்பட்டது. ஆதிதேவி காயத்திரிக்கு ஐந்துமுகம். பஞ்சமுக கணபதி பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆகியவைகள் மண், தண்ணீர், நெருப்பு, காற்று, வெளி இவைகளைக் குறிக்கும். உருவமில்லாத சிவனுக்கு ஒரு உருவத்தைக் கொடுத்துத் திருவாதிரை என்னும் நட்சத்திரத்தைக் கொடுத்து நடராஜன் என்னும் பெயரில் ஆடவிட்டிருக்கின்றோம். நடராஜன் நடனம் ஆடுவதால் தான் உலகம் இயங்குகின்றது. அப்படிப்பட்ட நடராஜன் கைகளில் இருப்பதுவும் பஞ்ச சக்திகளே.

இந்து மதத்தில் உள்ளது போன்று தெய்வங்களின் எண்ணிக்கை வேறு மதங்களில் இல்லை. ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு தொழிலுக்காகப் படைக்கப்பட்டன. அதில் நம்மைக் காக்கும் கடவுளும் ஒருவர் உண்டு. அவர் பல நேரங்களில் மனதில் செயல்பட்டு நம்மைக் காக்கின்றார். பல சமயங்களில் தெய்வத்திடமிருந்து முன்னரே எச்சரிக்கை கிடைத்த பின்பும் அது குறித்து ஏதும் செயல்பட முனையாத தருணங்களும் உண்டு. எந்தத் தளத்தில், எந்த் நிலையில், எந்தக் கோணத்தில் அதை நாம் அணுகுகிறோம் என்பதைப் பொறுத்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல நேரங்களில் நமக்கு எச்சரிக்கை மட்டுமே கிடைக்கும். உண்மையில், துன்பம் நேர்கையில் அதனை உண்முகமாக எதிர்கொள்ளத் தக்க பண்பை நமக்குள் ஏற்படுத்துவதற்காகவே அந்த எச்சரிக்கை வருகிறது. "இதிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஒரு பாடம் போல் அது அமைகிறது. வர இருப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் மனப்பான்மையை, உங்கள் எதிர்வினையை நீங்கள் பொருத்தமாக மாற்றிக் கொள்ள முடியும். அந்த அனுபவத்தையொட்டி ஒரு கெட்ட எதிர்வினை, ஒரு தவறான மனப்போக்கு இல்லாமல், கிடைத்த அனுபவம் எதுவாயினும் அதனின்று கிடைக்கும் பாடத்தை லாபமாகக் கருதும் உளப்பாங்கு ஏற்படும்.

எப்படியும், எந்தத் தளத்திலிருந்து நாம் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்துத் தான் உள்ளது. இரவு நேரத்தை நாம் நம் கட்டுக்குள் வைத்திருந்து நம் உறக்கத்தையும், கனவுகளையும், அகக்காட்சிகளையும் உணர்வுடன் அனுபவிக்கக் கற்றுக் கொண்டால் நம்மால் அவற்றைப் பிரித்துப் பார்க்க முடியும். அந்தக் கனவுகளின் பொருளும் அகக்காட்சியின் நோக்கமும் என்னவென்று நம்மால் அறிய முடியும். ஓர் எச்சரிக்கை என்றால் நாம் தலையிட்டு அதனை மாற்ற முடியும், அல்லது ஒரு தகவல் மட்டுமே என்றாலும் நிகழவிருப்பதற்கு ஏற்ப நம் மனநிலையைப் பக்குவப்படுத்திக் கொள்ள இயலும். இவையெல்லாமே கற்க வேண்டிய பாடங்கள்; ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பாடங்கள். இவ்வாறு பல வகைப்பட்ட, ஆயிரக்கணக்கான கனவுகளும் அகக் காட்சிகளும் உண்டு. ஒவ்வொன்றிலுமே நாம் கற்க வேண்டிய பாடங்களும் உண்டு. படிப்பினையை ஏற்காத மக்கள் நோய் வாய்ப்படுகிறார்கள், அல்லது விபத்தில் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல நிகழ்ச்சிகள் பிரபஞ்சத்தின் தேவையையொட்டி நடக்கின்றன. அவற்றை யாரும் மாற்ற இயலாது, மாற்றுவதும் நல்லதல்ல. வேறு சில நிகழ்ச்சிகள் உண்டு. இப்படியும் நேரலாம், அப்படியும் நேரலாம் என்பது போன்ற நிகழ்ச்சிகள். இவை மாற்றக்கூடியவையே, மாற்றத்தகுந்தவையே. இவை எல்லாவற்றையுமே தெளிவான பார்வையுடன் நோக்க வேண்டும். பாரபட்சமற்று நடுநிலையில் பார்க்க வேண்டும். கண்ணாடியில் பொருள்களைப் பார்ப்பது போன்று எவ்விதச் சார்பும் இன்றிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே நிர்ணயமாகி விட்ட, விதிக்கப்பட்டுவிட்ட செயல் இது, இதனை மாற்றுவதற்கில்லை என்றும் இதனை மாற்றலாம் என்றும் செயல்களைப் பிரித்துக் காண வேண்டும்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வெவ்வேறு காரண காரியங்கள் உள்ளன. சில நிகழ்ச்சிகளை அப்படியே முழுவதும் மாற்றிவிட முடியும். சிலவற்றில் சில கணிசமான மாறுதல்களைச் செய்ய முடியும், வேறு சிலவற்றைச் சிறிதளவே மாற்ற முடியும்; இன்னும் மாற்றவே இயலாத சில செயல்களும் உண்டு. அவை அப்படித் தான் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. அவற்றை மாற்றுவேன் என்று நீ முனைந்து நின்றால் சுவரில் மோதிக் கொண்டு மண்டையை உடைத்துக் கொள்வாய். நூற்றுக் கணக்கான வெவ்வேறு விசயங்கள் குறித்த எடுத்துக் காட்டுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒரு விசயம் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டதாகக் காணப்படும்; அது அப்படித் தான் நிகழ வேண்டும் என்று இருக்கும். ஆனால் அந்நிலையில் உள்ளிருந்து கனல் போல் ஒரு சங்கல்பம், ஓர் இச்சை உயிர்த்து எழும். தெய்வ சங்கல்பத்துடன் இசைந்து ஓர் ஆர்வக்கனல் சுடர் விட்டு எழுந்து நடக்கவிருக்கும் நிகழ்ச்சியின் மேல் அந்த ஆற்றலைச் செலுத்தும். அப்போது ஒரு வகையான கூட்டு நிகழ்ச்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடக்கும்; எது நடக்கவிருந்ததோ அது நடந்துவிடும், ஆனால் அதே சமயம் அந்த நிகழ்ச்சியின் தன்மையை, போக்கை மாற்றியமைக்கவல்ல ஏதோ ஒன்றும் நடக்கும். நம் உலகில் நடக்க வேண்டிய முக்கியமான நிகழ்ச்சிகளில் இவ்வாறு ஏற்படுவதுண்டு. சில சூழ்நிலைகளின் காரணமாக, பற்பல சக்திகளின் கூட்டிணைப்பினால் உலகத்தில் ஒரு போர் நிகழ்வதற்கான தேவை நேர்ந்து விடும். இந்நிலையில், வேறொரு சக்தியை அழைப்பதன் மூலம், தெய்வ சக்தியை வேண்டுவதன் மூலம் அந்தப் போரின் தீவிரத்தை மாற்றலாம், அதனுடைய விளைவுகளையும் சாதகமானதாக மாற்றலாம், சிலசமயம் போரின் கதியையே மாற்றவும் முடியும்.

இறைவழிபாட்டிற்குச் செல்லும் போதும் அடங்காக் குதிரையான மனம் தடுமாறும். சில சமயங்களில் சகுனங்கள் பார்க்கும். பொதுவாகச் சகுனங்கள் மனது செய்த கற்பனைகளாகும். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அனுபவத்தை வைத்துத்தான் சகுனங்கள் கற்பிக்கப்பட்டன. ஐரோப்பாவில், 'ஏணிக்கு அடியே நடக்காதே, அது அசுபம்' என்பார்கள். என்றைக்காவது ஒருவன் ஏணிக்கு அடியில் நடந்தபோது அது அவன் மீது விழுந்திருக்கும். ஏணியைச் சரியானபடி உறுதியாக வைக்காதபோது அதன் அடியே ஒருவன் நடந்தால் அது அவன் மீது விழத்தான் விழும். இதை அவனுடைய துரதிருஷ்டம், கெட்ட சகுனம் என்று நிலை நிறுத்தி விடுவார்கள்! மூட நம்பிக்கைகள் இப்படித்தான் பிறந்து வளருகின்றன. இந்த நம்பிக்கைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். சில ஊர்களில் கறுப்புப் பூனை எதிரே வந்தால் அன்று தீமை விளையும் என்பார்கள். வேறு சில இடங்களில் கறுப்புப் பூனை நல்ல சகுனமாகக் கருதப்படும். இவையெல்லாம் என்றோ ஒரு நாள் ஒருவருக்கு நடந்த நிகழ்ச்சியின் அடிப்படையில் எழுந்தவை யாகத் தான் இருக்கும். இந்த நம்பிக்கைகள் எல்லாமே மனதின் கற்பனைகள் தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறு சில நம்பிக்கைகள் உள்ளன. மதங்களையொட்டிய பல பெரிய பெரிய சடங்குகள் சட்டங்களாக அமைந்து விட்டிருக்கின்றன. இவை பெரும்பாலும் சுகாதார அடிப்படையிலும் மருத்துவ அடிப்படையிலும் எழுந்தவைகள் தான். ஆனால் இவை மதச் சம்பிரதாயங்களாக மாறிவிட்டன. மதக் கொள்கைகள் என்றால் தான் மக்கள் பின்பற்றுவார்கள் என்பதால் அப்படி ஆகிவிட்டன. ஆனால் இதனால் மக்களின் மன அடிவாரத்தில் ஓர் அச்சம் குடிகொண்டு விட்டது. இந்தச் சடங்குகளில் தவறு செய்தால் கடவுளின் கோபத்திற்கு ஆளாகி விடுவோம் என்ற அச்சம்!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு காயினின் வம்சத்தில் சில்லா என்பவள் தூபால் காயினை பெற்றெடுத்தாள். இந்தத் தூபால் காயின்தான் ஆதிவிஸ்வகர்மா. மயன் மற்றும் இதர ஐந்தொழில் விஸ்வகர்மாக்கள் பிற்காலத்தில் தோன்றியவர்களே. இயேசுகிறிஸ்து விஸ்வகர்மா குலத்தில் அவதரித்தவர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் இஸ்ரவேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு விஸ்வகர்மாக்கள் வந்து முதன் முதலில் கட்ச் தீவில் குடியேறினார்கள்.

நம் பெண்களுக்குப் பொன் நகைகளைக் கண்டால் புன்னகை பிறக்கும்! நெற்றிசூடி அறிவுக்கண்ணைத் திறக்கும். காதணி நல்ல கண் பார்வையைக் கொடுக்கும். ஒட்டியாணம் துர் ஆவிகள் தொப்புள் வழியாக உள்ளே போகாமல் தடுக்கும். காலில் அணியும் மிஞ்சி காமத்தைக் குறைக்கும். மூக்குத்தியும் மோதிரமும் சுவாசக் காற்றிலுள்ள விஷகலையை நீக்கும். திருமாங்கல்யம் மங்கள கரமான காரியங்களைச் செய்யத் தூண்டும். கணவனுக்கு ஆயுளை நீட்டிக்கச் செய்யும். இப்பொழுது நடைமுறையில் தோடு, மூக்குத்தி, மோதிரம், மாங்கல்யம் தவிர இதர நகைகள் காணாமல் போய் விட்டன. அதனால் அனேகரது குடும்ப வாழ்க்கையும் கட்டுக்குள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடங்காமல் போய்விட்டது. இனி யாரும் யாருக்கும் கட்டுப்பட மாட்டார்கள். இதுதான் கலிகாலம் என்பது. உயர்குல வகுப்பினர் முன்பு பூணூல் அணிந்து காயத்திரி மந்திரம் கூறினர்.

தமிழர்களுக்கு ஆவணி மாதம் என்றாலே ஏக மகிழ்ச்சி. கணபதியே எல்லாக் காரியங்களுக்கும் முதல் வழிபாட்டிற்கு உரியவர். அவருக்காக ஆவணி மாதத்தில் சதுர்த்தியன்று விநாயகர் சதுர்த்தி கொண்டாடுகின்றோம். நடுகல் நட்டு வழக்கப்பட்ட நம் தமிழர்கள் தம் முன்னோர்கள் வழிபாட்டிற்கு மிகச் சிறந்த நாளான புரட்டாசி மகாளய அமாவாசையை ஆவணியில் கொண்டாடுகின்றோம். மேலும் கோகுலாஷ்டமி, ரிஷிபஞ்சமி, உமாமகேசுவர விரதம் போன்ற புனித நாட்கள் ஆவணியிலேயே வருகின்றன. ஆவணியில் வருகின்ற மற்றொரு புனித நாள்தான் ஆவணி அவிட்டம் ஆகும்.

தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம் முதலியனவும் ஆவணி அவிட்டமும் முழு நிலவைச் சார்ந்து வருகின்ற நாட்களாகும். எனவே ஆவணி அவிட்டத்தை ஆவணி பூர்ணிமை அல்லது சிராவண பூர்ணிமை என்று அழைக்கின்றோம். ஆடி முதல் நான்கு மாதங்கள் மழைக் காலம். மடாதிபதிகளும், ஜீயர்களும் அப்போது வெளியில் எந்த இடத்தில் இருக்கின்றார்களோ அந்த இடத்தைவிட்டு வெளியில் வராமல் அதே இடத்தில் தங்கியிருப்பார்கள். சாதுர் மாத வழிபாட்டினை மேற்கொண்டு வேதங்கள் புராணங்கள் முதலியவற்றினை ஆராய்ந்து அந்த நான்கு மாதங்களைக் கழிப்பார்கள். துறவிகள் மடங்களில் தங்கி வேதங்கள் இதிகாசம் முதலியவற்றை ஆராய்கின்ற அதே காலத்தில், புதுப் பூணூலை அணிந்த பிரம்மசாரிகளும், இல்லறத்தார்களும் வேதங்களைப் பயில்வது நல்லதாகும். இந்த நான்கு மாதங்களில் எல்லா இடங்களிலும் வேத ஒலிகளே கேட்கும். ஆவணி மாதத்தில் சூரியன் சிம்மராசியில் இயங்குகின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனுக்குரிய சொந்த ராசியான சிம்ம ராசியில் அவன் இயங்குகின்ற போது தம்மை வழிபடுகின்றவர்களுக்குக் காயத்திரி மந்திரத்தின் உச்சநிலைப் பயன்களை அருள்கின்றான். சந்திரன் ஆவணி மாத முழுநிலவில், அவிட்ட நட்சத்திரம் அமைகின்ற நாளில், கும்பராசியில் ஒளிமயமாக இயங்கு கின்றான். இவனது இயக்கம் அறிவுக்கு நற்பலன்களைத் தரக்கூடியது.

சூரியன் தன் ஒளியால் ஆன்மாவுக்கும், சந்திரன் தன் ஒளியால் அறிவுக்கும், மனதிற்கும் துணை செய்கின்றனர். இவற்றின் பொலிவு ஆவணி மாதத்தில் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது. இதற்குச் சூரியனின், சந்திரனின் இயக்கங்கள் ஒரு நல்ல காரணம் ஆகும். இத்தகைய காரணங்களால் ஆவணி அவிட்டம் ஒரு சிறந்த நாளாக மதிக்கப்படுகின்றது.

முப்புரி பூணூலே இன்று நடைமுறையில் உள்ளது. பூணூலை மாற்ற வேண்டியவர்களும், புதியதாக அணிய விரும்புகின்றவர்களும் ஆவணி அவிட்டத்தன்று பூணூலை அவசியம் அணிய வேண்டும். அந்தணர், வைசியர் விஸ்வகர்மாக்கள் போன்றவர்கள் பூணூலை அணிகின்றனர். வட இந்தியாவில் உள்ள சமண சமயத்தைச் சார்ந்த சிலரும் பூணூலை அணிகின்றார்கள். முப்புரிகளைக் கொண்டது பூணூல் ஆகும். முப்புரி நூலை அணிந்தால், 1. பிரம்மா, விஷ்ணு, சிவனின் அருளைப் பெறலாம். 2. சரஸ்வதி, லட்சுமி, உமையின் அருளைப் பெறலாம். 3. ரிக், யஜுர், சாம வேதங்களில் வல்வர்கள் பூணூலை அணிவர். 4. பூணூலை அணிந்தால் முக்காலங்களையும் உணரலாம். 5. மூவுலகின் தன்மைகளை அறிந்த சோதிட நிபுணர்கள் பூணூல் அணியலாம். 6. பூணூலை அணிந்தவர்கள் தமோ குணம், ரஜோ குணம், சத்துவ குணம் என்ற முக்குணங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெறிப்படுத்துகின்றனர். பூணூலில் உள்ள இணைப்பு முடிச்சு பிரம்மத்தைக் குறிக்கின்றது.

உபநயனம் என்பது ஒரு சிறுவனின் எட்டாம் வயதில் நடைபெற வேண்டிய முக்கியமான சமயச் சடங்காகக் கருதப்படுகின்றது. இதனை உத்தராயண காலத்தில் நடத்துவது வழக்கமாக உள்ளது. சிறுவன் பூணூலை அணிந்தாலும் தனது ஊனக் கண்கள் இரண்டுடன் மூன்றாவதான ஞானக் கண்ணை உபநயனமாக, துணைக் கண்ணாகப் பெறுகின்றான் என்பது ஐதீகம்.

உபநயனம் பெற்றவர்கள் உணர் சிறப்பையும் பெறுகின்றார்கள். ஒரே மனிதப் பிறப்பில், உபநயனம் பெறுவதற்கு முன் ஒரு பிறப்புப் பிறந்துள்ளனர் என்றும் உபநயனம் பெற்ற பின் ஒரு பிறப்பு என்றும், அவர்களுக்கு இரண்டு பிறப்புகள் என்று உபநயனம் எடுத்துள்ளனர். உபநயனம் முடிந்த உடன் அந்தச் சிறுவன் ஞானம் தரும் நூல்களைப் பயில வேண்டும் என்பதும் நடைமுறையில் உள்ளதாகும். உபநயனத்தின் போது காயத்ரி மந்திரத்தை ஓதக்கூடிய பிரம்ம தக்க குருமூலம் பெற்றோர் முன்னிலையில் சிறுவன் பெறுகின்றான். அவன் செய்கின்ற சடங்குகளே "உபகர்மா" என்பதாகும். இத்தகைய நன்னாளே ஆவணி அவிட்டமாகும். உபநயனம் பெற்றவனுக்கு நாமும் செய்ய வேண்டிய கடமைகள் பல விதிக்கப்படுகின்றன. அவன் தினமும் சூரிய நமஸ்காரம், காயத்ரி ஜெபம் செய்ய வேண்டும். பிராணாயாமம் கற்க வேண்டும். தினமும் வேத பாராயணம், சந்தியா வந்தனம் செய்ய வேண்டும். பொதுவாகப் பூணூலைப் பார்த்ததுமே நாம் செய்ய வேண்டிய மேற்குறித்த கடமைகள், பொறுப்புகள், தகுதிகள் முதலியனவற்றினைச் செய்ய வேண்டும் என்ற நினைவு வரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூணூல் அணிந்து காயத்ரி மந்திரம் முதலியவற்றை ஜபித்தால் அதிக பலனுண்டு. பூணூலை அணிந்தவர்கள் சாத்திர, வேத நூல்களைக் கற்றறிந்தவர்கள் என உணரப்படுகின்றனர். வேதங்களையும், புராணங்களையும் மனனம் செய்ய வேண்டும். கற்றவைகளை மீண்டும் நினைவுபடுத்த வேண்டும். தனது குருமூலம் கற்றவற்றைத் தகுதியான பிறருக்கு உபதேசம் செய்ய வேண்டும். இந்த முப்பெரும் கடமைகளைப் பூணூலின் மூன்று நூல்கள் உணர்த்துகின்றன. பூணூலானது தீய காரியங்களில் ஈடுபடாமல் தடுக்கிறது. மனதில் தீய எண்ணங்கள் வராமல் தடுக்கிறது. எனவே பூணூல் உயிருக்கும் கவசமாகிறது. இடச் சார்பால். காலச் சார்பால், நட்புச் சார்பால், தம் தீவினைச் சார்பால் ஒருவர், தடுமாறிச் செல்ல வேண்டிய போது அவரை நல்ல வழிக்கு மாற்றும் மகாசக்தி பூணூலுக்கு உண்டு. உடலின் ஐம் புலன்களும், மூளையும், இதயமும், பூணூலுக்குக் கட்டுப்படுகின்றன. பூணூலின் ஆற்றல், வாக்கால் மனிதனை மனிதனாகச் செய்கின்றது. பின்பு மனிதனைத் தெய்வத் தன்மையுடையவனாக உயர்த்தச் செய்கின்றது. ஆவணி அவிட்டமே பூணூல் அணியப் பொருத்தமான நாளாகும். புதுப் பூணூலைப் புனைவதற்குப் பெரியவர்களால் தெரிவு செய்யப்பட்ட நாள் ஆவணி அவிட்டம் ஆகும். வீட்டில் பிறப்பு, இறப்பு சிராத்தம் முதலிய நாட்கள் கடந்த பிறகு ஒரு நன்னாளில் புதிய பூணூலை அணியலாம். ஆவணி அவிட்டத்தன்று பூணூல் அணிந்து வேதத்தைப் பயிலத் தொடங்கி, தை மாத முழு நில வில் பயில்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தை மாத முழு நிலவு ஆவணி அவிட்டத்தைப் போலவே சிறப்பானது. வழிபாடுகளுடன் கொண்டாட வேண்டும்.

தொடர்ந்து தைமாத முழுநிலவு முதல் ஆவணி அவிட்டம் வரை வேதங்கள், புராணங்கள் பயில்வது உத்தமர்களின் வழக்கம். இவ்வாறு பயிலத் தொடங்குகின்ற நாளை ஆவணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவிட்டம் என்று வழிபடுகின்றனர். மந்திரங்களில் சிறந்தது காயத்ரி மந்திரம் என்பது அனைவரும் அறிந்ததே. இது வேதத்தின் சாரமாகும். ஆவணி அவிட்டத்தன்றும், அதற்குப் பிறகும் காயத்ரி மந்திரத்தை ஓத வேண்டும். தினமும் மூன்று சந்தியா வேளைகளில் பலமுறை காயத்திரி மந்திரத்தை உச்சரிப்பது மிகவும் நல்லது. காயத்ரி மந்திரங்களை ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் உருவேற்ற அந்த மந்திரங்களின் வீரியம் அதிகமாகும். அவை செய்யும் பயன்களும் நமக்குக் கூடுதலாகும். ஆவணி அவிட்டத்திற்கு மறுநாள் காயத்ரி தேவியின் உருவத்திற்கு முன்பு காயத்ரி மந்திரங்களைக் கூறி வழிபடுகின்ற வழக்கம் தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ளது. காயத்ரியை வழிபடுவது என்பது சூரியவழிபாடு ஆகும். அறிவும், அழகும் இந்த வழிபாட்டின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன. உபநயனம், திருமணம் நிகழ்ந்த பிறகு முதலில் வருவதைத் தலை ஆவணி அவிட்டம் என்பர். அன்று சிறப்புச் சடங்குகளையும் வழிபாடுகளையும் நடத்துகின்றோம். ஆவணி அவிட்டத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளில் கொண்டாடுகின்றனர்.

ரிக் வேதிகள் ஆவணி திருவோணத்திலும், ஆடி அமாவாசைக்கு அடுத்து வருகின்ற முழு நிலவில் யஜுர் வேதிகள் ஆவணி அவிட்டச் சடங்கு விழாவைக் கொண்டாடு கின்றனர். இந்த முழுநிலவு பெரும்பாலும் ஆவணியில் வரும். சில சமயத்தில் ஆடி மாதத்தில் வருவது உண்டு. ஆடிப் பௌர்ணமியில் இருந்தாலும், அதை "ஆவணி அவிட்டம்" என்றே அழைக்கின்றனர். சாம வேதிகள் ஆவணி, அஸ்தம், சதுர்த்தியில் ஆவணி அவிட்டத்தைக் கொண்டாடுகின்றனர். யஜுர் உபகர்மா சில சமயத்தில் ஆடியில் வருவதால், பூணூலை மாற்றுவதற்கு ஆடி மாதமும் சிறந்த மாதமாகும். தட்சிணாயண புண்ணிய காலத்தின் தொடக்கம் ஆடியாகும். மேலும், முழு நிலவை வியாச முழுநிலவு என்றும், குரு முழுநிலவு என்றும் சிறப்பித்துக் கூறுகின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பொழுது யாரும் எதையும் அணியலாம். சகல கலைகளையும் கற்கலாம் என்னும் நிலை வந்துவிட்டது. அசைவ உணவை விட்டுச் சைவ உணவுக்கு மக்கள் திரும்பிக் கம்ப்யூட்டர் விஞ்ஞானம் மற்றும் மெய்ஞ்ஞான நூல்களையும் படிக்க ஆரம்பித்து விட்டனர். மதங்களும் மக்கள் போக்குப்படி தங்கள் கொள்கைகளை மாற்றியமைத்து வருகின்றன. மக்கள் தங்கள் உடலுக்குள் இருக்கும் சக்திகளை அறிய முற்படுகின்றனர். தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.

சுமார் கி.பி. 800ல் தோன்றிய யூகி முனி என்னும் சித்தர் தனது யூகி முனி பிடிவாதம் ஆயிரம் என்னும் ஏட்டில் பஞ்ச பூத செந்தூரம் என்னும் பஞ்சலோக செந்தூரத்தைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கின்றார். நமது உடல் பஞ்ச பூதத்தால் உருவானதால் பஞ்சபூத செந்தூரம் அனைத்து வியாதிகளையும் குணப்படுத்தும். தங்கம் – மண். காரீயம் – தண்ணீர். செம்பு – நெருப்பு. இரும்பு – காற்று. நாகம் – ஆகாயம் இவை ஐந்தும் கூடும்போது பெரிய சக்தி உண்டாகின்றது. இவற்றை ஐம்பொன் என்றும் கூறுவார்கள். அக்காலத்தில் அனைத்து லோகங்களையும் பொன் என்று அழைத்திருக்கின்றனர். மாற்றுதான் வித்தியாசபட்டது. உற்சவ மூர்த்தி ஐம்பொன்னால் ஆனது. நம்முடலில் உள்ள பஞ்சபூத சக்திகளை இயக்க வேண்டும். பஞ்சபூத செந்தூரம் முழுவேக்காட்டில் செய்யக் கூடிய ஆட்கள் இப்போது இல்லை. எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால் லோக பஸ்மத்தை மட்டும் யோசித்துச் சாப்பிட வேண்டும். வங்கம் நீரினால் தங்கம். நீராவிட்டால் பங்கம். அதனால் பாதுகாப்பான ஐம்பொன் எனப்படும் பஞ்சலோக ஆபரணங்களை அணிந்து பஞ்சபூத சக்திகளை முழுமையாகப் பெறலாம்.

சென்னை படப்பை, காஞ்சிபுரம் மார்க்கத்தில் கண்டிகை ஸ்ரீநகரத்தில் அமைந்துள்ள தியான நிலைய சுவாமிஜி முருக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூஷணம் அவர்களுக்கு இதன் விபரம் தெரியும். மேலும் மதுரை மற்றும் திருச்சியில் பஞ்சலோக ஆபரணம் செய்கின்றனர்.

தொன்றுதொட்டு முப்புரி பூணூலே அணிந்து வருகின்றனர். நூலினுக்கே முற்றிய நல்லவைகளை நடத்தி வைக்கும் குணங்கள் உண்டு என்றால் ஐம்பொன்னால் செய்த பூணூலுக்கு எவ்வளவு குணமுண்டு எனச் சொல்லால் அளக்க முடியாது. ஆவணி அவிட்டத்தன்றே ஐம்பொன் பூணூல் அணிவது நல்லது. ஆவணி அவிட்டத்தின் சிறப்புகளையும் முன்பே கூறியுள்ளோம். எது தொடங்க இருப்பினும் மஞ்சளில் விநாயகர் பிடித்து முதலில் வழிபட வேண்டும். குறிப்பாகக் கீழே கூறியுள்ளபடி விநாயகரை வழிபட வேண்டும்.

சிவகணங்களுக்கெல்லாம் தலைவரும், பக்தர்களின் ஆனந்தத்தை வளர்ப்பவரும், அவர்களின் பக்தியால் மகிழ்பவரும், யானை வடிவம் கொண்டு ஹேரம்பர் என்ற பெயரை உடையவருமான விநாயகரை வணங்குகின்றோம். உபநிஷதங்களால் அறியப்படுகிறவரும், மனம், வாக்கு வடிவானவரும், மனதினாலும் வாக்கினாலும் எட்ட முடியாதவரும், யோகமே உருவானவருமான விநாயகரை வணங்குகின்றேன். யானை முகத்தை உடையவரும், குணங்களற்ற நிலையில் இருப்பவரும், குணங்களோடு கூடியவரும், கழுத்துக்குக் கீழ் மனித உருவமுள்ளவருமான விநாயகரை வணங்குகின்றேன். ஆதியற்றவரும், பூஜிக்கத் தகுந்தவரும், எல்லோருக்கும் எல்லாம் அளிப்பவரும், முதல்வழி ஏற்பவரும், கெட்டவர்களுக்குப் பல விதமான தடங்கல்களை விளைவிப்பவரும், எல்லா விக்னங்களுக்கும் ஈசனும் ஆன விநாயகரை வணங்குகின்றேன். பக்தர்களின் துன்பங்களைத் தவிர்ப்பவரும், தீயவர்களுக்குத் தடைகளை விளைவிப்பவரும், எப்போதும் தன்னிலே நிலைபெற்று ஆனந்தமாயிருப்பவருமான விநாயகரை வணங்குகின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் இழையாலான பூணூலுக்கு பதில் லேசான ஐம்பொன் பூணூல் அல்லது முறுக்குச் செயின் அல்லது முப்புரி செயின் அணிந்து பூணூல் மாதிரி போட்டுக் கொள்ளலாம். பஞ்சலோக மோதிரம். டாலர், கைக்குக் கங்கணம், கழுத்து செயின், இடுப்புச் செயின் அணியலாம். இதன் மூலம் தங்களின் உபாசனா சக்தியும் ஆத்மசக்தியும் விருத்தியடையும். பஞ்ச லோக மணி செய்து சுடும் பால் அல்லது நீரில் போட்டு அந்நீரைக் குடிக்கலாம். பின் மணியைக் கழுவித் தனியாக வைத்துக் கொள்ளலாம். ஐம்பொன் பூணூலையும் இதர ஆபரணங்களையும் வாரம் ஒரு முறை கறந்த பசும்பாலில் போட்டுச் சில நிமிடங்கள் கழித்துச் சுத்தப்படுத்தித் துடைத்து எடுத்து மீண்டும் உபயோகிக்கலாம். உடலில் பக்கவாதம் எப்பகுதியில் உள்ளதோ அதற்கு எதிர்த் திசையில் பூணூல் போட்டால் பக்கவாதம் குணமாகும். கழுத்தில் பஞ்சலோகச் சங்கிலி அணிந்தால் முகவாதம் குணமாகும். டாலர் அணிந்தால் இருதய நோய்கள் நீங்கும். பஞ்சலோக மோதிரமணிய நல்ல சுவாசம் உண்டாகும். வலது கையில் கங்கணமணியணிய எடுத்த காரியம் வெற்றியடையும். ஆனால் அசைவ உணவு சாப்பிடும்போது ஆபரணங்கள் உடலில் இருக்கக் கூடாது. எந்தெந்த லோகங்கள் எவ்வளவு விகிதத்தில் சேர்க்க வேண்டும் என்பது ஐம்பொன் தொழிலாளர்களுக்கு தெரியும். தனியாகவோ அல்லது நவரத்தினக் கற்களுடன் சேர்த்தோ ஐம்பொன் ஆபரணங்களை அணியலாம். ஆபரணங்கள் செய்தபின் இஷ்ட தெய்வங்களிடம் கொண்டு போய் வழிபாடு செய்து நல்ல நாளில் அணிந்து நலம் பெறலாம்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. அலையும் ஆவிகள்

உலகம் தோன்றியது முதல் ஆவிகள் இயக்கமும் தோன்றியது. இந்து மதத்திற்கும் மற்றைய கிறிஸ்துவ இஸ்லாமிய மதத்திற்கும் உள்ள பெரும் வித்தியாசம் மறுபிறப்புக் கொள்கைதான். இறந்தவர்களை நியாயத்தீர்ப்பு நாளன்று கர்த்தராகிய ஆண்டவர் எழுப்பி அவர்கள் செய்த நன்மை தீமைகளை விளக்கித் தீர்ப்புக் கூறுவார் எனக் கிறிஸ்துவர்கள் கூறுகின்றனர். இஸ்லாமியர்களும் மேற்சொன்னவாறே அல்லா தீர்ப்பளிப்பார் எனச் சொல்கின்றனர். அதனால் அவர்கள் இறந்த உடலை எரிக்காமல் புதைக்கின்றனர். ஆனால் இந்துமதக் கொள்கைப்படி மனிதர்களின் நல்ல மற்றும் கெட்ட எண்ணங்கள் ஆகாயத்தில் வீடியோ மாதிரி பதிகின்றது. மனிதன் இறந்தபின் அவன் வீடியோவை சித்ரகுப்தன் தன் யஜமானன் என்னும் யமன் முன் போட்டுக் காண்பிக்கின்றான். மனிதன் செயலுக்குத் தகுந்த தீர்ப்பு தர்மத்தின் அடிப்படையில் யமன் வழங்குகின்றார். அதனால் அவர் யமதர்மராஜா என அழைக்கப்படுகின்றார். யமனின் சேவகர்களான காலன் மற்றும் தூதன் அத்தீர்ப்பின் படி மேற்படி ஆவிகளைச் சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ இட்டுச் செல்கின்றனர். ஆவிகள் சூரியனை நோக்கிச் சென்றால் சொர்க்கம். ஆவிகள் சந்திரனை நோக்கிச் சென்றால் வைகுண்டம். மறுபிறவி உண்டு.

சனி என்னும் இருள் கிரஹத்தை நோக்கிச் சென்றால் நரகம். பல ஆண்டுகள் அங்குக் கஷ்டப்படும். இதன் முழுவிபரம் காரூட புராணத்தில் உண்டு. இது சாதாரணமாக இறந்தவர் களுக்கும் வயோதிகத்தின் காரணமாக இறந்தவர்களுக்கும் நோய் வாய்ப்பட்டு இறந்தவர்களுக்கும்தான் மேற்படி சட்டதிட்டங்கள். நாம் இங்கு எடுத்துக் கொண்ட ஆய்வுப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் "அலையும் ஆவிகள்" என்பது பற்றியது. அதாவது கொலை, தற்கொலை விபத்து ஆகியவற்றில் பலவந்தமாகப் பிரிக்கப்பட்ட உயிர். இறந்தவர்கள் ஆவி ஆண் என்றால் பேய் எனவும் பெண் என்றால் பிசாசு எனவும் உலக வழக்கில் பேசப்படுகின்றது. நம் சூட்சும உடல் ஸ்தூல உடலான ஐம்பூத உடலிலிருந்து பலவந்தமாகப் பிரிக்கப்படுவதால் இறந்தவரின் ஆவி எந்த இடத்தில் மரணமடைந்ததோ அங்கேயே சுற்றும். சுமார் இருபது அடி சுற்றளவுக்குள் சுற்றும். வெளியே எங்கும் செல்லமுடியாது. உயரக் கிளம்பவும் இயலாது. இதைத்தான் மந்திரவாதிகள் பிடித்துத் தங்கள் கட்டளைப்படி ஏவல் கொள்கின்றனர். அருளாளர்களின் ஆசி கிடைத்தால்தான் அவைகளுக்கு விடுதலை கிடைக்கும். தரைப்பகுதியிலேயே சுற்றும். ஆகாயத்துக்கு எழுந்து செல்ல முடியாது. அவைகளின் மனப்பருமை அதாவது திண்மை அவைகளைக் கீழே அழுத்தும். கடவுளின் மீது அச்சங் கொண்டே இன்றுவரை பலர் வாழ்கின்றனர். கடவுளுக்கு அடுத்ததாக ஆவிகளின் மீதும் அச்சங் கொள்ளுகின்றனர். ஆவிகளில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு.

பௌதிக உருவங்களில் ஒருவகையான உயிர் அல்லது ஆவி உண்டு. ஒரு மனிதன் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் இந்த ஆவி சிறிது காலம் வரை தங்கி இருக்கும். உருவத்தைச் சார்ந்த இந்த ஆவி இருக்கும் வரை உடல் கெடாமல் இருக்கும். பண்டைய எகிப்தியர்களுக்கு இந்த அறிவு இருந்தது. குறிப்பிட்ட ஒரு வழியில் உடலைப் பக்குவப்படுத்தி வைத்தால், அந்த ஆவியும் உடன் இருக்கும், உடலும் அழியாது இருக்கும். இதில் எகிப்தியர்கள் அதிசயிக்கத்தக்க வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் நிச்சலமாக ஓய்வு கொண்டிருக்கும் ஜீவன்களைச் சீண்டினால் விளைவு என்னவாகும்? அறிவியலைக் காரணம் காட்டி, அறியத் துடித்து அத்து மீறினால் அவைகள் சீறுவது இயல்பு தானே?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரிஸில் ஓர் அருங்காட்சியகத்தில் இரண்டு மம்மிகள் இருந்தன. ஒன்றில் எதுவுமே இல்லை, உயிரற்று இருந்தது. ஆனால் மற்றொன்றில் உருவங்காக்கும் ஆவி இருந்தது. மிக்க உணர்வோடு இருந்தது. அந்த உணர்வோடு ஆன்மிகவாதிகள் தொடர்பு கொள்ளக் கூடிய அளவு உயிர்த்துடிப்புடன் அது இருந்தது. நுண்ணுணர்வு இல்லாதவர்களால் அதை உணர இயலாது. அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதான்.

மம்மிகள் ஆராய்ச்சி செய்பவர்கள் முரட்டுத் தனமாக அவற்றைக் கையாள்கிறார்கள். இந்த மம்மிகள் அவரவர் உருவங்களுக்கு ஏற்பப் பெட்டிகளில் தகுந்த முறையில் பக்குவப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருப்பார்கள். ஆய்வாளர்கள் முரட்டுத்தனமாக இந்தப் பெட்டிகளைத் திறப்பார்கள். சரியாகப் பார்க்க வேண்டும் என்ற வேகத்தில் அவற்றைச் சுற்றியிருக்கும் உறையை இங்கும் அங்குமாகக் கிழிக்கின்றார்கள். பதப்படுத்தப்பட்ட இந்த உடல்களில் பலர் சாதாரணமானவர்கள் அல்ல, சக்திவாய்ந்த பெரிய மனிதர்கள். ஒரு பெண்ணின் ஆவி விபத்துகள் பல உண்டாவதற்குக் காரணமாக இருந்தது. அது ஓர் அரச குமாரியின் உடல். மந்திர சக்தி வாய்ந்த ஓர் அரசனின் மகள்.

ஒரு மனிதன் உலோபியாக, கஞ்சனாக, கருமியாக இருக்கிறான், தன் செல்வத்தைப் பேராசையோடு போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஒருநாள் அவன் இறந்து போகிறான். அவனுடைய பிராணமய கோசம் அழிந்து விடும், ஆனால் செல்வத்தில் அவனுக்கு இருந்த பேராசை அழியாமல் இருக்கும். அது பல கூறுகளைக் கொண்டு ஒரு வகை ஜீவனை உருவாக்கும். பிராணமய உலகில் அது வாழ்ந்து கொண்டு இருக்கும். இந்த மனிதன் தனது வாழ்நாளில் தனது செல்வத்தை எங்கேனும் ஒளித்து வைத்திருந்தானானால் இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜீவன் அந்த இடத்திற்குப் போய் அந்தத் திரவியத்தைக் காவல் காத்துக் கொண்டு இருக்கும்; அதன் அருகே யாரையும் நெருங்க விடாது. சிலர் உள்ளறிவின் வலிமையினால் இந்தச் செல்வம் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து சொல்வார்கள். ஒரு புறம் நுண்ணறிவால் ஒருவன் இதைக் கண்டறிய, மறுபுறம் அந்த ஆவி தன் செல்வத்தை அவன் நெருங்காத வண்ணம் பல உற்பாதங்களை விளைவிக்கும். நெருங்குபவனை நோய்க்கு ஆளாக்கும், அல்லது விபத்து விளைவிக்கும், கொலை கூட விழும்; தன் செல்வத்தைக் காப்பதற்கு அது எதுவும் செய்யும். அந்த மனிதன் சற்று மென்மையான இயல்புடையவனாக இருந்தால் அவனை அச்சுறுத்திப் பைத்தியமாகவும் அடித்து விடும். தெய்வத் தொடர்பு உடையவர்களை அல்லது தெய்வத்துணை முழுமையாக இருப்பவர்களைத் தீய ஆவிகள் ஒன்றும் செய்யா. தீயஆவிகள் விபத்துக்களை உண்டாக்கும். ஒட்டு மொத்தமான விபத்துக்களைப் பார்க்கும் போது ஒன்று தெரிகிறது; வெவ்வேறு வகை இயற்சூழலைக் கொண்ட பல்வேறு மக்களின் கூட்டிணைப்பின் காரணமாக விபத்தின் விளைவுகள் ஒரே சீராக இல்லாமல் வேறுபட்டவையாக இருப்பதைக் காணலாம்.

மிகத் திறமையான ஒரு விமான ஓட்டி இருந்தான். முதல் உலகப் போரில் பல சாதனைகளை நிகழ்த்தியவன் இவன். "ஏஸஸ்" என்று சொல்வார்கள்; அதாவது விமானம் செலுத்துவதில் வல்லவன் என்று பெயர் வாங்கியவன். பல வெற்றிகளைக் குவித்தவன். எவ்விதமான விபத்தும் அணுகாமல் எப்போதும் திடமாக இருந்தான். இவனுடைய வாழ்க்கை திடீரென்று திசை திரும்பியது காரணம் தீய ஆவி ஒன்று அவனைப் பிடித்தது. தன்னுடைய நற்பேறுகளெல்லாம் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது. போர்க்களத்தை விட்டு அவன் விலகினான்; எனினும் ராணுவத்தில் விமானியாக இருந்து வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு முறை அவன் தென் ஆப்பிரிக்காவிற்குச் செல்ல விரும்பினான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு கலக்கம் ஏற்பட்டது. அவன் பிரான்சில் ஒரு நகரத்திலிருந்து புறப்பட்டு மடகாஸ்கர் செல்லத் தொடங்கினான். அங்கிருந்து திரும்ப பிரான்ஸ் வர எண்ணியிருந்தான். அது சமயம் X என்பவர் காங்கோவிற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். எனவே அவர் அப்பதவியை ஏற்பதற்காக உடனடியாகப் போக விரும்பினார். இந்த விமானியின் விமானத்தில் செல்ல அனுமதி வேண்டினார். பொதுவாக இவ்விமானங்கள் தொழில் ரீதியான பயணங்களை மேற்கொள்ளுபவை. இனியவரான Xயிடம் ஏனோ சிலர் இந்த விமானத்தில் செல்ல வேண்டாம், இவை அவ்வளவு பாதுகாப்பானவை அல்ல என்று சொல்லிப்பார்த்தார்கள்.

ஆனால் அவர் அதில்தான் பயணம் செய்தார். விமானத்தில் ஏதோ பழுது ஏற்பட்டு நடுவழியில் சஹாராவில் தரையிறங்கி விட்டது. ஆனால் ஓர் அற்புதம் போல் விரைவில் பழுது நேராக்கப்பட்டு பயணம் தொடர்ந்தது. நல்லவரான X தான் இறங்க வேண்டிய இலக்கில், காங்கோவில் இறங்கிக் கொண்டார். விமானம் தெற்கு நோக்கிக் கிளம்பியது. ஆனால் வழியில் விமானம் மீண்டும் பழுதுபட்டுக் கீழே விழுந்து நொறுங்கியது. அந்த விமானியும் உயிரிழந்தான். இதற்கு இவ்வாறு விளக்கம் தரலாம்; இரண்டு மனிதர்களின் இயற்சூழலின் சேர்க்கையால் விபத்து தவிர்க்க வொண்ணாத தாகத்தான் இருந்தது. விமானம் இடையில் தரையிறங்கும்படி நேர்ந்தது. எனினும் பெரும் விபத்து நேராமல் ஒருவர் பிழைத்தார். ஆனால் அவர் அகன்றதுமே அந்த விமானியிட ம் தீய ஆவி முழுவீச்சுடன் செயல்பட விமானம் நொறுங்கியது.

நமக்கு எந்தச் சத்தம் கேட்கிறதோ, அதை மட்டுமே உண்மை என்றுதான் நாம் கொள்கிறோம். பொதுவாக விநாடிக்கு 20 முதல் 16,000. அதிர்வுகளைக் கொண்ட ஓசைகளை மட்டும்தான் மனிதக் காதுகளால் கேட்டு உணர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியும். ஆனால் பூனை, மாடுகள், நாய்கள் போன்றவை நம்மைவிட அதிகத் துல்லியமாக ஒலிகளைக் கேட்கின்றன. நமக்குக் கேட்காத பல சப்தங்கள் அவைகளுக்குக் கேட்கின்றன. கடந்த பல ஆண்டுகளாக, மனிதக் காதுகளுக்குக் கேட்காத ஒலி அலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஜார்ஜ் மீக் என்பவர் பலரைச் சந்தித்து ஆராய்ச்சி செய்துள்ளார். அவர் சந்தித்தவர்களின் பெரும்பான்மையானவர்கள் "தங்களது காதுகளில் இறந்தவர்களின் குரல்கள் ஒலிப்பதாயும், அவைகளைக் கவனித்து அவைசொல்லும் விதத்தில் தாங்கள் பிறருக்குப் பரிகாரங்கள் கூறுவதாகவும் தெரிவித்தனர்.

அதாவது சிலவகை ஓசைகளைச் சிலரால் மட்டுமே கேட்டு உணர முடிகிறது என்பதையே இது காட்டுகிறது. பொதுவாக நமக்குக் கேட்டுப் பழக்கப்பட்ட குரல்களை மட்டுமே, நாம் உடனே கேட்டு உணர்கிறோம். ஆவிகளின் பேச்சுக்கள் ரேடியோ டெலிவிஷன், ஒலி அலைகளை விடவும் மிகுதியான வேகத்தோடு எழுப்பப்படுகிற அதிர்வுள்ள காரணத்தால் நம்மால் அவைகளைக் கேட்டு உணர முடிவதில்லை. ஆவிகளின் உருவங்களைப் புகைப்படங்களில் பிடிக்கலாம். இதைப் படிப்பதற்கு முன்னால், ஆவிகளைப் படம் எடுப்பதைப் பற்றி நீங்கள் ஒன்றுமே தெரியாதவராக இருந்தால் பின்வரும் செய்திகள் உங்களுக்கு மிகவும் திகைப்பை உண்டாக்குவதாக இருக்கும். சாதாரணப் புகைப்படத்திற்கும் ஆவிகளின் புகைப்படத்திற்கும் படம் எடுக்கும் முறையில் ஏதும் மாறுதல் இல்லை. பொதுவாகப் படம் எடுக்கும்போது, எதிரில் இருப்பவரது உருவம்தான் பதிவு ஆகும். ஆனால், இந்தப் படங்களில் காமிராவுக்கு எதிரில் உள்ளவரைத் தவிர. அங்குக் காணப்படாத வேறு சில மனித வடிவில் உள்ள உருவங்களும் பதிந்திருக்கும். இவைகள் அனைத்தும் இறந்தவர்களின் ஆவியின் உருவங்களாகும். பெர்த்தா காரிஸ் என்னும் பெண் கீழ்கண்டவாறு கூறுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"இளவயதில் நான் படமெடுக்கக் கற்றுக்கொண்ட சமயங்களில் ஏற்பட்டதைப்போன்று இப்போதெல்லாம் இத்தகைய ஆவிகளின் படங்கள் அடிக்கடி வருவதில்லை. என் தந்தையார் ஓய்வுநேரங்களில் புகைப்படம் எடுக்கும் தொழிலையும் செய்து வந்தார். என் தந்தையார் எனக்கு 16 வயதிலிருந்தே புகைப்படத்துறையில் எல்லாவகையான பயிற்சிகளிலும் என்னை ஈடுபடுத்தினார். ஆனால் நாங்கள் எடுத்த படங்களில் இப்படிப்பட்ட ஆவி உருவங்களும் அடிக்கடி வரும். இச்செயல்கள் என் தந்தைக்குப் பெரிய உபத்திரவமாக இருந்தது. பல மைல்தூரம் சென்று புகைப்படம் எடுத்த பிறகு, வீட்டுக்குவந்து கழுவிப்பார்த்தால் அதில் ஏதேனும் ஆவிகள் உருவங்கள் இருப்பது எங்களுக்கு எரிச்சலையே தந்தது எனக் கூறுகின்றாள்.

இதைவிடத் திகைப்பு அளிக்கக்கூடிய நிகழ்ச்சி ஒரு தம்பதியை என் தந்தை படம் எடுக்கச் சென்றபோது நடந்தது. படத்தைக் கழுவி நெகடிவ்களைப் பார்த்தபோது உண்மையில் திகைத்துப் போனோம். ஏனென்றால், மணமகன் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு மாலுமியின் உருவம் இருந்தது. மணப்பெண்ணின் தாய் மிகவும் அதிர்ச்சியடைந்தாள். "கடவுளே! இதைப் பார்த்தால் மாப்பிள்ளை மிகவும் மனமுடைந்து விடுவார். சில வருடங்களுக்கு முன்னால் என் மகள் இந்த மாலுமியைத்தான் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டாள். ஆனால், அவன் கொலை செய்யப்பட்டு விட்டான். இந்த மாலுமியின் ஆவி திருமணத்திற்கு வந்தது மட்டுமல்லாமல், புகைப்படத்திற்கும் போஸ் கொடுத்திருக்கிறது" என்று கூறினாள். அவளது விருப்பப்படி நெகடிவ்களை எரித்துவிட்டார் என் தந்தை. படம் சரியாக வரவில்லை என்று மாப்பிள்ளையிடம் பொய் சொல்லிச் சமாளித்து விட்டோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதாரணமாக எங்கள் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த சீமாட்டி யேட்ஸ் (Yates) அவர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியைக் கூறலாம். இவர் பல குதிரைகளுக்குச் சொந்தக்காரியாக இருந்தவர். அதில் ஒன்றான பெக்கி ஷார்ப் (Becky Sharp) என்ற குதிரை மீது யேட்ஸ் சீமாட்டியின் மகன் தனது உயிரையே வைத்திருந்தான். தனது நான்காவது வயதில் கடுமையாக நோய்வாய்ப்பட்டான் அந்தச் சிறுவன். அந்த நிலையிலும்கூடத் தன்னைத் தினமும் குதிரை லாயத்திற்குத் தூக்கிச் செல்லும்படி வற்புறுத்தினான் அவன். அங்கு அந்தக் குதிரையுடன் கொஞ்சிக் குலவிவிட்டுத்தான் அவன் திரும்புவான். நோய் அதிகமாகிச் சிலதினங்களில் இறந்துவிட்டான் அச்சிறுவன். சில வாரங்கள் கழித்து, ஒரு கண்காட்சிக்காக அந்தக் குதிரையைப் படம் எடுத்தார் என் தந்தை. படத்தைக் கழுவிப் பார்த்தபோது குதிரையின் முதுகில் இறந்துபோன அந்தச் சிறுவனும் இருந்தான்!

பலநூறு ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வாழ்ந்த தத்துவ ஞானி கன்ஃபூசியஸ், ''இறந்தவர்களுக்காக வருந்தத் தேவையில்லை. இறந்தோர் பற்றும் பாசமும் கொண்ட நல்ல நண்பர்களாக நம்முடன் என்றுமே வாழ்கிறார்கள்'' என்று கூறியுள்ளார். மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த மேல்நாட்டுத் தத்துவ ஞானி சாக்ரடீஸ், ஹெரோடோடஸ், சோபோகில்ஸ், யூரிபிடஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், ஹொரேஸ், விர்ஜில், புளூடார்க், ஜோசப்பஸ் ஆகியவர்களும் ஆவிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். அதிலிருந்து அவர்கள் காலத்திலேயே ஆவிகள் நன்கு அறியப்பட்ட ஒன்று என்பது தெரிய வருகின்றது.

ஆவி உலகில் 'பாவலோகம்' என்பது இருட்டாக இருக்கும். பாவலோகத்தை அடையும் ஆவிகள், தமது ஸ்தூல உடலைக் காணாமல் தம்மைச் சூழ்ந்திருக்கும் இருளைக் கண்டு திகைத்து வாழும். பூமியில் ஸ்தூல உடலில் வாழும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனிதர்களிடம் இருந்து வெளிப்படும் மின்காந்த ஒளிவட்டத்தினால் அவைகள் கவரப்பட்டு, அந்த மனிதரின் உடலில் வந்து புகுந்துவிடும். இப்படி வேறு மனிதரின் உடலில் நுழைந்த பின்னர், அவரது மனோவலிமையைத் தகர்க்க இவை ஆரம்பிக்கும். இதில் வெற்றிபெற்று, அந்த மனிதரை முழுஅளவில் தன் வசமாக்கும் போதுதான், அவருக்குத் தாங்க முடியாத உடல் அலுப்பும் மனச் சோர்வும் உண்டாக ஆரம்பிக்கும். மனிதனின் நோய்க்குப் பிசாசுகளின் பார்வை அவன்மீது பட்டதுதான் காரணம் என்கிறார். ஆவிகள் மனிதரைப் பிடித்துக்கொள்ளும் என்பதைப் பிளேட்டோ உறுதியாகக் கூறுகின்றனர்.

மனிதன் பைத்தியமாவதற்கு முக்கிய காரணமே கெட்ட ஆவிகள்தான் என சாக்ரடீஸ் பல இடங்களில் கூறுகிறார். சில கொடுமைக்காரப் பிசாசுகள் தங்களது மனத்திருப்திக்காக மனிதர்களைப் பிடித்துக் கொள்கின்றன. அவை வேறு எந்த வழியிலும் திருப்திகொள்ள முடியாததால், மனிதனை வசப்படுத்தி அவன் மூலம் நாட்டுக்கு எதிராகக் கலகம், துரோகம், படையெடுப்பு முதலியவைகளைச் செய்யவைத்து இன்பம் காண்கின்றன எனப் பல இடங்களில் பாண்டிச்சேரி ஸ்ரீ அன்னை குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே கிறித்துவர்களின் பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பேய்பிடித்தல் பற்றி நிறையக் குறிப்புகள் உள்ளன எனக் கூறினோம். அப்படியானால் இதைப்பற்றிய அறிவு அக்காலத்தில் எவ்வளவு தூரம் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். ஆரம்பகாலத்திலேயே கிறிஸ்தவமதத்தார் ஆவிகளைப்பற்றி அறிந்திருந்தனர். இது புனித அந்தோனி, டெர்டுலியன், ஆரிகன் முதலியோரும் அவர்களது காலத்தவர்களும் எழுதிய பல நூல்களிலிருந்து தெரிகிறது. ஆவிகளைப்பற்றிப் பைபிள் முழுவதும் நிறையக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்புகள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் சாமுவேலின் முதலாம் புத்தகம், அதிகாரம் 28இல், அஞ்சனம் பார்க்கும் பெண் ஒருத்திமூலம் இறந்துபோன சாமுவேலை, அவரது மகன் அழைத்துப் பேசியதாக ஒரு செய்தி உள்ளது. அஞ்சனம் மூலம் இறந்தவர்களைப் பார்த்துப் பேசலாம் என்பது அக்காலத்தில் இருந்து இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

யோவான் எழுதிய ஆகமம், அதிகாரம் 20:19–29 இல், இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபிறகு ஆவிவடிவில் பூட்டப்பட்டிருந்த அறைக்குள்ளே வந்து, தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது. மத்தேயு 4:3–10இல், சாத்தான் என்னும் கெட்ட ஆவியைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. மத்தேயு 9:32–33 இல் ஒரு மனிதனைத் தீயகுணம் நிறைந்த பிசாசு பிடித்துக் கொண்டு அவனை ஊமையாக்கி வைத்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

பைபிளில் காணப்படும் வேறு ஓர் நிகழ்ச்சியையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது இயேசு நாதரிடம் ஒரு மனிதனைச் சீடர்கள் கொண்டுவந்து காட்டினார்கள். அந்த மனிதன் ஆவியால் பாதிக்கப்பட்டு, ஆடைகள் அணியாமல், நிர்வாணமாகக் கல்லறைப் பகுதிகளில் சுற்றிக் கொண்டிருந்தான். அவன் உடலில் பல பேய், பிசாசுகள் குடிகொண்டிருந்தன. அவைகள் அவனை நீண்டகாலமாக ஆட்கொண்டிருந்தன. அந்தப் பிசாசுகள் அவனைவிட்டு நீங்கவேண்டும் என்று இயேசு கட்டளையிட்டார் எனக் கூறப்படுகின்றது. மேலும் ‘தங்களுக்குத் தண்டனை தரவேண்டாம்’ என்று அப்பேய்பிசாசுகள் ஏசுவிடம் மன்றாடின.

பிறகு, அம் மனிதனை விட்டு நீங்கி அருகில் மேய்ந்து கொண்டிருந்த பன்றிக் கூட்டத்திற்குள்ளே போய்ப் புகுந்து கொள்ள அனுமதி வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டன. இயேசுவும் அப்படியே ஆகட்டும் எனக் கட்டளையிட்டார். உடனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிசாசுகள் அந்த மனிதனைவிட்டு விலகிப் பன்றிகளுக்குள் புகுந்தன. அந்தப் பன்றிக் கூட்டங்கள் மலையில் ஏறிக் கடலில் குதித்து மாண்டன. லூக்கா 8:26–33 இப்படித் தெரிவிக்கிறது. ஏசுநாதரின் தொண்டுகளில் பெரும் பங்கு பேய்களை விரட்டியதுதான். இவற்றினை விளக்கப் புதிய ஏற்பாட்டிலிருந்து சில வாசகங்களைக் காணலாம். "அப்போது அவர் தமது பன்னிரண்டு சீடர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும், அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (மத்தேயு 10:1) "கலிலியோ நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும் பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தார். (மாற்கு 1:39) "அசுத்த ஆவிகளால் பாதிக்கப்பட்டவர்களும் வந்து ஆரோக்கிய மடைந்தார்கள். (லூக்கா 6:18) "........பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. (அப்போஸ்தலர் 19:12) இப்படிப்பட்ட சம்பவங்களை உளவியல் துறையில் மனத்தைப் பீடித்த நோய்கள் (Psychopathologigal) என்றுதான் கூறுவார்கள்.

இலண்டனைச் சேர்ந்த கத்தோலிகர் டாக்டர் காட்ஃப்ரே ரௌபெர்ட் என்பவர் ஆன்மாவின் அழியாமைபற்றி விளக்க வுரைகள் ஆற்றுவதற்குப் பல இடங்களுக்கு அனுப்பப்பட்டார். "இப்படிப்பட்ட உண்மைகளை ஒதுக்கிவைக்க இனியும் இயலாது. உலகம் முழுதுமே விஞ்ஞானிகள் உண்மை என்று கண்டறிந்தவைகளை, நாம் ஒப்புக் கொள்ளாமல் இருப்பது ஆபத்தான ஒரு கொள்கையாகும். எனவேதான், கத்தோலிக்கர்கள் இப்படிப்பட்ட விஷயங்களில் எடுக்க வேண்டிய சரியான முடிவுபற்றி எடுத்துச்சொல்லப் போப் ஆண்டவர் என்னை அனுப்ப உள்ளார். ஆவிகளைப்பற்றி இப்போது மட்டுமில்லை எப்போதுமே நமக்கு உடன்பாடு உண்டு. ஆனால், இப்படிப்பட்ட ஆவிகளின் குணாதிசயங்களைப் பற்றித்தான் நாம் இன்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதற்காகத் தினமும் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் முடிவுகள், நம் உலகில் ஒரு பெரும் மாற்றத்தைத் தரக்கூடும்'' எனச் சமீபத்தில் கூறியுள்ளார்.

ஜூலியன் ஹாத்ரோன் என்பவர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். ''கெட்ட சிந்தனை கொண்ட ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் தினமும் இறக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நேர்கிறது? அப்படிப்பட்ட சிந்தனையுள்ளவர்கள் மீண்டும் இங்கே திரும்பி வரத்தான் விரும்புவார்கள். பல மனிதர்களைப் பிடித்துக்கொண்டு அவர்கள் மூலம் இந்தப் பூமியில் பல கெட்ட காரியங்களை அவர்கள் செய்வதைக் கண்கூடாக நாம் காண்கிறோம். இதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று இப்படிப்பட்ட ஆவிகள் உருவாகும் இடத்தைவிட்டு ஒதுங்குவது மற்றொரு வழி நாம் அவர்களுடன் விளையாடாமல் ஒதுங்கி இருப்பதும்தான்.'' ஆவிகளில் நல்லவை கெட்டவை என்று உள்ளன. நல்லவை தான் மரணத்தின் பின்பும் நல்லவைகளையே செய்கின்றன. மருத்துவத் தொழில் செய்து வந்தவரின் ஆவி பாபா என்னும் நண்பரின் மேல் இறங்கி நல்லது செய்தது என்பது கேட்கும் பொழுது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். பாபா பீஹார் மாநில த்தில் உள்ள முசாபாபூரில் 1957ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி பிறந்தார். அவர் எந்தவிதமான பள்ளிக்கும் சென்றது கிடையாது. அவருக்கு ஓர் அதிசய சக்தி 1977இல் வந்தது என்கிறார்.

1980 வரையில் நோயாளியின் உடலைக் கையால் தொட்டும் – விபூதி மந்திரித்துக் கொடுத்தும் குணமாக்கி வந்தார். அதன் பிறகு ஆவிகள் மூலம் கடுமையான அறுவை சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினார். இதுவரையில் 84,000 நோயாளிகள் பலன் அடைந்துள்ளார்கள். முதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலில் தர்பங்கா என்னும் இடத்தில் இதை நிகழ்த்திக் காட்டினார். பிறகு ஹைதராபாத்தில் சில காலம் சிகிச்சை செய்தார். 1982 முதல் டெல்லியில் சிகிச்சைகளை செய்கிறார்.

இந்த அறுவை சிகிச்சை முறை உலகம் முழுவதும் பரவவேண்டும் என்கிறார். அவர் சிகிச்சை செய்யும்போது அதைப் பிறர் பார்க்கவும் ஆராய்ச்சி செய்யவும் வசதியாக ஆங்கில டாக்டர்களையும் அனுமதிக்கின்றார். இந்தச் சிகிச்சைகளுக்கு அவர் பணம் கேட்பது இல்லை. ஆனால் நாமாகவே ஏதாவது பணம் கொடுத்தால் மறுப்பதும் இல்லை. பாபா சந்தேகப் பேர்வழிகளைப் பார்த்து ஆவிகளைப் புகைப் படம் எடுப்பதற்கு நீங்கள் விரும்பினால் வாருங்கள் என அழைக்கின்றார்.

வெள்ளைத்துணி விரிக்கப் பெற்ற மேஜை மீது ஒரு பெண்மணி படுத்திருக்கிறார். அவரது வயிறு நன்றாக வெளியில் தெரியும்படி செய்யப்படுகின்றது. 'பாபா' அங்கு வருகிறார். பட்டுத் துணியால் பாபா ஜிப்பா அணிகின்றார். ஒரு சாதாரணத் துண்டுக் காகிதத்தை எடுத்துக் கொண்டு ஆபரேஷன்களைச் செய்யத் தொடங்குகின்றார். இவரைப் பற்றிய கட்டுரையொன்று ஆபரேஷன் செய்யும் புகைப் படங்களுடன் வட இந்தியாவிலிருந்து வெளிவரும் The Sun என்ற ஆங்கிலப் பத்திரிகையில் முன்பு வெளியானது. அதில் நிருபர் தெரிவித்துள்ள தகவல்களை அப்படியே வெளி யிடுகிறேன். அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய பெண்மணிக்கு மயக்க மருந்து அல்லது பிற மாத்திரைகள் தரப்பட்டிருக்கவில்லை. சுயநினைவுடன் படுத்திருக்கின்றார். அப்பொழுதே அறுவை நடந்தது.

பாபா எந்தவிதமான மருத்துவ உபகரணங்களையும் உபயோகிப்பதில்லை. துண்டுக்காகிதத்தையே கத்தியாகப் பாவித்து அந்தப் பெண்ணின் வயிற்றில் அறுக்கிறார். பாபா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வயிற்றினுள் கையைவிட்டு வேண்டாத கட்டிகளை அகற்றுகிறார். பிறகு மீண்டும் காயத்தை ஒட்ட வைத்து விடுகின்றார். இவை அனைத்தும் ஆவிகளால் செய்யப்படு கின்றன. சிகிச்சையைப் பற்றித் தீர்மானிப்பதுகூட ஆவிகள்தான். இதில் அதிசயம் ஒன்றும் இல்லை என்கிறார் இந்த பாபா. இந்த அதிசய மனிதரின் கையால் ஆபரேஷன் செய்துகொண்ட ராஜ் மிஸ்ரா என்ற நிருபர் தம் அனுபவங்களைக் கூறுகின்றார். ''பாபாவைச் சந்தித்துப் பேட்டி காணும் வரையில் எனக்கு ஆவிகள் செய்யும் அதிசய சிகிச்சைகளில் நம்பிக்கை கிடையாது. மனத்தில் ஏராளமான கேள்விகளுடனும் அவரிடம் நான் சென்றேன். நான் அவரிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. என் மனத்தில் இருந்த கேள்விகளுக்கு அவர் தானாகவே பதில் அளித்தார். நான் ஆவிகளைப் புகைப்படம் எடுக்கவும் ஆவிகளின் பேச்சுக்களை ஒலி நாடாவில் பதியவும் விரும்பினேன். ஆவிகளைப் படம் எடுக்க முடியுமா என்று நினைக்கிறாயா? ஆவிகளின் குரல்களைப் பதிவு செய்ய விரும்புகிறாயா? அறுவை சிகிச்சையை நேரில் பார்த்துப் புகைப்படம் எடுக்க நினைக்கிறாய் அல்லவா? எல்லாவற்றிற்கும் உன்னை அனுமதிக்கிறேன் என பாபா என்னிடம் கூறி அனுமதி யளித்தார். மறுநாள் வரும்படி கூறினார்.

மறுநாள் நான் அவரது பூஜை அறையில் உட்கார்ந்திருந்தேன். சிறிது நேரம் பூஜை செய்த பிறகு அங்கிருந்த வெறும் சுவரை நோக்கிப் படம் எடுக்கச் சொன்னார். எனக்கு மனதில் சந்தேகம் தோன்றியது. அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு 36 படங்களைக் காலிச் சுவரை நோக்கிப் படம் எடுத்தேன். 'படங்களைக் கழுவிப் பார்க்கும்போது உனக்கு அனைத்தும் புரியும்' என பாபா அமைதியாகப் பதில் கூறினார். குழப்பத்துடன் நான் வீட்டுக்கு வந்து, பிலிம் சுருளைப் பிரிண்ட் போட்டுப் பார்த்தபோது உண்மையில் அதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில அமானுஷ்ய உருவங்கள் தெரிந்ததைக் கண்டு திகைத்துப் போனேன் என்றும் தான் கண்ட உண்மைகளைப் பற்றியும், வியப்பினையும் ராஜ்மிஸ்ரா The Sun பத்திரிகையில் எழுதியுள்ளார். இந்த ஆங்கிலப் பத்திரிகை பாபா ஆபரேஷன் செய்யும்போது எடுத்த படங்களைப் பெரிய டாக்டர்களிடம் காட்டி கருத்துக் கேட்டுள்ளது. டாக்டர்கள் இதனை நம்ப மறுத்தனர். அந்தக் கருத்துக்களைப்பற்றிப் பாபாவிடம் விளக்கம் கேட்டது அந்தப் பத்திரிகை. 'இந்த உலகில் எல்லாச் செயல்களையும் அனைவருக்கும் புரிய வைக்க முடியாது. அவர்கள் அனைவரது முன்னிலையிலும் மயக்கம் தராமல் மூளை ஆபரேஷனையே செய்து காட்டுகிறேன்' என்று பாபா பதில் கூறியுள்ளார். நற்செயல்புரிய ஆவிகள் இருப்பது போலத் தீச்செயல் புரியவும் ஆவிகள் உள்ளன. துர்மரணமே இதற்குக் காரணம். ஒரு வீட்டில் துர்மரண ஆவி இருந்தால் வீடு இருளடையும். விளக்கு பிரகாசமாக எரியாது. குடும்பத்தில் கலகம் ஏற்படும். சமைத்த சாதம் ருசிக்காது. சிறு குழந்தைகள் திடீர்திடீர் என அழும். திடீரென துர்நாற்றம் வீசும். படங்கள் – பூஜைப் பொருள்கள் கண்ணாடிகள் கீழே விழுந்து உடையும். நடுவீட்டில் சூடனைக் கொளுத்தினால் தீபச் சுடர் நேராக எரியாது. சுழன்று எரியும். நல்ல காரியங்கள் செய்ய விடாது. செவ்வாய் – வெள்ளி அமாவாசை – பௌர்ணமியில் நெஞ்சில் அழுத்தும். பயங்கர கனவு உண்டாகும். சிலரின் மேல் தொற்றிக் கொண்டு அருள்வாக்கும் சொல்லும்.

தன்னைக் கும்பிட்டு படையல் படைக்கச் சொல்லும். இவை சில உதாரணங்கள். வீடுகள், லாட்ஜுகள், ஹாஸ்டல்கள், ஆஸ்பத்திரிகள், பழைய அரண்மனைகள் ஆகியவைகளில் மேற்படி துர்மரண ஆவிகள் அலைகின்றன. அவற்றை மாந்திரீகத் தொழில் தெரிந்தவர்கள் மூலம் பச்சைப் பானைகளில் அடைத்து ஆற்றங்கரை, குளக்கரை, கடற்கரை, வனங்கள் ஆகிய இடங்களில் விட்டால் அந்த ஆவிகளுக்கும் விடுதலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமக்கும் நிம்மதி. இது ஒரு பெரிய புண்ணியச் செயல். துர்மரணம் அடைந்தவர்களை வணங்கக் கூடாது. அவர்களின் பெயரைக் குழந்தைகளுக்கு வைக்கக் கூடாது. அவர்களுக்குப் படையல் போடக் கூடாது. உச்சாடன கணபதி ஹோமம் மற்றும் பிதிர் ஹோமம் மூலம் அவைகளை வேறிடத்திற்குப் போகச் செய்யலாம்.

துர்மரணமடைந்தது வாலிப வயதுப் பையனாக இருந்தால் வாலிப வயதுப் பெண்ணைத் துன்புறுத்தும். துர்மரணமடைந்தது வாலிப வயதுப் பெண்ணாக இருந்தால் வாலிப வயதுப் பையனை துன்புறுத்தும். கைகள் கால்கள் உள்ளங்கால்கள் தொப்புள் ஆகிய இடங்களில் மருதாணி இலையை மட்டும் பிடுங்கி அரைத்துத் தடவி வந்தால் துர் ஆவிகள் தாக்கா. டியூப்லைட் வெளிச்சம் பாதரச விளக்கு வெளிச்சம் ஆகியவைகளுக்கு ஆவிகள் மற்றும் சிறு தேவதைகள் செயல் இழக்கும். தனியாகப் படர்ந்து இருக்கும் பிரண்டையை எடுத்துத் துவையல் அரைத்துச் சாப்பிட்டால் ஏவல், பில்லி, சூனியம், துர்ஆவிகள் தாக்கா. தடியங்காய் அதாவது வெண்பூசணி லேகியம் அல்லது வெள்ளைப் பூண்டு லேகியம் சாப்பிட்டால் துர் ஆவிகள் தாக்குதல் இருக்காது. எந்தெந்தப் பொருட்கள் விஷத்தை நீக்குமோ அந்தந்தப் பொருட்கள் ஆவிகளை விரட்டும். எந்தெந்தப் பொருட்கள் ஆவிகளை விரட்டுமோ அந்தந்தப் பொருள்கள் விஷத்தை நீக்கும். நயம்சாம்பிராணி, வலம்புரிகாய், கோஷ்டம், விரலி மஞ்சள் ஆகியவைகளை நன்கு இடித்து அதிகாலை மற்றும் இரவு புகைபோட ஆவிகள் ஓடும். புகைபோட்டவுடன் கைகளை நன்கு கழுவ வேண்டும். அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இருளை நீக்கி ஒளியைத் தருவாராக.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. உங்கள் மனோசக்திக்கு ஓர் பரீட்சை

உலகம் தோன்றிய நாள் முதல் காலம் என்னும் கணக்கும் தோன்றியது. ஆதிமனிதன் சிறிது அறிவு வளர்ச்சி யடைந்தவுடன் சூரியன் சந்திரனை வணங்கினான். பின் நெருப்பு, மழை, புயல் இவைகளை வணங்கினான். பௌர்ணமி மற்றும் அமாவாசை நாளைக்குறித்து மரங்களில் குறியீடு செய்தான். பின் படிப்படியாகக் கால நிலைகளை அறிய முற்பட்டான். வெற்றியும் பெற்றான். மெக்காவில் 365 நாட்களுக்கும் 365 தேவதைகள் வழிபாட்டில் இருந்துள்ளன. முகம்மது நபிக்குப்பின் அவை அகற்றப்பட்டு விட்டன. இப்ராஹிமுக்கு ஆதியில் இறைவனால் கொடுக்கப்பட்ட தேவலோகக் கல் மட்டும் இன்னும் உள்ளது. அது கிழக்கு நோக்கி இருப்பதால் இஸ்லாமியர் மேற்கு நோக்கித் தொழுகின்றனர். இந்து சாஸ்திரப்படி அக்கல்லின் பெயர் சோமலிங்கம். எவர் ஒருவர் அக்கல்லைக் கட்டி தழுவுகின்றார்களோ அவர்கள் பாவம் நீங்கும். மனித பரிணாம வளர்ச்சியும் மெய்ஞ்ஞான வளர்ச்சியும் வளரத் தொடங்கியது. பஞ்ச பூதங்களை ஆராய்ந்தான். கிரஹ மாற்றங்களைக் கவனித்தான். நட்சத்திரங்களை உற்று நோக்கினான். ஒவ்வொன்றின் அறிவையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டான். பிற் காலத்தில் அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்திலும் அதாவது நமது உடலிலும் உள்ளது என உணர்ந்தான். தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம் என்னும் முடிவுக்கு வந்து விட்டான்.

அட்டமாசித்துகளில் வசியம் என்பதும் ஒன்றாகும். மனோசக்தியே வசியத்திற்கு முக்கியம். வசியமாவது, கண்களால் அல்லது நாவினால் மற்றவர்களை, விலங்கு, பறவைகளை அல்லது பொருள்களை வசமாக்குவதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவர்களின் புத்தி, சித்தம், விருப்பம் முதலியவற்றை அவர்களால் அடக்கி நடத்த முடியாமல் செய்து நமது சித்தத்திற்கு இணங்கி நடக்கச் செய்யும் சக்திக்கு வசியமென்று கூறுவர். சிலர் இந்த வசிய சக்தியானது நம்மிலிருந்து மற்றவர்களிடம் தண்ணீர்போல ஓடிப்பாய்கிற தென்பார். வேறு சிலர் அவ்வித சக்தி ஒன்றும் நம்மிலிருந்து வெளியாகிறதில்லை; ஆனால் நமக்கு வேண்டிய செய்திகளை யோசனைக் குறிப்புகளாக (Suggestions) அடிக்கடி அவர்கள் மனத்தின்முன் தோன்றச் செய்வதால் அவர்கள் புத்தி சித்தங்களைக் கைவசமாக்கலாம் என்பர். எவர்கள் எவ்வாறு சொன்னாலும் கடைசி முடிவு ஒன்றே. ஒவ்வொருவரின் மனோ சக்தியும் நீர் அலைகள் கரையை மோதிச் செல்வதுபோல் ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் ஓடிச்செல்லுகின்றது என்பதும், ஒருவருடைய மனத்திலுள்ள விருப்பு வெறுப்புகளை மற்றவனுடைய மனதிடமும் பதித்து விடுகின்றனவென்பதும் உண்மை. மனோசக்தியை (1) வேட்கைக் கிளர்ச்சி (Desire Force) (2) சித்தசக்தி (Will Power) யென இருவகைப் படுத்தலாம். வேட்கைக் கிளர்ச்சி (Desire Force) விரும்பப் பட்டவர்களை அல்லது பொருள்களைத் தன்னிடம் இழுத்துக் கொள்ளுந் தன்மையுடையது. இதற்கு உதாரணம் ஆண் பெண்களுக்குள் உண்டாகும் பாசக் கவர்ச்சி யென்னலாம். சித்த சக்தியோ (Will Power) ஆண்டு நடத்துந் தன்மை யுடையது. தனக்கு வேண்டியவர்களைக் கிரியை நடப்பிக்கத் தூண்டிவிடுவது சித்த சக்தியாகும். மனோவசியத்தில் இவ்விரு சக்திகளும் ஒன்று சேர்ந்து செயல்படுகின்றன. இதை நிரூபிக்கச் சில உதாரணங்கள் இங்கே குறிப்பிடுவோம்.

அனைத்துவகை உயிரினங்களுக்கும் வசிய சக்தி உள்ளது. சிங்கமானது யானையைத் தாக்கச் சுற்றி ஓடிவரும் பொழுது சிங்கத்தின் கண்களிலிருந்து உண்டாகும் வசியசக்தியால் யானையானது கால் தள்ளாடிப் பலங்குன்றிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போகின்றது. சிங்கம், புலி, கரடி, பாம்பு முதலிய விலங்குகளைத் திடீரென்று காண்கிறவர்களும் அவற்றின் கண்களின் காந்தத்தால் வசியமாகி அவற்றினின்றும் ஓடித் தப்பித்துக் கொள்ளச் சக்தியற்றுப் போகின்றனர். சுண்டெலி பூனையைப் பார்த்த உடனேயே படுத்துக் கொள்ளுவதைக் கவனித்திருப்பீர்கள்! இன்னும் பறவைகளுக்குள்ளிருக்கும் ஆண் பெண் சேர்க்கையில் வசிய சக்தி மர்மம் நன்றாய் விளங்கும். சேவலானது பேடுடன் சேர எத்தனிக்கும் பொழுது செய்யும் வசிய முறையைக் கவனித்திருப்பீர்கள். அவ்வசிய சக்தியால் பெட்டையானது தன் இறகுகள் நடுங்கக் கண்களில் சக்தி குன்றி அரைவிழி விழித்துக் கொண்டு அசையாது படுத்து விடுகின்றது.

பாம்புகளின் வசிய சக்தியைப்பற்றி இங்கே கூற விரும்புகின்றேன். குற்றாலத்தில் உள்ள ஐந்தருவி உள்ள மலைச்சார்பில் நானும் சில உறவினர்களும் உலாவி வருகையில் பாதையின் பக்கத்தில் பல பறவைகள் செர்ச்சித்துக் கொண்டு பறந்து வருவதைக் கவனித்தோம். அந்தப் பக்கம் பார்க்க ஆங்கோர் புதரில் ஓர் கருநாகப் பாம்பு தன் தலையை உயர்த்திக் கொண்டிருந்தது. கண்கள் காந்தியுள்ள ரத்தினமயமாய்ப் ஏறிவிட்டுக் கொண்டு இருந்தது. பாம்பானது தன் நாக்கை வெளியில் காண்பிக்கிறதும் உள்ளிழுக்கிறதுமாக இருந்தது. அநேகச் சிறு பறவைகள் அந்தப் பாம்பைச் சுற்றிச் சுற்றி முன்னும் பின்னுமாக மதிமயங்கிக் கூச்சலிட்டுக் கொண்டு பாம்பினருகில் பாய்ந்தன. எங்கள் கூட்டத்தைக் கண்டதும் பாம்பானது புதருக்குள் நகர்ந்து விட்டது. பறவைகளோ மதிமயக்கத்தால் அருகிலிருந்த மரக்கிளைகளில் உட்கார்ந்து கொண்டு பாம்பின் மறு வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

பாம்புகளைப் பற்றிய நூற்களிலும் அவற்றின் வசிய சக்தி தெளிவாய் விளங்கும். சிறு பறவைகள், அணிற்பிள்ளைகள், முயல் குட்டிகள் முதலியவை கொடிய நாகப் பாம்புகளை கண்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத்திரத்தில் அவற்றைவிட்டுத் தூரஞ்செல்ல முயன்ற போதிலும் தமது கண்களை பாம்புகளின் பார்வையினின்று அப்புறப்படுத்தச் சக்தியற்றவைகளாய் அவற்றின் முடிகள் சிலிர்க்கத் தமது அறிவுக்கு மேலான ஏதோ ஓர் அபார சக்தியால் இழுக்கப்படுவது போல் பாம்பின் பக்கமாகவே வருகின்றன. இவ்விதமாய் நெருங்கி நெருங்கிச் சென்று தமது வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் பாம்பின் திறந்த வாயினுள் இழுக்கப்படுகின்றன.

வசிய வகைகளின் மிருக வசியமும் ஒன்றாகும். நம் இந்திய நாட்டில் பாரஸ்டு இன்ஸ்பெக்டர் ஜெனரலாகிய மிஸ்டர் எர்ட்லி – வில்மாட் வட பகுதியில் உலக இன்ப, துன்ப வாழ்வைத் துறந்து பல்லாண்டுகளாய்ப் பல காடுகளில் திரிந்து தெளிந்து உடலை வாட்டி யூகத்தை நாட்டி சுகவாழ்விற் பொருந்தும் வழியாகிய மோன நிலையை நாடி ஞான நிலை தேடிச் சிறந்த மெய்யான பக்கிரிகளையும் சாமியார்களையும் பார்த்து வந்தார். நிராயுத பாணியாய்த் தனித்திருந்தும் கொடிய மிருகங்கள் நிறைந்துள்ள காடுகளில் பயமின்றி வருவோராகிய பெரியோர்களை இவர் மதித்து வந்தார். இவரது அனுபவத்தில் அப்பெரியோர் தாம் வாழும் காட்டிலேயுள்ள எந்த விலங்கும் தாமிருக்கும் இடத்திற்கு வரவழைக்கும் வல்லமை சிலருக்கு உண்டென்று அறிய வந்தார்.

அவரால் இவ்வல்லமை பெற்ற ஓராசாமியைப் பார்க்க நேர்ந்தது. அந்தப் பக்கிரி நேபாளத்திலிருந்து 8 மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அந்தப் பக்கிரி வாடி வதங்கி வலுவற்ற கிழவனாராகக் காணப்பட்டார். அவர் ஒரு வெள்ளாடும் ஒரு பாட்டில் சாராயமும் கொடுத்து விட்டால் மறுநாள் காலை வேட்டைக்கு அவர்களுடன் வருவதாகக் கூறினார். உடனே இரண்டும் வாங்கிக் கொண்டு போய்த் திரும்பிவந்ததும் தன்னைப் பெரிய யானைமேல் ஏற்றிக் கொள்ளக் கேட்டார். பிறகு இடுப்பிலிருந்து எடுத்த ஒரு செப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணியை விரலால் தட்டிக் கொண்டே மந்திர உச்சாடனம் பண்ணிக்கொண்டு வேட்டைக்காரரோடு புறப்பட்டுப் போனார். போய்க் கொண்டிருக்கையில் அங்கிருந்த புதர் முனையிலே நின்றுவிட்டார். அதில் ஒரு பன்றி அல்லது மான் மறைந் திருக்கக் கூடுமேயன்றி ஒரு புலி மறைந்திருக்கக் கூடாமை யாக மிஸ்டர் வில்மாட் நினைத்தபடி சாமியாரிடஞ்சொல்ல, அவர் அதோ புலியென்றதும் உடன்வந்த வேட்டைக்காரர்கள் ஓடித் தேடிப்பார்த்து ஒன்றுங் கிடையாதென்று கூற அப்பால் போவோம் வாருங்களென்றார்கள் எனப் பக்கிரி கூறினார். அப்போதும் சாமியார் முன்பு போலவே சென்றார். வேட்டைக்காரர் மறுபடியும் பார்வையிட்டபோது இரண்டு யானைகளுக்கிடையே நகரும் ஒரு பெரும் புலியைக் கண்டார்கள். கண்டதும் அவுதாவிலுள்ள பெரியோரை நோக்கி மெதுவாக நடந்து போய் மயங்கி நின்றுவிட்டது. அப்பொழுது வேட்டைக்காரர்கள் அதைச்சுட்டு வீழ்த்திக் கொன்றனர். அதன்பிறகு மறுபடியும் மணிதட்டிக் கொண்டு சென்றபோது வேறொரு புலியும் அப்படியே நிற்கச் சுட்டெடுத்துக் கொள்ளப் பட்டது. இதுபோலவே 5 நாளில் 6 புலிகள் சுட்டெடுத்துக் கொண்ட பிறகு, சாமியார் இப்படிப் புலிகளையெல்லாங் கொன்றுவிட்டால் புலியினமே அழிந்து போய்விடுமென்று சொல்லி அதோடு நிறுத்திவிட்டார். மேலே கூறியது உண்மையே. இச்செய்தி 1908 ஆண்டு நவம்பர் மாதம் 20ல் வெளியான சுதேசமித்திரன் செய்தித்தாளில் வெளியானது. இதிலிருந்து கண்களுக்கு வசிய சக்தி உண்டு என்றும் மனோ சக்தியுடன் கண்களால் பல செயல்கள் புரியலாம் என்பதும் நன்கு விளங்கும். மனோ சக்தி அதிகரிக்க மூச்சுப் பயிற்சி வேண்டும்.

முறையான மூச்சு விடுவது பற்றி விளக்குவதே பிராணாயாமம். இதனால் ஜீவசக்தி பெருகுகின்றது. நம்மிடத்திலுள்ள ஜீவசக்தியை மற்றவரிடத்தில் கொடுத்து விடுவதால் நமது சக்தியும் பலன்குன்றி விடாதோ என்று சிலர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணுவார்கள். "இறைக்கிற கிணறு சுரந்துகொண்டிருக்கும், இறையாத கிணறு பாழுங்கிணறு" என்பது பழமொழி. அதுபோலவே நாம் நம்மிடத்திலுள்ள சக்தியைப் பிறரின் நன்மையைக் கருதியும் உபயோகிக்கலாம். இந்த எண்ணமே நமக்குள் பலவகையான மகிழ்ச்சியைக் கொடுக்கும். அந்த மகிழ்ச்சியின் மூலமாக இவ்வுலகெங்கும் பரவி இருக்கும் ஜீவ சக்தியை நம்மிடத்திலுள்ள காந்தக் கவர்ச்சியால் இழுத்துக் கொள்வதால் நம்மிடத்திலுள்ள சக்தி பெருகிக் கொண்டே வரும். ஆபத்தில் அழுந்துபவர்களை மீட்டு இரட்சிக்கும் பொருட்டு நாம் எவ்வளவு சக்தியை ஆத்திரத்தோடு உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்குப் பல மடங்கு அதிகமாக நமக்குக் கொடுக்க இறைவன் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கிறான். நம்முடைய சக்தியைப் பெருக்கும்படி நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல முறைகளை இனிமேல் வரும் புத்திகளில் தொகுப்பாய்க் கொடுத்துள்ளேன். ஆதலால் எவ்விதத்தும் தைரியத்தை விடாமலும் ஆத்திரப்படாமலுமிருந்து ஆறுதலோடும் அமைதியோடும் கற்று மனோசக்தியைப் பெருக்க வேண்டுகின்றேன்.

இனிமேல் சுவாசாப்பியாச முறைகளில் சிலவற்றை உங்களுக்குச் சொல்லுகின்றேன். அவைகளைத் தினமும் கடைப்பிடித்து வருவீர்களாயின் உங்களுக்குள்ளிருக்கும் ஜீவசக்தி வளர்வதுடன் உங்கள் ஆயுளும் நீடித்து வாழ்வீர்கள் மேலும் உங்களுக்குள்ளிருக்கும் கோபம், பயம், சஞ்சலம் முதலிய ஜீவசக்தியைக் குறைக்கக் கூடிய தன்மைகளை நீக்குவதற்கும். ஜீவசக்தியைப் பெருக்கும் தன்மைகளாகிய அன்பு, சாந்தம், பொறுமை, இச்சையடக்கம், மகிழ்ச்சி முதலிய நற்குணங்களை அதிகப்படுத்துவதற்கும், நோய்களைத் தீர்ப்பதற்கும் பிராணாயாமமே சஞ்சீவி என்னலாம். இதன் மூலமாகவே ஞானவொளி உண்டாகி ஆனந்த ஜோதியுடன் கலப்பதற்கும் ஏதுவாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கச்சம் ஸ்திடந் ஸதாகாலம்
வாயுஸ வீகரணம் பரம்
ஸர்வகால ப்ரயோகேந
ஸஹஸ்ரா யுர்ப்பவேந் நர:

(இதன் பொருள்) நாம் போகும்போதும், இருக்கும்போதும் எப்பொழுதும் வாயுவை உட்கொள்ளுதல். அதாவது "பிராணாயாமஞ் செய்தல்" மிகவும் நலம். இவ்வாறு செய்வதால் நரனாகிய மனிதன் ஆயிரம் ஆண்கள் உயிரோடு வாழக் கூடியவனாகிறான் என்று அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உபதேசித்ததாக உத்தர கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

சுவாசமானது சிறுமூச்சு, பெருமூச்சு என இருவகைப்படும். நம் ஜீவியத்தில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நாம் உள்வாங்கி வெளிவிடும் மூச்சே சிறுமூச்சாகும். ஆனால் பெருமூச்சென்பது சுவாசப்பையாகிய நுரையீரல் பூர்த்தியாய் நிறையுமட்டும் சுவாசத்தை நாசியின் வழியாக உள்ளேயிழுத்துப் பூரகஞ் செய்து அங்கு அதை நம்மால் கூடிய நேரமட்டும் நிறுத்திக் கும்பகம் செய்து, பின்பு சிறிது சிறிதாய் வெளியே விட்டு இரேசகம் செய்வதாகும் இவ்வித அப்பியாசமே பிராணாயாமம் என்னப்படும்.

பூரகம் – சுவாசத்தை உள்ளுக்குள் இழுத்தல். கும்பகம் – ஸ்தம்பனஞ்செய்து சுவாசத்தை உள்ளே நிறுத்துதல். இரேசகம் – சுவாசத்தை வெளியிடுதல். ஆற்றங்கரை, சமுத்திரக்கரை, பசுமையான மரம், செடிகளுள்ள தோப்புகள், மலையின் சிகரம் முதலிய சுத்த ஆகாயமுள்ள இடத்திலேயே பிராணாயாமம் செய்ய வேண்டும். பிராணாயாமம் செய்யும் பொழுது வாயை மூடிக் கொண்டு மூக்கு வழியாகவே சுவாசத்தை உள்வாங்கி மூக்கு வழியாகவே வெளி விட வேண்டும். பிராணாயாமம் செய்யத் தொடங்குமுன் ஆடைகளை எல்லாம் தளர்த்திவிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறுபது வினாடி அதாவது அறுபது எண்ணுகிற நேரங் கொண்டது ஒரு நிமிஷம் என்பதை மனதில் வைத்துக்கொள்.

படுத்துக்கொண்டு, நின்றுகொண்டு அல்லது ஆசனமிட்டு இந்த அப்பியாசங்கள் செய்வது உத்தமம்.

உணவு சாப்பிட்டவுடன் இந்தப் பயிற்சி உதவாது.

காலையிலும், மாலையிலும், மத்தியானத்திலும் பத்து நிமிஷத்திற்கு அதிகமாக இப்பயிற்சி செய்யக்கூடாது.

ஆரம்பத்தில் ஒவ்வொரு நேரத்திலும் ஐந்தாறு தடவை பிராணாயாமம் செய்வதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் அதிகநேரம் செய்தால் ஓர்வித மயக்கமும் நுரையீரலுக்குக் கேடும் நேரிடக்கூடும். ஆதலால் ஆரம்பத்தில் மிதமாகவே பயிற்சி செய்ய வேண்டும்.

பின் கற்றுத் தரப்படும் பயிற்சிகள் எல்லாவற்றையும் ஒரு வாரத்தில் பழகிக்கொள்ள வேண்டுமென்று ஆத்திரப்படக் கூடாது. மெள்ளமெள்ளப் பாயுந் தண்ணீர் கல்லுங் குளிரப் பாயும். ஆனால் நாலைந்து நாள் பயிற்சி செய்துவிட்டு அப்புறம் அதைவிட்டு விடுவதினாலும் பயனில்லை என்பதையும் அறிந்து கொள்க.

ஓரிடத்தில் நின்றுகொண்டு, படுத்துக்கொண்டு, அல்லது உட்கார்ந்துகொண்டு உன் நாசியினால் மெதுவாக சுவாசத்தை உள்ளுக் கிழுக்க வேண்டும். அப்பொழுது வயிறு சிறிது தாழும். நுரையீரலும் விம்மி மார்பு அகலும். இவ்விதமாக எட்டு விநாடிக்கு சுவாசத்தை உள்ளுக்கு இழுத்துப் பூரகம் செய்தபின் எட்டு விநாடி நேரம் மூச்சை உள்ளடக்கிக் கும்பகம் செய்ய வேண்டும். அதன்பின் எட்டு விநாடி நேரத்தில் மெதுவாக சுவாசத்தை வெளிவிட்டு இரேசகம் செய்ய வேண்டும். சிலர் இவ்வப்பியாசத்தை எளிதில் செய்யக்கூடும். மற்றவர்களுக்கு ஆரம்பத்தில் சிறிது கடினமாகத் தோன்றும். கடினமாகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றுவதால் பயிற்சியை விட்டுவிடக் கூடாது. அப்படிப் பட்டவர்களுக்கே இப்பயிற்சி மிக அவசியம். இவ்விதமாக ஆரம்பத்தில் ஒரு தடவைக்கு 24 விநாடி அதாவது ஏறக்குறைய அரை நிமிட நேரமாக ஏழு அல்லது எட்டுத்தடவை செய்தபின் நிறுத்திவிட வேண்டும். அதன்பின்பு வரவரப் பூரக, கும்பக, இரேசங்கள் ஒவ்வொன்றையும் பத்து விநாடிநேரம் செய்யப் பழக வேண்டும். இவ்விதமாக வரவர அதிகரித்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தமது தேக ஆரோக்கியத்துக்குத் தக்கபடி நீட்டி அல்லது குறைத்துப் பயிற்சி செய்ய வேண்டும். இதனால் மறதி அகலும், நினைவு சக்தி கூடும். உடல் சுறுசுறுப்படையும், எண்ணங்கள் செம்மையாகும்.

மனிதனின் வலது மூக்கில் சூரிய்கலை என்னும் சுவாசம் ஓடுகின்றது. இடது மூக்கில் சுவாசம் ஓடும்போது சந்திரகலை என்னும் பெயர் பெறுகின்றது. இரண்டும் சரிசமமாக ஓடும் போது சுழுமுனை என்னும் சுவாசம் சிறிது நேரம் மட்டும் இருக்கும். சூரிய கலையில் மூன்றே முக்கால் நாழிகை அதாவது $1\frac{1}{2}$ மணிநேரம் சுவாசம் ஓடும். பின் அது நின்று சந்திர கலையில் $1\frac{1}{2}$ மணி நேரம் சுவாசம் நடக்கும். சூரியகலை வெப்பம். சந்திரகலை குளிர்ச்சி. இப்படி சுவாசம் மாறிமாறி நடப்பதால் நமது உடல் வெப்பத்தினாலும் குளிர்ச்சியாலும் பாதிக்கப் படாமல் சமச்சீர் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சமச்சீர் நிலையில் கடும் மாறுதல் ஏற்படும் பொழுது உடலில் நோய் உண்டாகின்றது. டாக்டர்கள் பரிசோதிக்கும் 98.5 டிகிரி வெப்பநிலை இதன் மூலம் கண்டறியப்படுகின்றது. இது பற்றிய மேல் விபரங்களை உங்களுக்கருகில் இருக்கும் சித்த மருத்துவரிடம் கேட்டு விளக்கம் பெறலாம். ஒரு நாள் ஒன்றுக்கு 21600 முறை சுவாச ஓட்டம் நமது உடலில் ஏற்படுகின்றது. இதை அடிப்படையாக வைத்து நாள், திதி, மாதம், வருடம், யுகம் ஆகிய கணக்குகளை அக்காலத்திலேயே வகுத்துள்ளனர். அதனால்தான் கால கணிதம் உலகம் பூராவிலும் ஒரே மாதிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணக்கிடப்படுகின்றது. தேச கால வர்த்தமானப்படி பகலிரவு வித்தியாசப்படும். உங்கள் வலது மூக்கில் சுவாசம் ஓடும்போது சூரியகலை என்னும் பெயர் பெறுகின்றது.

சூரியகலை வெப்பத்தைத் தருகின்றது. அந்நேரம் போட்டி, பந்தயங்கள், வாதங்கள், மந்திரப் பிரயோகங்கள் செய்ய வெற்றி நிச்சயம் கிடைக்கும். ஞாயிறு சூரியனுக்குண்டான நாள். கார்த்திகை, உத்திரம், உத்திராடம், சூரியனுக்குண்டான நட்சத்திரங்கள். ஆவணி மாதம் சூரியனுக்குண்டான மாதம். தினமும் சூரிய ஹோரை காலம் வருகின்றது. இவைகளை நீங்கள் சிறிது எண்ணிப் பார்த்தாலே சூரிய சக்தி உங்களுக்குள் ஏற்பட்டு விழிப்படையத் தொடங்கும். வலதுகண், வலதுகை. வலதுகால் ஆகிய வைகளுக்கு அதீத சக்தி கிடைக்கும் உங்கள் வலது பக்க உடல் சூரியகலையின் ஆதிக்கத்தில் வரும். சூரியகலையில் வலதுகண்ணால் கொங்கண முனிவர் தன்மீது எச்சம் போட்ட கொக்கைப் பார்த்தால் அது எரிந்து சாம்பல் ஆனது. உங்கள் மனோ சக்தியை அறியச் சூரியகலையில் ஒரு சிறு பரீட்சை. உங்கள் வலது மூக்கில் சுவாசம் ஓடும் பொழுது வீட்டை விட்டு வெளியே வாருங்கள். அங்குள்ள நிழல் பகுதியில் ஒரு மரநாற்காலியைப் போட்டு அதில் அமைதியாக அமருங்கள். இரு கால்களையும் மேலே தூக்கிச் சம்மணம் போட்டு இருக்க வேண்டும். வலது துடை மீது இடது கால் பாதப்பகுதி இருக்க வேண்டும். உடல் ஆடைகளைத் தளர்த்தி விட்டுக் கொள்ளவும். குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்தை மனதால் வணங்கிக் கொள்ளவும். வலது கைமோதிர விரலால் இடது மூக்கை அழுத்தி அடைத்துக் கொள்ளவும். மற்ற விரல்கள் நேராக நிமிர்த்தி வைக்கவும்.

இடது உள்ளங்கையை இடது முட்டின்மீது சாதாரணமாக வைக்கவும். டென்சன் வேண்டாம். அமைதி மற்றும் மன உறுதி வேண்டும். உங்கள் பார்வைக்குட்பட்ட 20 அடி தூரத்திற்குள் மேயும் கோழிகள் அல்லது சேவல்களில் ஒன்றை மட்டும் உற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோக்கி கொண்டே இருக்க வேண்டும். அது மேயும் பக்க மெல்லாம் உங்கள் பார்வையும் எண்ணமும் அதன்மீது பட வேண்டும். சுவாசத்தை மெதுவாக இழுத்து விட வேண்டும். மனதை ஒருமைப் படுத்தி ஓம் ரீங் வசிவசி என ஜெபிக்க வேண்டும். மனதால் ஜெபிக்க வேண்டும். மனமது செம்மை யானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம். மனதை உறுதிப் படுத்தத்தான் மந்திர ஒலிகள் தேவைப்படுகின்றன. ஆசனம், மெதுவான சுவாசம், உறுதியான பார்வை, மனதால் தொடர்ச்சியான மந்திர ஜெபம் உங்கள் உடலில் ஒரு பெரிய சக்தியைத் தூண்டும். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் சேவல் அல்லது கோழி உங்கள் முன் வந்து நிற்கும். பின் இறக்கைகளை விரித்துப் படுத்துத் தலையைத் தாழ்த்தி நமஸ்காரம் பண்ணிய நிலையில் படுக்கும். பின் அதன்மேல் தண்ணீர் தெளித்துப் போக வைக்க வேண்டும். அது அதன்பின் உங்கள் வசிய சக்தியில் இருந்து விடுபடும். இப்படியே நாயையும், மாட்டையும், வாத்துகளையும். பூனையையும் பரிசோதிக்கலாம். கருப்புமாடு, கருப்புப்பூனை, கருப்புநாய், கருப்புக்கோழி ஆகியவைகள் உங்கள் மனோசக்திக்குக் கட்டுப்படாது என அறியவும்.

அவசரப்படாமல் தினம் 15 நிமிடங்கள் வீதம் 30 நாள் பயிற்சியில் பலன் தெரியும். தோட்டங்கள், நந்தவனங்கள், மலையடிவாரங்களில் இப்பயிற்சியைச் செய்யலாம். வெற்றி கிடைக்கும். இதுதான் ஆரம்பப்பாடம். பின் உங்கள் புத்தியே வழிகாட்டும். சித்தம் செயல் படுத்தும். இது உங்கள் மனோசக்தியைப் பரீட்சை செய்ய ஒரு பயிற்சிதான். இதற்கும் தெய்வவழி பாட்டு முறைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஜாதி, மதபேத மில்லாமல் யார் வேண்டுமானாலும் பரீட்சை செய்யலாம். சைவ உணவு விரைவில் வெற்றியைத் தரும். உங்களது மனோசக்தியைச் சிறிது சிறிதாக வளரச் செய்து மேலும் சில அற்புதங்கள் செய்யலாம். மனோசக்தியால் நோய்களையும் குணப்படுத்தலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உங்கள் உடலில் எங்காவது பல நாட்களாக ஆறாத புண் இருந்தால் தினமும் மூன்று வேளைக்கு 5 நிமிடங்கள் வீதம் அதில் உங்கள் மனக் கவனத்தை ஒருமுகப்படுத்தி, அப்புண் குணமாகி விட்டதாகப் பாவனை செய்து வாருங்கள். இப்படிச் செய்யுமுன் அப்புண்மேல் ஏதாவது மருந்தைப் பூசியிருந்தாலும், இல்லாவிட்டாலும் நன்றாக வெந்நீரில் அல்லது கிருமி நாசினிகளால் சுத்தம் செய்து, ஈரம்போகத் துடைத்துவிட வேண்டும். இப்படித் தினம் 4,5 தடவைகள் செய்ய வேண்டும். சில நாட்களில், பல மாதங்களாக ஆறாதிருந்த அப்புண், ஆறி வருவதைக் கண்டு மனச் சக்தியைப் புகழ்வீர்கள். புண் குணப்படுவதைக் கண்டு வியப்படைவீர்கள். சுவாசப் பயிற்சியைச் செய்யும் போதும் மனம் சிறிதும் கவனிக்காமல் புண் மேலேயே நிலைத்திருக்க வேண்டும்.

உங்களின் ஆறாத புண்ணைக் குணப்படுத்திக் கொள்ளச் சொன்னது போலவே உங்கள் குடும்பத்தில் யாருக்காவது ஆறாமல் இருக்கும் புண்ணையும் குணப்படுத்தலாம். இதற்குக் கண்களால் அந்தப் புண்ணைப் பார்த்தபடி மனதை அங்கு நிலைநாட்டி, குணப்பட்டு விட்டதாகப் பாவனை செய்ய வேண்டும். இச்சாதனையால் பிளவை, கண்டமாலை, கட்டிகள், சீழ்ப் புண்கள் போன்றவைகளையும் அறுவை செய்யாமல் குணப்படுத்தலாம்.

இந்த மனோ சிகிச்சை முறையை உங்கள் குடும்ப நபர்களுக்கன்றி மற்றவர்களுக்குச் செய்ய முற்பட்டால் பல வீண் வம்புகள் உண்டாகும். அன்றி, இத்தகைய சிகிச்சைக்காக யாரிடமும் பணம் வசூலிக்க முற்பட்டால் அந்த நோய்கள் அவர்களைப் பற்றிக் கொள்ளும். இது ஓர் ரகசிய சிகிச்சையாகும். புண்களைக் குணப்படுத்தச் சொன்ன இதே முறையில் நெடுநாட்களாகத் தீராதிருக்கும் வயிற்று வலி, தலைவலி, பல்வலி முதலியவைகளையும் குணப்படுத்தலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆஸ்துமா எனும் சுவாச நோயால் உங்கள் குடும்ப நபர்களுக்கு இப்படிச் செய்ய வேண்டுமானால் அவர்கள் நுரையீரல்களை மாறி, மாறிக் கண்களால் பார்த்தபடி, முழுக்கவனத்தையும் அவைகள் மேல் வைத்து, மூச்சுப் பயிற்சி செய்த கைகளால் மெதுவாகத் தடவிக் கொடுத்தபடி இருக்கப் படிப்படியாய்க் குணமாவதைக் கண்டு மனச் சக்தியைப் புகழ்வீர்கள்.

மேலே சொன்னவைகளிலிருந்து மற்றும் பல நோய்களை மனச் சக்தியால் குணப்படுத்தும் முறைகளை நீங்கள் அறிந்து கொள்ளலாம். ஹோமியோபதி மருத்துவத்தைக் கண்டு பிடித்த டாக்டர் சாமுவேல் ஹனிமேன் கண்ட பேருண்மை,

"மனதின் வழியன்றி உடலில் நோய்கள் வாரா; மனதின் வழியன்றி நோய்கள் குணப்படா"

இதன் அடிப்படையில் அவர் எல்லா நோய்களுக்கும் முதலில் மனக்குறிகளைப் பகுத்தறிந்து, அதற்குத் தகுந்தபடி மருந்துகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்கிறார்.

மனமும், பிராணனும் சேருமிடத்தில் நோயிருக்காது. அங்கு ஆரோக்கியம் தானிருக்கும். இவ்விரண்டையும் இணைக்க நாம் சொன்ன இரு சாதனைகளையும் வலுவாகச் செய்து வந்தால் "புற்று" போன்ற கொடிய நோய்களையும் குணப்படுத்தலாமென்பது உறுதி.

மேற்சொன்ன முறைகளில் தன்னுடைய அல்லது தன் குடும்ப நபர்களினுடைய நோய்களுக்குச் சிகிச்சை செய்பவர் எப்போதும் உடலாலும், உடையாலும் தூய்மையா யிருக்க வேண்டும். உணவிலும், நினைப்பிலும் தூய்மை வேண்டும்.

நன்றாகக் குளிக்காமல், சுத்தமான உடைகளை அணியாமல் இச்சாதனையைச் செய்தால் தீங்கு உண்டாகும். மனதை ஒரு இடத்தில் நிலைப்படுத்தும்போது, மனதில் கோபம், ஆத்திரம் போன்றவைகள் கண்டிப்பாக இருக்கக் கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனோசக்திக்கு சிகிச்சை செய்பவரின் மனம், வாக்கு, காயங்கள் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும்.

பிறருக்குச் சிகிச்சை செய்யும் முன் முதலில் அவர்களைச் சும்மாயிருக்கும் நிலையில் இருக்கச் செய்த பின்பே மற்ற சாதனைகளைச் செய்ய வேண்டும்.

மேலே கூறிய பயிற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிறகு நீங்கள் எதைப் பேசினாலும், எதைச் செய்தாலும், எதை விரும்பினாலும், எதை உணர்ந்தாலும் உங்களுக்கு அதிக வல்லமையும் சத்தும் இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் விருப்பம் போலவே உங்கள் குணாதிசயங்களிலும் நடவடிக்கைகளிலும் உண்டாகும் மாறுதல்களைக் கண்டு அகமகிழ்வீர்கள். இவ்வித வல்லமையைப் பெற்றிருக்கிறோமென்னும் தைரிய லட்சுமியே உங்களுக்குள் குடியிருப்பதால் நீங்கள் எந்த விசயத்தையும் தைரியமாகத் துவக்கித் தைரியமாக முடிப்பீர்கள். எமது அடுத்த நூலில் பிராணாயாமம் செய்யும் விதங்களையும் அதனாலடையும் பலன்களையும் பற்றி விளக்குவேன்.

மேற்படிப் பயிற்சி பற்றி அறிந்திருப்பதால் தங்களது சுயபலத்தில் முழுநம்பிக்கை யுண்டாகிவிடவே, அவர்களுக்கு மற்றவர்கள் குழந்தைகளைப் போல் தோன்றுவார்கள். ஆனால் அவர்கள் கௌரவங்கொள்ளார். பாம்பாட்டிச் சித்தர் பாடுவதுபோல் தனது வல்லமையைப்பற்றித் தனக்குள்ளேயே தியானித்து :—

எட்டுநாகந் தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனாருலகத்தை இங்கே காட்டுவோம்
கட்டுக்கடங்காத பாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தனைக் கக்கியாடு பாம்பே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதிசேடனாகிலும் எம் அங்கையினாலே
ஆட்டிவிடுவோம் எங்கள் ஆக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றாடச் செய்வோம்
நின்றநிலை தவிராமல் ஆடு பாம்பே.

தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச்செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணை யாணுமாகச் செய்குவோம்
ஆரவாரித்தெதி ராய்நின் றாடுபாம்பே.

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கிவருவோம்
முந்நீருள் ளிருப்பினுள் மூச்சடக்குவோம்
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கிவிடுவோம்
தார்வேந்தர் நாங்களே யென்றாடு பாம்பே.

வேதன்செய்த சிருஷ்டிகள்போல் வேறுசெய்வோம்
வேதனையு மெங்கள்கீழே மேவச்செய்வோம்
நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்
நாங்கள் யாரென்றறிந்து நின்றாடுபாம்பே.

சீறுபுலி பெருயாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்
வீறுபெருங் கடவுளை யெங்களுடனே
விளையாடச் செய்வோமென் றாடுபாம்பே.

அறுபத்து நாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமே லொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுச் சற்றுமில்லா மனமுடையோம்
மன்னனே யாசானென் றாடுபாம்பே.

மிருக வசிய சித்திக்கும் வான மண்டலத்திலும் சப்தரிஷி மண்டலத்திலும் உள்ள சக்திகளை எப்படி நம் உடலுக்குள் ஈர்ப்பது என்னும் தியான முறையைப் புஞ்சைப் புளியம்பட்டி தபோவனத்தில் ஸ்ரீவேணுகோபால சுவாமிகள் மக்களுக்குக் கற்பித்துத் தொண்டு செய்கின்றார்கள்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. அறுசுவை உணவு

உலகைப் படைத்த ஆண்டவன் உயிரினங்களையும் படைத்தான். சுமார் 84 லட்சம் உயிரினங்களுக்குக் காலா காலத்திற்கு உணவு கிடைக்கும்படி ஆண்டவன் செய்தார். நீங்கள் டி.வி.யில் டிஸ்கவரி சேனல் பார்த்தால் ஒவ்வொரு உயிரின் படைப்பும் அதன் வாழ்க்கை முறையும் தெரியும். தினமும் அனைத்து உயிரினங்களுக்கும் உணவளிக்கும் இறைவனின் கருணை உள்ளத்தை எண்ணி எண்ணி வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் ஆனந்தக் கண்ணீர் விட்டார். இறைவனின் நித்யபடி பெறுவதில் மனிதனும் ஒருவன். ஆதியில் மனிதன் வேறொரு மனிதனைக் கொன்று சாப்பிட்டான். பின் மிருகங்களை வேட்டையாடிச் சாப்பிட்டான். தங்கள் தெய்வங்களுக்கு நரபலியும் மிருகபலியும் கொடுத்துத் திருப்தியடைந்தான். பின் நாகரிகம் வளரவளரத் தானியங்களுடன் மாமிசத்தைச் சேர்த்து உண்டு வளர்ந்தான். ஊர்வன, பறப்பன, நீந்துவன என எல்லாம் தன் விருப்பப்படி உண்டு வந்தான். இவைகளைப் பற்றிய முழுவிபரங்களைப் பைபிள் பழைய ஏற்பாட்டிலும் மற்றும் நபிமார்கள் சரித்திரத்திலும் விரிவாகப் படிக்கலாம்.

தமிழ் நாட்டில் நரபலி ஏற்கும் பைராகிகள் இருந்தனர். சிறுத்தொண்டர் நாயனார் புராணம் இதை விவரித்துக் கூறும். காலச்சக்கரம் சுழன்றது. அனைவராலும் யக்ஞம், யாகம் முதலியனவற்றினைப் பெருஞ்செலவு செய்து வளர்க்க முடியவில்லை. கி.பி. முதலாம் நூற்றாண்டில் யாகம், யக்ஞம் வேண்டாம். மிருகபலிகள் வேண்டாம். அன்பைக் கொண்டே இறைவனை அடையலாம் எனப் புத்தர் மற்றும் ஜைனர் போதித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்கள் கொல்லாமை மதத்தை நோக்கி அதிக அளவில் போய்ச் சேர்ந்தனர். அதனால் சைவமதத்தினரும் வைணவ மதத்தினரும் தங்கள் கோவில்களில் பலியிடுவதை நிறுத்தி விட்டனர். இதே காலகட்டத்தில் இயேசு தோன்றினார். நான் அன்பையே வேண்டுகிறேன். மிருக பலியை அல்ல என உபதேசித்தார். அதிலிருந்து தான் பைபிள் புது ஏற்பாடு துவங்கியது. இரக்கம் மற்றும் தயை என்பது என்ன? என மக்களுக்குப் புரிய ஆரம்பித்தது. தமிழ் நாட்டுக் கோவில்கள் யூதமதக் கோவில்களில் யார் யாரின் மகன்கள் பலிகொடுக்கப் பட்டனர் என்னும் பட்டியல் சோழன் பூர்வ பட்டயம் என்னும் ஏடு விளக்குகின்றது. குருச் சேத்திரப் போரில் அரவான் பலி கொடுக்கப்பட்டது பாரதம் படித்தவர்களுக்குத் தெரியும். டேனியல் காலத்திலேயே காய்கனி உணவு உண்டால் எளிதாக இறை அருள் கிடைக்கும் என மக்களும் தெரிந்திருந்தார்கள்; இருந்தாலும் அதை மக்கள் பழக்கத்திற்குக் கொண்டுவர முடியவில்லை. பிற்காலத்தில் தோன்றிய திருவள்ளுவர் - இராமலிங்க சுவாமிகள் மற்றும் சைவர்கள் - வைஷ்ணவர்கள் புலால் மறுத்தல், கொல்லாமை ஆகிய விரதங்களை ஏற்படுத்தினர். பிறகுதான் சைவ உணவு பற்றிப் பல சமய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் தான் உணவுதான் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கு கின்றது என்பதைக் கண்டறிந்தனர். தெய்வங்களுக்கும் சைவப் படையல் போட்டு வழிபட்டனர். கொடூரத் தெய்வங்கள் சாந்தமான தெய்வங்களாக மாறின.

பதார்த்த குண சிந்தாமணி என்னும் ஏடு என்னென்ன உணவு சாப்பிட்டால் என்னென்ன நோய் தீரும் மற்றும் குணநலன்கள் உண்டாகும் என்பதைக் கூறுகின்றது. உப்பு அதிகம் சேர்த்தால் "நான்" என்னும் ஆணவம் உண்டாகும். புளி அதிகமானால் பொறாமைக் குணம் தலை தூக்கும், தயிர் அதிகம் உண்டால் சோம்பேறித்தனம் ஏற்படும். மச்ச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாமிசங்களை சாப்பிட்டால் காமச்சக்தியை அடக்க முடியாது. காரம் அதிகமானால் கோபம் அதிகம் வரும். பச்சரிசிச் சாதம் மூளைக்கு பலம் கொடுக்கும். கோதுமை உணவு உடலுக்குப் பலம் கொடுக்கும். இப்படிப் பல்வேறு உணவுகளின் பிடியில் ஒரு மனிதன் சிக்கியிருக்கிறான். இதில் இருந்து தப்பினால்தான், அவன் சத்துவகுண உணவு சாப்பிட்டு ஆன்மீக நிலையை உணர்ந்து பகுத்தறிவுடைய மனிதனாக முடியும்.

ஜோதிட சாத்திரத்தில் ரசசத்துள்ள பொருட்களைப் பிரித்து அவற்றை நவக்கிரகங்களுடன் இணைத்துள்ளனர். அவற்றைச் சாப்பிட்டால் அந்தந்தக் கிரகங்கள் சாந்தியடையும். சூரியனுக்குக் கோதுமையும், சந்திரனுக்குப் பச்சரிசியையும், செவ்வாய்க்குத் துவரம்பருப்பையும், ராகுவுக்கு உழுந்தம் பருப்பையும், குருவிற்குக் கொண்டைக் கடலையையும், சனிக்குக் கறுப்பு எள்ளையும், புதனுக்குப் பச்சை பயறையும், கேதுக்குச் சிவப்பு கொள்ளையும், சுக்கிரனுக்கு வெள்ளை மொச்சையையும் பரிகாரமாகச் சொல்லியிருக்கின்றனர். மேற்படி நவதானியங்களையும் மனிதன் பிறந்ததிலிருந்து இறந்த பின்பும் பல்வேறு சமயச் சடங்குகளில் உபயோகிக்கின்றான். அனைத்துச் சிறு தேவதைக் கோவிலிலும் முளைப்பாரித் திருவிழா இன்றைக்கும் உண்டு.

முதலில் சைவ உணவே சிறந்தது என்பதையும் அதையும் அளவுடன் உண்ண வேண்டும் என்பதையும் பார்ப்போம். நம் நாட்டின் தந்தை என அழைக்கப்படும் காந்தியடிகள் குறை வாகச் சாப்பிடுகிறார் என்ற வருத்தம் படேலுக்கு எப்போதும் உண்டு. ஒருநாள் பேரீச்சம்பழங்களைக் கழுவியபொழுது படேல் காந்தியடிகளைப் பார்த்து, ''எத்தனை பழம் கழுவட்டும்'' என்றார். ''பதினைந்து'' என்றார் காந்தியடிகள். ''பதினைந்துக்கும் இருபதுக்கும் என்ன வித்தியாசம்'' என்றார் படேல். ''சரி, அப்ப டியானால் எனக்குப் பத்துமட்டும் கொடு போதும்'' என்றார் காந்தியடிகள். அன்று பத்துப் பழங்கள் மட்டுமே சாப்பிட்டார். அன்றுமுதல் வல்லபாய் படேல் தினந்தோறும் சரியாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதினைந்து பழங்கள் மட்டுமே கழுவிக் காந்தியடிகள் முன் வைத்தார். காந்தியடிகளைப்போல அளவறிந்து உண்பது இயலாது. ஆனால், பெருந்தீனிக்காரராகாமல் இருக்கலாம். நீதி சாத்திரம் எனும் நீதிநூல் அதிகம் உண்பவனும், அழுக்காடை உடுப்பவனும், பல் துலக்காதவனும் ஆகிய இவன் விஷ்ணுவாக இருந்தாலும், லட்சுமி தேவி அவனை விட்டு நீங்குவாள்'' என்று கூறுகிறது.

அரசாங்கத்தார் மக்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி கூறுகின்றனர். அரிசி போதுமான அளவு கையிருப்பில்லை என்றால், அரிசிக்குப் பதிலாகக் கோதுமை சாப்பிடும்படி சொல்லுகிறார்கள். பின்னர் கோதுமை கிடைக்கவில்லை என்றால் அதற்குப் பதிலாகக் கேழ்வரகினைச் சாப்பிடச் சொல்கின்றனர். நம்மால் சட்டையை மாற்றுவதைப் போல உணவுப் பழக்கத்தை மாற்ற முடியாது திண்டாடுகின்றோம். அனைத்தும் உணவுதான் என்ற எண்ணம் மட்டும் தோன்றினால் திண்டாட்டம் கொண்டாட்டமாக மாறிவிடும். ``பெண்களின் நாகரிக உடை அலங்காரத்தைக் கூட உடனடியாக மாற்றிவிடலாம்; ஆனால், உணவுப் பழக்கத்தை உடனடியாக மாற்ற முடியாது'' என்று மேலைநாட்டு அறிஞர் ஒருவர் சொல்கின்றார்.

``குழந்தைகளை வளர்ப்பது போல, உணவுப் பழக்க வழக்கங்களை வளர்க்க நாளாகும்; அவசரப்பட்டால் பலன் தெரியாது'' என்றும் நம் முன்னோர்கள் கூறுவர். உருளைக் கிழங்கை முதன்முதலாக 1570 ஆம் ஆண்டில் ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்தார்கள். பின்னர் அது ஐரோப்பா முழுவதிலும் பரவியது. ஐரிஷ்காரர்கள் உருளைக்கிழங்கை உடனே உணவாக ஏற்றுக் கொண்டனர். ``உருளைக்கிழங்கினால் விளையும் பெரும் தீங்குகள் பல'' என்ற கருத்து ஆங்கிலேயரிடம் சுமார் இருநூறு ஆண்டுகள் வேரூன்றியிருந்தது. பின்னர் மக்கள் சிறிதுசிறிதாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருளைக்கிழங்கை உண்ண ஆரம்பித்தனர். இப்பொழுது உருளைக்கிழங்கே இல்லாத உணவு இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அதைப்போலவே தக்காளிச் செடியை ஆங்கிலேயர்கள் 300 ஆண்டு காலம் அழகுக்காகக் 'குரோட்டன்' செடியைப் போல் வளர்த்தனர். தக்காளி உண்ணத் தகுதியற்றது என்றும் ஆங்கிலேயர்கள் கருதினர். சென்ற எழுபதாண்டு காலமாகத்தான் ஆங்கிலேயர் தக்காளியை உணவாகக் கொள்கின்றனர். எனவே, ஓர் உணவின்மீது நாட்டு மக்களிடம் ஆழ்ந்த வெறுப்பு இருந்தபோதிலும், அது மாறக்கூடும் என்பதற்கு இவை ஓர் உதாரணம். இது போலத் தான் அசைவத்தின் மீது வெறுப்புண்டாகிச் சைவம் வளருகின்றது.

ஓர் முறை பசியின் கொடுமைக்கு ஆளான ஓர் திருடன் பிடிபட்டான். அவனைக் காந்தியின் முன்பு நிறுத்தி அவனுக்குத் தண்டனை வழங்கக் காந்தியடிகளிடம் சிலர் கூறினர். திருடனும் மனிதன்தானே. அவனுக்கும் பசி உண்டல்லவா? திருடனை முதலில் மனிதனாக மதித்து, அவனுக்குத் தீர்ப்புக்கூறும் முன்பே அவன் பசியைப் போக்க உணவளிக்கச் செய்தார் மூர்த்தியான காந்தியடிகள். அன்னதானத் துக்குப் பெயர் பெற்றது நம் நாடு. ஏழைகளுக்கு அன்னமளிப்பதை அனைத்து ஊர்களிலும் காணலாம். நம் நாட்டைப் போன்று அன்னச் சத்திரங்கள் பெருகிய நாடு உலகத்திலேயே வேறு இல்லை என்று கூறலாம். இதைத்தவிர, கோயில்களிலே தினந்தோறும் பக்தர்களுக்கு இலவச உணவு, திருவிழாக் காலங்களிலே அன்னதானம், கல்யாணம், பிறப்பு, இறப்பு முதலிய நாட்களில் ஏழைகளுக்கு அன்னமிடுதல் முதலியவற்றை நாம் இன்னும் பார்க்கலாம். நம் நாட்டில் உணவுப் பிரச்னை, நிரந்தரமாகவும், தீராத பிரச்னையாகவும் இருந்து வந்திருக்கிறது.

"பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தும் கண்ணாற்கண்டும் – கிளியே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோம்பிக் கிடப்பாராடீ!
தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சியுறார்
வாயைத் திறந்து சும்மா! – கிளியே
வந்தே மாதரம் என்பார்".

என்று பாரதியார் பாடியுள்ளார்.

நம் வாழ்க்கையிலேயே நாம் பலவகைப் பஞ்சங்களைக் கேட்டும் கண்டும் அனுபவித்தும் வருகிறோம். வயதானவர்கள் தாது வருஷத்துப் பஞ்சத்தைப்பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறோம். நம் நாட்டில் ஏற்பட்ட ஒரு கொடிய பஞ்சத்தைப் பற்றி ஜே.எஸ். சாண்ட்லர் என்ற மேனாட்டார் பின் வருமாறு எழுதியுள்ளார்:

"மறவர் நாடு என அழைக்கப்படும் சேதுபதி நாட்டில் தோன்றிய பஞ்சம் கி.பி.1678ஆம் ஆண்டிலிருந்து 1685ஆம் ஆண்டுவரை ஏழு ஆண்டுகள் நீடித்தது. காட்டில் வாழும் புலிக் கூட்டங்கள் இரவில் நகரெங்கும் சுற்றி அலைந்தன. நூறு பேர் உள்ள ஒரு கூட்டத்திலும் ஒரு புலி புகுந்து ஒருவரைத் தாக்கித் தூக்கிச் சென்றுவிடும். ஓர் ஊரில் ஒரு சில நாட்களுக்குள் எண்ணற்ற ஆடுமாடுகள் கொல்லப்பட்டதுமல்லாமல் எழுபது மனிதர்களும் மறைந்துவிட்டனர். பீதியால் கலங்கிய மக்கள் இரவில் தம் வீட்டைச் சுற்றி நெருப்பு வளர்த்துக் கொண்டே தூங்கினர். இரவில் வெளியூர்ப் பயணம் செல்வதில்லை. பகலில் செல்வதும் பாதுகாப்பற்றதாய் இருந்தது. அது சமயம் மதுரை நகரம் கூடப் பொலிவிழந்து காணப்பட்டது. புலிகளும், ஓநாய் களும் நகரில் அச்சமின்றிச் சுற்றித் திரிந்தன; வெட்டுக்கிளிகள் பயிர்களை மொய்த்துத் தின்றுவிட்டன; நாடு முழுவதும் நச்சுப் பூச்சிகள் பரவின. இறந்து விட்டவர்கள் புதைக்கப்படாமல், ஆற்றின் கரைகளிலே எறிந்து விடப்பட்டிருந்தனர்".

இப்பஞ்ச காலத்தில் வாழ்ந்த கொடைவள்ளல் சீதக்காதி மக்கள் துயரைக்கண்டு மனம் வருந்தினர். தம் மரக்கலங்களை நெல்விளையும் பகுதிகளான கோதாவரி தீரம், வங்காளம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலியவற்றுக்கு அனுப்பி, தானியங்களைக் கொள்முதல் செய்து பாண்டி நாட்டில் இறக்குமதி செய்தார். அவருடையக் காரியக்காரர், வந்த நெல்லை நல்ல விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிக்க நினைத்தார். சீதக்காதியோ ஏழைகளுக்கு உணவுப் பொருள்களை வாரிவாரி வழங்கினார். அவ்வள்ளலின் பெயரே சரித்திரத்தில் உள்ளது. காரியக் காரரின் பெயர் மறைந்து விட்டது. நம் நாட்டில் கேழ்வரகு, கம்பு முதலியவற்றைச் சாப்பிடுவது கௌரவக் குறைவு என்று பலர் கருதுகின்றனர். கூழ், களி முதலியவை கைதிகளின் உணவு, மிக ஏழ்மையானவர்களின் உணவு என்று கருதி, அதனை விலக்கி விடுகின்றனர். ஆனால், குஜராத்திகள் அம்மாதிரி செய்வதில்லை. கோதுமை ரொட்டியைக் காட்டிலும், கம்பு ரொட்டியையே அவர்கள் விரும்பி உண்கின்றனர். ஸர். ஹண்டர் எழுதியுள்ள இந்தியச் சரித்திரத்தில் தென் மாகாணங்களைக் குறித்து, "சாதாரண மக்கள் முக்கியமாகச் சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற சிறு தானியங்களையே சாப்பிடுகிறார்கள்" என்கிறார். நம் நாட்டில் வழக்கமாகக் கேழ்வரகு, கம்பு முதலியவற்றை விரும்பிச் சாப்பிடுபவர்களும் கூட, இப்போது சோறு சாப்பிடுவதே கௌரவம் என்று தவறாக நினைத்து, தங்களுடைய நல்ல பழக்கங்களை விட்டுவிடுகின்றனர். இதனால் பல நோய்களுக்கும் ஆளாகின்றனர்.

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா?" என்று ஓர் வசனம் வரும். உணவில் கலப்படத்தின் காரணமாக நம்மை அறியாமலேயே சைவஉணவிலும் நாம் கல்லையும் மண்ணையும் இன்றளவும் சாப்பிட்டு வருகிறோம். "உலகத்தில் எங்காவது காய்கறிகளை அதிகமாக வேகவைத்து அடியோடு கெடுக்கிறார்கள் என்றால், அது இந்தியாவில் குறிப்பாக நம் தமிழ்நாட்டில்தான். விளம்பரங்களைப் பார்த்துப் பலவகை மசாலாக்களை உண்பதில் ஒருவகையான ருசியைச் சமீபகாலத்தில் நாமே ஏற்படுத்திக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டுவிட்டோம். மசாலாக்களை ருசிப்பதற்காகவே நாம் காய்கறிகளைச் சாப்பிடுகிறோம் என்னும் வகையில் வாழ்கின்றோம். “சுபா, தர்னிப் கொழுந்துகள், காரட் நுனிகள், முள்ளங்கி நுனிகள், பட்டாணி இலைகள் ஆகியவற்றை முன்னோர்கள் அப்படியே சாப்பிட்டுள்ளனர். இவற்றைத் தவிர, முள்ளங்கி, தர்னிப், காரட் கிழங்கு வகைகளையும் வேக வைக்காது பச்சையாகவே தின்னலாம் என்பதும் உண்மையே. இந்த இலைகளையும் கிழங்குகளையும் வேகவைத்தால் பணத்தைப் பாழாக்குவதும் இவற்றின் இயல்களில் அடங்கி யுள்ள உயிர்ச்சத்துக்கள் முழுவதுமோ, ஒரு பகுதியோ இவற்றை வேகவைக்கையில் பாழாகின்றன. வேகவைத்துச் சமைப்பதால் இவற்றின் ருசி கெடுகிறதென்று நான் சொல்லுவதன் காரணம் இவற்றுக்கு இயல்பாய் உள்ள ருசி, இவை சமைக்கப்படுகையில் போக்கப்படுவதால்தான்” என்கிறார் காந்தியடிகள். சங்க காலந்தொட்டே கீரைவகைகள் இங்குள்ளன. சங்க இலக்கியத்தில் கீரைகள் பற்றிய பல குறிப்புகள் வருகின்றன.

நம் தமிழ்நாட்டில் கீரைகளுக்குப் பஞ்சமே இல்லை. அகத்திக்கீரை, பருப்புக்கீரை, அரைக்கீரை, பன்னாக்கீரை, கடுக்குக்கீரை, பசலிக்கீரை, கலவன்கீரை. பச்சடிக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை, புளியாரைக்கீரை, கவாகீரை, புண்ணாக்குக் கீரை, காசினிக்கீரை, புளிச்சைக்கீரை, காட்டுக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, குப்ப மேனிக்கீரை, மணத்தக் காளிக்கீரை, கொத்தமல்லிக்கீரை, மணல்கீரை, கோயாக்கீரை, மின்மினிக்கீரை, கோசுக்கீரை, முளைக்கீரை, சக்ரவர்த்திக் கீரை. முள்ளங்கிக்கீரை, சரவல்லைக்கீரை. முருங்கைக்கீரை, சர்சாவ்கீரை, முர்ராயாக்கீரை, சாக்வாட்கீரை, மொடக்கத்தான் கீரை. சிறுகீரை, வதநாராயணன்கீரை, செலரிக்கீரை, வீதிக்கீரை. தண்டுக்கீரை, வேலைக்கீரை, தூதுக்கீரை, வெள்ளக்கீரை. தூதுவளைக்கீரை, வெள்ளரிக்கீரை, நச்சுக் கொட்டைக்கீரை, லெட்டஸ்கீரை, நூல்கோல்கீரை, லூனிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கீரை, பச்சரிசிக்கீரை, ரேசலிக்கீரை, பசலைக்கீரை, வேப்பிலை. வேப்பங்கொழுந்தினைத் தினமும் சாப்பிட்டுவருவது நல்லது. கீரை வகைகளில் வேப்பிலையையும் சேர்த்துள்ளோம். "வேப்பிலையை ஆராய்ச்சிச் சாலையில் பரிசோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். அமைப்பில் கீரை வகைகளைப் போன்றதாகவே வேப்பிலையும் இருக்கிறது. முற்றிய இலைகளிலும், கொழுந்து இலைகளிலும் புரதங்கள், சுண்ணாம்புச் சத்து, இரும்பு, வைட்டமின் 'ஏ' ஆகியவை அதிகம் இருக்கின்றன. வேப்பிலை, தண்டுக்கீரை, கொத்த மல்லிக்கீரை, பசலைக்கீரை இவற்றினைவிட இது உயர்வானது" என்று பிரபல உணவு டாக்டர் அக்ராய்டு கூறியுள்ளார். ஒரு நபருக்குத் தினந்தோறும் வைட்டமின் 'ஏ' 5000, I.U. (International Unit) தேவை. ஒரு வேளை சாப்பிடும் முருங்கைக்கீரையில் வைட்டமின் 'ஏ' 3260. I.U. கிடைக்கிறது. பால் சாப்பிடுவதால் என்ன ஏற்படுகிறதோ அதே சத்துக்களைப் பச்சைக்கீரை அளித்து விடும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். கீரை சத்துள்ள உணவு மட்டும் அன்று; சாத்வீக உணவும் கூட. சிவஞான முனிவர் தம் சமையற்காரப் பிள்ளைக்கு இட்ட கட்டளை:

"சற்றே துவையல் அரை. தம்பி ஒரு பச்சடி வை
வற்றல் ஏதேனும் வறுத்து வை – குற்றமில்லை
காயமிட்டுக் கீரை கடை கம்மெனவே மிளகு
காயறைக்க வைப்பாய் கறியே."

பெருங்காயமிட்டுக் கீரையைக் கடைந்து வை என்று கூறினார். பெற்றோர்களின் அனேகப் பழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் குழந்தைகளை ஓரளவு பாதிக்கின்றன. தாய் கொள்ளும் உணவு அவள் கர்ப்பத்திலுள்ள குழந்தையைப் பாதிக்கவே செய்யும். பிறகு பிள்ளைப் பருவத்திலே தாய் குழந்தைக்குத் தன் விருப்பப்படியும் தோன்றியபடியும் தின்பண்டங்களை வாயில் வைத்துத் திணிக்கிறாள். அவள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தான் உண்ணும் பொருளில், ஒரு சிறிது குழந்தைக்கும் கொடுக்கும் வழக்கம் இருப்பதால், சிறு பிராயம் முதலே குழந்தையின் ஜீரண உறுப்புகள் தவறாய்ப் பழகிவிடுகின்றன. பழக்கம் ஒன்று ஏற்பட்டுவிட்டால் பிறகு அதை மாற்ற முடிவதில்லை. குழந்தைக்கு ஒரு மாதம் முதல் பன்னிரண்டு மாதம் வரை எத்தகைய உணவு எத்தனை முறை கொடுக்க வேண்டும் என்பதை அனுபவமுள்ள டாக்டர்கள் மூலம் அறிந்து செயல்பட வேண்டும். மைசூரில், பல ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அழகிய கம்பீரமான அரண்மனை ஒன்றில் அமைந்திருக்கிறது மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகம். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்துள்ள பலநூறு விஞ்ஞானிகள் உணவு பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இந்தியப் பல சத்துணவு, குழந்தை உணவு 'அமுல்', தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல், முட்டையைப் பவுடராகச் செய்தல், பழங்களைக் கெடாமல் பாதுகாத்தல் முதலியன கழகத்தின் சாதனைகளில் சில. இந்தியப் பல சத்துணவு பற்றியும், அதனைச் சமையல் செய்யும் முறைகள் பற்றியும், இவர்கள் விவரமாகக் கூறுவர். தமிழகச் சைவ உணவில் சக்தி தரும் உணவுகளாக அரிசி, கேழ்வரகு, கோதுமை, கம்பு, சோளம், மக்காச்சோளம், வரகு, தினை ஆகிய நவ தானியங்களும் ஜவ்வரிசி, கிழங்கு வகைகள், சர்க்கரைகள், கொழுப்புக்கள் ஆகியவைகளும் கீரைகள், பழங்களும் அடங்கும் என முன்பே பார்த்தோம்.

தேகத்தைக் கட்டுவதற்கும், சிதைந்து போன பாகங்களை ஈடுசெய்வதற்கும் உதவுவது புரதம். புரதம் மிகுந்த உணவுகள் பால் பண்டங்கள், பருப்புக்கள், பயறுகள், நிலக் கடலை முதலியனவாகும். நோய்களினின்று பாதுகாப்பதற்கும், உடலை ஆரோக்கியத்தின் உச்சநிலையில் இருத்துவதற்கும் உடலின் பல அங்கங்களும் பல பகுதிகளும் தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்யக் கண்காணிப்பதற்குமே இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணவுகள் உதவுகின்றன. நம் தினசரிப் பரிபூரண உணவில் புரதம், தாது உப்புக்கள், வைட்டமின்கள், கொழுப்புச்சத்து, மாவுச்சத்துக்கள், தண்ணீர் ஆகிய அனைத்தும் போதிய அளவுகளில் இருத்தல் வேண்டும். இயற்கை அன்னை வழங்கும் பெரும்பாலான உணவுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சத்துப் பொருள்கள் அடங்கியிருக்கின்றன. ஆனால், எந்த ஓர் உணவிலும் எல்லாச் சத்துப் பொருள்களும் ஏற்ற அளவில் இருப்பதில்லை. அதனால்தான் சீருணவை அமைத்தல் பற்றிய அறிவும், திறமையும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. பால், தயிர், மோர் முதலியன பயன்படுத்த வசதி இல்லாதவர்கள் வேர்க்கடலைப் பால் அல்லது கேழ்வரகுக் கஞ்சியாகியவற்றைப் பாலுக்குப் பதிலாக சேர்த்துக் கொள்ளலாம். மொச்சை, பட்டாணி, கொட்டைகள் ஆகியவற்றைத் தினமும் சாப்பிட வேண்டும். பச்சைநிற, மஞ்சள்நிறக் காய்கறிகளைத் தினமும் தக்க அளவு சாப்பிடுவது வைட்டமின் 'ஏ'யைப் பெற உதவும். ஆரஞ்சு, தக்காளிப்பழச் சாறுகளிலிருந்தும் பப்பாளி, கொய்யா, நெல்லிக்காய் போன்ற பழங்கள், பச்சைக் காய்கறிகள் அல்லது முளைகட்டிய பயறுகளிலிருந்தும் பச்சையாக வைட்டமின் 'சி'யைப் பெறலாம்.

உணவு தயாரித்தல் என்பது உணவைச் சுத்தமாக்கித் தயாரித்தல், சமைத்தல் போன்ற அனைத்துமாகும். நாம் உண்ணும் உணவு சமைத்தல், சீரணித்தல், கிரகித்தல், தன் மயமாக்குதல் போன்ற ஒரு இரசாயன மாற்றங்களுக்குட்பட்டு நம் உடலுக்கு ஏற்றதாக மாறுகின்றது. நெருப்பின் உதவியால் உணவைப் பக்குவப்படுத்தும் முறை சமையல் எனப்படும். உணவை உடலுக்கு ஏற்ப மாற்றும் முயற்சிகளில் சமையல் முதல் நிலை. ஆனால், சமைக்கும்போது ஒரு சில உணவுப் பொருள்கள் தம் ஊட்டச் சக்தியை இழக்கின்றன. தோல் சீவுதல், நறுக்குதல், ஊறவைத்தல் போன்ற முறைகளினால் இழப்புகள் ஏற்படுகின்றன. உணவுச் சத்துக்களில் சில நீரில் கரைபவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகவே, சமைக்கும்போது அதிக நீரில் சமைத்து, சமைத்த நீரை வடித்து வீணாக்கக்கூடாது, மேலும், சில காற்றினால் சேதமடைபவை. ஆகவே, பாத்திரத்தைத் திறந்து வைத்துச் சமைக்கும்போது அத்தகைய ஊட்டத்துக்குச் சேதம் ஏற்படுகின்றது. இத்தகைய முறைகளினால் பெரும்பாலும் அழிக்கப்படும் ஊட்டச் சத்துக்கள் வைட்டமின்களும் தாது உப்புக்களுமாகும். எனவேதான் அவற்றைப் பெறச் சில பழங்களையும், காய்கறிகளையும் பச்சையாகவே உட்கொள்வது அவசியம் என்று கூறப்படுகின்றது. தக்காளி, முள்ளங்கி, காளிபிளவர், வெள்ளரி, லெட்டஸ்கீரை, பச்சை மாங்காய், கொத்தமல்லித் தழை, வெங்காயம், புதினா போன்றவற்றைப் பச்சையாகவே உண்ணும்படியான சட்னி, துவையல், பச்சடி, போன்றவை செய்து பயன்படுத்த வேண்டும்.

காய்கறிகளை அவ்வப்போது பறித்தவுடன் உபயோகிப்பது மிகமிக நல்லது. காய்கறிகள் வாடும்போது அவற்றிலுள்ள வைட்டமின் `சி'யை இழந்து விடுகின்றன.

போதுமான அளவு நீரில் காய்கறி வகைகளையும் பருப்பு, தானிய வகைகளையும் சமைப்பதனால் உயிர்ச் சத்துக்களைச் சேமிக்கலாம். காய்கறிகளை அதிக நீரில் வேக வைக்கக் கூடாது. வேக வைக்கும் நீரை அகற்றக்கூடாது.

காய்கறிகள் சமைப்பதற்கோ அல்லது பரிமாறுவதற்கோ சற்று முன்பாகத்தான் நறுக்க வேண்டும். அதனால் கொதி நீராலும் தாக்கப்படும் மேற்பரப்பின் அளவு குறைந்து அதிகச் சேதமடையாதபடி காக்கிறது. கூடியவரை மூடிய பாத்திரத்தில் வேகவைத்தல் வேண்டும்.

பழங்களிலும், காய்கறிகளிலும், அவற்றின் தோலை ஒட்டியே பெருமளவில் வைட்டமின்களும் தாது உப்புக்களும் அடங்கியிருப்பதால் அவற்றைத் தோலுடன் சமைப்பதே தக்கது. அவசியமானால் லேசாகத் தோலைச் சீவலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணவைச் சமைப்பதற்குமுன் கழுவுதல், நறுக்குதல், உப்பிடுதல், வாட்டுதல் முறைகளில் விரயம் ஏற்படாதபடி பாதுகாக்க வேண்டும். காய்களை நறுக்கிய பின் நீரில் ஊறவைத்தல் ஓர் உதாரணம். கத்திரிக்காப் போன்ற சில காய்கறிகள் கறுத்துப் போகாமல் இருக்கச் சிறிது நீரில் ஊற வைத்தல் தேவைப்படும். ஆனால் ஊறும் நீரில் சத்துக்கள் கரைந்துவிடுகின்றன. ஆகவே, நறுக்கியதும் ஊறவைக்கும் அவசியமில்லாமல் உடனே சமைக்க வேண்டும்.

காய்கறிகளைக் கழுவ அதிக நேரம் நீரில் ஊற வைப்பதால் தாது உப்புக்களும், வைட்டமின்களும் அழிந்து விடுகின்றன. அதனால் முழுக் காய்கறிகளை அரியும் முன்னரே சீக்கிரமாகக் கழுவி எடுக்க வேண்டும். ஊற வைப்பது அவசியமானால் நறுக்குவதற்கு முன்பு ஊற வைக்க வேண்டும்.

ஒருமுறை சமைத்த காய்கறிகளை மறுமுறை சூடாக்குவ தினால் அவற்றிலுள்ள உயிர்ச் சத்துக்கள் அழிந்து விடுகின்றன. எனவே, தேவைக்கு அதிகமான உணவைச் சமைக்கக்கூடாது.

காய்கறிகளைக் குளிர்ச்சியான ஈரப்பசையுள்ள இடத்தில் சேமித்தல் வேண்டும். உணவைத் தயாரித்த உடனேயே பரிமாற வேண்டும்.

மைதா, வெள்ளைச் சர்க்கரை, வெள்ளை ரவை, தீட்டிய அரிசி, பச்சரிசி போன்ற வெண்மையாக்கப்பட்ட உணவுப் பொருள்களைவிட முழுக் கோதுமை ரவை, தீட்டப்படாத அரிசி, முழுக் கோதுமை மாவு, ஆட்டா, வெல்லம், புழுங்கலரிசி ஆகியவற்றில் உணவுச் சத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

நீரை முதலில் கொதிக்கவைத்துப் பிறகு கொதி நீரில் காய்களை வேகவைப்பது நல்லது, காய்களைக் குறைந்த நேரம் வேகவைப்பதால் ஊட்டச் சத்துக்களை ஓரளவு பாதுகாக்கலாம். சமைக்கும்போது சோடா மாவைச் சேர்ப்பது உணவுகளிலுள்ள ‘பி’ வைட்டமின்களை அழித்துவிடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருந்து என்று கூறும் பொழுதே நம்மவர்கள் அறுசுவை என்று கூறுவர். அறுசுவை விருந்து உண்டிக் கழகு விருந்தோடுண்ணல். மருந்தே யாயினும் விருந்தோடு உண் என்பது தமிழ்ப் பழமொழி. விருந்து அன்பின் பெருக்கு; அந்தண்மைச் செயல் செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் அன்புப் பெருக்கில் மூழ்கினவன் எனத் திரு.வி.க.வும், விருந்தோம்பலில் மனம்தான் முக்கியம் என கிரீஸ் பழமொழியும், உணவின் விலையன்று; நம்முடன் உண்ணும் நண்பர்கள் தான் விருந்தை விருந்தாகச் செய்கின்றனர் என ஜெர்மனிப் பழமொழியும். விருந்துக்கு அதிக பட்சம் ஏழு பேர், குறைந்த பட்சம் மூன்று பேர் என்று கிரீஸ் பழமொழியும், கல்யாண விருந்தில் மிகக் குறைவாகச் சாப்பிடுவது மணப்பெண்தான் என ஸ்பெயின் பழமொழியும், காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் என தாயுமானவரும், நமக்குப் பழமொழிகளை நினைவு படுத்தியுள்ளனர்.

ஆயகலைகள் 64ம் ஒரு மனிதன் அறிய வேண்டுமானால் அறுசுவை உணவைத் தினம் சாப்பிட வேண்டும். அவைகளும் நவக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டவை. ஒரு மனிதன் உப்பு, தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, உறைப்பு மற்றும் உவர்ப்புச் சுவை ஆகாரங்களைத் தினம் சிறிதாகச் சேர்த்து வந்தாலும் போதும். அவன் பெரிய சகலகலா வல்லவன் ஆகிவிடுவான். அனைத்து வகை நலன்களையும் அடைவான். மேற்படி அறுசுவை உணவினால் அவன் உள் இருக்கும் பஞ்ச பூதங்களும் திருப்தி யடைகின்றன. நம் வயிறுதான் யாக குண்டம். நல்ல எண்ணங்களோடு அறுசுவைச் சைவஉணவைச் சாப்பிட்டால் நவக்கிரக ஓமம் செய்வதற்கு ஈடாகப் பலன் கிடைக்கும். சனிக்கிழமையன்று நவதானிய அடைதோசை நல்லெண்ணெய் விட்டுச் சுட்டுச் சாப்பிட்டால் நவக்கிரகங்கள் திருப்தியடையும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடலை எண்ணெய் குடும்பத்தில், நாட்டில் கலகம் ஏற்படுத்தும். பாமாயில் என்னும் பனை மர எண்ணெய் சாப்பிட்டால் துர்த்தேவதைகள் உடலுக்குள் புகுந்து நாளாவட்டத்தில் கைகால்களை முடக்கிவிடும். தமிழர்களுக்குப் பெரும் இடையூறு செய்வது மேற்படி இரண்டு எண்ணெய்கள். மேற்படி எண்ணெய்கள் கோவிலுக்கும் உபயோகிக்கக் கூடாது. இராணுவம் மற்றும் காவல்துறை தவிர மற்ற யாவரும் சைவ உணவு உண்ண வேண்டும். ஆன்மீக உணவு பச்சரிசி. பாசிப்பருப்பு, தேங்காய்த் துருவல், மிளகு, மஞ்சள்பொடி, இந்துப்பு, கேரளாபுளி, சுக்கு, சீரகம், மல்லி, தேங்காய் எண்ணை, சூரியகாந்தி எண்ணெய், உருக்கிய பசுநெய். பசுமோர், கத்தரிக்காய், வெண்டைக்காய், கொத்தவரங்காய், கருணைக்கிழங்கு, அவல், கேழ்வரகு, கரிசாலைக்கீரை. தூதுவளைக்கீரை, வல்லாரைக்கீரை, பசலிக்கீரை, வெல்லம், கருப்பட்டி ஆகியவை அடங்கும்.

உலகிலேயே அறுசுவை உணவை உண்டவர்கள் தமிழர்கள்தான். நார்த்தங்காய், நெல்லிக்காய் மற்றும் சிலவகைக் கீரைகளில் அறுசுவையும் உண்டு. வெண்டைக்காய் சாப்பிட்டால் இலக்கியப் படிப்பு நன்கு வரும். சிறு வெங்காயம் சாப்பிட்டால் கணக்குப்பாடம் ஞாபகமிருக்கும். பெருமாள் கோவில் தீர்த்தம் துளசி இலை ஏலக்காய் பச்சைக் கற்பூரம் சேர்ந்தது. அதை வாரம் இருமுறை சாப்பிட்டால் கம்ப்யூட்டர் சயின்ஸ் நன்கு விளங்கும் என என் நண்பர் சொல்வார். அனுபவத்திலும் அது உண்மை எனத் தெரியவந்தது. மந்திர ஜெபம் முடிந்தவுடன் ஒரு டம்ளர் இளநீர் சாப்பிட்டால் மந்திர அலைகள் உடலுக்குள்ளேயே பதிவாகி விடும்.

உணவு முறையைக் கொண்டும் மக்கள் பல சாதிகளாகப் பிரிக்கப் பட்டனர் என Castes and Tribes of Southern India என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளியே படாடோபமாக வாழ்ந்து விட்டு வீட்டில் இரு வேளைகளில் மோர்ச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதமும் துவையலும் மட்டும் சாப்பிட்டவர்களுக்குச் சுக்கிலம் உண்டாவ தில்லை. அப்படியே உண்டானாலும் அதில் ஜீவ அணுக்கள் இல்லை. அதனால் சந்ததி இன்றி அவ்வகை இனங்கள் அழிந்து வருகின்றன. இப்போது நடப்பது விஞ்ஞான யுகம். உடல் வலிமைக்கு என்னென்ன சாப்பிட வேண்டும் மூளைவலுவுக்கு எதை எல்லாம் உட்கொள்ள வேண்டும் எனப் பள்ளி சிறுவர்கள் கூடத் தெரிந்து வைத்துள்ளனர். அதில் சைவஉணவுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அருட் பெருஞ்சோதி ஆண்டவரின் கருணைப் பார்வை நம்மீது படும்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. வசிய சூத்திரம்

உலக இயக்கம் எட்டுவிதக் கர்மங்களால் தொழிற்படுகின்றது. அவை 1. மோகனம், 2. வசியம், 3. தம்பனம், 4. ஆகர்ஷணம், 5. உச்சாடனம், 6. பேதனம், 7. வித்துவேடணம், 8. மாரணம். இவை எட்டும் அஷ்டகர்மங்கள் என அழைக்கப்படும். எல்லாத் தெய்வங்களுக்கும் மேற்படி எட்டுவிதச் சக்திகளும் உண்டு. மனிதர்கள் முயன்றால் மேற்படி எட்டுவிதச் சக்திகளையும் பெறலாம். அதற்கு மணி, மந்திர, மூலிகை தேவை. "தெய்பவத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்பது வள்ளுவன் வாக்கு.

ஆன்மிக வாழ்க்கையிலும் இன்னல்கள் வரும். உண்மையான, நேர்மையான ஆர்வத்துடன் நீங்கள் ஆன்மீக வாழ்க்கையில் நுழையும் போது சில சமயம் விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் உங்கள் மேல் படையெடுப்பதுண்டு; மிக நெருங்கிய நண்பர்களுடன் சச்சரவு நேர்ந்து விடும்; உங்கள் குடும்பத்தினர் உங்களை வீட்டை விட்டுத் துரத்தி விடுவார்கள்; நீங்கள் பெரிதாகக் கருதி ஈட்டியவைகளை இழந்துவிட நேரிடும். யோகத்திலும் ஞானத்திலும் முன்னேறியிருந்த ஒருவர் பெரும் ஆர்வத்துடன் இந்தியாவிற்கு மேலும் ஞானத்தைப் பெருக்கிக் கொள்ளப் புறப்பட்டு வந்தார். வெகுகாலத்திற்கு முன் நிகழ்ந்தது இது. அந்தக் காலத்தில் மக்கள் கடிகாரச் சங்கிலி, சிறிய நகைகள் முதலியவற்றைத் தங்கள் சட்டையில் அணிந்து கொள்வது வழக்கம். இந்த மனிதருக்கு அவரது பாட்டி ஒரு தங்கப் பேனா அன்பளிப்பாகக் கொடுத்திருந்தாள். அதை இவர் பல ஆண்டுகளாக மிகவும் விலைமதிப்பற்றதாகக் கருதிப் போற்றி வந்தார். தம்முடைய கடிகாரச் சங்கிலியால் அந்தப் பென்சிலைக் கோர்த்து வைத்துக் கொண்டிருந்தார்.

14

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்த அவர் கொழும்புத் துறை முகத்தில் இறங்கினார். கப்பலிலிருந்து சிறு படகுகளில் இறங்குவார்கள். அந்தப் படகுகள் அவர்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும். சில நாட்கள் சென்றதும் மீண்டும் கடல் பயணம் தொடரும். இந்த மனிதர் கப்பலின் இடை வழியிலிருந்து படகில் குதித்தார். அப்போது அவருக்குக் கால் இடறியது, எப்படியோ சமாளித்துக் கொண்டார். இந்தச் சிறு அதிர்ச்சியில் அவருடைய தங்கப் பென்சில் தவறிக் கடலில் விழுந்து விட்டது. முதலில் அவர் மிகவும் வேதனைப்பட்டார். ஆனால் பிறகு தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். "அதனாலென்ன? இதுதானே இந்தியாவின் மகிமை! என் பாச பந்தங்களிலிருந்து எனக்கு விடுதலை கிடைத்து விட்டது!!" மிகச் சிலருக்குத்தான் இது போன்ற சோதனைகள் வரும். சமாளிக்கும் ஞானமும் வரும். சோதனைகள் வந்தாலும் மன உறுதி வேண்டும். தொடர்ந்து மன உறுதி வேண்டும்.

அதனால் உறுதியுடன் சாதனை செய்தால் வெற்றி நிச்சயம் உண்டு. வெறும் புத்தகப்படிப்புப் பலன் தராது. ஆபத்துக்கு உதவாது. இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கதைகள் மற்றும் புராணங்கள் கேட்டுக் கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கின்றோம். ஆனால் உட்பொருள் தெரியாது. சர்க்கரையையும் மிளகாயையும் நாமே தின்று பார்த்தால் தான் ருசி தெரியும். வேறுபாடு தெரியும். இங்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் அஷ்ட கர்மத்தில் 2வதாக வரும் வசியம் என்னும் பொருள். வசியம் என்றால் அடிமைப் படுத்துவது எனப்பொருள். கட்டளை இடுகின்றவன் உத்திரவைக் கேட்பவன் நிறைவேற்றுதல். ஏன்? எதற்கு? என அடிமைப் பட்டவன் மற்றும் வசியத்துக்குட்பட்டவன் மனக் கேள்வி எழுப்ப முடியாது.

வசியமாவது, மனத்தினால், கண்களால் அல்லது நாவினால் மற்றவர்களை அல்லது பொருள்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசமாக்குவதாகும். மற்றவர்களின் புத்தி, சித்தம், விருப்பம். மனோரதம் (Imagination) முதலியவற்றை அவர்களால் அடக்கி நடத்த முடியாமல்செய்து நமது சித்தத்திற்கு இணங்கி நடக்கச்செய்யும் சக்திக்கு வசியமென்னலாம். சிலர் இந்த வசிய சக்தியானது நம்மிலிருந்து மற்றவர்களிடம் தண்ணீர்போல ஓடிப்பாய்கிறது என்பார். வேறு சிலர் அவ்விதச் சக்தி ஒன்றும் நம்மிலிருந்து வெளியாகிறதில்லை; ஆனால் நமக்கு வேண்டிய விருப்புகளை யோசனைக் குறிப்புகளாக (Suggestion) அடிக்கடி அவர்கள் மனத்தின்முன் தோன்றச் செய்வதால் அவர்கள் புத்தி சித்தங்களைக் கைவசமாக்கலாம் என்கின்றனர். எவர்கள் எப்படிச் சொன்னாலும் கடைசி முடிவு ஒன்றே. ஒவ்வொருவரின் மனோ சக்தியும் அலையானது மோதிச் செல்வதுபோல் ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் ஓடிச் செல்லுகின்றது, என்பதும் ஒருவருடைய மனத்திலுள்ள விருப்பு வெறுப்புகளை மற்றவனுடைய மனத்திடமும் பதித்து விடுகின்றனவென்பதும் திண்ணம்.

அரசியல் தலைவர்கள் இடும் கட்டளையைத் தொண்டர்கள் செய்கின்றார்கள். இராணுவத் தலைவர்கள் இடும் கட்டளையைப் படை வீரர்கள் செய்கின்றார்கள். சினிமா நடிகர் நடிகைக்காக உயிர்த்தியாகம் செய்கின்றார்கள். இது பூராவும் வசியத்தின் அடையாளமே. கட்டளை இடுபவன் சொல்வாக்கு பின் அவனுக்குச் செல்வாக்கைக் கொடுக்கின்றது. வசியம் என்பதற்கு ஆங்கில அகராதியில் Being Docile(or) Fascination என அர்த்தம் போட்டுள்ளது. அன்பு வேறு. வசியம் வேறு. வசீகரப்பட்டவர்கள் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. சிந்திக்கும் திறனையும் இழந்து விடுவர். ராஜா சாலமன் மற்றும் நெப்போலியன் மற்றும் ரஸ்புடீன் ஆகியோரிடம் இவ்வசீகர சக்தி அபரிமிதமாக இருந்ததாகத் தெரிகின்றது. பொதுவாக வசியங்கள் எட்டுவகைப்படும் மற்றவைகள் உட்பிரிவுகளாகும். அவைகளையடைய மூலிகைகள் உதவி செய்யும். தனித்தனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்கள் உண்டு. எட்டும் எல்லோருக்கும் சித்தியாகாது. ஏதாவது ஒன்று அல்லது இரண்டு மட்டும் சித்தியாகும். அதை வைத்துக் கொண்டு எல்லாம் தெரியும் எனச் சொல்வார்கள். அது உண்மையல்ல. 1. சர்வவசியம் – புல்லுருவி, 2. ராஜவசியம் – தேள் கொடுக்கு, 3. புருஷவசியம் – செந்நாயுருவி, 4. ஸ்திரீ வசியம் – நில ஊமத்தை, 5. மிருகவசியம் – விஷ்ணுகிரந்தி, 6. சர்ப்பவசியம் பொற்றலைக்கையான், 7. சத்ருவசியம் – வெள்ளெருக்கு, 8. தேவதாவசியம் – சீந்தில் கொடி ஆகியவை வசிய மூலிகைகள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வசியம் தோன்றியது. ஒவ்வொன்றிலும் வசியத்திற்குரிய மூலிகைகள் பற்றிப் பார்த்தோம். அக்காலத்தில் அதாவது 'பொட்டு' எனக்கூறி நெற்றியில் வைத்திருந்தனர். கேரளப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளில் பல மந்திர, தந்திரங்கள் பற்றியும் மருத்துவம் பற்றியுமே உள்ளன. சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு இருவகை வசிய மருந்துகள் மற்றும் மை செய்துள்ளனர். ஒன்று விலங்குகள், பூச்சிகளைக் கொன்று அதிலிருந்து வசிய மைகள் தயாரித்துள்ளனர். மற்றொன்று மூலிகைகளை வழிபட்டு அவற்றினைப் பறித்துக் கூட்டுப் பொருள்கள் சேர்த்து வசிய மை தயாரித்து இருக்கிறார்கள். மூலிகை மைகளையே இங்கு விளக்கப் போகின்றோம். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மூலிகைகளை ஒரே செயலுக்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

முற்காலத்தில் தற்பொழுது இருப்பதுபோல் நாடு, நகரங்கள் இருக்கவில்லை. மரம்செடி கொடிகள் வளர்ந்து காடுகளாகவே இருந்துள்ளன. அது சமயம் பலவகைப் பாம்புகள் பெரிய அளவில் இருந்து விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தொல்லைகள் கொடுத்துள்ளன. அத்தகைய பாம்புகளுக்காக வசியமை தயாரித்துள்ளனர். பொற்றலைக்கையான், தும்பைவேர், நிலப்புரண்டி சிறுகீரை, அவுரி, கரியசாலை, சிகப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயுருவி காஞ்சொறி, பொற்கொடி, ஆடையொட்டி இவைகளை சமயெடையாக யெடுத்துப் புத்துத் தேனிலரைத்து திலகமிட்டுச் செல்லச் சர்ப்பங்கள் வசியமாகிப் படமெடுத்தாடும். அதுசமயம் பாம்பினைப் பிடித்துத் தூரத்திடங்களில் விட்டுவிடுவர் அல்லது அடித்துக் கொல்வர். சில நேரங்களில் பாம்புகள் கடித்து விடுவது உண்டு. அதுபோன்ற நேரங்களில் சேராங்கொட்டை மரத்துப் புல்லுருவிக்குக் கேட்டை நட்சத்திரத்தில் கருவூமத்தன் காவு கொடுத்துத் தீபதூபத்துடன் கொண்டுவந்து பால்விட்டரைத் துருட்டி வேண்டியபோது முருங்கையிலைச்சாற்றிலுறைத்துக் கடிவாயிற் போட்டு உள்ளுக்குக் கொடுக்க விசங்கள் வசியமாகிக் கடிபட்டவர்களிடமிருந்து விசமே இறங்கி ஓடும்.

பாம்புகள் போலக் காட்டு மிருகங்களும் சில நேரங்களில் தொல்லை கொடுத்துள்ளன. அது சமயம் எத்தகைய மிருகங்களாக இருந்தாலும் வசியமாக ஓர் வசியமை தயாரித்துள்ளனர். கிராமங்களில் இரவு நேரங்கள் 'இராப்பாடி' என்னும் ஆட்கள் இன்றும் வருகின்றனர். ஒவ்வொரு வீட்டின் முன்பும் வரும்சமயம் அந்த வீட்டில் நடக்க இருக்கும் நல்லது கெட்டது பற்றிக் கூறுவர். மறுநாள் பகலில் நன்கொடை பெற்றுச் செல்வர். தொழில் தெரிந்தவர்கள் இம் மையைத் திலகமிட்டு வருவதால் வீட்டு வளர்ப்பு மிருகங்களும் தெரு நாய்களும் ஒலி எழுப்பாது படுத்துவிடும். காட்டில் வாழும் சித்தர்கள் இதன் பெருமையைத் தெரிந்திருப்பதால் இந்த மையைப் பயன்படுத்தியுள்ளனர்.

விஷ்ணுகிரந்திவேர், விஷங்கொல்லி, காடுகட்டி, தொட்டால் நாயுருவி, முன்னை. சங்கன்வித்து, அழிஞ்சில் இவைகளை ஓர் நிறையாகத் தேனிலரைத்துத் திலகமிட்டுச் செல்ல மிருகங்கள் வசியமாகும்.

அக்காலத்தில் இராஜா, இராணி ஆட்சி நடந்து வந்துள்ளது. அவர்களிடம் நற்பெயர் பெற்றால் மிகுதியான அளவு பொன்னும் பொருளும் பெறலாம். எனவே அவர்களிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நற்பெயர் பெறச் சிலர் அரச வசியமை தயாரித்து அரசர்களைக் கண்டு வந்துள்ளனர். வில்வமரத்தின் மேலிருக்கும் புல்லுருவியை விசாக நட்சத்திரத்தில் சாப நிவர்த்தி செய்து காப்புக்கட்டிப் பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் கைவிரல் நகங்கள் படாமலும் பக்குவமாகக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி இடத்து வஸ்திரகாயஞ் செய்து அதற்குச் சரியெடை கஸ்தூரி, குங்குமம், சந்தனம், பச்சைக்கற்பூரம் இவைகளைச் சேர்த்து விஷ்ணுகிரந்தியின் சாறும் நாயுறுவிச்சாறும் விட்டரைத்து மாத்திரைகளாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு தேவையானபோது காராவின் நெய்யில் குழைத்துத் திலகமிட்டுச் செல்ல இராஜா, இராணி இவர்கள் வசியமாவார்கள். அரசர், அரசியிடம் நற்பெயரும் கிட்டும். பிற்காலத்தில் அவர்களே மையளிந்தவர்களை அழைத்துப் பேசுவர், பொன்னும் மணியும் மேலும் கொடுத்தனுப்புவர்.

சில நேரங்களில் மந்திரிகளின் மூலமாக அரசர், அரசியைப் பார்க்க வேண்டியதிருக்கும் அல்லது மந்திரிகள் அளவிலேயே செயல்கள் முடிய வேண்டியதிருக்கும். அது சமயம் பாதிரிமரத்துப் புல்லுருவிக்கு உத்திராட நட்சத்திரத்தில் சிவப்புப் பூவினைப் பலிகொடுத்துத் தூபதீப நைவேத்தியத்துடன் கொண்டுவந்து கோரோசனை குங்குமப்பூ கஸ்தூரி பச்சைக் கற்பூரம் இவைகளைச் சேர்த்துப் பதனீர் விட்டரைத்துக் குளிகைசெய்து வைத்துக் கொண்டு தேவையானபோது தேனிலுரைத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு மந்திரிகளைக் காண அவர்கள் வசியமாவார்கள்.

சில நேரங்களில் அரசர், அரசி, மந்திரிகள் இவர்களைத் தவிர்த்து இவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களைக் கண்டு சில காரியங்களை முடிக்க வேண்டியிருக்கும். அது சமயம் ஆனைவணங்கி, நிலப்பனைவேர், அறுகு, வெள்ளெருக்கு, காஞ்சொறி, ஆவாரை, முசுமுசுக்கை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுழலாவாரை, பொற்றலைக்கையான், வேம்பு இவைகளின் வேரைச் சமஎடையாக யெடுத்துச் சூரணித்துத் தேனில் குழைத்துத் திலகமிட அரண்மனையாட்கள் வசியமாம்.

அரசு என்று ஒன்று இருந்தால் போர் என்ற ஒன்றும் அக்காலத்தில் இருந்துள்ளது. போர் நடக்கும் நேரங்களில் காட்டாத்தி மரத்தின் பேரிலிருக்கும் புல்லுருவியைச் சித்திரை நட்சத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையுங் கூடின தினத்தில் காப்புக்கட்டிப் பொங்கல் பலி தூபதீபங் கொடுத்துக் கொண்டுவந்து சாறு பிழிந்து கட்டியில் தடவி அதன் பேரில் சந்தனத்தை விஷ்ணுகிரந்தியின் சாற்றில் குழைத்துத் தடவிக் காய்ந்த பிறகு அதில் கஸ்தூரி மஞ்சளை வெள்ளெருக்கன் சாறு விட்டரைத்துப் பூசிக் காய்ந்தபிறகு காராவின் நெய்யை அதின் பேரில் பூசி ஓர் அகலில் நெருப்பை போட்டு அதின் பேரில் சாம்பிராணியைப் புகைத்து அப்புகையைச் சட்டியில் பிடித்தபிறகு புதுத்தேனைத் தடவிக் கற்பூரப்புகையைப் பிடித்து வழித்துச் சிமிழ்களில் வைத்துக் கொண்டு தேவையான போது திலகமிட்டுச் செல்ல எதிரிப்படைகள் உறவாடி வசியமாவார்கள். வெற்றி நமக்கே கிடைக்கும்.

மக்கள் என்று கூட்டு வாழ்வு ஆரம்பித்தனரோ அன்றே அதிக அளவில் வழக்குகளும் தோன்ற ஆரம்பித்துவிட்டன. சிலப்பதிகார 'இலக்கியத்தில் வழக்காடு காதை' என ஓர் தனிப் பகுதியே உண்டு. அக்காலங்களில் அரண்மனைகளிலும் பிற்காலத்தில் மரத்தடிகளிலும் வழக்குகள் கூறப்பட்டுத் தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. வழக்குகளில் வெற்றி பெறவும் வசிய மை தயாரித்துள்ளனர். அத்திமரத்துப் புல்லுருவி மிருகசீரிட நட்சத்திரத்தில் தூபதீபங்காட்டிக் கொண்டுவந்து அதில் வெண்குன்றிவிதை மயிரோசனை சேர்த்து எலுமிச்சம்பழம் சாற்றிலரைத்து உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு தேவையான சமயம் தேனிலரைத்து திலகமிட்டுச் செல்ல வழக்குகள் வெல்லும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிக அளவு செல்வம் சேர்த்த அக்கால ஆண்கள் ஒரு துணைவிக்குப் பதில் பலரை மணந்து அவ்விடத்திலேயே பல ஆண்டுகள் வாழ்வதுமுண்டு அல்லது பரத்தைவீடு சென்று அங்கேயே காலம் கடத்துவதுமுண்டு. அது சமயங்களில் முதல் மனைவி வீடுவந்த கணவன் தன்னை விட்டுப்பிரியாது இருக்க ஓர் மையைப் பயன்படுத்துவதுண்டு. பாதிரி மரத்தில் படர்ந்திருக்கும் புல்லுருவிச் செடிக்குச் சித்திரை நட்சத்திரமுஞ் சோமவாரமுங் கூடிய தினத்தில் காப்புக்கட்டித் தீபதூபங் கொடுத்துக் கொண்டுவந்து உலர்த்திப் பொடியாக்கி வஸ்திரகாயஞ் செய்து அதன்சமன் சந்தனஞ் சேர்த்து வெள்ளெருக்கன்சாறு விட்டரைத்து மாத்திரைதிரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு தேவையானபோது காராவின் நெய்யில் குழைத்துப் பெண்கள் திலகமிட வீடுவந்த கணவன் பிற இடங்கள் செல்ல மாட்டான்.

சில நேரங்களில் அரசர்களும், படைவீரர்களும் எதிர் நாட்டில் வெற்றிக் கொடி நாட்டித் திரும்பும் சமயம் அங்குள்ள பெண்களையும் சிறைப்பிடித்து வருவதுண்டு. அப்பெண்கள் எதற்க்கும் இணங்கமாட்டார்கள். இலவன்மரத்தின் பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச் செடிக்குச் சாபநிவர்த்தி செய்து மஞ்சள் நூல் காப்புக்கட்டிப் பொங்கலிட்டு மறுநாள் காலை செவ்வாய்க்கிழமை தினஞ்சென்று எலுமிச்சங்கனி காவு கொடுத்து இரும்பாயுதம் படாமல் கொண்டு வந்து உலர்த்திப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கஸ்தூரி, காந்தம், குங்குமம், சவ்வாது சந்தனஞ் சேர்த்துப் பசும்பால் விட்டரைத்து மாத்திரைகள் திரட்டி வைத்துக் கொண்டு தேவையானபோது பொன்னாங்கண்ணியின் சாற்றில் குழைத்துத் திலகமிட்டுச் செல்ல அந்தப் பெண்கள் வசியமாவர்.

எச்செயலுக்கும் தலைவர் ஒருவரே இருக்க வேண்டும் பல தலைவர்கள் இருந்தால் குழப்பமே வரும். தம் கீழ் வேலை செய்யும் ஆண்கள் வசியமாகித் தங்களது கட்டளையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைவேற்றத் தலைவர்கள் ஓர்வகை வசிய மையைப் பயன் படுத்தியுள்ளனர். பூரிமரத்திலிருக்கும் புல்லுருவிக்கும் பூராட நட்சத்திரத்தில் எலுமிச்சை பலி கொடுத்துத் தூபதீப நைவேத்தியங் கொடுத்துக் கொண்டு வந்து பசுநெய்யி லரைத்து உண்டை செய்து காயவைத்துக் கொண்டு தேவை யானபோது நல்லெண்ணெயிற் குழைத்துத் தலைவர்கள் திலகமிட ஆண்கள் வசியமாவார்கள். அக்காலத்தில் நல்லவை கெட்டவைகளுக்கான முடிவுகளை ஆண்களே எடுப்பர். எனவே ஆண்கள் மட்டும் இதன் வகையில் வசியப் படுத்தப் பட்டுள்ளனர்.

தற்காலத்தில் பெற்றோர்களால் நடத்தப்படும் திருமணங்களில் சிலவும், பல காதல் திருமணங்களும் விரைவிலேயே மணமுறிவு ஏற்பட்டுவிடுகின்றன. அக்காலப் பெரியவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சேர்ந்து ஓர் வசியமை கண்டு பிடித்துள்ளனர். இதனை இருவரும் திலகமிடலாம். என்றும் பிரியாதிருக்கத் திருமண நாளிலேயே இருவரும் இதனை திலகமிட்டு இல்வாழ்வினை ஆரம்பித்து உள்ளனர்.

கடுக்காய் மரத்துப் புல்லுருவிக்கு ஆயில்ய நட்சத்திரத்தில் எலுமிச்சங்கனி காவு கொடுத்துத் தீபதூபத்துடன் கொண்டு வந்து தேன் விட்டரைத்து உருண்டை செய்து வைத்துக் கொண்டு தேவையான போது நெய்யிலுரைத்துத் திலர்தமிட்டுக் கொண்டு ஆண் பெண் இருவருஞ்சேர எந்நாளும் பிரியமாட்டார்கள்.

சத்துருக்கள் என்பவர்கள் எங்கிருந்தோ பிறப்பவர்கள் அல்ல அவர்களும் நம்மைப் போன்றவர்களே. சில நேரங்களில் நண்பர்களும் சத்துருக்களாக மாறுவதுண்டு. பொற்றலைக்கையான், வெள்ளெருக்கு, விஷ்ணுகிரந்தி இவைகளின் வேரைக் காராவின் நெய்யிலரைத்துத் திலகமிட்டுச் செல்லச் சத்துரு வசியமாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சில நற்செயல்கள் புரிய காடுகளில் வாழும் சாமியார்கள் நாடுகளுக்கு வந்து உலகம் சுற்றுவர். நின்றால் சிணுங்கி, செவ்வாரத்தி, ஆவாரை முல்லை கொழுந்தெட்டு, கூத்தன் குதம்பை இவைகளின் வேரைக் கொன்றைப் பன்னீர் விட்டரைத்து திலகமிட்டுச் செல்ல இவர்கள் லோகத்திலுள்ளவர்க ளெல்லாம் வசியமாகிக் கேட்டதைக் கொடுத்து வணங்குவார்கள்.

நாம் இவ்வுலகில் தோன்றியதுமே உற்றாரும் உறவினரும் தோன்றிவிட்டனர். உறவினர்கள் அக்காலத்தவர்கள் இக்காலத்தவர்கள் போலப் பல துன்பங்களை அடைந்துள்ளனர் உறவினர்களிடமிருந்து நற்பெயர் பெறவும் மதிப்புப் பெறவும் ஓர் வசிய மையைப் பயன்படுத்தியுள்ளனர்.

வெள்ளெருக்கு, அழுகண்ணி, கோரோசனை, மண்டுகப்பிச்சு இவைகளை எருக்கன் பழுப்புச் சாற்றாலரைத்து நமக்கிஷ்டமானவர்களின் உறவினர்கள் மேற் பூச அவர்கள் வசியமாகி நம்மை விட்டகல மாட்டார்கள்.

நண்பர்கள் சில நேரங்களில் பகைவர்கள் ஆகிவிடுவ துண்டு. நண்பர்கள் நண்பர்களாகவே எந்த நாளும் இருக்கப் பொற்றலைக்கையான் வெள்ளெருக்கு காட்டட்டை மண்டுகப் பிச்சு இவைகளில் ஐம்மலஞ்சேர்த்து அரைத்து நண்பர்களுக்குக் கொடுக்க அவர்கள் நம்மைவிட்டு எந்நாளும் பிரியமாட்டார்கள்.

இது வரை பார்த்த வசியங்கள் ஓர் வகை. தற்பொழுது அக்காலத்தவர் பயன்படுத்திய பூமி அல்லது விளைச்சலுக்கும் ஓர் வசியம் வைத்திருக்கின்றார்கள். சித்திரமூலச் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புக்கட்டித் தாயென்னும் எழுத்தை லக்ஷத்தி யெட்டுத்தரஞ் செபித்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடி ஓர் புதுக் குடுவையில் போட்டு அதனுடன் கருவையுஞ் சேர்த்து நல்ல பலனைக் கொடுக்கின்ற தோட்டம், வயல் முதலிய இடங்களில் புதைத்து விட்டால் வயலெல்லாம் பாழாய்ப் போகும் மறுபடியும் புதைத்ததை எடுத்துவிட்டுப் பசுங்கோமியத்தை மூன்று நாள் தெளிக்க எப்போதும் போல் விளைச்சல் பலனைத்தரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்மிடத்திலுள்ள சாமான்களை விற்பனை செய்யும் பொருட்டுப் பத்திரிகைகள், அவற்றின் தன்மை, விலை முதலியவற்றைப் பற்றி விளக்குமாறு செய்வது வழக்கம். விளம்பரங்கள் எழுதுவது எளிய காரியமன்று. அதுவும் ஓர் வசியமேயாகும். தம்முடைய பொருளைப்பற்றி உலகத்தவர்க்குத் தெளிவான அறிவைப்புகட்டி அவர்கள் அதைக் கவனிக்கவும் விருப்பங்கொண்டு வாங்கவும் செய்யும்படி சுருக்கமான வார்த்தைகளாலும், தகுந்த யோசனைக் குறிப்புகளாகக்கூடிய படங்கள் முதலிய அடையாளங்களாலும் விளம்பரம் செய்யும் சமர்த்து சாமான்யமானதன்று. விளம்பரமெழுதும் வித்தையைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் மேலை நாடுகளில் அநேகம் உள்ளன. அங்கே கற்பிக்கும் முக்கிய பாடம் யோசனைக் குறிப்புகளைத் தகுந்த வசிய வாக்கியங்களாக மாற்றி உபயோகப்பதற்கேயாகும்.

விளம்பரத்தை வாசிப்பவர்கள் இன்னது செய்ய வேண்டுமென்று கௌரவத்துடன் உத்தரவளிக்கும் பாவனையாய் (The use of direct command) விளம்பரத்தை வசிய வார்த்தைகளால் எழுத வேண்டும். உதாரணமாக "ஐயா, இன்றைக்கு வீட்டுக்குத் திரும்புகையில் நூல் ஒன்று கையில் கொண்டுபோம். அம்மாளுக்கு அது அவசரம்" என்று ஒருவன் விளம்பரம் செய்தால் அதை வாசிப்பவன் மனதில் தன் மனைவியைப்பற்றிய நினைவும். அவள் மறுநாள் காலையில் வழிபாடு செய்யும் பொழுது. அவசியமென்றும், ஆதலால் அதை வாங்கவேண்டுமென்றும், அதிலும் நமது பதிப்பகத்தார்களால் செய்யப்பட்ட நூல் என்பதால் வாங்க, பயிற்சி செய்யத் தகுந்ததென்றும், பல யோசனைகள் அவன் மனதில் கிளம்புவதால் அவன் வீட்டிற்குத் திரும்புகையில், தன்னருமை மனைவியை நினைத்து வசியச் சொற்களுக்குக் கட்டுப்பட்டுக் கடைக்குச் சென்று 'சூட்சும உடல்' என்ற நூல் வாங்கிச் செல்வான். ஓர் வசிய வார்த்தைகள் எத்தனை யோசனைகளைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிளப்பிடுங் குறியாகிறதென்பதை இதனாலறிந்து கொள்ளலாம். இவை போன்றவைகள் பொது ஜன வசியமாகும்.

புல்லா மணக்கு என்னும் ஒரு வசிய மூலிகை. "புல்லா மணக்கு ஒரு சொல்லால் மடக்கு" என்பது பழமொழி. இம்மூலிகை 16வகை வசியத்துக்கு உதவும் எனச் சொல்கின்றார்கள். ஆனால் முழு விபரம் கிடைக்கவில்லை. எந்த நட்சத்திரத்திற்கு எந்த நட்சத்திரக்காரர்கள் வசியமாவார்கள். எந்த ராசிக்காரருக்கு எந்த ராசிக்காரர்கள் வசியமாவார்கள் என ஜோதிடர்களிடம் கேட்டறியலாம். வசியப் பொருத்தம் பார்க்காமல் வரதட்சணைப் பொருத்தம் பார்ப்பதால் பலரின் திருமண வாழ்க்கை முறிந்துவிட்டது. பார்வையில் வசியம், உடல் அழகில் வசியம், பேச்சில் வசியம், அறிவில் வசியம் ஆகியன இல்லாத நபர்களை வணிகத் தலங்களில் வேலைக்கு அமர்த்துவதால் பல தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. கிழவன், கிழவிகளைப் போட்டு விளம்பரங்கள் வருவதில்லை. சம்பந்தா சம்பந்த மில்லாமல் இளம் வாலிபர்களைக் காட்டி விளம்பரங்களை வெளியிடுகின்றார்கள். அதைப் பார்த்த மக்கள் விளம்பர வசியத்துக்குட்பட்டு ஏன்? எதற்கு? எனக் கேள்வி கேட்காமல் காசு கொடுத்துப் பொருள் வாங்குகின்றனர்.

எளிய வசிய சக்தியால் ஆழ்ந்த துக்கத்திலிருப்பவனை மிக்கக்களிப்படையவனாகவும், களிப்புடையவனைக் கவலையாள னாகவும், வியாதிகளையகற்றவும், கெட்ட நடிவடிக்கைகளைப் பற்றறத் தொலைவிக்கவும், இன்னும் எண்ணிறந்த வகையான நன்மையான காரியங்களை நடத்தச் செய்யலாம். இதைத்தான் பேதை மக்கள் கண்டு, குறி கேட்பதும், உடுக்கடித்துப் பிழைக்கும் அம்மன் கொண்டாடிகள், ஆத்தாள் கொண்டாடிகளிடம் பொருட்காணிகளைக் கொடுக்கிறதும், குடுகுடுப்பாண்டியிடம் அரையில் கட்டும் ஆடைகளை அவிழ்த்துக் கொடுத்து விடுகிறதும், அன்னவர்கள் செய்யும் அட்டகாசங்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதிமயங்கி வசியமாக மனமருள்வதும், பழக்கமாக இருந்து வருகின்றது. அவர்களுக்குத் தெரிந்திருக்கும் கொஞ்சமான வசிய பலத்தினாலேயே இத்தகைய ஆர்ப்பாட்டம் புரிவார்களானால் பூரண வசியம் சக்தியடைந்தவர்களுடைய பெருமையை எங்ஙனம் கூறுவது. உலகத்தினிடத்து மானுடயாக்கையைப் போர்த்திருக்கும் மக்களிடம் செல்வாக்கு, மரியாதை, மனக்கிளர்ச்சி, தேக மனோ தத்துவ பலங்கள், குடும்பந்தாங்கல் முதலிய அரிய காரியங்களெல்லா வற்றிற்குமே சிறக்கச் செய்வது வசிய சக்தியின் தன்மையேயாம்.

வசியங்கள் பலவற்றில் மனோவசியமும் ஒன்று. மனோவசியமென்றால் மனத்தைத் தன் வசமாக்கி ஆளுவதாகும். அது சுயமனோவசியம், பிறமனோவசியம் என இருவகைப்படும். தன் மனத்தை அடக்கியாளுந் தன்மையை உடையவன் பிறர் மனத்தையும் வசியஞ்செய்யுந் தன்மையை உடையவனாவான். சுயமனோவசியத்தைப் பற்றியே மனோவசிய சாத்திரத்தில் தொகுப்பாகப் பலர் கூறியுள்ளனர். சுயமனோவசியஞ் செய்யப் பழகாதவர்களுங்கூட யோசனைக் குறிப்பு (Suggestion), சுழல் கருவிகள் (Hypnotic mirror) முதலிய ஏதுக்களின் உதவியால் பிற மனோவசியஞ்செய்வது எளிதாகும். ஆதலால் பிற மனோவசியத்தைப்பற்றி ஹிப்னாடிஸம் போன்ற நூற்களில் படித்துணரலாம்.

நமது மனோவசிய சக்தியின் சூக்ஷமத்தை அறிந்து கொள்வதால், கடவுளின் ஞானம் இன்னதென்றறிந்து ஆச்சரிய பிரமையுடன் அவரை வணங்கிக் கொள்ளவும், அவரிடத்தில் மனத்தைச் செலுத்தி ஒன்றுபடவும் ஏதுவாகும். நமது உடல் மனோசக்திகளுக்கு உண்டாகும் நோய்களைப் போக்கலாம். மருந்துகளால் குணமாக்க முடியாத அநேக நோய்களையும் சுகமாக்கலாம். பிள்ளைகளுக்குள்ளும் பெரியவர்களுக்குள்ளும் இருக்கும் கெட்ட பழக்கங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீக்கிவிடலாம். மனோவசிய சாத்திரமறிந்த ஆசிரியருக்குத் தமது பிள்ளைகளிடம் அதிக மதிப்பும் சொற்செலவும் உண்டு. மேலும் அவர் தமது பிள்ளைகளுக்குப் படிப்பின்மேல் ஆவலும் முன்னுக்கு வரவேண்டுமென்கிற விருப்பமும் உண்டாக்குவது எளிது. பிள்ளைகளிடமுள்ள கெட்டகுணங்களை மாற்றி அவர்களை நல்லவர்களாக்கவும் கூடும். மற்றவர்களும் நம்மை மதித்து நம்மிடத்தில் அன்பு பாராட்டுவதுடன், நமது விருப்பத்திற்கும் இணங்குவார்கள். ஞாபக சக்தியை விருத்தி செய்யலாம். காது மந்தம், தெற்றுவாய், உறக்கமின்மை முதலிய பல நோய்களைச் சுகமாக்கலாம். இரத்தவோட்டம், வேதனை முதலியவற்றைச் சில நிமிடங்களுக்குள் நிறுத்தலாம். தூங்காமல் தூங்கும் நிலைக்குப் பிறரைக் கொண்டுவந்தபின்பு மனோவசியத்தால் குழப்பத்தினையும் மாற்றலாம்.

மனோவசியம் கற்றபின்பு தமக்குள்ளிருக்கும் சக்தியின் வல்லமை விளங்குவதால் மனோதைரியமும் எடுத்த செயலை வெற்றியுடன் முடிக்கும் வல்லமையும் உண்டாகும். கணவன், மனைவி இவர்களுக்குள் களங்கமற்ற அன்பைப் பெருக்கி ஒருவரின் உள்ளத்திலிருப்பதை மற்றவர் அறியச் செய்வதால் இருவர் மனமும் ஒன்றித்து வாழ்வார்கள். தன் மனதை வசியஞ்செய்து தனது சித்தத்துக் கிணங்கச் செய்யும் சக்தியடைந்தவனுக்குப் பக்தி வைராக்கியம், யோகம், தவம் முதலிய வழிகளெல்லாம் சித்தியாகி ஞானமார்க்கந் திறக்கும். மனோவசியத்தால் காமக்குரோதாதி துர்க்குணங்களை அடக்கவும், சீதோஷ்ண, பசிதாக, சுகதுக்காதி துவந்துவங்களைச் சமபுத்தியாக அனுபவிக்கவும் திறமுடையவனாவான். சகல ஆசைகளையும் தனது மனோவசிய சக்தியால் தனது காலின்கீழ் மிதித்துத் தள்ளி அவற்றிலிருந்துண்டாகும் அபார சக்தியைத் தனதாக்கிக் கொள்வதால் மகா தீரனாவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபம், பகை, பொறாமை, லோப்த்தனம், வஞ்சகம், கபடு முதலிய துர்க்குணங்கள் நீங்கி அன்பு, சாந்தம், சமாதானம், இரக்கம், பூததயை முதலிய நற்குணங்களைச் சுயவசிய சக்தியால் பெருகுவதால் அவன் முகத்தில் தேஜசும், உடலில் தாஷ்டீகமும் வல்லமையுந்தோன்றி ஆயுள் விருத்தியாகி நெடுங்காலம் நன்மை பெறுவான். அவன் மனத்திலுள்ள பயம், துக்கம், கிலேசம், சந்தேகம், அதைரியம் முதலிய துர்ச்சுபாவங்கள் முற்றிலும் நீங்கி, விசுவாசம், நம்பிக்கை, தைரியம், வைராக்கியம், வீரம் முதலிய சகல சற்குணங்களும் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வரும். தன் மனதைச் சரியாகப் பக்குவப்படுதினவன் தனக்குள் அடங்கியிருக்கும் அற்புத சக்தியின் வல்லமையைப் பெருக்கிக் கொள்வான். மனோவசிய சக்திகளால் இத்துணைச் சிறப்புகளையும் தற்காலத்திலும் பெறலாம்.

மூலிகைகளைத்தேடிக் காடுகளுக்குச் செல்ல வேண்டாம். பணம் செலவு செய்யாமல் மனம் மட்டும் வைத்தால் போதும். பொதுவாக வசியத்துக்குண்டான சிறப்பு நாள் ஞாயிற்றுக்கிழமை. சூரியஹோரை. மற்ற நாட்களிலும் செய்யலாம். நாம் பயிற்சி செய்ய இருக்கும் வசியமுறை மிகமிக எளிதானதாகும். கி.பி. 800லேயே ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ ‘‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’’ என பாடிவிட்டனர். ஒரு நபர் அல்லது பல நபர் நம்மை விரும்புவதற்கும், நம்மை வெறுப்பதற்கும் அவர்கள் காரணமல்ல. நம்மிடமிருந்து செல்லும் ஒலி ஒளி அலைகள் தான் காரணம். எதிரிகளை அழிக்கச் சத்துருசம் ஹாரமந்திரம் மற்றும் யாகம் நடத்தினால் வெவ்வேறு எதிரிகள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். வாழ்நாள் முழுவதும் அவர்களை மீண்டும் மீண்டும் எதிர்த்துப் போராடவே நேரம் காலம் வாழ்நாள் கடந்துவிடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசியப் பிரயோகம் செய்தால் கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளும் மற்றும் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளும் வசியமாகி விடுவார்கள். எதிரிகளின் சக்தி 40 வாட்ஸ் ஒளி செயலிழந்து 100 வாட்ஸ்க்குள் முடங்கிவிடும். அதனால் பிறரின் எதிர்ப்பு அலைகளை மாற்ற நம் வசீகர அலையின் தன்மையை உயர்த்திக் கொள்ள வேண்டும். சைவ உணவான பால், பசு வெண்ணெய், பசுநெய், பச்சரிசி, பாசிப்பருப்பு, தேங்காய்த்திருகல். மஞ்சள்பொடி, கிராம்பு, பொற்சீந்தில், ஆனைத்திப்பிலி, பாதாம்பருப்பு, பட்டுஆடை, பொன்நகை, நவரத்தினங்கள் ஆகியவை நமக்குண்டான வசிய சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

பொது வசியம் வேண்டுபவர்கள் அகஸ்தியர் வாத சௌமிய சாகரத்தில் மந்திரவாள் என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ள "ஓம் ரீங் வசி வசி" என்னும் மந்திரத்தைக் கண்களை மூடி உதடு அசையாமல் காலையிலும் மாலையிலும் 4 திசைகளை நோக்கி ஜெபிக்க வேண்டும். நின்று கொண்டும் அல்லது அமர்ந்து கொண்டும் ஜெபிக்கலாம். தலையில் விரிப்பு விரித்து விரிப்பின் மேல் இருந்து தான் ஜெபிக்க வேண்டும்.

மேற்படி வசியம் மந்திரம் திசைக்கு 108 வீதம் ஜெபிக்க வேண்டும். அப்படி 90 நாள் ஜெபித்தால் சர்வவசியம் உண்டாகும். ரோட்டில் நடக்கும்போதும் வாகனங்கள் ஓட்டும்போதும் மந்திரங்கள் ஜெபிக்கக் கூடாது. ஓரிடத்தில் அமர்ந்திருக்கும் போது ஜெபிக்கலாம். எந்த மந்திரமானாலும் ஒரு லட்சம் தடவை உரு ஏற்றிய பின்னரே வேலை செய்யும். அதுவரை அதன் முழுப்பயனை எதிர்பார்க்க முடியாது. ஒரு சில நாள் விட்டுவிட நேர்ந்தாலும் பின் ஜெபிக்கும்போது முன் கணக்குடன் சேர்த்துக் கொள்ளப்படும். வசிய மந்திரம் ஜெபிக்கும் போது வாயின் வலது பக்கத்தில் ஒரு கிராம்புத் துண்டை ஒதுக்கிக் கொள்ளவும். கடிக்கக் கூடாது. ஜெபித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடித்தபின் அதைத் துப்பிவிடவேண்டும். இது வசியமந்திர சக்தியை விரைவு படுத்தும். தாம்பூலம் போடும் பழக்க முள்ளவர்கள் புகையிலை இல்லாமல் தாம்பூலம் போட்டுப்பின் துப்பிவிட்டு அதன்பின் வசியமந்திரம் ஜெபிக்கலாம். இதுவரை விளக்கியது பெரியோர்களின் அனுபவத்திலும் உணரப்பட்டது. நிர்வாகிகள், தொழிலாளர் மேற்பார்வையாளர்கள், வக்கீல்கள், நடிகர்கள், இன்ஸ்சூரன்ஸ் ஏஜெண்டுகள், அரசியல் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு வசிய சூத்திரம் ஒரு கட்டாயப் பாடமாகும்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. நீலாஞ்சனக் கல்லும் நெற்றிக்கண்ணும்

(CLAIRVOYANT)

சுமார் 3000 ஆண்டுகளுக்குமுன் மோசஸ் இஸ்ரவேலர்களுக்குத் தலைமை தாங்கி வனாந்திரங்களில் பல கஷ்டங்களுக்கிடையில் எகோவா தேவதை கட்டளைப்படி அவர்களை வழி நடத்தி சென்றார். மக்கள் படும் கஷ்டங்களை எகோவா கடவுளுக்கு எடுத்துச் சொல்லத் தனி ஆளாக சினாய் மலை உச்சிக்குப் போய் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தார். அப்பொழுதுதான் மக்களை நல்வழிப்படுத்தப் 10 கட்டளைகள் அருளப்பட்டன. கடவுளை என் கண்களால் காண அருள்புரிய வேண்டுமென வேண்டினார். என்னை உன் ஊனக்கண்ணால் காணமுடியாது. என் வல்லமையை உன்னால் தாங்கமுடியாது என ஆண்டவர் எகோவா வேண்டுகோளை நிராகரித்தார். பின் பக்தனின் வேண்டுகோளுக்கு இணங்கி மோசஸைக் கண்களை இறுகமூடிக்கொள்ளச் செய்தார்.

பின் பயங்கர ஒலிச்சத்தத்துடன் மலை தீப்பிழம்பாகி மரம், செடி கொடிகள், பாறைகள் எல்லாம் எரிந்துபின் குளிர்ந்தது. அந்தச் சினாய் மலைக்கல்தான் நீலாஞ்சனக்கல் மற்றும் புஷ்பாஞ்சனக்கல். நவரத்தினங்கள் தோன்றிய வகைக்குப் புராணங்கள் உண்டு. அதேபோல் இந்த நீலாஞ்சனக் கல்லுக்கும் புராணம் உண்டு. ஆனந்த கந்தம் மற்றும் பதார்த்த குணசிந்தாமணி ஏட்டில் இதைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இக்கல் இளம் நீலத்துடன் கூடிய வெண்மையாக அடுக்கடுக்காக இருக்கும். சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவுக்கு இக்கல் வந்துவிட்டதாகத் தெரிகின்றது. அதே போலச் சித்தர்கள் பயன்படுத்திய சூரிய காந்தக்கல்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரகாந்தக்கல் என்னும் வகைகளும் இருந்துள்ளன. சூரிய, சந்திர காந்தக் கற்கள் பற்றியும், நவகற்கள் பற்றியும் முதலில் பார்ப்போம்.

சூரியகாந்தக்கல் மற்றும் சந்திர காந்தக்கல் இரண்டினையும் சித்தர்கள் பயன்படுத்தியுள்ளனர். சூரியகாந்தக்கல்லை ஆங்கிலத்தில் Sun Stone என்று அழைக்கின்றனர். தமிழ் நாட்டில் காரைக்குடிக்கு அருகமைந்த கீரனூரில் இக்கற்கள் கிடைக்கின்றன. இது லேசான ரோஸ் நிறத்தில் இருக்கும். இதன் மேற்பகுதியில் வட்டமான ஒளி அங்குமிங்கும் ஓடும். மேலை நாட்டினர்கள் இக்கற்களை விரும்பி அணிகின்றனர். இது ரூபி, நீலம், காக்காய் நீலம் என்ற கல் இனத்தைச் சேர்ந்தது.

சூரியகாந்தக்கல் போன்றே சந்திரகாந்தக்கல் என்னும் கல்லும் உண்டு. இதனை ஆங்கிலத்தில் Moon Stone என்று அழைக்கின்றனர். The Moon Stone என்று பெயர் தாங்கிய ஆங்கில நாவல் பல இலட்சம் படிகள் விற்பனையாகியுள்ளது. இந்த நாவலின் மையப் பொருளே மூன் ஸ்டோன்தான்.

இது ஒரு ஒளி ஊடுருவிச் செல்லும் கல். இது பார்ப்பதற்குக் குளுமையாகவும், வெண்மையாகவும் இருக்கும். இது சந்திரனைப் போன்று இருப்பதால் ஆங்கிலேயர்கள் மூன்ஸ்டோன் (Moon Stone) என்றும், இந்தியர்கள் சந்திரமணி என்றும் அழைக்கின்றனர். இது பார்ப்பதற்கு வைடூரியம் போன்று இருக்கும். இதன் நடுவில் வெண்மையான கோடு இருக்கும். சில வகைக் கற்களில் சந்திரன் போன்ற ஒளியைச் சிறு வடிவில் கக்கும். நீலம், பச்சை, இளஞ்சிவப்பு, கிரே, வெண்மை, போன்ற நிறங்களில் சந்திரகாந்தக்கல் கிடைக்கின்றன. இக் கற்கள், மனிதனின் மனதை ஒருமுகப் படுத்தும் தன்மை கொண்டது. இந்தியாவில் தமிழ் நாட்டிலும், ஸ்ரீலங்காவிலும் உயர்தரமான கற்கள் கிடைக்கின்றன. காந்தக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல், சந்திர காந்தக் கல் என்பன தெய்வ அம்சம் கொண்ட கற்களாகும். இதன் தன்மையை முதலில் அறிந்தது சித்தர்கள் நால்வரே. நந்தீஸ்வரர், அகத்தீஸ்வரர், இராவணேஸ்வரர், வைதீஸ்வரர் (தன்வந்திரி) இவர்களே அந்த நால்வர் ஆவர். விஸ்வாமித்திரர், அகத்தீஸ்வரர், நந்தீஸ்வரர், ராவணேஸ்வரர் எனும் நால்வரும் சூரிய கலையில் சுவாசிக்கும் போது சூரிய காந்தக்கல் மீது அமர்ந்து அப்பியாசம் செய்வது வழக்கம். இதனால் உடல் காங்கையோ உயிர் காங்கையோ கண் சிவப்போ உண்டாகும். அப்படி ஆகிவிட்டால் அதை மாற்றச் சந்திர காந்தக் கல்லில் அமர்ந்து உடலைக் குளிர்ச்சி ஆக்கியுள்ளனர். குளிர்ச்சியும், உஷ்ணமும்தான் தவவாழ்வுக்கு ஏற்றவை. போகர், திருமூலர் போன்றவர்களும் இக்கற்கள் மீது அமர்ந்து தவம் செய்துள்ளனர்.

'நவ'என்னும் சொல்லே சிறப்பானதாகும், நவ என்றால் ஒன்பது என்பதாகும். நவகிரகங்கள், நவதானியங்கள், நவலோகம் எனப் பல 'நவ'ங்களை அழைக்கின்றோம். நவ கற்கள் என அழைக்கப்படும் ஒன்பது கற்களில் ஏழு பூமியின் மேலும், இரண்டு மட்டும் (பவளம், முத்து) பூமியின் உள்ள கடலிலும் கிடைக்கின்றன. நவரத்தினங்களை நம் விருப்பப்படி மோதிரங்கள் டாலர் போன்றவற்றில் அணியக்கூடாது. முதல் வரிசையில் புட்பராகம், வைடூரியம், மரகதம் என்றும்; இரண்டாவது வரிசையில் நீலம், மாணிக்கம், வைரம் என்றும்; மூன்றாவது வரிசையில் கோமேதகம், பவளம், முத்து என்றும்; வரிசைப்படுத்தி அணிய வேண்டும். இந்த வரிசைப்படியே நம் கட்டுரையிலும் கொடுத்துள்ளோம்.

பார்ப்பவர் மனதைக் கவரும் தன்மை கொண்டது புட்பராகமாகும். Topaz என ஆங்கிலத்தில் இதனை அழைப்பர். புட்பராகத்தில் பலவகைகள் உண்டு. அதிகப் புழக்கத்தில் இருப்பது தங்கப் புட்பராகம் (Golden Topaz). இதன் நிறம் தங்கத்தைப் போன்று இருக்கும். அதிகமாக ஒளிவிடும் தன்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையது. இக்கற்களின் விலை குறைவானது. புட்பராகத்தில் பலவகைகள் உண்டு எனப்பார்த்தோம். அதில் ஓர் வகை கனக புட்பராகமாகும். இது மற்ற புட்பராகங்களைவிட அடர்த்தி கூடியதாகும். இதனையே சபையர் என்றும் அழைப்பர். ஒளிவிடும் தன்மையுடைய இக்கல்லின் விலை அதிகமாகும். கனக புட்பராகமே புட்பராக வகைகளில் மதிக்கப்படுகிறது. வேல்சிலுள்ள நியூ இங்க்லண்ட் மாவட்டத்திலும் வடக்கு நைஜிரியா, டாசுமேனியா ஆகிய நாடுகளிலும் கிடைக்கின்றன. உலகிலேயே ஸ்ரீலங்காவில் முதல்தரப் புட்பராகம் கிடைக்கின்றது. இரண்டாம்தரப் புட்பராகம் பிரேசில் நாட்டில் கிடைக்கின்றது. புட்பராகத்தில் ஏழு குணங்களும், எட்டுக் குற்றங்களும் உள்ளன. இதைப் பஸ்மம் செய்யலாம். முதலில் வெள்ளாட்டுச் சிறுநீரில் ஊற வைத்து, பின்பு வெந்நீரில் சுத்தம் செய்து, கரு ஊமத்தைச் சாற்றில் ஊறவைத்து உலையில் ஊதினால் பஸ்மம் ஆகும். அல்லது சிறுவழலைச் சாற்றில் ஊற வைத்து உலையில் வைத்து ஊதினால் பஸ்மம் ஆகும். புட்பராக பஸ்மத்தைச் சாப்பிட்டால் விந்து உற்பத்தியாகும். குடல் வாதம், சுவாசக் கோளாறுகள், சிறுநீர்ப்பைக் கோளாறுகள், கல்லீரல் பெருத்தல் போன்ற நோய்கள் நம்மை விட்டகலும். இது பாறையில் இருந்து வெட்டி எடுக்கப்படும். இந்தப் புட்பராகத்துக்கு மூன்று எண் ஆகவும். குரு கிரகமாகவும், மஞ்சள் நிறமாகவும், வடமேற்கு திசை ஆகவும், கடலைத் தானியமாகவும், ஆண் குணமாகவும், யானை வாகனமாகவும், இனிப்பு சுவையாகவும், பொன் உலோகமாகவும், மஞ்சள் துணியாகவும், பிரம்மா தேவதையாகவும், ஆலங்குடி சேத்திரமாகவும், அரசு மரமாகவும், மலர் முல்லையாகவும் சித்தர்களால் கூறப்பட்டுச் சிறப்புப் பெறுகின்றது.

நவரத்தினங்களின் முதல்வரிசையில் இரண்டாவதாக இருப்பது வைடூரியமாகும். ஆங்கிலத்தில் Cat's Eye என்று இதனை அழைப்பர். இரவில் பூனையின் கண் எவ்வாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்சியளிக்கிறதோ அதைப் போன்று வைடூரியம் காட்சியளிக்கும். எனவே, ஆங்கிலேயர்கள் இதற்குக் காரணப் பெயராக Cat's Eye எனப் பெயர் வைத்தனர். வேப்பம் பழம் போன்ற நிறமும் நடுவில் வெள்ளிக் கம்பி நூல் போன்ற அமைப்பும் கொண்ட வைடூரியமே மிகச் சிறந்ததாகும். பொதுவாக வைடூரியத்தின் நடுவில் உள்ள வெள்ளிக்கம்பி நூல் போன்ற அமைப்பு எங்குத் திரும்பிப் பார்த்தாலும் அழகாகத் தோன்றும். மோதிர விரலில் வலது கையில் அணிந்தால் நீங்கி விடும். மன அமைதி கிடைக்கும். தெய்வீக அருள் கிடைக்கச் செய்யும். நீண்ட ஆயுளையும் கிடைக்கச் செய்யும். கபம், பித்தம், சீதம், சீரணம் இன்மை, வயிற்றுக் கோளாறு போன்ற வியாதிகள் போக வைடூரிய பஸ்மத்தைச் சித்த வைத்தியர் ஆலோசனைப்படி சாப்பிட்டு வரலாம். வெள்ளி இழை போன்ற நூல் உடைய வைடூரியம், குபேர பலனைக் கொடுப்பதாகவும், கறுப்பு நூல் ஓடும் வைடூரியம் உலகச் சுகத்தைக் கொடுப்பதாகவும் முன்னோர்கள் கருதினர். வைடூரியம் இது மண்ணில் இருந்து வெட்டி எடுக்கப்படும் கல்லாகும். இந்த வைடூரியத்துக்கு இலக்கமான எண் ஏழு. கேது கிரகமாகும், செம்மை வைடூரியத்தின் நிறமாகும். வடக்கு வைடூரியத்தின் திசையாகும். கொள்ளு வைடூரியத்தின் தானியமாகும். அலிகுணம் வைடூரியத்தின் குணமாகும். சிம்மம் வைடூரியத்தின் வாகனமாகும். புளிப்பு சுவையாகும். துருக்கல் வைடூரியத்தின் உலாகமாகும். இவ் வைடூரியத்தின் துணி பலவகையாகும். இந்திரன் வைடூரியத்தின் தேவதையாவான். தர்ப்பை வைடூரியத்தின் புல்லாகும். செவ்வல்லி வைடூரியத்தின் மலராகும். இவ் வைடூரியத்தின் சேத்திரம் காளாஸ்திரி ஆகும்.

நவரத்தினங்களின் ஒன்றான மரகதம் என்ற பெயரினை நெல்லை மாவட்டத்தில் உள்ள பல பெண்களுக்குக் கூப்பிடு பெயராக அமைப்பர். இந்த மரகதத்தை ஆங்கிலத்தில் Emerald என்று கூறுவர். நவரத்தினத்தால் ஒன்றான இது பச்சை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்ணம் கொண்டதாகும். பச்சை நிறம் கொண்ட மரகதத்தை ஆங்கிலேயர்கள் எமரால்டு (Emerald) என்பர். பச்சையில் தரமான கற்களை அதிக விலைக்கு விற்பனை செய்வர். பலர் இக்கல்லைப் பச்சை என்றே அழைக்கின்றனர். சில ரக மரகதத்தை மரைக்காயர் பச்சை என்று அழைக்கின்றனர். சித்த மருந்துக்கடைகளில் மரகத பஸ்மம் கிடைக்கும். இது நரம்பு தொடர்பான அனைத்து நோய்களையும் அகற்றும். மேக நோய் என்று அழைக்கப்படும் கொடிய நோயையும் இது அகற்றும்.

நீலவண்ணன் என பெருமாளின் பெயராக அழைக்கின்றோம். பூமியில் அதிக இடம் பிடித்துள்ளது கடலும் வானமுமாகும். நீலக்கடல் என்றும் நீலவானம் என்றும் கூறுகின்றோம். நவரத்தினங்களில் வேறு எந்தக் கல்லுக்கும் இப்படிச் சிறப்பில்லை. இந்த நீலத்தை ஆங்கிலத்தில் புளூசபையர் (Blue Sapphire) என்று அழைப்பார்கள். நீல நிறத்தை வீடுகளில் வர்ணம் அடித்திருப்பர். இந்த நீலம் வீட்டினுள் கெட்டவைகள் நுழைய விடாது தடுக்கும். நம் இந்தியாவில் ஒரிசாவில் இக்கல் அதிக அளவு பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றது. நீலம் என்ற நிறமே புனிதமானது. நீலக் கற்கள் இறைவனின் அருளைப் பெறப் பெரிதும் உதவுகின்றன. கிருத்துவர்களின் வேத நூலில் மோசேஸ்க்கு (Moses) இறைவன் அருளிய பத்துக் கட்டளைகள் நீலக்கல் பாறைகளில் தான் செதுக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரிஸா மாநிலத்தில் கிடைப்பவை தரமான கற்கள் என்று கூற முடியாது. இலங்கை, பிரேசில், ஆஸ்திரேலியா, கம்போடியா, தாய்லாந்து, பர்மா, ஆகிய இடங்களில் நீலக் கற்கள் கிடைக்கின்றன. முதன் முதலில் தரமான கற்களே விற்பனைக்கு வந்தன. தேவையின் மிகுதி ஏற்படவே தரம் தாழ்ந்த கற்களும் அதிக அளவு சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. பார்ப்பதற்கு நீல நிறத்துடன் மின்னும் தன்மை கொண்ட இதில் ஆறு நூல் ஓடுகின்ற நீலக்கற்களும் உண்டு. இதில் மாணிக்கக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கற்களைப் போல அலுமினியா இரும்பு, சிலிகா போன்றவற்றின் ரசாயனக் கலவை சேர்ந்துள்ளது. பட்டை தீட்டப்பட்டது ஒளிவீசும். ஆனால் அதிகமாக 92% அலுமினியா இதில் கலந்துள்ளது.

நீலக்கற்களைச் சித்த முறைப்படி பஸ்மம் செய்யலாம். தோல் சம்பந்தப்பட்ட வியாதி, குஷ்ட வியாதி, முடக்குவாதம், காலில் நீர் ஊரல் போன்றவற்றைப் போக்கும். கல்லீரல், மண்ணீரல் போன்றவற்றை இயங்க வைக்கும். மனநோயைப் போக்கி, அறிவு விருத்தியை ஏற்படுத்தும். நீலமணிக் கற்களைக் கழுதைச் சிறுநீரில் போட்டு ஏழு நாட்கள் சூரிய ஒளியில் வைத்து, பின்பு அக்கல்லைக் கழுவி எடுக்கவும். சுத்தப் படுத்தப்பட்ட அந்தக் கல்லைப் பொடியாக்கிப் பாலை இலைச் சாற்றினில் ஆறு நாட்கள் ஊறவைத்து வில்லைகளாகச் செய்து புடம் போட்டுப் பஸ்மமாக்கலாம். சித்த வைத்தியர்களும் சில மருத்துவ நிறுவனங்களும் இந்தப் பஸ்மம் தயாரித்து விற்பனை செய்கின்றனர். இந்த நீலத்துக்கு எட்டு இலக்கமான எண், சனி நீலத்தின் கிரகம், நீலம் நீலத்தின் நிறம், மேற்குத் திசை நீலத்தின் திக்கு, எள் நீலத்தின் தானியம், அலி நீலத்தின் குணம், காகம் நீலத்தின் வாகனம், கசப்பு நீலத்தின் சுவை, இரும்பு நீலத்தின் உலோகம், கருப்பட்டு நீலத்தின் துணி, எமன் நீலத்தின் தேவதை, மகரம், கும்பம் நீலத்தின் ராசி ஆகும்.

நவரத்தினங்களில் வைரத்திற்கு அடுத்தபடியாக விலைமதிப்பில் கூடியது மாணிக்கமாகும். சில வகை மாணிக்கம் வைரத்தைவிட அதிக விலைக்குப் போகும். மதுரைப் பகுதியில் ஆண்களுக்கு 'மாணிக்கம்' என்ற கூப்பிடு பெயர் வைப்பதுண்டு. முதல் வழிபாட்டு கடவுளான விநாயகருக்கே மாணிக்க விநாயகர் என்ற ஓர் பெயருமுண்டு. 'மாணிக்க வாசகர்' பற்றி அறியாத தமிழர்கள் இருக்க முடியாது. இந்த மாணிக்கத்தை ஆங்கிலத்தில் ரூபி Ruby என்ற அழைப்பார்கள். ஜொலிக்கும் தன்மையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைரத்திற்கு அடுத்தது மாணிக்கம்தான். நல்ல மாணிக்கம் சிறந்த வைரத்தை விடப் பல மடங்கு விலை உயர்ந்ததாகும். சில உயர்வான கற்களுக்கு விலை மதிப்பிட முடியாது. சிறந்த மாணிக்கக் கற்களை அணிபவர்கள் செல்வந்தர்களாக நற்புகழுடன் வாழ்வார்கள். அணிவதற்கு முன் தனக்குப் பொருத்தமான கல்தானா என்று அறிந்து அணிய வேண்டும். ரசாயன ஆராய்ச்சி வாயிலாக சிறந்த மாணிக்கத்தைச் சோதனை செய்து சிறந்த கல்லை வாங்கலாம். ரோஸ், சிவப்பு, வெளிர் சிவப்பு, போன்ற சிவப்பு நிறங்களில் மா ணிக்கக் கற்கள் கிடைக்கின்றன. இதைப் புடம் போட்டு பஸ்மம் செய்ய வைத்தியர்கள் நன்கு பழகியிருக்க வேண்டும். தவறாகப் புடம் போட்டுப் பசுமம் செய்தால் வைத்தியம் தவறாகிக் கெடுதலைச் செய்யும். நல்ல பஸ்மம் கிடைத்து வைத்தியர் கூறியபடி சாப்பிட்டு வந்தால் வாதம், பித்தம், கபம், புற்று நோய்கள் வாரா. புற்றுநோய், தோல்வியாதி, இருதயவலி, காய்ச்சல் போன்றவைகள் குணமாகும். சிறு மூளை, பெரு மூளை போன்றவைகளைச் சரிப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு. இருதயத்தை இது பலப்படுத்தும். சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் மாணிக்கக் கற்களை அணிவதால் வீர தீரச் செயல்களைச் செய்வர். செல்வம் இவர்களைத் தேடி வரும்.

ஒன்று மாணிக்கத்தின் இலக்கமான எண், சூரியன் மாணிக்கத்தின் கிரகம், சிவப்பு மாணிக்கத்தின் நிறம், சிம்மம் மாணிக்கத்தின் ராசி, மையம் மாணிக்கத்தின் திக்கு, கோதுமை மாணிக்கத்தின் தானியம், ஆண் மாணிக்கத்தின் குணம், மயில் மாணிக்கத்தின் வாகனம், காரம் மாணிக்கத்தின் சுவை, தாமிரம் மாணிக்கத்தின் உலோகம், சிவப்புத்துணி மாணிக்கத்தின் துணி, சிவன் மாணிக்கத்தின் தேவதை, ஆடுதுறை மாணிக்கத்தின் சேத்திரம், எருக்கு மாணிக்கத்தின் செடி, செந்தாமரை மாணிக்கத்தின் மலர் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவரத்தினம் என்று கூறிய உடனேயே வைரம் என்ற பெயர்தான் நினைவுக்கு வரும். வைரத்தை ஆங்கிலத்தில் Diamond என அழைக்கின்றோம். வைரத்தைப் பற்றிக் கேள்விப்படாத மனிதர்கள் இருக்க முடியாது. இது ஒளி வீசி மின்னும் தன்மையுடையது. இக்கற்கள் வெள்ளை, கருப்பு, சிவப்பு, பச்சை, நீலம் போன்ற நிறங்களிலும் கிடைக்கின்றன. நீலநிறம் கலந்து ஒளிவீசக்கூடிய வைரக்கற்கள் விலை உயர்ந்தனவாகும். இந்தியாவில் வெள்ளை ரகம்தான் மக்களிடத்தில் அதிகப் புழக்கத்தில் இருக்கிறது. வைரத்தை விலை கொடுத்து வாங்கி நகைகளாகச் சூட்டிக் கொள்ள முடியாத நம்மவர்கள் வைரம், வைரமுத்து, வைரக்கண்ணு என்று தன் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி மகிழ்கின்றனர்! வைரம் உடையும் தன்மை கொண்டது. ``வைரத்தை வைரத்தால் தான் அறுக்க முடியும்'' என்பது நம் தமிழ்ப் பழமொழி. வைரத்தைப் பட்டை தீட்ட வைரத்தால்தான் முடியும். கைக் கடிகாரங்களில் பாகங்கள் தேயாது இருக்க, கண்ணாடிகளை வெட்ட, கிரானைட் என்று அழைக்கப்படும் கருங்கல்லை வெட்ட, மக்களின் ஆபரணங்களாக அணிய பலவகைப் பயன்பாட்டிற்காகப் பலவகை வைரம் பயன்பட்டு வருகிறது. சோழர் காலக் கல்வெட்டுக்கள் நமது நாட்டில் நீண்ட காலங்களுக்கு முன்னதாகவே ஆபரணங்களாகவும், அணிகளாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன எனக் கூறுகின்றன.

வைரத்தை சுத்தி செய்ய இருவகைகள் உண்டு. (1) எலுமிச்சம் பழத்தினுள் நமக்குத் தேவையான வைரத்தை வைத்து அகத்தியிலைச் சாற்றில் வேகவைத்து எடுக்க வைரம் சுத்தியாகும். (2) வைரத்தைக் குதிரையின் சிறுநீரில் ஆறு நாள் ஊற வைத்து நன்கு வெயிலில் காய வைத்து எடுத்தால் வைரம் சுத்தியாகும். வைரத்தை அணிவதால் வாதம், பித்தம், போன்ற நோய்கள் அகலும். ஆண்தன்மையைப் பாதுகாக்கும். மேகநீர் வியாதியைக் குணப்படுத்தும். வைர பஸ்பம் சாப்பிட்டால் குஷ்ட வியாதி அகலும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரியனுக்கு ஒப்பானது வைரக்கல் ஆகும். ஆறு வைரத்துக்கு இலக்கமான எண், சுக்கிரன் வைரத்தின் கிரகம், வெண்மை வைரத்தின் நிறம், கிழக்குத்திசை வைரத்தின் திக்கு, மொச்சை வைரத்தின் தானியம், பெண் வைரத்தின் குணம், இனிப்பு வைரத்தின் சுவை, வெள்ளி வைரத்தின் உலோகம், வெண்பட்டு வைரத்தின் துணி, அஷ்டலட்சுமி வைரத்தின் தேவதை, அத்தி வைரத்தின் மரம், திருவரங்கம் வைரத்தின் சேத்திரம் ஆகும்.

நவரத்தினங்களில் ஒன்றான கோமேதகத்தை ஆங்கிலத்தில் Hessonite என்று அழைக்கின்றனர். இக்கல்லுக்குக் கடினத்தன்மை குறைவு. ஆகையால் பட்டை தீட்டும்பொழுது உடைந்து விடுகிறது. சில கற்கள்தான் உடையாது நல்ல தன்மையுடையதாக வரும். இதைச் 'சின்னமன்ஸ்டோன்' என்றும் அழைப்பர். இதன் நிறம் மஞ்சளும் சிவப்பும் கலந்ததாக இருக்கும். கற்கள் சுத்தமானவையாக இருந்தாலும் உள்ளே சிறு துளிகள் இருப்பதுபோல் தோன்றும். சிலவகைக் கற்கள் பழுப்பு நிறத்திலும், இளஞ் சிவப்பு நிறத்திலும் இருக்கும். இதனை அணிகலன் கட்டும்போது கவனமாகக் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் உடைந்துவிடும். இதுவும் ஒளிரும் தன்மை கொண்டது. ஆனால் இக்கற்களின் விலையோ குறைவுதான். நல்ல பிரகாசமான, குற்றம் இல்லாத, அழுத்தமான, கனமான, பளபளப்பான, பசுமாட்டின் சிறுநீர் நிறத்தையுடைய கற்களை அணிந்தால் சிறந்த பலனை அடையலாம்.

இதனைத் தமிழ் நாட்டில் உள்ள மக்கள் விரும்பி அணிந்து வருகின்றனர். நீண்ட காலத்திற்கு முன்பு ஸ்ரீலங்காவில் இருந்து கொண்டுவரப்பட்டன. இன்று தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு என்ற இடத்தில் கிடைக்கின்றது. ஸ்ரீலங்காவில் கிடைக்கும் கோமேதகம்தான் விலை உயர்வாகவும், நல்ல தரமுடையதாகவும் இருக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளிர் பச்சை, வெளிர் சிவப்பு, மஞ்சள், பழுப்பு நிறம், போன்ற நிறங்களில் இக்கற்கள் காணப்படுகின்றன. பெண் குதிரைச் சிறுநீரில் ஆறு நாட்கள் ஊறவைத்து எடுத்துப் பின்பு, நிலப் பூசணிச் சாற்றில் ஆறு நாள் ஊறவைத்து, மீண்டும் எலுமிச்சம் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து நல்ல நீரால் சுத்தம் செய்ய வேண்டும். சுத்தி செய்த கோமேதகத்தை, கரு ஊமத்தஞ் சாற்றுடன் உலையில் வைத்து ஊதினால் கோமேதகப் பஸ்பம் கிடைக்கும். எட்டுவரை வாதங்கள், பித்தம் நாற்பதும், தோடம், மலபந்தம், ஈரல்வலி, குடல்வாதம், முகவாதம், கபம், குஷ்டம், ரத்தப்புற்று, வெண்குஷ்டம் போன்ற வியாதிகள் இப்பஸ்பமத்தால் குணமாகும். நான்கு கோமேதகத்தின் இலக்கு, ராகு கோமேதகத்தின் கிரகம், கரு மை கோமேதகத்தின் நிறம், தென்மேற்குத் திசை கோமேதகத்தின் திக்கு, உளுந்து கோமேதகத்தின் தானியம், பெண் கோமேதகத்தின் குணம், ஆடு கோமேதகத்தின் குணம், புளிப்பு கோமேதகத்தின் சுவை, கருங்கல் கோமேதகத்தின் உலோகம், கருப்புத்துணி கோமேதகத்தின் துணி, காளி கோமேதகத்தின் தேவதை, காளாஸ்திரி கோமேதகத்தின் சேத்திரம், அறுகம்புல் கோமேதகத்தின் புல், மந்தாரை கோமேதகத்தின் மலர் ஆகும்.

பவளம் என்பது கடலில் இருந்து எடுக்கப்படுவது நிலத்திலும் நிலப் பவளம் கிடைக்கின்றது. இராமாயணத்தில் பவளப் பாறை பற்றிய குறிப்பு உள்ளது. பவளத்தை ஆங்கிலத்தில் Coral என்று அழைக்கின்றனர். சுண்ணாம்புச் சத்தும், கரிப்பொருளும் சேர்ந்தே பவளம். முத்தைப் போல் கடலிலிருந்தே பவளம் கிடைக்கின்றது. இதில் கொடிப்பவளம், பாறைப்பவளம் என்று இரண்டு வகை உண்டு. அதில் நற்பவளம், வெள்ளைப்பவளம், செம்பவளம், ஊதாப்பவளம், கரும்பவளம் என்ற உட் பிரிவுகளும் உ ள்ளன. முற்காலத்தில் இந்தியாவில் கிரேக்க நாட்டு வணிகர்கள் முதல்தரமான பவளத்தை இங்கு இறக்குமதி செய்து வணிகம் செய்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடலில் வாழும் பலவகைப்பட்ட உயிர்களின் கெட்டிப் பொருள்களே பவளம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பவளம் ஒரு வகைப் பூச்சிகளின் கழிவுப் பொருளே. அதன் கூடுகள்தான் பவளப் பாறை, வேறொரு வகைப் பவளப் பூச்சிகள்தான் கொடிப்பவளம் என ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர். பவளப் பூச்சிகள் தாங்கள் வாழப் பவளப் பாறைகளை உண்டாக்கிக் கொண்டு அதில் வாழும், பின்பு கடல் அலையின் காரணமாக அழுக்கும் மண்ணும் இதில் சேர்ந்து பெரிய பாறைகளாக மாறும். விளிம்புப்பாறை, வட்டப் பாறை என இப்பவளப் பாறைகளில் மூன்று வகை உள்ளது. ‘சிசிலி’ இதாலி, ஆஸ்திரேலியா, பவளத்தீவு போன்ற நாடுகளிலிருந்து பல்வேறு நாடுகளுக்குப் பவளங்கள் அனுப்பப்படுகின்றன. விலை குறைவான மற்றும் தரம் குறைந்த பவளங்கள், மோரிசியஸ் தீவிற்குப் பக்கத்திலும், ஜப்பான் கடற்கரைப் பகுதிகளிலும் கிடைக்கின்றன. பாரசீக வளைகுடாவில் முன்பு கரும்பவளம் அதிகமாகக் கிடைத்தது. அங்கிருந்துதான் இந்தியாவிற்குப் பவளங்கள் அனுப்பப்பட்டன. மத்திய தரைக்கடலில் எடுக்கப்படும் செம்பவளங்களே சிறந்த பவளமாக மதிக்கப்படுகிறது. பவளத்தை, புனிதமானதாக இந்திய மக்கள் மதிக்கின்றனர். இதை அறிந்த கிரேக்கர்கள் பழங்காலத்திலேயே இந்தியாவுடன் தொடர்பு கொண்டு பண்ட மாற்று முறையில் பவளத்தை ஏற்றுமதி செய்து பாண்டிய நாட்டு முத்துக்களையும், சேரநாட்டு வாசனைத் திரவியங்களையும் இங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

பவளத்தை வலதுகை மோதிரவிரலில் படும்படி மோதிரமாகச் செய்து அணிவதால் உஷ்ண சம்பந்தமான நோய்கள் அகலும். இதனை எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு ஜாமம் ஊறவைக்க வேண்டும். பின்பு அதனைச் சுடுநீரில் சுத்தம் செய்து, பின்பு எருக்கம்பாலில் ஆறு நாள் ஊறவைத்து, கசபுடமிட்ட பஸ்பமாகச் செய்து சாப்பிட ரத்தபித்தம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரத்தசூலை, ஜீரணசுரம், சுவாசகாசம், வாதம், விக்கல் போன்றவை குணமாகிறது. வாழைப்பழத்துடன் 48 நாட்கள் சாப்பிட்டால், விந்து கட்டும். தாம்பூலத்தில் இப்பஸ்பத்தைப் பயன்படுத்தினால் பலமின்மை நீங்கிப் பலம் உண்டாகும். சிறுநீர்க் கடுப்பு, சொட்டு மூத்திரம் இவைகள் போகும். இப்பஸ்பத்தைத் துளசிச் சாற்றில் தேனுடன் கலந்து சாப்பிட்டால் வாதம் தீரும். மாலைக்கண் வியாதி குணமாகும். மனநோய், சர்மரோகம் முதலியன அகலும். வேர்ப்பவளம் என ஓர் வகையுண்டு. இது மின்னும் தன்மையற்றது. பார்ப்பதற்கு ஈரப்பசை கலந்தது போன்று காணப்படும். பவளம், இது பூச்சுக் கூண்டிலிருந்து எடுக்கப்படும் கல்லாகும். ஒன்பது பவளத்தின் எண், செவ்வாய் பவளத்தின் கிரகம், சிவப்பு பவளத்தின் நிறம், தெற்கு திசை பவளத்தின் திக்கு, துவரை பவளத்தின் தானியம், ஆண் பவளத்தின் குணம். அன்னம் பவளத்தின் வாகனம், துவர்ப்பு பவளத்தின் சுவை, செம்பு பவளத்தின் உலோகம், சிவப்பு பவளத்தின் துணி, சுப்பிரமணியர் பவளத்தின் தேவதை, வைதீஸ்வரன் கோயில் பவளத்தின் சேத்திரம், கருங்காலி பவளத்தின் மரம், செண்பகம் பவளத்தின் மலர் ஆகும்.

நவரத்தினங்களில் ஒன்றான முத்தினை ஆண்களும், பெண்களும் சூட்டிடும் பெயராகக் கொண்டுள்ளனர். முத்தையாசாமி, முத்துக்குமார், முத்துச்சாமி என்று ஆண்களும், முத்து, முத்துமணி, முத்தம்மாள், முத்துக்குமாரி எனப் பெண்களும் பெயர் வைப்பர். இந்த முத்துதனை ஆங்கிலத்தில் Pearl என அழைக்கின்றனர். சிப்பியின் வயிற்றிலிருந்து பிறப்பதே முத்தாகும். அழகிய பற்களைக் கவிஞர்கள் முத்துப்போல் பல்லழகு என்று இலக்கியங்களில் கூறியுள்ளனர். ‘பாண்டியநாடு முத்துடைத்து’ என இலக்கியங்கள் கூறும். பண்டமாற்று முறையில் முத்து ஒன்றினைக் கொண்டே பல பொருள்களைப் பழந்தமிழர் வாங்கியுள்ளார். சிலப்பதிகாரத்தில் ‘சிலம்பு’ எனும் காலணியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்து வைத்திருந்ததாகப் பாடல்கள் வருகின்றன. கோவலன் கள்வனா இல்லையா எனக் காட்டிக் கொடுத்ததே இந்த முத்துத்தான். முத்து கடலில் சிப்பியின் வயிற்றில் பிறந்தாலும், பூமியில் தோன்றும் மற்ற ரத்தினக் கற்களுடன் அணிகலன்களில் சேர்க்கப்படுகின்றது.

சிப்பியின் உள்ளே கெட்டிப் பொருள்கள் அல்லது நீர்த்துளிகள் சென்று விடும். சிப்பியால் அதைச் சீரணிக்க முடியாது. சிப்பியினுள் சுரக்கும் அமிலம் மூடிவிடும் பொருளே முத்து என்பதாகும். அந்த அமிலத்தில் உள்ள ரசாயனப் பொருள் சுண்ணாம்புச் சத்தாகும். முத்தைக் கண்டு ஆசைப் படாத உலக மனிதர்களே இல்லை. இதைத் தமிழ் நாட்டில் முத்துமாலை, காதணி, மோதிரங்கள் எனச் செய்து அணிந்து மகிழ்கின்றனர். தற்பொழுது வளையல்களில் முத்துக்களைப் பதித்து அணிவது நாகரீகமாக உள்ளது. வெண்மை. மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம், கருப்பு போன்ற நிறங்களில் முத்துக்கள் கிடைக்கின்றன.

சித்திரை மாதத்தில் வரும் முழுநிலவில் கடலில் மழை பெய்ய வேண்டும். அது சமயம் சிப்பி கடலில் மேற்பரப்பிற்கு வந்து வாயினைத் திறக்க வேண்டும். அது சமயம் ஓர் துளி மழை நீர் சிப்பியினுள் செல்ல வேண்டும். அது முத்தாக மாற வேண்டும். அந்த முத்து எந்த முத்து எனப் பார்த்து எடுக்க வேண்டும். அதனால் அட்டமாசித்துக்கள் சூடலாம் என ஓர் சித்தர் கூறியுள்ளார். சித்தர்களுக்கு இதனைக் கண்டு பிடிப்பது சாதாரணம். கலிகாலத்தில் நமக்கு அது கிடைக்குமா என்பது சந்தேகமே. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மணிலாத்தீவு போன்ற மேலை நாடுகளிலும் முத்துக்கள் கிடைக்கின்றன. சீனர்களும், ஜப்பானியர்களும் செயற்கை முத்தைச் சிப்பியில் உருவாக்கிவிடுகின்றனர். மேற்கிந்தியத் தீவுகளில் பழுப்புநிற முத்துக்களும், மெக்ஸிக்கோ வளைகுடாவில் கருப்பு முத்துக்களும் கிடைக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதம், பித்தம், மூத்திரக்கோளாறு, நேத்திரரோகம், எலும்புருக்கி நோய், இருதய வால்வுக் கோளாறு, வளர்ச்சி யின்மை, மயக்கம், ஆஸ்துமா போன்ற வியாதிகளை முத்துப் பஸ்பம் குணமாக்கும். எண் இரண்டு முத்துவின் இலக்கு, சந்திரன் முத்துவின் கிரகம், வெண்மை முத்துவின் நிறம், தென்கிழக்கு திசை முத்துவின் திக்கு, நெல் முத்துவின் தானியம், பெண் முத்துவின் குணம், முத்து விமானம் முத்துவின் வாகனம், இனிப்பு முத்துவின் சுவை, ஈயம் முத்துவின் உலோகம், வெண்துணி முத்துவின் துணி, பார்வதி முத்துவின் தேவதை, கடகம் முத்துவின் ராசி, முருக்கு முத்துவின் மரம், திருப்பதி முத்துவின் சேத்திரம் ஆகும்.

உலக வாழ்விற்கு நவகற்கள் முக்கியம். ஆன்மிக வாழ்வுக்குச் சுருமாக்கல் முக்கியம். பணக்காரர்களாலும் நடுத்தட்டு மக்களாலும் மட்டுமே நவரத்தினங்கள் வாங்க முடியும். சுருமாக்கல் ஏழைகளின் கல், சித்தர்களின் கல், ஆன்மிகச் செல்வர்களின் கல், நலனடையக் கிடைக்கும் எளிய கல் என இதன் பெருமை கூறிக்கொண்டே செல்லலாம். இக்கல்லை ஆங்கிலத்தில் ஆண்டிமணி எனச் சொல்வார்கள். ஐசோடோப் வகைகளில் இதுவும் ஒன்று. ஒளிக்கற்றையை வீசும். வடநாட்டில் இதற்குப் பெயர் சூர்மாகல். வடநாட்டுச் சேட்டுக்கள் இதை உபயோகித்துக் கண் மை செய்கின்றனர். தமிழ் நாட்டில் இதைச் சுருமாக்கல் – நீலாஞ்சனக் கல் மற்றும் அஞ்சனக்கல் என சொல்வார்கள். இதைக் கண் நோய்கள் நீங்கத் தைலம் மற்றும் கண் மைகளில் சேர்க்கின்றனர். மாந்திரீகர்கள் பாதாள அஞ்சனம் முதல் அட்டகர்ம அஞ்சனங்களுடன் இக்கல்லைச் சேர்க்கின்றனர். பழங்கால ரேடியோப் பெட்டிகளில் கிறிஸ்டல் வால்வாக இதைப் பயன்படுத்தினர். விஞ்ஞானி களுக்கு இதன் சக்தி தெரியும்.

ஆதிகாலத்தில் அனைத்து மனிதர்களுக்கும் நெற்றியில் கண் இருந்திருக்கின்றது. அதன் மூலம் நன்மை தீமைகளை அறிந்திருக்கின்றனர். பின் ஏதோ கடவுளின் சாபத்தால் அப்பகுத்தறிவுக் கண் நெற்றிக் கண் ஒரு ஜவ்வினால் மூடப்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டது. ஞானக்கண் மூடப்பட்டு விட்டதால் முக்காலமும் அறியமுடியாமல் ஆறாம் அறிவைச் செயல்படுத்த முடியாமல் போய் விட்டது. இக்கருத்துக்கு ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும், ஞானிகளும் விதிவிலக்கு. நெற்றிக்கண் திறப்பது என்பது வயதுக்கு வந்த பெண்கள் பூப்படைவது போல் ஏற்படும் ஆன்மிகத் திறப்பு. (Mystic Maturity) நெற்றிக் கண்ணுக்குச் சுமார் 30 பெயர்கள் சாத்திரங்களில் உண்டு. ஜோதிக் கண்ணைத் திறக்கப் பல்வேறு உபாயங்கள் மனிதர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

திபேத் நாட்டில் வாழும் லாமாக்கள் நெற்றியில் ஓட்டை போட்டுக் குச்சியால் அடைக்கின்றனர். பழங்குடி மக்கள் புருவமத்தியில் சூடு போடுகின்றனர். பச்சை குத்துகின்றனர். வைணவர்கள் சுழுமுனை நாடியில் நாமம் த்ரிக்கின்றனர். புசங்களில் சங்கு சக்கர முத்திரை குத்துகின்றனர். சாக்தர்கள் குங்குமம் இடுகின்றனர். பெண்கள் நெற்றி சூடி அணிகின்றனர். பிராமணர்கள் காயத்ரி மந்திரம் சொல்லி உபநயனம் செய்விக்கின்றனர். இஸ்லாமியர் முட்டி முட்டித் தொழுகின்றனர். குழந்தைகளுக்குக் கறுப்புப் பொட்டுப் போட்டுத் திருஷ்டி களிக்கின்றனர். யோகிகள் சுழுமுனை மந்திரத்தாலும் பிராணயாமத்தாலும் நெற்றிக் கண்ணை திறக்கின்றனர். ரசவாதிகள் ரசமணியால் திறக்கின்றார்கள். மருத்துவர்கள் கண்ணுப்புழை என்னும் மூலிகையால் திறக்கின்றனர். ராஜ குருக்கள் வைரக்கற்களால் நெற்றிக் கண்ணைத் திறக்கின்றனர். மந்திரவாதிகள் ருத்திர பஸ்பத்தால் திறக்கின்றனர். சைவ மடாதிபதிகள் ஒருமுக ருத்ராட்சத்தால் நெற்றிக் கண்ணைத் திறக்கின்றனர். மீனவர்கள் சுறா மீனின் நெற்றிக் கல்லால் நெற்றிக் கண்ணைத் திறக்கின்றனர். கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தி ஒளிமூலம் கண்ணைத் திறக்கப் பயிற்சி செய்கின்றனர். சிலருக்கு விபத்தில் ஏற்பட்ட அடியாலும் நெற்றிக் கண் திறக்கப்பட்டதுண்டு. இன்னும் எத்தனையோ முறைகள் தெரியாமல் புழக்கத்தில் இரகசியமாக உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்பொழுது நமக்குத் தேவை ஓர் எளிய முறை. நாட்டு மருந்துக் கடையில் சுருமாக்கல் அல்லது அஞ்சனக்கல் எனக் கேளுங்கள். ஒரு கிராம் சுமார் ஒரு ரூபாய் இருக்கும். 5 கிராமிற்குக் குறையாமல் 10 கிராமிற்கு மேற்படாமல் ஒரே கல்லாக வாங்கவும். கோணலும் மாணலுமாக இருக்கும். அதைப் பற்றிக் கவலை வேண்டாம். வாங்கிய கல்லை உப்புத் தாளால் (Emery Paper) தேய்த்துக் கொள்ளவும். அதிலுள்ள ஒளிக்கற்றை சூட்சுமமாக வெளிப்படும். தரையில் விரிப்பு விரித்துத் தலையணை வைக்காமல் விளக்குகளை அணைத்து இருளில் படுக்கவும். வடக்கு தவிர இதரப் பக்கம் தலைவைத்து மல்லாந்து படுக்க வேண்டும்.

இரவில் சுமார் 7 மணிக்குப் பால் சாதம் சிறிது சாப்பிட்டுப் 10 மணிக்குமேல் இப்பயிற்சியை ஆரம்பிக்கலாம். அஞ்சனக் கல்லைக் கண்களை மூடியோ அல்லது மூடாமலோ இரு புருவங்களுக்கும் மத்தியில் வைக்கவும். சுருமாக்கல்லில் உள்ள கண்ணுக்குத் தெரியாத தெய்வீக ஒளிக்கற்றைகள் நெற்றிக் கண் ஜவ்வைச் சிறிது சிறிதாகக் கிழிக்கும். ஒளி சிறிது சிறிதாக வெளிவரும். அதே கல்லை உபயோகித்துப் பின் மறுநாளும் பயிற்சி செய்யலாம். அவசரப்பட வேண்டாம். பொறுமையும் அடக்கமும் மிகவும் தேவை.

பயிற்சி ஆரம்பிக்கு முன் சரியை கிரியையில் உள்ளவர்கள் தங்களின் குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்தை வணங்க வேண்டும். மந்திர யோகம் அல்லது வாசி யோகம் பயிற்சி பெற்றவர்கள் அதனையும் சேர்த்துச் செய்யலாம். ஒளிநிலை கூடுதலாகி நெற்றிக்குள் பூரண சந்திரன் போல் காட்சி கொடுக்கும். அருள்நிலை பெருகும். 90 நாள் பயிற்சியில் வெற்றி பெறுவீர்கள் என்பது உறுதி.

பொதுவாக ஏதாவது ஒரு பொருளைப் படுத்த நிலையில் நெற்றி நடுவில் வைத்தால் அதில் ஒரு உறுத்தல் ஏற்படும். பின் அங்குள்ள இருள் விலகும். சங்கரன்கோவிலில் அம்பாளுக்கு மாவிளக்குச் செய்து நெய்யூற்றித் தாமரை நூல் போட்டு மல்லாந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படுத்து நெற்றியில் வைத்து நோன்பு நோற்கின்றனர். இதுவும் ஒரு முறையாக செய்கின்றனர். குண்டலி யோகப் பயிற்சிக்கு மட்டும் காலவரை கிடையாது. மற்ற எல்லா வித்தைகளையும் 90 நாள் தொடர்ச்சியான சாதனையால் முடித்துவிடலாம். மேற்படி காலத்தில் முடிக்க முடியாதவர்கள் மன ஊக்கத்துடன் பயிற்சியைத் தொடரலாம். நெற்றிக்கண் திறப்பு என்பது பெரிய செயல். விவரித்து எழுத மேலும் மேலும் பெருகும். அனைவருக்கும் வழிகாட்டிப் பயன்படும் வகையில் எளிய கட்டுரையாக இதனை எழுதியிருக்கின்றோம்.

மக்களின் ஆன்மிக நிலை பஞ்சபூதங்களாலும் நட்சத்திரங்களாலும் அடிப்படையில் மாறுபடுவதால் ஒரே வித்தை (பயிற்சி) பலருக்குப் பலவிதமான அனுபவத்தைக் கொடுக்கும். ஆனால் முடிவு ஒன்றுதான். ஆண்கள் பாதரச அம்சம். பெண்கள் கந்தக அம்சம். பெண்களின் சக்தி மாதம் ஒருமுறை குறைந்து விடுகின்றது. அதனால்தான் யோகமுறையில் அவர்கள் முன்னேறிச் செல்ல முடியவில்லை.

நெற்றிக்கண் பயிற்சி எளிய பயிற்சி. பாதுகாப்பானது. பெண்களும் பயிற்சி செய்யலாம். யோக முறையில் தீட்டு என்பது கிடையாது. மாதவிலக்கு நின்ற பெண்கள் விரைவில் சித்தி பெறுவர். ஆழியூர் டேம் ஒங்காரக் குடிலில் தவத்திரு வேதாத்ரி மகரிஷியும், மதுரை தெப்பக்குளம் உலகசமாதான ஆலயத்தில் குருபதவியாளர் ரெங்காச்சாரியும் பரஞ்சோதி மகானின் வழிகாட்டுதல்படி "நெற்றிக்கண்" பயிற்சியளித்து வருகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தரின் தீர்க்க தரிசனப்படி மேலைநாட்டு விஞ்ஞானமும் இந்திய நாட்டு மெய்ஞானமும் கலந்து இந்தியா ஒரு பெரும் வல்லரசு ஆகும். நெற்றிக் கண் திறத்தல் என்னும் இக்கல் தான் "மாற்றிப் பிறத்தல்" என மதங்களில் கூறப்படுகின்றது. இனி நாம் அருட் பெருஞ்சோதி ஆண்டவரை துணைக் கொண்டு புது வாழ்வு வாழலாம்.

வாழ்க அறமுடன். வாழ்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. ஸப்தாஹர்ஷணம்

(CLAIR AUDIENT)

உலகம் தோன்றிய நாள் முதல் பஞ்ச பூதங்களில் ஒலி அலைகளும் ஒளி அலைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஸ்ரீமஹாவிஷ்ணு கையில் உள்ள வலம்புரிச் சங்கு ஒலியைக் குறிக்கும். சுதர்ஸன சக்கரம் ஒளிக்கு அடையாளம். பூமி தனது அச்சில் பஞ்ச பூதங்களுக்கு இடையே சுழல்வதால் ஓம்காரம் என்னும் பிரணவ ஒலி உலகம் முழுவதும் சதா ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அதனால்தான் மந்திரச் சொற்கள் ஓம் என்னும் ஒலியில் ஆரம்பிக்கின்றன. ஸ்ரீ நடராஜப் பெருமாள் 51 அட்சரங்களின் வடிவம் எனச் சாஸ்திரங்கள் சொல்கின்றன. உலகில் எந்த மொழியில் பேசினாலும் இந்த 51 ஒலிக்குள் அடங்கும்.

ஓர் கோயிலில் எப்பொழுதெல்லாம் வேதங்கள், மந்திரங்கள், பாடல்கள் பாடப்படுகின்றன என்பது பற்றியே கீழே உள்ள பகுதிகளில் காணப் போகின்றோம். அம்மந்திரங் களையும் நம் காதுகளால் இப்பயிற்சியின் மூலம் கேட்கலாம். பழங்காலப் பண்பாடுகளில் மதம் முக்கியப்பங்கு கொண்டது. இந்தியாவிற்கும் இது வெகுவாகப் பொருந்தும். மொஹஞ்சதரோ காலத்திய மதத்தில் பல்வேறு வழிபாட்டு முறைகளும் மந்திரங்களும் ஒன்றுக்கொன்று இணைந்து இருந்துள்ளன. இவை ஒன்றுக்கொன்று இடைஞ்சலில்லாமல் வளர்ந்தன. இவற்றுள் சிவன் வழிபாடும் சக்தி (அன்னை) வழிபாடும் பரவலானவை. பிற்காலத்தில் சைவமென்றும், சாக்தமென்றும், தொடர்பு கொண்டும், தனியாகவும் இணையாகவும் வளர்ந்தவை. பல சிறிய வழிபாடுகளும் இவற்றுள் சேர்ந்து இவற்றைப் பெரிதாக்கின. அக்காலகட்டத்தில், பாம்பு வழிபாடு தோன்றியது. பாம்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனுக்கு அணியாகவும், விஷ்ணுவுக்குப் படுக்கையாகவும் இருந்தது. பலவிதமாகச் சைவ, சாக்த, வைணவ மதங்களுள் பாம்பு வழிபாடு புகுந்து இடம் பெற்றன. ஒரு தெய்வம் முக்கிய மானதாகவும் மற்றவை பரிவார தெய்வங்களாகவும் கோவிலில் இடம் பெற்றன. வெவ்வேறு தெய்வங்கள் தோன்றியது போல வெவ்வேறு வகை மந்திரங்களும் தோன்றின. அந்த மந்திர ஒலியனைத்தும் வானத்தில் பரவியுள்ளன.

தென்னிந்தியக் கோயில்கள் அறுவகை மூர்த்திகளின் வழிபாடுகளையும் உட்கொண்டுள்ளன. அமைப்பில் பெரியன வாகவும், வெகுகாலம் சரித்திரத்தில் போற்றப்பட்டவையாகவும் உள்ள இக்கோவில்கள் தாங்கள் நன்கு பாதுகாத்துவரும் சமய மரபுகளின் சின்னங்களாக விளங்குவதுடன் கட்டிடக்கலை, சிற்பம், இசை, நாட்டியம், வேதம் போன்ற பல நுண்கலை களையும் வளர்ப்பதில் உதவியுள்ளன. பழங்கால மன்னர் பலரின் கொடைவன்மையால் நிறுவப்பட்டு. வந்த கோயில்களில், வம்ச பரம்பரையாக உள்ள அர்ச்சகர்களால் பழைய பூசை மரபுகள் மாறாமல், மந்திரங்கள் ஒதப்பட்டு வழிபாடு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன.

கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கடவுள்களின் வழிபாடு முதன்மையாக இருக்க, அங்குச் சமய வேதாந்த உபநியாஸங்களும், வேதங்கள், புராணங்கள், தேவாரம், பிரபந்தங்களும் இவற்றை ஓதுவது இடம் பெறுகின்றது. இவ்வொலிகள் அனைத்தும் வானில் நிரம்பியுள்ளன.

குரு சிஷ்ய பரம்பரையாகச் சிவன் கோயில்களில் தொன்றுதொட்டு வருவதே ஆகமம். ஆகமம், தந்த்ரம், ஸம்கிதை ஒரு பொருட் சொற்கள். வேதங்களும் இவ்வாறு வந்தாலும், அவற்றை ஆகமங்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட 'நிகமம்' என்ற சிறப்புப் பெயரால் கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்கள் அல்லது தந்த்ரங்கள் சைவம், வைணவம், சாக்தம் என்று மூவகையாம். சக்தியை முதற்கடவுளாகக் கொண்ட சாக்த ஆகமங்கள் 64, வழிபாட்டில் ஒவ்வொன்றிலும் மந்திரங்கள் உண்டு. இப்பொழுது அதற்கு மேலும் காணப் படுகின்றன. அவை தக்ஷிணம், வாமம் என்று இருவகைப்படும். வைணவ ஆகமங்கள் பாஞ்சராத்திரமும், வைகானஸமும், வைகானஸம் நான்கு வகைப்படும். பாஞ்சராத்ரத்தில் 219 அல்லது 223 ஆகமங்கள் கூறப்பட்டாலும் தற்காலத்தில் இருப்பவை சிலவே. சைவ ஆகமங்கள் காபாலம், காலாமுகம், பாசுபதம், சைவம் என நான்கு வகை வழிபாட்டில் ஒவ்வொன்றினுக்கும் தனித்தனி மந்திர ஒலிகள் உண்டு. சைவம், காஷ்மீர சைவம் என்றும் சைவ சித்தாந்தம் எனவும் இருவகைப்படும். சைவ சித்தாந்தம் தென்னிந்தியாவில் மட்டுமே உள்ளது. மற்றது வடஇந்தியாவில் உள்ளது. சைவ ஆகமங்களிலுள்ள தந்த்ராவதாரப் படலத்தில் ஆகமங்கள், உபாகமங்கள் இவற்றின் விவரத்தைக் காணலாம்.

ஆகமங்களின் முக்கிய செய்தியானது கோயில்களைப் பற்றிய விவரங்களையும், கோயிலில் உருவவழிபாட்டையும், பல கடவுளரில் மந்திர வழிபாட்டு முறைகளையும் கொண்டதாகும். மேலும் தீக்ஷை, புனிதச் சடங்குகள், பிரதிஷ்டை, சைவர்களின் தினசரி ஒழுகலாறு, சைவ வேதாந்த தத்துவம் இவையும் அடங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மந்திரங்கள் உண்டு. இவையாவும் ஆகமங்களின் நான்கு பாதங்களான வித்யாபாதம், க்ரியாபாதம், யோகபாதம், சர்யாபாதம் இவற்றில் அமையும். பழங்காலத்தில் வேதமரபில் உருவ வழிபாடு இருந்ததாகச் சான்று இல்லை. தேவதைகளுக்கு வேத முறைப்படி அக்கினியில் ஹோமம் செய்தனர். அது சமயம் வேத மந்திரங்கள் கூறினர். எப்பொழுது இதிலிருந்து தேவபூஜை உருவானதென்பது ஆராய்ச்சிக்குரியது. ஆனால் பாணினி காலத்துக்கு முன்பே தேவ உருவ வழிபாடு உண்டு என்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவருடைய ஸூத்ரங்களிலிருந்து புலனாகும். ராமாயணம், மஹாபாரதம், அர்த்தசாஸ்த்திரம் இவற்றிலும் வேறுபல தர்ம ஸூத்ரங்கள், கிருஹ்ய ஸூத்ரங்கள் இவற்றிலும் வெவ்வேறு கடவுளர்க்குரிய கோயில்களைப் பற்றிய குறிப்புகளும் மந்திரங்களும் காணப்படுகின்றன. ஆகவே கிறிஸ்துவுக்கு முன்னர் 5ம் நூற்றாண்டில் வேத முறைப்படி உருவ வழிபாடும் வெவ்வேறு மந்திரங்களும் இருந்தது தெரிகிறது. இக்காலம் புத்தரின் உருவ வழிபாட்டுக்கும் முந்தையதே. ஆனால் வேதங்களில் பிற்காலத்தில் உருவ வழிபாட்டுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் முதலில் இல்லை என்பது வெளிப்படை. வேத சமயத்தில் உருவ வழிபாடு உட்புகுந்தது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ருக் வேதத்தில் கூறப்பட்ட தேவ உருவ வர்ணனைகள் பிற்காலத்திய தெய்வ உருவங்களுக்கு மூலமாக அமைந்திருக்கலாம். இடைக்காலத்துத் தர்ம சாஸ்திரங்களிலும், பல புராணங்களிலும் தெய்வ உருவங்களைப் பற்றியும் அவற்றின் வழிபாட்டைப் பற்றியும் செய்திகள் உள்ளன. ஆலய நிர்மாணம், தெய்வங்களில் உருவச் சிற்பங்கள், தெய்வங்கள், பிரதிஷ்டை செய்தல், அது சமயம் கூறும் மந்திரங்கள் பரிசுத்தப்படுத்தல், சடங்குகள், அது சமயம் கூறும் மந்திரங்கள் பிராயச்சித்தங்கள், வழிபடுவோர் ஆகியவற்றைப் பற்றி விவரமாகக் கூறுபவை ஆகமங்களே. அவற்றுக்குத் தனிப்பட்ட வேதாந்தக் கருத்துக்கள், யோக நிலைகள், தினசரி செயல்கள், ஆசாரம், சமயம் இவை உள்ளன.

பிற்காலத்தில் ஒன்றை ஒன்று நிராகரிக்கும் சைவ வைணவ பிணக்குகளைப்போல் முற்காலத்தில் வேத முறைக்கும் ஆகம முறைக்கும் பிணக்குகள் இருந்திருக்கின்றன. பிற்காலத்தில் ஆகமங்கள் வேதங்களின் சாரமென்று கொள்ளப்பட்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. சரித்திர ரீதியாக நோக்குமிடத்து, இந்தியாவில் முதலில் வேதமரபு, ஆகம மரபு என்று தனிப்பட்ட இரண்டு இருந்தன என்றும், காலப்போக்கில் ஒன்றுக்கொன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருத்துப் பரிமாற்றத்தால் உடன்பாடு கொண்டன என்றும் துணிவதே சரியெனத் தோன்றுகிறது. பல புராணங்களில் சரித்திர காலத்தில் பலப்பல பகுதிகள் ஒன்றாகச் சேர்க்கப்பட் டிருக்கின்றன. ஆகவே எந்தப் புராணத்துக்கும் இதுதான் காலம் என அறுதியிட்டுக் கூற முடியாது. ஆகவே வெவ்வேறு காலத்தவையான மாறுபட்ட மரபுகளையும் பண்பாட்டு நிலைகளையும் ஒரே புராணத்தில் காண முடிகிறது. புராணங்களிலேயே ஆகமங்களைப்பற்றிப் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் காணப்படுகின்றன. வேதமரபு வலிமை மிகுந்த பொழுது ஆகமநிலை தணிந்து வேதங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. காலம் செல்லச் செல்லப் பழைய நிலையை மறந்து எல்லாமே வேதங்களுக்குட்பட்டது எனக் கருதினர். வேதங்களும் தங்களுடைய முழுமையான நீர்மையை விட்டு ஆகமச் சடங்கு, வேதாந்தக் கருத்து, யோகம் முதலியவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொண்டதால் இப்பொழுது ஆகமங்களின் பண்டைய சரித்திரத்தை அறிவது அறிஞர்களுக்கும் கடமையாக உள்ளது. காமிகாகமத்தில் வேதத்தின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு நிலையும் புலப்படுகிறது. பாணினி ஆலய உருவ வழிபாட்டை அறிந்திருந் தாலும் அதைப்பற்றி மதிப்புக் குறைவாகவே கூறுகிறார். ஸ்ருஷ்டி, விக்ரக பூசை, மந்திரப்பாடல், ஜாதிப் பாகுபாடுகள், சம்ஸ்காரங்கள், தீக்ஷை இவற்றைப் பற்றி வேதங்களும் ஆகமங்களும் மிகுந்த கருத்து வேறுபாடு கொண்டன. ஆனால் காலக்கிரமத்தில் இரண்டும் கலந்து தேவயக்ஞும் தேவபூஜையாக மாறியிருக்கின்றது.

ஆகமங்களின்படி, ஆலயச் சடங்குகளில் முதன்மை யானது. பிரதிஷ்டை என்பது ஆலய பூமியைத் தேர்ந்தெடுப்பது முதல் தெய்வ உருவத்தை முறைப்படி நிறுவுதல் மற்றும் அது சமயம் கூறப்படும் மந்திரங்கள் வரையில் உள்ளதாகும். கும்பாபிஷேகம் ஈறான பிரதிஷ்டைக்குப் பிறகு தெய்வ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸாந்நித்யம் தொடர்ந்திருப்பதற்காக நிதமும் செய்ய வேண்டிய சடங்குகளும், மந்திர மொழிகளும், வழிபாடுகளும், வெவ்வேறு சிறப்புக் கொண்ட காலங்களில் செய்யப்பட்ட வேண்டியவையும், விருப்பங்களுக்கு உட்பட்டுச் செய்பவைகளும், பிராயச்சித்தங்களும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. நித்யமும் ஆறு காலங்களில் அபிஷேகம் தொடங்கி ஆரத்தி வரை மந்திரங்கள் கூறிப் பூஜை நடக்கும். பிறகு வேதம் ஓதுதலும், நாயன்மார்களுடைய பக்திப் பாடல்களும் இடம் பெறும். இவ்வொலிகள் எல்லாம் வானத்தில் பதிந்துள்ளன. விசேட காலங்களில் சிறப்பான அபிசேகம் நடக்கும். தினமும், விசேட காலங்களிலும் சிறந்த உணவுப் படைப்பும் நிகழும். நித்ய பூஜை தவிர விசேட காலங்களில் திருவிழாக்கள் கொண்டாடப்பெறும். இவை நித்யோத்சவம், பிரம்மோத்சவம் எனப்படும் மஹோத்ஸவம் முதலியவை. உத்ஸவத்துக்காக நிறுவப்படும் விக்ரகம் தனிப்பட்டது. விழாவில் இவ்விக்ரகம் கோயிலிலும் வெளியிலும் அலங்காரத்துடன் தெய்வப் பாடல்கள், வாத்தியங்கள் முழங்க எடுத்துச் செல்லப்படும். இப்பாடல் ஒலிகள் அனைத்தும் வானில் நிரம்பி உள்ளன. மஹோத்ஸவம் விரிவாக வ்ருஷ யாகம், கொடியேற்றுதல் தொடங்கித் தீர்த்தவாரி வரை நிகழும். உத்சவ நாட்களில் முக்கியமான பூசைகளுக்குப் பிறகு உத்சவ மூர்த்தி அன்றன்று காலையும் மாலையும் குறிப்பிட்ட வாகனங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். ஓர் குழுவினர் வாகனங்களுக்கு முன்பாக தோத்திரப்பாடல்கள் பாடிச்செல்வர். இவ்வொலிகள் வானத்திற்கே செல்லும்.

பிரம்மோத்சவத்தில் தேரில் உத்சவமூர்த்தி நகர்வலம் வருதல் சிறந்த விழாவாகும். கடைசி நாளுக்கு முதல் நாள் தேர் உத்சவம் கொண்டாடப்படும். சில இடங்களில் இது மாறக்கூடும். காரணாகமம் ரதத்தைப் பிரதிஷ்டை செய்வதைப் பற்றியே ஒரு முழு அத்யாயம் கொண்டது. விழாவின் முடிவு சூர்ணோத்சவத்துடன் ஆகும். குறிப்பிட்ட திரவியங்களுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்சவமூர்த்தியை ஸ்நான கட்டத்திற்கு எடுத்துச் செல்வர். பக்தர்கள் அனைவரும் மந்திரங்கள் கூறிக்கொண்டே உடன் செல்வர். முக்ய மூர்த்திக்குப் பதிலாக உள்ள 'அஸ்த்ரராஜன்' முழுக்காட்டப்படுவார். கடைசியாகக் கொடி இறக்கப்படும். தென்னிந்தியக் கோயில்களில் மிக முக்கியமானது சிவன், உமா இவர்களின் திருமணத் திருவிழா. வேத மந்திரங்களுடன் இதில் திருமணத்துக்குண்டான பல சடங்குகள் உண்டு. பிரதிஷ்டை, உத்சவம் போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளுக்குப் பிறகு சாந்தி ஹோமமும் பிராயச்சித்தமும் செய்யப்படும்.

புராணங்களில் கூறப்படும் முக்கியமான எட்டுச் சிவ லீலைகள் உத்சவங்களாக நிகழ்த்தப்படுகின்றன. புராணங்களில் காணப்படாத சில நிகழ்ச்சிகளும் சில சைவக்கோயில்களில் கொண்டாடப் படுவதுண்டு. மதுரையில் அங்கு கோயில் கொண்ட சிவனின் 64 லீலைகள் பாடல்களால் கொண்டாடப்படுகின்றன. இந்த லீலைகள் ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தில் விரிவாகக் காணப்படுகின்றன. எங்களது 'சிவபராக்ரமம்' என்ற நூலிலும் இதனை எளிய தமிழில் கொடுத்துள்ளோம்.

மந்திரங்கள் ஓதுவதிலும் பூசைகளிலும் மற்ற சடங்குகளிலும் ஏற்படக்கூடிய குறைகளை நிறைவு செய்வதற்காகப் பிராயச்சித்தம் எனும் சடங்கு செய்யப்படுகிறது. சிறிது குறையோ குற்றமோ இருந்தாலும், நிகழ்த்துபவர்க்கு நல்ல பலனளிக்காததுடன் கெடுதலும் விளையுமாதலால், ஆகம நூல்களிலேயே பிராயச்சித்தச் சடங்குகளும் விதிக்கப் பட்டுள்ளன. பிரதிஷ்டை, உத்சவம் போன்ற சிறப்புக் கால நிகழ்ச்சிகளுக்குப்பிறகு மந்திரங்களுடன் சாந்தி ஹோமமும் திசா ஹோமமும் செய்யப்படவேண்டும்.

இவ்வாறு ஆகம நூல்களில் காணப்படும் கோயிற் சடங்குகள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டன. இவற்றில் பயன்படுத்தப்படும் ஆகம மந்திரங்கள் பல. இம்மந்திரங்கள் பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயிர ஆண்டுகளாக விண்ணில் உள்ளன. இக்காலத்தில் வைதிகம், தாந்திரிகம், பௌராணிகம் என்று மூன்று வகைப் பூசை முறைகள் காணப்படுகின்றன. முதலாவதில் ஆகம மந்திரங்களுக்குப் பதிலாக வேத மந்த்ரங்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன. பௌராணிக பூஜையில் ஆகம மந்திரங்களுக்குப் பதிலாக புராணங்களில் காணப்படும் சுலோகங்களோ அல்லது வேறு சுலோகங்களோ கூறப்படு கின்றன. பிற்காலத்தில் தர்மசாத்திரத் தொகுப்புகள் வேத மந்திரங்களையும் புராண சுலோகங்களையும் கொண்ட விரிவான பூசை முறைகளைக் கொண்டுள்ளன. பழைய ஆகம வழிபாட்டு முறைகள் வளர்ந்து, பல மந்திரங்களுடன் கலந்து இன்று முற்கூறிய மும்முறைகளாகக் காணப்படுகின்றன. இது தென்னிந்தியாவில் உள்ள நிலை. வட இந்தியாவில் ஆகம பூசையை நீக்கிவிட்டு அதன் இடத்தில் வைதிக பூசை முறை அமர்ந்தது. ஆகமச் சடங்குகள் இருந்தாலும் அவற்றில் வேத மந்திரங்களே உபயோகப்படுத்தப்படுகின்றன. இம்மந்திரங்கள் அனைத்தும் வானில் பரவியுள்ளன.

சிவலிங்க பூசையில் ஆரம்பித்துச் சிவனின் பல உருவங்கள், தேவி, கணபதி, முருகன், சூரியன் இவர்களைப் பரிவார தேவதைகளாகக் கொண்டது, பிறகு சண்டிகேச்வரர், சாஸ்தா முதலியவர்களையும் ஏற்றுக்கொண்ட நிலையை இன்று காண்கிறோம். ஒவ்வொரு தேவதைக்கும் ஒவ்வொரு மந்திரம் உண்டு. இவைகள் எல்லாம் வானிலேயே காற்று மண்டலத்தில் கலந்து உள்ளன. வேதங்களைப் போலல்லாமல் ஆகம நூல்கள் அவ்வப்பொழுது ஆலய வளர்ச்சிக்கேற்ப விரிவடைந்தன. அவற்றின் உட்கரு மட்டும் அப்படியே இருக்க, மற்றவற்றில் மாறுபாடுகள் மேற் கொள்ளப்பட்டன. சுருக்கமாக மட்டுமே இவ்வாறு கோயில்களில் மந்திர ஒலிகள் எழுவதைக் கூறமுடியும். இது அல்லாமல் இக்கட்டுரையில் ஆலய வழி, வீட்டிலும் பிறமத ஆலயங்களிலும் செய்யப்படும் வழிபாடு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்கள் பற்றி இந்தக் கட்டுரையில் இதற்கு மேல் எழுத முடியாது. ஒலி அலைகள் காற்றில் கலப்பதால் எங்கும் மந்திர மொழியாகவே உள்ளன. ஆனால் நமது ஊனக்காதுகளால் பயிற்சி இல்லாததால் கேட்க முடியவில்லை.

நம் உடலில் ஒலி அலைகள் எங்கெங்கு எழுகின்றன என்பதைத் தொல்காப்பியரின் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் விளக்குகின்றது. அஜாபா காயத்திரி என்னும் வாசி யோகமும் ஒலி அலைகளோடு நேரடி தொடர்பு உடையது. உலகம் தோன்றிய நாள் முதல் உண்டான ஒலி அலைகள் ஆகாயத்தில் தேங்கி உள்ளன. வேத மந்திர ஒலிகளும் இதர நம் பேச்சுக்களும் ஆகாயத்தில் பதிந்து கிடக்கின்றன. நம் முன்னோர் பேசிய பேச்சுக்களும் இதர உயிரினங்களின் சப்தங்களும் பதிவாகி உள்ளன. இவைகளை நம் புறக்காதால் கேட்க முடியாது. அகக் காதை ஒரு நிலைப் படுத்தினால் தான் கேட்க முடியும்.

அருளாளர்கள் மேல் உலகத்தில் ரிசிகளுக்கிடையே நடந்த உரையாடல்களைத் தங்களின் அகக்காது மூலம் ஆகர்ஷணம் செய்து அவைகளை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தார்கள். நாடி ஜோதிடம் மற்றும் இதர சாத்திரங்கள் நமக்கு இப்படித்தான் கிடைத்தது. சப்த ரிஷிகள் யுகங்கள் உள்ளவரை இருப்பார்கள். முகம்மது நபிக்கு ஜிப்ரீல் என்னும் தேவ தூதன் அவர் காதில் குரானை ஓதினான். இஸ்லாத்தில் ஒலி மூலம் அருள் பெற்றவர்களை "ஒலிமார்" என அழைக்கின்றனர். இயேசு அழைக்கின்றார் என்பதும் இந்த சப்த ஆகர்ஷணம் மூலம்தான். இஸ்லாமியர் காதுகளில் கை வைத்துத் தொழுவதும் இந்தச் சக்தியைப் பெறுவதற்காகத்தான். தலைப்பாகை கட்டுவது, காது குத்திக் கடுக்கண் அணிவது, காதுக்குள் நறுமணப் பஞ்சு வைப்பது, காதைப் பிடித்துப் பிள்ளையார் தோப்புகரணம் போடுவது, சரியாகப் பாடம் கேட்காத பையனின் காதை ஆசிரியர் முறுக்குவது முதலிய கிரியைகள் அகக்காதைச் செயல்படுத்த உதவுகின்றன. வலதுகாது வியாழ கிரஹத்தை சேர்ந்தது. இடது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுக்கிர கிரஹத்தை சேர்ந்தது. ஸப்த ஆகர்ஷணம் சாதி, மதம், மொழி, தேசம் கடந்தது. சிலர் பிறவியிலேயே தூரத்துச் செய்திகள் கேட்கும் திறன் பெற்றவர்களாகி விடுகின்றனர். இந்துக்களில் வாக்குவாலை, கர்ணஎட்சனி, கர்ணபைரவர் உபாசனை உடையவர்களுக்கும் ஸப்தாகர்ஷண மந்திரம் ஜெபம் செய்பவர்களுக்கும் இச்சக்தி கிடைக்கின்றது.

ஒரு சாதாரண பக்தன் இந்தச் சக்தியை எப்படிப் பெறுவது? ஓர் எளிய பயிற்சியின் மூலம் ஸப்தாகர்ஷணசக்தியைப் பெறலாம். இதற்குச் சங்கு உதவும். வலம்புரி சங்கு அமாவாசை பௌர்ணமி தினங்களில் கடலில் ஓங்கார சத்தமிடும். சாதாரண சங்கிலிருந்து வரும் ஓசையும் ஓங்காரத் தொனியுடையது. சங்கின் பக்கத்தில் துர் ஆவிகள் வாரா. வெள்ளையாகவும் வெடிப்பு அல்லது கீறல் இல்லாததாகவும் உள்ள சாதாரண சங்கைக் கடையில் வாங்கவும். கைக்கு அடக்கமானதாக இருக்க வேண்டும். பேரம் பேசாமல் வாங்க வேண்டும். அதை டெலிபோன் ரிசீவர் போல் வலது உள்ளங்கையில் வைத்து வலது காதில் வைக்கவும். சங்கின் மேற்புறம் காதின் மேற்புறமாகவும் சங்கின் அடிப்புறம் காதின் அடிப்புறமுமாகவும் சாதாரணமாகப் பிடித்துக் கொள்ளவும். துணிவிரித்து அதில் நிமிர்ந்து உட்கார வேண்டும். எந்தத் திசையையும் நோக்கி இருக்கலாம். கண்களை மூடி மனதை ஒருமைப்படுத்திக் கருத்தை வலது கையில் பிடித்திருக்கும் சங்கில் செலுத்தவும். சௌகரியப்படும் போது அமைதியான நேரத்திலும் தினம் 15 நிமிடம் இதைச் செய்யலாம். முதலில் கரகர என ஒலி கேட்கும். பின் பலவித ஓசைகள் கேட்கும். கடைசியில் பேச்சுக் குரல் கேட்கும். உங்கள் கருத்தை அமெரிக்காவை நோக்கிச் செலுத்தினால் அங்கு இரகசியமாக நடைபெறும் பேச்சுக்கள் உங்களுக்குக் கேட்கும். தேவ இரகசியங்களை வெளியில் சொல்லக்கூடாது. பொறுமையும் அடக்கமும் மிகமிகத் தேவை. உங்களிடம் இருப்பது வலம்புரி சங்கானால் இடது காதில் வைத்து மேற்படி முறையில் சாதனை செய்யலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வலம்புரிச் சங்கு என்பது ஸ்ரீமகாலக்ஷ்மியின் சகோதரி. இது கிடைப்பது மிகமிக அரிது. இது கோயில், வீடு, வணிகத்தலம், வீட்டிலும் இங்கெல்லாம் இருந்தால் அங்கு லக்ஷ்மிகடாட்சமாக இருக்கும். ஆன்மிக நூல்களின்படி வலம்புரிச் சங்கு எவ்விடத்தில் இருக்குமோ அவ்விடத்தில் எல்லாம் சுபகாரியங்கள் நடக்கும். அந்தச் சங்கினைப் பார்த்தவர்களின் முகம் தெளிவுடன் காணப்படும். இந்தச் சங்கு தங்கத்தில் அல்லது வெள்ளியினால் செய்த பீடத்தில் வழிபாட்டு இடத்தில் வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு நாளும் சுத்தமாகக் குளித்துப் பவித்திரமாகச் சங்கைப் பால் அல்லது சுத்த நீரினால் கழுவுவார்கள். ஒவ்வொரு நாளும் மூன்றுமுறை வலம்புரி மந்திரத்தைச் சிலர் கூறுவார்கள். இதே போல் வலம்புரிச் சங்கை வணங்கினால் தங்கம், பசு, பணியாட்கள், வாகனங்களுடன் மகிழ்வுடன் வாழலாம் என்பர். பாற்கடலைக் கடையும் போது அதிலிருந்து ஆலகால விசம், கற்ப க விருட்சம், காமதேனு இவை போன்ற பல பொருட்கள் வெளிவந்தன. அப்பொழுது தேவர்களும், அசுரர்களும் இவற்றை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஸ்ரீமகாவிஷ்ணு ''இப்பொழுது வரும் பொருள் என்னுடையது'' என்று கூறினார். அருகிலிருந்த அக்கினி தேவன் ''அப்படி வரும் பொருளினுள் வேறு ஏதாவது இருந்தால் அது எனக்குச் சொந்தம்'' என்று கூறினார். ஸ்ரீமகாலக்ஷ்மியும், அவளின் கையில் வலம்புரிச் சங்கும் வெளிவந்னர். இவர்களின் எண்ணப்படி ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீமகாலக்ஷ்மியைப் பெற்றுக் கொண்டார். மகாலக்ஷ்மியின் கையில் உள்ள சங்கை அக்கினிதேவன் பெற்றுக் கொண்டார். ஸ்ரீமகாலக்ஷ்மியின் சகோதரியான வலம்புரிச் சங்கைத் திரும்பவும் பின்பு ஓர் சமயம் மகாவிஷ்ணு பெற்றுக் கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ கிருஷ்ணன், அர்ச்சுனன் இவர்கள் இருவரையும் காண்டவ தகனத்திற்காக அக்கினி தேவன் அழைத்தார். அப்பொழுது அவர்கள் இருவரும் வெறும் கையுடன் வந்தார்கள். அதைப் பார்த்து அக்கினி தேவன் நீங்கள் இருவரும் என்னை எப்படிக் காப்பாற்றுவீர்கள் என்று கேட்டார். அப்பொழுது அவர்கள் அவரிடம் "எங்களுக்கு ஏதாவது ஆயுதம் கொடுங்கள்" என்று கேட்டார்கள். அப்போது அக்கினி தேவன், அர்ச்சுனனுக்கு வில்லும், கிருஷ்ணனுக்கு வலம்புரிச் சங்கையும் தந்தார். பாற்கடல் கடையும் சமயம் மகாவிஷ்ணுவிடம் இருந்து நழுவிய வலம்புரிச் சங்கு அவருக்குத் திரும்பவும் கிடைத்தது. நமக்கு இப்பொழுது நான்கு விதமான வலம்புரிச் சங்கு கிடைக்கிறது. ஒன்று : ராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி வரை கிடைக்கக் கூடியது. இதுதான் அசல் லக்ஷ்மி சொரூபமானது என்பர். அன்று லக்ஷ்மியின் கையில் கிடைத்த சங்கின் இனத்தைச் சேர்ந்தது. இதைப் புருசம் என்று கூறுவார்கள். இந்தச் சங்கு கிடைப்பது மிகமிக அரிது. ஏன் என்றால் இரண்டு அல்லது மூன்று ஆண்டிற்கு ஒன்று கிடைக்கலாம். அதாவது கிடைக்காமலும் போகலாம். இதன், விலையைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. இரண்டாவது : ஆப்பிரிக்கன் சங்கு. பிரம்மன் படைப்பில் இருக்கும். அனைத்துப் பொருளுக்கும் விஸ்மாத்திரர் மாதிரிப் படைப்பு செய்தார். அந்தப் படைப்புகளில் ஒன்றுதான் தற்சமயம் நாம் காணும் வலம்புரிச் சங்கு. இந்தச் சங்கை உபயோகப்படுத்தும் முறை.

ஓர் வகைக் கையினுள் அடங்கும் சங்காக இருக்கும். தனிப்பட்ட ஒரு ஆள் வைத்துக் கொள்ளலாம். எப்பொழுதாவது பயணத்தில் எடுத்துக் கொண்டு போகலாம். மஞ்சள் நனைத்த துணியில் சங்கைச் சுற்றி எடுத்துக் கொண்டு சென்று செல்லும் வழியில் வழிபாடு செய்து கொள்ளலாம்.(2) வீட்டில் வழிபாட்டிற்காகக் கைப்பிடி அளவில் இருந்து ஒரு சாண் வரை உள்ள சங்கினை வைத்துக் கொள்ளலாம். (3) கோவில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரம் இது போன்ற இடத்திற்குச் சாண் அளவிற்கு மேல் முழம் அளவு வரை வைத்து வழிபாடு செய்யலாம். ஒவ்வொரு நாளும் சுத்த நீரில் அல்லது பாலில் அபிசேகம் செய்து சுவாமி வடிவங்களுக்கு அபிசேகம் செய்யலாம். பிறகு சங்கை அலங்கரித்து அதில் நீர் விட்டு உயரமான பீடத்தில் வைத்துப் பூசை செய்யலாம். பிறகு சங்கிலுள்ள புனித நீரைத் தீர்த்தமாக எடுத்துக் கொள்ளலாம். வழிபாடு முடிந்தவுடன் சங்கைச் சுத்தம் செய்து, அந்தப் பீடத்தில் வைத்து விடவும். கவிழ்த்து வைக்கக் கூடாது. ஏனென்றால் பூமிக்கு ஈர்ப்புச் சக்தி இருப்பதனால் எக்காரணம் கொண்டும் தரையின் மேல் வைக்கக் கூடாது.

இந்த வலம்புரிச் சங்கைப் பொதுவாக மூன்றுவிதமாகப் பயன்படுத்துகின்றனர். யாராவது இறந்தால் அவர்களுக்கு இந்த வலம்புரிச் சங்கில் நீர் நிரப்பி அதில் துளசி இலை, சிட்டிகை உப்பு, சிட்டிகைச் சர்க்கரை, சிட்டிகை அரிசி போட்ட இந்தப் பஞ்சாமிருதத்தை இறந்தவரின் வாயில் ஊற்றுகின்றனர். அப்படிச் செய்தால் அந்த உடலுக்குச் சொர்க்கம் கிடைக்கும். அதுமட்டும் அல்லாமல் கொடுப்பவர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும்.

யாருக்காவது ஒற்றைத் தலைவலி இருந்தால் வலம்புரிச் சங்கில் நீர் ஊற்றி அதைப் 15 நாட்கள் அருந்தினால் திரும்பவும் ஒற்றைத் தலைவலி வராது. நமது வீட்டில் அல்லது பக்கத்து வீட்டில் யாராவது பெண்மணி பிரசவ நேரத்தில் அதிக வலி கொண்டு இருந்தால் உடன் இந்தச் சங்கில் நீர் விட்டு அதை அவர்களுக்குக் கொடுத்தால் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. சுகப்பிரசவம் தான். சங்குக்கு இது போன்ற சக்திகள் உண்டு.

ஸப்தாஹர்ஷணம் விரும்புவோர் பக்கம் 253ல் கூறியபடி செய்ய வேண்டும். மேலும் இப்பயிற்சியைத் தொடர்ந்து 90 நாட்கள் செய்ய வேண்டும். ஒருவர் உபயோகிக்கும் சங்கை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. சங்கிற்கு முக்கிய தினங்களில் சாம்பிராணிப் புகை சில நொடிகள் மட்டும் காட்ட வேண்டும். உபயோகிக்கும் நேரம் தவிர இதர நேரங்களில் ஒரு மஞ்சள் பட்டுத் துணியால் மூடி வைக்கவும். அது இயற்கையின் இரகசியத்தை அறியும் பயிற்சியே அல்லாமல் ஆண்டவனை வணங்கும் வழிபாட்டு முறையல்ல என்பதை அறியவும். கொல்லிமலை அரியூர் சோழக்காட்டுப் பகுதியில் ஸ்ரீகாகபுஜண்டர் ஆதின ஆஸ்ரமத்தில் ஸ்ரீவலைச்சித்தர் என்ற தர்மலிங்க சுவாமிகள் ஸ்ரீகர்ண பைரவர் உபாசனை மந்திரத்தைத் தகுதி உள்ளவர்களுக்கு உபதேசம் செய்து தீட்சை அளிக்கின்றார்கள்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. வேப்பங்குச்சியும் வருங்காலக் காட்சிகளும்

உலகம் தோன்றிய பின்பு தாவர இனங்களும் தோன்றி விட்டன. முப்பத்து முக்கோடி தேவர்களும் கோடிக்கணக்கான தாவரங்களுடன் சங்கமித்து விட்டனர். ஆதிகாலத்தில் தாவரங்கள் பேசியுள்ளன. சமீபத்திய விஞ்ஞான ஆராய்ச்சிகள் தாவரங்களுக்கும் உணர்ச்சி உண்டு என நிரூபித்துக் காட்டியுள்ளன. பழங்கால வழிபாடுகளில் மரவழிபாடும் ஒன்றாக இருந்திருக்கின்றது. கோயில் கொடிமரம் அதில் ஓர் அங்கம். இன்றும் கேரளாவில் மரவழிபாடு உண்டு. ஸ்தலவிருட்சம் கோவில்களில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆதிபராசக்தி என்னும் பெண் தேவதை தோன்றியவுடன் அதன் ஸ்தூல ரூபமாக வேப்பமரம் தோன்றியது. சாக்த மதம் பெண் தெய்வ வழிபாட்டிற்குண்டானது. ஆதிசங்கரர் ஒரு நம்பூதிரி பிராமணர். அவர் மூலம் தான் சாக்த மத வழிபாடு புகழ் பெற்றது. அவர் தொடங்கிய மடங்களே அதற்குச் சாட்சி. வனப்பேச்சி, காளி, மாரி ஆகிய வழிபாடுகள் ஆதிபராசக்தி வழிபாடுகளுடன் இணைந்தவை. பகவதி வழிபாடு கேரளாவில் பிரசித்தி பெற்றவை. வேப்ப மரத்தின் மருத்துவ குணங்கள் கணக்கில் அடங்காதவை. அதன் வேர், பட்டை, பூ, காய், பழம் ஆகியவை மனித குலத்திற்கு முக்கியப் பங்காற்றுகின்றன. அதன் இலையில் பட்ட காற்று நம் மீது படும்போது நம்மைப் பிடித்த தோஷம் விலகுகின்றது. விஷகலை நீங்கி அமிர்த கலை தோன்ற உதவுகின்றது.

வேப்பமரம் நமது தேசத்தில்தான் எங்கும் காணப் படுகிறது. இமயம் முதல் குமரிவரை இந்த வேப்பமரத்தைக் காணலாம். பல ஊர்களில் விநாயகர், அம்மன், காளி கோயில்களில் வேப்ப மரம் கண்டிப்பாக இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேனாடுகளிலும் கீழ் நாடுகளிலும் வேப்பமரம் அவ்வளவாகச் செழித்து வளர்வதில்லை. இந்த வேப்ப மரத்தின் பயனை அறிந்திருந்த நம் முன்னோர் ஒவ்வொரு வீட்டிலும் வேப்ப மரத்தை வளர்த்து வந்திருக்கின்றனர். இன்றளவும் கிராமப் பகுதிகளில் வீட்டின் முன் பக்கத்திலோ பின் பக்கத்திலோ வேப்ப மரம் இருப்பதைக் காணலாம். ஆலமரம், அரசமரம், போன்ற மரவகைகளில் வேப்ப மரம் மட்டும் முக்கிய இடம் வகிப்பதற்குக் காரணம் அதனிடமுள்ள ஔஷதக் குணமே யாகும். வேப்பமரத்தின் உச்சி முதல் அடி நுனிவேர் வரை ஔஷதக் குணம் உண்டு. பேய் பிசாசுகளை ஓட்டும் மந்திரவாதிகளுக்கும், விஷக்கடிகளின் விஷத்தைப் போக்கும் மந்திரவாதிகளுக்கும் வேப்ப இலை தேவைப்படுகின்றது. வேப்ப மரத்தின் இலை, பூ, காய், பழம், கொட்டை, பருப்பு, எண்ணெய், பட்டை, கட்டை எல்லாமே வைத்திய முறைக்கு நன்கு பயன் பட்டுவருகிறது.

பச்சைப்பசேலென்றிருக்கும் வேப்பமரத்தைத் தினசரி எழுந்தவுடன் கண் குளிரப் பார்த்து, அதன் காற்றைச் சுவாசித்து வருபவர்களுக்கு முதலில் கண் சம்பந்தமான எந்த நோயுமே வருவதில்லை. கண் பார்வை குறைந்தவர்கள் பசுமையான வேப்ப மரத்தைத் தினசரி 40 நாட்கள் வரை காலையிலும் மாலையிலும் அரை மணி நேரம் பார்த்து வருவார்களானால் அவர்கள் பார்வை தெளிவடையும். இந்த வேப்பமரத்தைப் புகழ்ந்து ஒரே வார்த்தையில் கூறவேண்டு மானால் இதுஓர் ‘சர்வரோக நிவாரணி’ எனலாம். மூலிகை வர்க்கங்களிலேயே அனைத்துவகை நோய்களையும் தீர்க்கக் கூடிய சக்திவாய்ந்த ஒரு மூலிகை உண்டென்றால் அது வேப்ப மரமாகத்தான் இருக்கும். பொதுவாக வேப்பமரம் இருக்கும் இடத்தில் எந்தவிதமான தொற்று நோயும் வருவதில்லை. கிராமங்களில் அமைந்த வீடுகளின் முன்பக்கம் வேப்பமரமும் பின்பக்கம் முருங்கை மரமும் இருப்பதைக் காணலாம். வேப்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மரத்தைத் தெய்வமாக எண்ணி அதை வழிபட்டு வரும் பழக்க வழக்கம் நம் நாட்டில் இன்றளவும் இருந்து வருகிறது. அம்மரத்தினிடமுள்ள நோய் தீர்க்கும் சக்தியே இதற்குக் காரணமாகும்.

சிலர் தங்களுக்கோ தங்கள் குழந்தைகளுக்கோ உடல் நலக்குறைவு ஏற்பட்டால் மருத்துவரைத் தேடமாட்டார்கள். மந்திரவாதியைத்தான் தேடுவார்கள். மந்திரவாதியிடம் சக்தி இருக்கிறதோ இல்லையோ, ஆனால் அவர் கையிலிருக்கும் வேப்பிலைக் கொத்துக்கு மட்டும் நோய் தீர்க்கும் சக்தி உண்டு. வேப்பிலையிலிருக்கும் ஒருவித ஔஷத சக்தி அந்த இலையை வீசும் பொழுது வெளிப்படும். இந்தச் சக்தி எந்த வியாதியையும் குணப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. இதன் காரணமாகத் தான் மந்திரவாதி மந்திரித்த பின் வியாதி குணமாகிறது. நெல்லை மாவட்டக் குற்றாலம் பகுதியில் மூளைக் குறைவு உள்ளவர்களுக்குப் பல சிகிச்சை முறைகளைக் கையாண்டாலும் இவர்களைக் காலை மாலை வேப்ப மரத்தினடியில் உட்கார வைத்து, வேப்பமரத்தின் காற்றைச் சுவாசிக்கச் செய்து வருகின்றனர். அவர்களுக்கும் சீக்கிரமே நல்ல குணமேற்படும். மனதிற்கும் வேப்பமரத்திற்கும் அதிக தொடர்பு உண்டு. வேப்பமரத்தின் அடியில் காலை, மாலையில் உட்கார்ந்து வந்தால் மனம் சாந்தமடையும். மனதில் ஒரு புதிய தெம்பு உண்டாகும். வேப்பிலையை வீட்டைச் சுற்றியும் வீட்டு வாசலின் பக்கமும் வீட்டின் பின்புறத்திலும் இருந்தால் அந்த வீட்டினுள் எந்தத் தொத்து நோயும் வராது. அம்மை நோய்க்கு எந்த மருந்தும் கிடையாது. எந்த நாட்டிலும் அதற்கு மருந்துகள் கொடுப்பதும் பழக்கமில்லை. அம்மை என்ற வைசூரி ஆரம்பமானது முதல் அது குணமாகி நோயாளி தேறி எழுந்திருக்கும் வரை நோயாளி அருகிலும் நோயாளியின் படுக்கையிலும் இருப்பது வேப்பிலை ஒன்றுதான். இந்த வேப்பிலை ஒன்றினால்தான் அம்மை நோயைக் குணப்படுத்துவதும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மை நோயைப் பரவவிடாமல் பாதுகாப்பதும் முடியும். அம்மை நோய் ஓர் பயங்கரமான கடுமையான நோய். பிறருக்கும் தொற்றக்கூடிய சக்தியுள்ள நோய். இந்த நோயைச் சரிவரக் கவனியாவிட்டால் நோயாளியை மரணப் படுக்கையிலும் விட்டுவிடும். அம்மை நோய் தானே என்று அலட்சியமாக இருக்கக் கூடாது. அது பலருக்குத் தொற்றி மேலும் பரவ வாய்ப்புண்டு. அம்மை நோய் கண்டால் வீடும் வீட்டிலிருப்பவர்களும் சுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இதைக் கூறினால் அவர்கள் சுத்தத்தைக் கடைப்பிடிக்கமாட்டார்கள். இதனால் நோயாளிக்குக் கஷ்டமும், அபாயக் கட்டமும் ஏற்படலாம். நோயாளியினால் மற்ற பிறருக்கும் கஷ்டம் உண்டாகும்.

அம்மை நோய் தாக்காதிருக்க வேப்பிலையைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதை நன்கறிந்த நம் முன்னோர்கள் இந்த அம்மை வியாதியை ஒரு தெய்வமென்றும், அதற்கு வேப்பிலையே தேவையென்றும், நமக்குக் கூறிச் சென்று விட்டனர். அம்மை நோயைத் தெய்வமென்று கூறினால் தான் மக்கள் பயந்து அந்நோய் வந்தவர்களை நல்ல முறையிலே கவனிப்பார்கள். நோயாளி இருக்குமிடத்தைச் சுத்தமாக வைத்திருப்பார்கள் என்று நமது முன்னோர்கள் கருதியதில் தவறொன்றுமில்லை. வேப்பமரத்தின் சக்தியை அறிந்த சித்தர்கள் வைத்திய முறையில் இதற்குப் பல மறைமொழிப் பெயர்களைக் கொடுத்திருக்கின்றனர். பல அரிய வைத்திய நூல்களில் வேப்பமரத்திற்கு, ''ஆதிசக்தி மூலிகை'' ''பராசக்தி மூலிகை'' வேம்பு, என்றும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். வேம்பு தீர்க்காத வியாதியில்லை. தலைவலி முதல் குஷ்டம் வரை தீர்க்கக் கூடிய இந்த வேப்பமரத்தின் சக்தியால் தீரும் வியாதிகளையும் அதற்கான முறைகளையும் இனிப் பார்ப்போம்.

சுவாச காசம், சயரோகம், இளைப்பு, இவைகளை வேப்பமரம் குணப்படுத்துகிறது. சுவாசகாசம், ஈளை இருமலுடன் கூடியவர்களை வேப்பமரம் நிச்சயமாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குணப்படுத்துகிறது. இந்த முறையில் அநேகர் குணமடைந் திருக்கின்றனர்.

நன்றாகச் செழித்து நெருக்கமாக் அடர்ந்த கொம்பும் இலைக் கொம்புகளும் உள்ள ஒரு வேப்பமரத்தைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த மரத்தின் மேல் இலை தழைகள் நெருக்கமாக உள்ள ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் தினமும் காலை, மாலை அரைமணி நேரம் இருந்துவர மேற்கூறிய நோய்கள் அகலும். இதனைத் 90 நாட்கள் தொடர்ந்து செய்து வரவேண்டும்.

மக்களை வாட்டி வதைக்கும் பல வகையான நோய்களில் அம்மையும் ஒன்று. அம்மை நோய் கடுமையானதாக இருந்தாலும் அது குறிப்பிட்ட தினங்களுக்குப்பின் தானாகவே குணமாகி விடும். சிலரின் உடல் நிலையைப் பொறுத்து அம்மை அதிகமாகத் தோன்றுவதும் உண்டு. சில சமயம் சிலருக்குத் தன் முத்திரையை மட்டும் பதித்து விட்டு விலகுகின்றது. சில சமயம் சிலரைக் கண் பார்வையற்றவர்களாகச் செய்கின்றது. சில சமயம் ஒரு சிலரை மட்டும் தன்னுடன் முடிவடையச் செய்து விடுகிறது. ஒரு சிலருடைய தேகத்தில் ஒன்றிரண்டு அம்மை தோன்றிக் குறிப்பிட்ட நாளில் மறைந்து விடுவதும் உண்டு. அம்மை ஒரு வகையான நுண்ணிய விசக்கிருமிகளினால் ஏற்படுகின்றது. இந்த அம்மை நோய்க் கிருமிகள் ஒருவரிட மிருந்து மற்றவருக்குத் தொற்றக்கூடிய தன்மையுள்ளதாக இருக்கிறது. இந்த அம்மை நோய் உடல் நிலைக்கு ஏற்றபடி சிலரைத் தொற்றி அதிகமாகின்றது. சிலருடைய உடலில் தொற்றினாலும் அதிகப் பாதிப்பை உண்டு பண்ணுவதில்லை.

அம்மை கண்ட நோயாளிக்குத் துணையாக நோயாளியின் பக்கத்திலேயே இருந்து உதவி செய்துவரும் வேறொருவருக்கு இந்த நோய் தொற்றுவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை நோக்கும் பொழுது, அது ஒருவருடைய உடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிலையினால் ஏற்படும் மாற்றமே தவிர வேறொன்றுமில்லை என்பதை அறியலாம்.

இந்த அம்மை நோய்க் கிருமிகள் மற்றவருடைய உடலில் தொற்றி அவைகள் இரத்தத்துடன் கலந்து செல்லும் பொழுது அந்த உடலில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்திலுள்ள விசக் கிருமிகளைக் கொல்லும் நுண்ணிய அணுக்கள் பலமற்று அம்மைக் கிருமிகளைக் கொல்ல முடியாமல் போகலாம். அப்படிப்பட்ட உடலில் விசக்கிருமிகள் விருத்தியாகி அம்மை நோயைத் தோற்றுவிக்கும். தமிழ் வைத்திய நூல்களில் அம்மையின் வகைகளைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. உப்புதரியம்மை, நீர்குழுவானம்மை, வெந்தய யம்மை, தவளையம்மை, பாலம்மை, உமியம்மை, பனைமுகரியம்மை, விச்சரிப்பனம்மை. பாசிப்பயற்றம்மை, கடுகம்மை, கல்லுதரி யம்மை, வரகுதரியம்மை, கோணித்தட்டம்மை, கரும்பனிச்சை யம்மை, கொள்ளம்மை, மொழுக்கனம்மை. ஒவ்வொரு வகையான அம்மைக்கும் வெவ்வேறு விதமான அடையாளமும். குணமும் உண்டு.

இவற்றில் சிலவகை அம்மை வெறும் தடிப்புகளாகத் தோன்றும். சிலவகை அம்மை கொப்புளமாகக் கிளம்பும். அம்மை நோய்க் கிருமிகள் உடலில் ஆதிக்கம் செலுத்தி உடல் முழுவதும் பரவும். இந்தச் சமயம் உடலில் உஷ்ணம் உண்டாகும். இந்தக் காய்ச்சல் அல்லது சுரமே அம்மை நோய் ஆரம்பமாகும் அடையாளமாகும். அம்மை நோயானது ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை அதிகம் தாக்குவதில்லை. இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையிலுள்ள குழந்தைகளையே அதிகம் தாக்குகின்றது. அம்மை வருமுன் நெற்றி வலியும், மூக்கில் அடைப்பும், தும்மலும் தோன்றும். அதன்பின்பே காய்ச்சல் வரும். நாடித் துடிப்பு தீவிரமாக நடக்கும். நாவறட்சி ஏற்படும். தொண்டையில் வலி உண்டாகும். உடலில் மேல் வறட்சி தோன்றும். வாந்தி ஏற்படும். உணவின் மேல் வெறுப்பு ஏற்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று தினங்களுக்குள் நாடித் துடிப்பு 100–120த்தாண்டி 130–140 வரை, தீவிரமாக நடக்கும். நோயாளியைச் சுத்தமான இடத்தில் படுக்கவைத்துப் பாதுகாக்க வேண்டும். இந்த அம்மை நோய்க்கு வேப்பிலைதான் குணங்கொடுக்கும் சஞ்சீவியாகும். அம்மை நோய் குணமாகும் வரை வேப்பிலைதான் பாதுகாப்பு. அம்மை இறங்கிய பின்னும் வேப்பிலைதான் பாதுகாப்பு. அம்மை நோய் தோன்றியது முதல் அது மறைந்து குணமான பின்னும் பல நாட்களுக்கு வேப்பிலையே நோயாளியின் பாதுகாவலனாக இருந்துவரும்.

அம்மை நோயென்று தெரிந்தவுடனேயே ஒரு' கொத்து வேப்பிலையைக் கொண்டு வந்து வீட்டு வாசல் படிக்கு மேல் செருகி வைத்து விடுவார்கள். இந்தப் பழக்கம் இன்றளவும் கிராமங்களிலும் சில நகர வீடுகளிலும் இருந்து வருகிறது. அம்மை நோய் கண்ட வீட்டில் வேப்பிலையைச் செருகி வைப்பது அநாகரீகம் என சிலர் கருதுகின்றனர். இதனால் ஏற்படும் நன்மைகளை அவர்கள் அறியாதவர்கள். வேப்பிலைக்கு விசக் கிருமிகளைக் கொல்லும் சக்தி உண்டு என்று அறிவுடையோர் ஏற்றுக் கொள்வர். எனவே வேப்ப இலையை வீட்டின் வாசல் படியில் செருகி வைத்தால், வீட்டிலுள்ள நோயாளியினிடமிருந்து கிளம்பும் விசக் கிருமிகள் வெளியே செல்லும் பொழுது இந்த வேப்பிலை அந்தக் கிருமிகளை அழித்துவிடும். அந்த நோய் மற்றவர்களைத் தொற்றாது. இந்த நோய் ஊரிலும் பரவாது, இந்தக் கருத்தைக் கொண்டுதான் இந்தப் பழக்கத்தை நம் முன்னோர்கள் வைத்திருந்தனர். அதே பழக்கத்தையே இக்காலத்திலும் நாமும் பின்பற்றுகின்றோம். வேப்பிலையை வாசல் படியில் செருகியிருந்தால் வேப்பிலை செருகப்பட்ட வீட்டினுள் அசுத்தமானவர் செல்லமாட்டார்கள். வேப்பிலை செருகப்பட்ட வீட்டில் அம்மை நோய் கண்டிருக்கிறது என்பதே இந்த வேப்பிலை அடையாளமாகும். இச்செயல் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக, ஒரு அபாய அறிவிப்புக் கொடி போல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமைகின்றது. இதனால் அந்த வீட்டில் எவரும் அனாவசிய மாக நுழைய மாட்டார்கள். தொற்று நோய்க் கிருமிகள் வேறு இடத்திற்குப் பரவவும் முடியாது.

அடுத்தபடியாக அம்மை கண்டவர்களை வெள்ளைத் துணியின் மேல் வேப்பிலையைப் பரப்பி அதில்தான் படுக்க வேண்டும். இதனால் நோய்க் கிருமிகள் சீக்கிரம் அழியும். நோயாளியைச் சுற்றிலும், நோயாளியின் அடியிலும் வேப்பிலைப் பரப்பப்பட்டிருப்பதால் அதினின்று வரும் மருத்துவக் காற்று நோயாளியின் சுவாசத்துடன் உள்ளே சென்று உள்ளே யிருக்கும் நோய்க் கிருமிகளையும் அழிக்கும். அம்மைக் கொப்புளம் அல்லது துடிப்பு மறையும் பொழுது நோயாளியின் உடலில் அரிப்பு ஏற்படும். இந்தச் சமயம் நோயாளியைச் சொரிய விடக்கூடாது. இந்த அரிப்பைத் தடுக்க வேப்பிலைக் கொத்தையே உபயோகிக்க வேண்டும். அம்மை நோய் இறங்கியபின் தலைக்குத் தண்ணீர் விடுவர். தலைக்கு விடும் தண்ணீரில் நிறைய வேப்பிலையைப் போட்டு வெய்யிலில் வைத்த பிறகே அந்த நீரையே தலைக்கு விட வேண்டும். அம்மை நோய் கடுமையாக இருந்து சில சமயம் தேகத்தில் அம்மைப்புண் ஏற்பட்டு விடுவது முண்டு. இந்தச் சமயம் வேப்பிலையையும் மஞ்சளையும் சேர்த்தறைத்து அதைப் புண்ணின் மேல் போட்டு வந்தால் புண் சீக்கிரமே ஆறிவிடும். பொதுவாக அம்மை நோய் வருங்காலங்களில் அல்லது அருகில் உள்ள வீட்டில் அம்மை வந்துள்ளது என அறிந்ததும் ஒரு கைப்பிடி வேப்பிலையும் அதில் நான்கில் ஒரு பங்கு மஞ்சளையும் இளநீர் விட்டு நன்கறைத்து மூன்று நாட்கள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். இப்படிச் செய்தால் கண்டிப்பாக நமக்கு அம்மை வராது. வந்தாலும் ஓரிரு நாட்களில் அதிகம் பார்க்காமல் சென்றுவிடும்.

இரவு படுக்குமுன் வேப்பங் கொட்டைத் தோலையும், வசம்பையும் தூள் செய்து சாம்பிராணி போல நிறையப் புகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போட்டு விட்டால் கொசுக்கள் எல்லாம் ஓடி விடும். மறுபடி அங்கே கொசுக்கள் வாரா. இதனையே தற்பொழுது கொசு விரட்டி வர்த்தி எனக் கடைகளில் விற்பனை செய்கின்றனர்.

வேப்பிலையை ஒரு சட்டியில் போட்டு நன்றாக வறுக்க வேண்டும். வேப்பிலை தீய்ந்து புகை கிளம்பும். அந்தப் புகையில் தேள்கொட்டிய இடத்தைக் காண்பிக்க வேண்டும். இந்த விதமாகப் 10 நிமிடம் செய்து விட்டு சிறு வெங்காயத்தை அறிந்து கொட்டிய இடத்தில் தேய்த்தால் தேள் விசம் உடனே நீங்கும்.

வேப்பமரத்தின் பழங்களிலுள்ள கொட்டைகளைச் சேகரித்துக் காய வைத்துச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். இதுவே வேப்பெண்ணெய் எனப்படுகிறது. இந்த வேப்ப எண்ணெய் கசப்பாக இருக்கும். வேப்ப எண்ணெய் கொண்டு 'மார்கோ' போன்ற சோப்புத் தயாரிக்கின்றனர். வேப்பெண்ணெய் சீதளத்தைக் கண்டிக்கும். குளிர்ச்சியடைந்த தேகத்தில் தேய்த்தால் உடல் உஷ்ணமடையம். ஜன்னி,வாதவலி, பாரிசவாயுவுக்கு வேப்பெண்ணெயைத் தடவிச் சூடாக ஒத்தடம் கொடுத்தால் வலி குறையும். வலிப்பு ஏற்படும் சமயம் உடல் முழுவதும் வேப்பெண்ணெயைத் தடவி ஒத்தடம் கொடுத்தால் வலிப்பு, ஜன்னி நின்று விடும்.

வேப்பம் பூவைச் சுத்தம் பார்த்துத் தேனில் போட்டு ஊறவைத்து, குல்கந்து போலச் செய்து தினசரி படுக்குமுன் பாக்களவு சாப்பிட்டு வந்தால் பித்தம் தணியும். உடல் பலம் பெறும்.

சகல கட்டிகளும் உடைய வேப்ப இலை ஒரு கைப்பிடியளவு, மஞ்சள் ஒரு துண்டு , 5கிராம் கற்பூரம் இவைகளைத் தண்ணீர் விட்டு அரைத்து எடுத்துப் பலவகையான கட்டியின் மேல் கனமாகப் பற்றுப் போட்டால் கட்டி பழுத்து உடையும். சில சமயம் அமுங்கி விடுவதும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேப்பங்கொழுந்தைக் கசக்கிப் பிழிந்தால் சாறு வரும். கண்பார்வை மந்தப்பட ஆரம்பிக்கும் சமயம் ஒரு கண்ணிற்கு ஒரு துளி வீதம் இரண்டு கண்களுக்கும் காலையில் மட்டும் மூன்று நாள் விட வேண்டும். உடனே கண்பார்வைத் தெளிவடைந்து விடும்.

பித்த வெடிப்பு என்பது பெரும்பாலும் குதிகால்களிலும், கால் கட்டை விரல்களின் பக்கங்களிலும் தான் உண்டாகும். பித்த வெடிப்பு சிலருக்கு லேசாகவும் சிலருக்கு அதிகமாகவும் தோன்றும். குதிகால்களில் கனத்த சதைப்பகுதியில் முதலில் லேசான வெடிப்புகள் தோன்றும். பிறகு, அவைகள் வரவர ஆழமாக வெடிக்கும். வெடிப்புகள் தோன்றியது முதலே வலி ஏற்படும். வெடிப்புகள் ஆழமாக ஏற்பட்டபின் நடக்கவே முடியாதபடி பலி ஏற்படும். சிலசமயம் இந்த வெடிப்புகளிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பிக்கும். சிலசமயம் அறுத்தது போல இரத்தம் ஒழுகும். இந்தச் சமயம் வேதனை அதிகமாக இருக்கும். பாதிக்கப்பட்ட பகுதியை முதலில் நீர் நிலைகளில் மூன்று நிமிடங்கள் இருக்கும்படி செய்ய வேண்டும். பின்பு கருங்கல்லில் அப்பகுதியைத் தேய்க்க வேண்டும். தேய்க்கப்பட்ட பகுதியில் வேப்பிலையையும் மஞ்சளையும் சேர்த்தரைத்த குழம்பினைத் தடவவேண்டும். ஒரு மாதத்தில் முழுக்குணம் தெரியும். மீண்டும் வெடிப்பே வராது.

எந்த விதமான குஷ்ட ரோகத்தையும் குணப்படுத்தக் கூடிய சக்தி வேப்பம் பட்டைக்கு உண்டு. கீழ்கண்ட முறைப்படி மருந்தைத் தயார் செய்து 90 நாட்கள் வரை தொடர்ந்து சாப்பிட வேண்டும். தினமும் வேப்ப இலையைப் போட்டுக் கொதிக்க வைத்த நீரைக் கொண்டு உடலைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். மருந்து சாப்பிடும் பொழுது மீன், கருவாடு மற்றும் காய்கறி பதார்த்தங்களிலும் பத்திய பதார்த்தங்களுக்கு எதிரானவைகளை உண்ணக் கூடாது. ஆப்பிள், ஆரஞ்சு போன்ற பழ வகைகளையும் பால், மோர், நெய் இவைகளையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறையச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த முறையைத் தவறாது கையாண்டால் எல்லாவிதமான குஷ்ட நோயும் குணமாகும். இந்த மருந்தைத் தயாரிப்பதற்கு நூறு ஆண்டுகள் அல்லது அதற்குமேல் வாழ்ந்து முற்றியிருக்கும் வேப்பமரம் எங்கேயிருக்கிறது என்பதைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.

பிறகு அதன் பட்டையில் சுமார் இரண்டு வீசையளவு சேகரிக்க வேண்டும். இந்தப் பட்டையின் மேல் சொர சொரப்பான பாகத்தை நீக்கிச் சுத்தமான பாகத்தை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான்குபடி தண்ணீர் பிடிக்கக் கூடிய ஒரு சுத்தமான மண் பாத்திரத்தில் நான்குபடி தண்ணீரை விட்டு, அந்தத் தண்ணீரில் இந்த வேப்பம் பட்டையை நைத்துப் போட வேண்டும். பானையை அடுப்பில் வைத்து வேப்பங் கட்டையைக் கொண்டு சிறுதீயாக ஏழு தினங்கள் வரை இடைவிடாமல் எரிக்க வேண்டும். 8-வது நாள் இறக்கி ஆறவைத்து, அந்தச் சாற்றைச் சுத்தமான மெல்லிய துணியால் ஆறுமுறை வடிகட்டி எடுத்துச் சுத்தமான ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்துக் கொள்ள வேண்டும். தினசரி காலையிலும் மாலையிலும் எட்டுத் துளி மருந்தை ஒரு அவுன்ஸ் வெந்நீரில் கலக்கிக் குடித்து வரவேண்டும். நாற்பது நாள் சாப்பிட்டவுடனேயே உடல் பலம் பெறும், உடலில் புதிய இரத்தம் ஓடும். நாற்பது நாளைக்குப்பின் மூன்று நாள் நிறுத்தி மறுபடி 40 நாள் சாப்பிடலாம். இந்த விதமாக நீடித்துச் சாப்பிட்டால் குஷ்டநோய் குணமாகும்.

முற்றின வேப்பம் பட்டையைக் கொண்டுவந்து பொடியாக வெட்டி வெய்யிலில் காயவைத்து இடித்துச் சல்லடையில் சலித்து எடுத்து 200கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதேபோல கருவேலம்பட்டையையும் காயவைத்துத் தூள் செய்து அதில் 200கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு படிக்காரம், வால்மிளகு. திப்பிலி, இந்துப்பு வகைக்கு 5கிராம் வீதம் எடுத்து இடித்துச் சலித்து இத்துடன் சேர்த்துக் கலக்கி வைத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டு, காலை மாலை இதைக் கொண்டு பல் துலக்கி வந்தால் பல் சம்பந்தமான எல்லா நோய்களும் குணமாகும். தொடர்ந்து இந்தப் பற்பொடியை உபயோகித்து வந்தால், வயோதிகமடைந்தாலும் பற்களில் அசைவு ஏற்படாது. எயிறு உறுதியாக பற்களைப் பற்றியிருக்கும். பற்களின் மேலுள்ள இனாமல் தேய்ந்து பற்கள் விகாரமடையாமல் பளபளப்புடன் காணப்படும். பற்களில் பூச்சி உண்டாகாது.

மலச்சிக்கல் காரணமாகவே மூலவியாதிகள் ஆரம்பிக்கின்றன. ஒரே இடத்தில் பல மணி நேரம் உட்கார்ந்திருந்தாலும் மூலநோய் உண்டாகும். பலர் உட்கார்ந்த இடத்திலிருந்தே வேலை செய்கின்றனர். அவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படுகின்றது. ஆதலால் அவர்களுக்கு மூல நோய் வருகின்றது. மூல நோய் ஏற்பட மலச்சிக்கல் ஒன்றேதான் காரணமாகிறது. எட்டு வகையான மூலவியாதிகளைப் பற்றிச் சாத்திரங்கள் கூறுகின்றன. மூலவியாதிக்குப் பல மருந்துகளிருந்தாலும் இந்த ஒரு மருந்து நல்ல பலன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இதற்கு வேப்பம் பருப்பை மட்டும் எடுத்து அதை அரைத்துக் கழற்சிக் காயளவு எடுத்துக் காலை மாலை வாயில் போட்டுச் சிறிதளவு வெந்நீர் குடிக்க வேண்டும். நாற்பது நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எட்டு வகையான மூலவியாதியும் குணமாகும். மூலவியாதி குணமாக இந்த மருந்தைச் சாப்பிடும் பொழுது மிளகாயை நீக்கி மிளகு சேர்த்துக் கொள்ளலாம். அதிக உஷ்ணம் தரும் பதார்த்தங்களையும் விலக்கிச் சாப்பிட்டால், சீக்கிரமே மூலவியாதி குணமாகும்.

வேப்பிலையை நன்றாக வேக வைத்து வீக்கம் உள்ள இடத்தில் கனமாக வைத்துக் கட்டினால் வீக்கம் வாடிவிடும். வீக்கம் முழுமையாகக் குணமாகும் வரை கட்ட வேண்டும். இரவு வேளையில் வீடுகளில், வயற்காடுகளில் பெருச்சாளியின் தொந்தரவு இருந்தால் பெருச்சாளி வரும் வழியில் வேப்பிலையைக் கனமாகப் போட்டு வைத்தால் அந்தப் பக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருச்சாளி வராது. தேவையான அளவு வேப்பங் கொழுந்தைக் கொண்டு வந்து, துகையல் அரைப்பது போல் இஞ்சி, பச்சைமிளகாய், கொத்துமல்லிக் கீரை, புளி வைத்துத் துவையலாக அரைத்துச் சாதத்துடன் வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் எந்த வகையான நோயும் வராது. தொற்று நோய் தொற்றாது. உடல் பலம்பெறும். வயிற்றில் பூச்சிகள் உற்பத்தி யாகா. வயிற்றினுள் நாக்குப் பூச்சி, கொக்கிப்புழு, கீரைப் பூச்சிகள் அதிகமாக உற்பத்தியாகி விட்டால், பெரியவர்களானாலும் சரி சிறுவர்களானாலும் சரி, அவர்கள் உடலில் பலம் இருக்காது. எவ்வளவு நல்ல சத்துள்ள உணவாக உண்டாலும் பூச்சிகள் அந்தச் சத்தை உறிஞ்சி விடும். எனவே நமக்குத் தேவையான சக்தி கிடைக்காமல் போகும். ஆகையால், அவைகளை வெளியேற்றக் கீழ்கண்ட மருந்தைக் கொடுக்க வேண்டும்.

வேப்பங் கொழுந்து கைப்பிடியளவு, வேப்ப ஈர்க்கு, 10 கொட்டை எடுக்கப்பட்ட கடுக்காய் இரண்டு இவைகளைப் பிரண்டையில் சாறு விட்டு அரைத்து எடுத்து, அரை அவுன்ஸ் அளவு சிற்றாமணக் கெண்ணெயை அதில் விட்டுக் கலந்து மூன்று வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் காலையில் ஒரு வேளைமட்டும் கொடுத்து விட்டால் மலத்துடன் அனைத்துவகைப் பூச்சிகளும் வெளியேறி விடும்.

தினசரி காலையில் மட்டும் வேப்பங் கொழுந்து பாக்களவு சாப்பிட்டு வந்தால் சகல பித்தமும் விலகும். பித்தமயக்கம் குணமாகும். பித்தம் தணிய வேறு ஓர் வழியும் உண்டு. பித்தம் அதிகரித்து அதனால் ஏற்படும் சகல வியாதிகளுக்கும் வேப்பஈர்க்கு ஒரு பிடி எடுத்து நைத்து ஒரு சுத்தமான சட்டியில் போட்டு லேசாக வதக்கி விட்டு, அதில் 500மில்லி தண்ணீர் விட்டு 250 மில்லியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 100 மில்லியளவு வீதம் காலை மாலை இரு வேளையாக மூன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாள் சாப்பிட்டால் பித்தம் தணிந்து விடும். பித்த சம்பந்தமான அனைத்து வியாதியும் குணமாகும்.

வேப்பமரம் வருடத்திற்கு ஒரு முறைதான் பூப்பூக்கும். மரத்தின் மேல் ஆங்காங்கே கொத்துக் கொத்தாகப் பூக்கள் மலர்ந்திருப்பதைப் பார்க்கலாம். வேப்பம் பூப் பூத்தவுடன் அவைகள் கீழே உதிர்ந்து விடும். கீழே உதிர்ந்த பூக்கள் ஒன்றிரண்டு நாட்கள் வரை காயாமல் அப்படியே இருக்கும். அதன் பின்னரே வாடிவதங்கிப் போகும். கிராமங்களில் வேப்பமரத்தின் பக்கம் உள்ளவர்கள் வேப்பமரம் பூப்பூக்க ஆரம்பித்தவுடன் வேப்பமரத்தின் அடிப் பாகத்திலுள்ள தரையை நன்றாகச் சுத்தம் செய்து வைத்து விடுவார்கள். வேப்பம் பூக்கள் உதிர்ந்து தரையில் விழுந்து பாய் விரித்தது போலக் காட்சி தரும். அவைகளை அவர்கள் சேகரித்துக் காயவைத்துச் சுத்தம் பார்த்து, பானைகளில் கொட்டி மூடிப் பத்திரப் படுத்தி விடுவார்கள்.

குழந்தைகள் மாவுப் பதார்த்தத்தை அதிகமாகச் சாப்பிடுவதனால் மலச்சிக்கல் ஏற்படும். பால் கொடுக்கும் தாய்மார்கள் மாவுப்பதார்த்தங்கள், பக்குவப்படாத பதார்த்தங்கள், அதிகக் கொழுப்புள்ள உணவு, இவைகளைச் சாப்பிடுவதால், பெருங்குடல், சிறுகுடல் வீக்கம், இரத்தக் குறைவு, மலச்சிக்கல் போன்றவை ஏற்படலாம். இவர் சாப்பிட்ட உணவிற்கு ஏற்ற அளவு தண்ணீர் குடிக்காததனாலும் மலச் சிக்கல் ஏற்படுவதுண்டு. மலச்சிக்கல் காரணமாக நெஞ்செரிவு, தலைவலி, புளியேப்பம், காய்ச்சல், வயிற்றுப் பொருமல், ஆகார வெறுப்பு, தேக அசதி முதலியன உண்டாகும். சில சமயம் வாந்தி இருக்கும். குழந்தைகள் தூங்காது. அடிக்கடி அழும். கீழ்க்கண்ட மருந்துப் பொருள்கள் நல்ல பலன் தரும். வேப்பங்கொழுந்து – 100கிராம், அதிமதுரம் – 100 கிராம், சர்க்கரை – 100 கிராம், பசு நெய் – 200 கிராம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேப்பங் கொழுந்தையும், அதிமதுரத்தையும் நன்றாக நசுக்கி, அ த்துடன் நெய்யை விட்டு நன்றாகக் காய்ச்சி இறக்கி வடித்து அத்துடன் சர்க்கரையைச் சேர்த்து நன்றாகப் பாகுபதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு தினசரி காலை மாலை அரைத் தேக்கரண்டி அளவு குழந்தைகளுக்கும், ஒரு தேக்கரண்டி அளவு சிறுவர்களுக்கும் வயதுக்கு ஏற்றபடி கொடுத்து வந்தால் மலச் சிக்கல் நீங்கும். மலம் சரளமாகக் கழியும்.

புண், சொரி, சிரங்கு, புரையோடியபுண் இவைகளைக் கழுவ வேப்பிலைத் தண்ணீர் மிகவும் ஏற்றதாகும். ஒரு லிட்டர் தண்ணீரில் 250 கிராம் அளவு வேப்பிலையைப் போட்டுக் கஷாயமாகக் காய்ச்சி எடுத்து, அந்த நீரைக் கொண்டு சொரி சிரங்கு, ஆறாத புண், புரையோடிய புண், காயம்பட்ட புண் இவைகளைக் கழுவி விட்டு, பின்பு புண் ஆற்றும் மருந்தைப் போட்டு வந்தால் மேற் கூறிய புண்கள் சீக்கிரமாகவே குணமாகும்.

வீட்டு நாய்கடித்தால் அதற்கும் உடனே மருந்து கொடுத்து விடவேண்டும். இதற்கு வேப்பிலை நல்ல மருந்தாகப் பயன் படுகிறது. வேப்பிலையை அரைத்துக் கொட்டைப்பாக்களவு எடுத்து உள்ளுக்குக் கொடுத்துக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்து விடவேண்டும். மஞ்சள் 200கிராம், வேப்பிலை 50 கிராம் சேர்த்தரைத்துக் கடிவாயில் கட்ட நாயின் விசம் உடலில் ஏறாது. கிராமங்களில் இன்றளவும் இதையே செய்து வருகின்றனர்.

குழந்தைகளுக்கு எந்தவிதமான நோயும் வராதிருக்க நம் நாட்டில் சித்தர்கள் ஓர் எளிய வழியைக் கூறியுள்ளனர். வேப்பங்கொழுந்து 50 கிராம், சுக்கு 50கிராம், மிளகு 50கிராம், திப்பிலி 50கிராம், பூண்டு 50கிராம், சீரகம் 50கிராம், வல்லாரை 50கிராம், அதிவிடயம் 50கிராம், இவைகளை எல்லாம் தட்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்து வைத்துக் கொண்டு சுத்தமான சட்டியை அடுப்பில் வைத்து, கொஞ்சம் சிற்றாமணக் கெண்ணெய் விட்டு எண்ணெய் காய்ந்தபின் அதில் போட்டு நன்றாகச் சிவக்க வறுத்து எடுத்து, அம்மியில் வைத்துத் தண்ணீர் விட்டு மைபோல அரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டைகளாகச் செய்து நன்றாகக் காய வைத்து எடுத்து கொண்டு, குழந்தைகளுக்குத் தலைக்குத் தண்ணீர் ஊற்றியபின் இந்த மாத்திரையில் கொஞ்சம் உறைத்து ஊற்றி விட்டால் குழந்தைகளுக்கு எந்த வகையான வியாதியும் வாழ்நாளில் வராது.

வேம்பு ஆயிரத்தெட்டு என்னும் ஏடு முன்பு இருந்திருக்கின்றது. வழக்கம் போல் காலப்போக்கில் அழிந்துவிட்டது. வேம்பின் ஒவ்வொரு அங்கத்தைப் பற்றியும் பதார்த்த குண சிந்தாமணி என்னும் நூல் விளக்கிச் சொல்கின்றது. செவ்வாய்க் கிழமைதான் சாக்தம் என்னும் சக்தி வழிபாட்டிற்குரியது. ஔவையார் விரதத்தைப் பெண்கள் மட்டும் செவ்வாய் இரவுகளில் இருப்பர். பெண்களுக்குச் சக்தி வழிபாடு சித்தியாகும். குறிப்பாக மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்திற்கு உரியவர்களுக்கு விரைவில் ஆதிபராசக்தி அருள் கிடைக்கும். மற்றவர்களுக்குச் சிறிது தாமதமாக கிடைக்கும்.

தினமும் ஒரு வேப்பிலை கொழுந்துச் சாப்பிடுவது, வேப்பம் புண்ணாக்குப் புகை போடுவது, வேப்ப எண்ணை சோப் குளியல் மற்றும் மஞ்சள் பொடி+நல்லெண்ணெய் விட்ட எலுமிச்சை சாத நைவேத்யம் ஆகியவை ஆதிபராசக்தியின் அருளை விரைவில் கிடைக்கச் செய்யும். வீட்டுக்கு நிலை, ஜன்னல், கதவுகள் வேப்பமரத்தில் செய்து பொருத்துகின்றனர். வாஸ்துவுக்கு வேப்பங்குச்சியை நடுகின்றனர். பிள்ளையார் சிலை வேப்பமரக் கட்டையிலும் செய்கின்றார்கள். வேம்பை வேம்புலட்சுமி என அழைக்கின்றனர். தருமபுரி மாவட்டத்திலுள்ள காளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவில்களில் உள்ள பூசாரிகள் வேப்ப இலைக் கொத்தை கையில் வைத்துக் கொண்டு அருள்வாக்குச் சொல்கின்றார்கள். வேப்ப இலைக்கும் மின்சார சக்தி உண்டென விஞ்ஞானிகள் சொல்கின்றனர். மேல் மருவத்தூர்ச் சித்தர் பீடம் தவத்திரு பங்காரு அடிகளார் வேப்ப இலையைக் கொண்டு பக்தர்களின் துயரை நீக்கி வருகின்றார்கள்.

ஒரு சனிக்கிழமை அன்று குளித்துச் சுத்த மனதுடன் நூறு ஆண்டு ஆன வேப்பமரம் இருக்கும் இடம் செல்ல வேண்டும். அதில் ஏறிக் கையினால் பெரு விரல் தடிமனாக உள்ள ஒரு வேப்பங் குச்சியை ஒடித்து எடுக்க வேண்டும். இரும்பு ஆயுதங்கள் உபயோகிக்கக் கூடாது. ஒடித்து எடுத்த குச்சி வளையாமல் கோணாமல் நேராக இருக்கும் படியான நிலையில் இருக்க வேண்டும். குச்சியின் நீளம் இரண்டு சாண் இருக்க வேண்டும். வீட்டிற்குக் கொண்டு வந்து இரு பக்கமும் உள்ள பிசிறுகளைக் கல்லில் தேய்த்து வழுவழுப்பாக்கிக் கொள்ளவும். பின் அதன்மேல் நயம் சந்தனம் பூசிக் காய வைத்து விடவும். இப்போது தெய்வீக வேப்பங்குச்சி தயார்.

இதை மற்றவர்களுக்காகவும் நீங்கள் தயாரிக்கலாம். ஒரு அமாவாசை தினம் மேற்படி குச்சியை எடுத்து உபயோகிக்க ஆரம்பிக்கலாம். படுக்கை விரித்து அதில் சிறிய தலையணை உயரம் குறைவாக வைக்கவும். அதன்மேல் அதாவது தலையணை மேல் ஒரு புது சிவப்பு நிற ! .ர்க்கிடவல் விரிக்கவும். அதன் மேல் மேற்படி குச்சியை வைக்கவும். அதன்மேல் ஒரு சிவப்புத் துணி விரித்துக் குச்சியை மூட வேண்டும். இரவு 9 மணிக்குமேல் மூடிய குச்சிமேல் தலைவைத்துப் படுக்க வேண்டும். வடக்கே நோக்கி தலைவைத்துப் படுக்க வேண்டும். "ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஆதிபராசக்தியே நமஹ" என மனதால் ஜெபித்துக் கொண்டே தூங்கி விட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15 நாட்களில் சிறு நட்சத்திரங்கள் தோன்றும். பின் அவை மறைந்து 30 நாட்களுக்குப்பின் ஒரு பிரகாசமான நட்சத்திரம் மட்டும் தோன்றும். 45 நாட்களுக்குப் பின் முழு நிலவு தோன்றும். 60 நாட்களுக்குபின் உங்கள் வருங்காலம் படக்காட்சிகளாகத் தோன்றும். பின் தங்கள் யுக்தியை உபயோகப்படுத்திப் பல விதங்களில் விருத்தி செய்து கொள்ளலாம். 90 தினங்களுக்குள் வெற்றி நிச்சயம்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. காலச்சக்கரம்

உலகில் மனித இனம் தோன்றியபின் சிறிது நாகரிகம் ஏற்பட்டபின் மனிதன் காலத்தை அளக்க முற்பட்டான். ஆதியில் மரவழிபாடு செய்து வந்தான். கேரளாவில் ஒச்சரை என்னுமிடத்தில் இன்றும் மர வழிபாடு நடக்கின்றது. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களில் கொடி மரம் முக்கிய அங்கம் வகிக்கின்றது. கொடி மரத்திற்கு அடியில் நின்று நம் கோரிக்கைகளை மனதால் எண்ணினால் கொடி மரம் அவைகளை ஈர்த்து ஆகாயத்துக்கு அனுப்புகின்றது.

கோயிலில் மண்டபங்கள், கருவறை, பிராகாரங்கள், விமானம் போன்ற பலதரப்பட்ட அமைப்புகளில் கொடி மரம் ஒன்று. இவ்வமைப்புகள் யாவுமே தனி ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உண்மையில் ஏற்படக்கூடிய மிகுந்த நெருக்கத்தை உணர்த்தக் கூடியவை. ஆலயம், மந்திரம் போன்ற சொற்கள் இறைவன் உறையும் கோவிலுக்கும் மனிதன் உறையும் வீட்டுக்கும் பொதுச் சொற்கள். கோவிலின் பல பாகங்களும், சிற்ப உருவங்களும், இவற்றில் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட அமைப்பும், வழிபாடும் இருந்தாலும், யாவுமே கோயிலின் முழு அமைப்புக்கு உட்பட்டவையே. இவற்றுள் சிறந்ததொன்று த்வஜஸ்தம்பமெனும் கொடிமரமாகும்.

கோயிலும், அதனுள் உள்ள மூர்த்தியும் நம் உள்ளத்தினுள் உள்ள இறைவனைக் குறிப்பவையாம். இதயத்தைக் குகை என்று கூறுவதும் அதனுள் நாம் பூசிக்க வேண்டிய ஆத்மா உறைகிற தென்பதும் உபநிடதங்களின் பொதுக்கருத்து. சரித்திர காலத்துக்குட்பட்ட மிகப் பழைய கோயில்கள் பல்லவர்களால் கற்களைக் குடைந்து அமைக்கப் பட்டவையென்பது நாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிந்ததே. 'குகைக்கோயில்' நம் இதயக் குகையின் குறிப்பீடாகும். பிற்காலத்திலேயே கோயிலின் விமானம் மற்றும் பலதரப்பட்ட கட்டிட அமைப்புகளும் சேர்க்கப்பட்டன. எவ்வளவு பெரிய கோயிலானாலும், அதற்குள் எத்தனை சிறு கோயில்கள் அடங்கி இருந்தாலும், 'உள்ளத்துறை இறைவன்' என்ற கருத்துக்கு மாறுபாடு இல்லை.

கோயிலில் கொடிமரமானது கோபுரம் அல்லது விமானத்தைப் போன்று நெடிது உயர்ந்து நந்திக்கு எதிரிலோ பின்னரோ, முக்கிய கோபுரத்திற்கு அருகில் உட்பிராகாரத்திலோ வெளிப்பிராகாரத்திலோ அமையும். பெரும்பாலான கோயில்களில் கோபுரத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையில் காணப்படும். பலிபீடம், கொடிமரம், நந்தி மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் உள்ளவை என்பதைக் கவனிக்க வேண்டும். மங்கள வாத்தியங்கள் யாவும் முழுங்க, ஆசார்யர் வ்ருஷ மூலமந்திரத்தைச் சொல்ல, கொடி உயரத்திலுள்ள பலகை வரை ஏற்றப்பட்டு அங்கு உறுதியாகப் பிணைக்கப்படுகிறது. நீண்டு மிகுந்த கயிறும், தர்ப்பைப்பிரியும் துவஜஸ்தம்பத்தில் வலமாகச் சுற்றிக் கட்டப்படுகின்றன.

ஸ்தம்பம் துணியால் சுற்றப்பட்டிருக்க ஸ்தம்பத்தின் அடிப்பாகத்துக்கு நடு வ்ருஷப கும்பத்திலுள்ள நீரால் ப்ரோக்ஷணம் செய்யப்படுகிறது. தண்டத்தின் அடியிலுள்ள தாமரை ஆசனத்தின் எட்டுத் தளங்களில் எட்டு வ்ருஷ வித்யேச்வர கும்பங்களில் உள்ள நீர் முறையே தெளிக்கப் படுகின்றது. பிறகு வாஸனைத் திரவியங்களையும், நைவேத்தியம் மீண்டும் அளிக்க வேண்டும். இதனாலேயே துவஜாரோஹணம் நிறைவு பெறும்.

உற்சவத்தின் பத்து நாட்களிலுமே வ்ருஷ பூஜையும் கொடிமர பூஜையும் செய்யப்படவேண்டுமென்று நூல்கள் விதிக்கின்றன. இது வ்ருஷபத்தின் ஜீவந்யாசத்தையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



படம் : கொடி மரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடியில் இறைதத்துவத்தையும் உறுதிப் படுத்துவதாகும். சுருங்கக் கூறுமிடத்துக் கொடிமரம் ஆகமங்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட மூன்று பொருள்களான பதி பசு, பாசம் என்பவற்றையும் மேலும் எவ்வாறு பசு, பாசத்தை ஒழித்து இறையருளுடன் இறைவனுக்குச் சமமான நிலையை அடைய முடியும் என்பதையும் உணர்த்துகிறது.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழந்தமிழ் வழக்கு. அங்குள்ள எல்லோருடைய மன நிலையையும் ஆன்மீக நிலையையும் கோயிலின் தூய்மை உயர்த்தி வலுவடையச் செய்கிறது என்பதே இதன் பொருள். எவ்வாறு கோயிலின் அமைப்பும் அங்கு நடக்கும் சடங்குகளும் சேர்ந்து தெய்விக நிலையை நிறுவுகின்றன என்பது ஆகமங்களிலிருந்து உணரப்படுகிறது. கேரள மக்கள் எவ்வளவு அவசரமான வேலையாகச் சென்றாலும் இடையில் கோயில் எதிர்ப்படின் அங்குள்ள கொடி மரத்தின் அருகில் சென்று அதனை வணங்கிவிட்டுத்தான் செல்கின்றனர். நாமும் அதுபோல வணங்கினால் காரிய சித்தி கிடைக்கும்.

ஆதிமனிதன் ஒளியைக் கண்டு மகிழ்ந்தான். இருளைக் கண்டு பயந்தான். இடிமின்னலைக் கண்டு மிரண்டான். பெரிய மரங்களை வணங்கினான். அம்மரம் பூக்கும் காய்க்கும் இலை உதிர்க்கும் காலங்களைக் கவனித்தான். அம்மரத்தில் சந்திர ஒளி, சூரிய ஒளி பட்டு ஏற்படும் நிழல்களையும் உற்று நோக்கினான். பின் இன்னின்ன காலங்களில் இன்னென்ன பருவங்கள் இயற்கையாக நடக்கும் என அறியலானான். அமாவாசை, பௌர்ணமி, உத்திராயணம், தட்சிணாயனம் பற்றியும் அறிந்தான். மனித நாகரிகம் விரிவடையத் தொடங்கியது.

உலகில் 3000 ஆண்டுகளுக்கு முன் முதன் முதலில் கடவுளுக்காக ஜெருசலத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட்டது. கட்டியவர் 'டேவிட்' என்பவரின் மகன் ராஜா சாலமன் என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுலைமான் நபி. சந்திர சூரியர்களின் ஒளியைக் கணக்கில் கொண்டு அது கோவில் மீது படுமாறு ஆலயம் கட்டினார். இதுதான் அனைத்துக் கோவில்களுக்கும் முன்னோடி. இந்து, கிறிஸ்துவ, இஸ்லாமியர் வழிபாட்டுத் தலங்கள் மேற்படி ஜெருசலம் கோவிலை அடிப்படையாகக் கொண்டு கட்டப் பட்டவை. பின் அனுபவம் வளர வளரக் கோவில்கள் பல விதத்திலும் காலத்தை அனுசரித்து விரிவாக்கம் பெற்றன.

சூரிய ஒளி வெண்மையானது. ஆனால் நாம் பலவிதமான நிறங்களைக் காண்பதற்குக் காரணம் ஒளியானது தான்படும் பரப்புகளிலிருந்து வேறுவேறு விதமாகப் பிரதிபலிப்பதே. சூரிய ஒளியில் ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழு முக்கிய நிறங்கள் கலந்திருப்பதை நியூட்டன் தமது சோதனைகள் மூலம் உலகிற்குக் காட்டினார். இவ்வேழு நிறங்களுள்ளும் சிறப்பானவை சிவப்பும், நீலமும்தான். சிவப்பு வண்ணம் வெப்ப நிலையினைக் காட்டும். நீலம் குளிர்ச்சியைக் காட்டும். நடுநிலையில் உள்ளது பொன் நிறம்.

ஒளியும் ஒரு ஆற்றலாகும். அது பரவும் இயல்புடையது. ஒளி ஒரு வினாடிக்கு ஒரு லட்சத்து எண்பத்தாறாயிரம் மைல் (1,86,000) வீதம் பரவுகிறது. கடலுக்கு ஆகாயத்தினால் நீல நிறம் உண்டானதாக முதலில் விஞ்ஞானிகள் நினைத்தனர். பின்பு கடல் நீர் ஆகாயத்தைக் காட்டிலும் அதிக நீல நிறத்துடன் இருப்பதைக் கண்டு இக்காரணம் சரியல்லவென்று கைவிடப் பட்டது. தொடர்ந்த ஆராய்ச்சியில் ஆகாயம், கடல் இரண்டின் நீல நிறத்திற்கும் காரணம் சூரிய ஒளிச் சிதறல் என்னும் ஓர் நிகழ்ச்சி என்று அறியப்பட்டது. சிறு துகள்கள் (Atoms) பரவி நிற்கும் ஒரு ஊடகத்தின் வழியே ஓர் ஒளிக்கற்றை செல்லும் போது ஒளியானது பரவித்தான் திசைக்குச் சாய்வான பல திசைகளில் சிதறுகிறது.

சூரிய ஒளியில் பல்வேறு நிற ஒளிகள் அடங்கியிருக்கின்றன. வானவில்லைக் கவனித்தால் என்ன என்ன நிறங்கள் என்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரியும். ஒளியும் ஒலியைப் போல ஓர் அலை இயக்கத்தில் பரவுகிறது. ஒலி அலைகள் பொருள்களின் மூலம் பரவிச் செல்கின்றன. ஒளி அலைகள் எங்கும் வியாபித்திருக்கும் விசும்பில் (Space)ல் பரவிச் செல்கின்றன. ஒலி அலைகளை விட ஒளி அலைகள் மிகவும் நுட்பமானவை.

ஒளிக் கதிர்கள் நேர்கோடுகளில் செல்வன போலத் தோன்றும். ஆனால் அவை மிக நுண்ணிய அலைகளாகச் செல்வதாக நுட்பமான சோதனைகள் பலவற்றின் வழியாக அறியப்பட்டுள்ளது. அலை இயக்கம் நிகழச் சடப் பொருளின் இயல்புள்ள ஊடகம் ஒன்று தேவை. ஆனால் ஒளி இத்தகைய ஊடகம் இன்றியே செல்கிறது. எனினும் அலை இயக்கத்தின் சிறப்பியல்களான இணைதல் (Interference) விளிம்பு மாற்றம் (Diffraction) துருகரணம் (Polarization) ஆகிய விளைவுகள் ஒளி இயக்கத்தில் நிகழக் காண்கின்றோம். எனவேதான் ஒளியானது சடப்பொருள் ஊடகமின்றியே செல்லத்தக்க மின்காந்த அலை வடிவுடையது எனக் கருதப்படுகிறது.

அலைகளில் அவற்றின் நீளத்திற்குத் தக்கவாறு பெரிய அலைகள். சிறிய அலைகள் என்பன உண்டு. ஒளி அலைகளின் நீளம் சாதாரணமாக ஆயிரங்கோடியில் ஒரு பங்கு இருக்கும். ஒவ்வொரு நிறத்திற்கும் உண்டான ஒளி அலைகளின் நீளம் ஒவ்வொரு விதமாக இருக்கும். சிவப்பு நிற ஒளி அலைகள் தான் மற்ற ஒளி அலைகளை விட நீளமானவை. இதைப்போல ஊதா ஒளி அலைகள் தான் பிற நிற ஒளி அலைகளை விட நீளம் குறுகியவை.

ஒளிக்கதிர்கள் செல்லும்போது ஒருவகையான ஆற்றலைக் கடத்துகின்றன. இது இருவகைகளில் நிகழக் கூடும். உதாரணமாக ஒரு ஏரிக்கரையிலிருந்து கொண்டு சற்றுத் தொலைவிலுள்ள ஓர் ஓடத்தை அசைக்க வேண்டுமாயின், அதைத் தாக்கும்படி மரக்கட்டை ஒன்றை அதன் மீது வீசி எறியலாம். அல்லது நீரில் அலைகளைத் தோற்றுவித்து அவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓடத்தை அடையுமாறு செய்து அதை இயக்கலாம். இதே போன்று ஒளியாற்றல் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்தை அடைந்து தாக்குவதும் இரு வகைகளில் நிகழக் கூடும். அது சிறு துகள்களாகக் கிளம்பி இன்னோரிடத்தை அடைந்து அதைத் தாக்கலாம். அல்லது அலை வடிவாகப் பரவிச் சென்று தாக்கலாம். இவ்விரு முறைகளுக்கும் ஏற்ப ஒளியின் இயக்கத்தை விளக்க இரு கொள்கைகள் தோன்றின. இவற்றுள் முதலாவது 'துகள் கொள்கை' (Corpuscular theory) என்றும், இரண்டாவது அலைக் கொள்கை (Wave theory) என்றும் கூறப்படும். சூரியனது ஒளி கடல் பரப்பின் மீது மட்டும் பிரதிபலித்துத் திரும்பி வரவில்லை. சிறிது தூரம் கடலின் உட்சென்றுதான் திரும்பி வெளி வருகின்றது. இவ்வாறு உட்செல்லும் ஒளியின் பகுதி இடத்துக்கு இடம் வேறுபடும். சூரியக் கிரணங்கள் செங்குத்தாய் விழும் இடங்களும் உண்டு. சாய்வாய் விழும் இடங்களும் உண்டு. உட்சென்று வெளி வரும்போது சூரியனது ஒளி சில நிறங்களை இழந்து விடுகின்றது. உட்சென்ற ஒளி நீர்த்துளிகளைத் தாக்கும் போது ஒளிச்சிதறல் உண்டாகிறது. பல நிற ஒளிகள் அவற்றின் அலை நீளங்களுக்குத் தகுந்தாற்போலச் சிதறடிக்கப் படுகின்றன. இச்சிதறலினால் நீல நிறம் நீங்கலாக மற்ற நிற ஒளிகள் எல்லாம் கடலைவிட்டு வெளிப்படுவதில்லை. எனவே நமக்குக் கடல் நீல நிறமாகத் தோன்றுகிறது. இதைப் போலவே ஆகாயத்தைத் தாண்டி வரும்போது சூரிய ஒளியில் நீல நிற ஒளி நீங்கலாக மற்ற நிற ஒளிகள் சிதறப்படுகின்றன. நீரைவிட ஆகாயம் அடர்த்திக் குறைவானதால் அது சற்று மங்கிய நீலமாகத் தோன்றுகிறது.

காலத்தைச் சூரியன் ஒளியினை வைத்துக் கணக்கிடத் துவங்கினர். நீங்கள் இப்போது கோவில்களில் பார்க்கும் பிரகார மண்டபங்கள், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், கோபுரம் ஆகியவைகளின் நிழலை வைத்துத் துல்லியமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலத்தைக் கணித்தனர். தினமும் கோவிலில் பஞ்சாங்கம் படிக்கப்பட்டது. பௌர்ணமியை அனுசரித்துத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இப்போது பலவிதப் பஞ்சாங்கங்களில் பலவிதக் கால நேரங்கள் மாறுபடுவதுபோல் கோவிலுக்குக் கோவில் காலக்கணிதம் மாறுபட்டது. இந்திய நேரத்திற்கும் அமெரிக்க நேரத்திற்கும் உள்ள வித்தியாசம் அனைவரும் அறிந்ததே. மெய்ஞானம் மட்டும் இருந்த உலகில் விஞ்ஞானம் வளரத் தலைப்பட்டது. மேலைநாட்டில் சூரியனையும் அதன் பாகைகளையும் கொண்டு பல கணக்குகள் போட்டனர். சூரியன் தான் 84 லட்சம் உயிரினங்களும் பிழைக்கக் காரணம் என அறிந்தனர். மேல்நாட்டுச் சோதிடர்கள் சூரியன் நின்ற இடத்தை வைத்துத்தான் சோதிடம் கணிப்பார்கள். சூரிய வழிபாடு பெர்சியாவில் இருந்து தான் இங்கு வந்தது. இங்கு அது சௌரம் என அழைக்கப்பட்டது. சூரியவழிபாட்டினால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெற்றது. கார்த்திகை, உத்திரம், உத்திராட நட்சத்திரங்கள் சூரியனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. நம் நாட்டுச் சோதிட நூல்கள் சூரியனைப் பிதிர், ஆத்மா, சதாசிவன், சைவம், தைரியம், அரசு, உத்யோகம், சௌகரியம், பஞ்சலோகம், சூக்கும சரீரம் இவைகளுடன் சம்பந்தப்படுத்திப் பலன்கள் கூறுகின்றனர்.

கோவில்களில் சூரியன் நவக்கிரகங்களுக்கு நடுநாயகமாக வைத்து வழிபடப்படுகின்றார். சில கோவில்களில் சூரியனுக்கு தனிச் சந்நிதி உண்டு. பல கோவில்களில் மூலஸ்தானங்களில் குறிப்பிட்ட தினங்களில் சூரிய ஒளிபடும்படி கட்டியிருக்கின்றனர். சூரியன் ஒவ்வொரு தமிழ் மாதப்பிறப்பின் போதும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படுகின்றார். சூரியனுக்குண்டான தானியம் கோதுமை. சூரியனுடைய முழுச் சக்தி வெள்ளெருக்கு மற்றும் தொட்டாற் சுருங்கி தாவரத்தில் உள்ளன. இராவணனை முதலில் இராமனால் வெற்றி கொள்ள முடியவில்லை. அகத்தியர் இராமனுக்கு ஆதித்தஇருதய சுலோகத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபதேசித்தார். அதன்பின்தான் இராமன் வெற்றி பெற்றார். கண் பார்வை சரியில்லாதோர் "ஓம் ஸ்ரீம் ஆதித்யாய ஹ்ருதயாய நமஹ" என ஜெபித்து வந்தால் கண் பார்வை தெளிவடையும்.

அறிவு வளர்ச்சிக்கும் நினைவுச் சக்தி கூடவும் நமக்கு சூரியன் உதவி செய்கின்றது. பொருட் செலவில்லாமல் இந்த நலத்தினை நாம் பெறலாம். பிரபுஞ்சசக்திகள் அனைத்தும் சூரிய கிரணங்கள் வழியாக மண்ணுலகை அடைகின்றன. இறைவனின் முத்தொழிலும் மண்ணுலகைப் பொறுத்தவரை சூரியன் மூலமாகவே நடைபெறுகின்றன. சூரிய கிரணங்கள் வழியாக நாம் உயிர்சக்தியை மட்டும் பெறவில்லை. அதன் வழியாகத்தான் அறிவையும், பெறுகிறோம். ஒரு வேதமந்திரம் சொல்கிறது "சூரியனே" எந்தப் பேரறிவை நீ தேவர்களுக்கும், பித்துருக்களுக்கும் கொடுக்கிறாயோ, அந்தப் பேரறிவை எனக்கும் கொடு."

மேலே சொன்னவைகளிலிருந்து "சூரியன்தான் மண்ணுலக உயிர்களின் அறிவுக்கு ஆதாரம், எவனொருவனுக்குச் சூரிய சக்தி அதிகமாயிருக்கிறதோ அவன் பேரறிவாளனா யிருப்பான்" என்பதைப் புரிந்து கொள்ளலாம். விடியற் காலையும், மாலையும் சூரிய கிரணங்கள் பூமிக்கு நேர் செங்குத்தாகப் படாமல், வானத்தில் பரவி, அங்கிருந்து பிரதிப்பலிப்பாகப் பூமிக்கு வருகின்றது. இந்த நேரத்தை சந்தியா, உசாக் காலம், பிரம்ம மூர்த்தம் என்று அழைக்கின்றோம். "பிரம்மமூர்த்தம்" என்றால் அறிவு பரவும் காலம் என்று பொருள். "வைகறைத் துயிலெழு" என்பது பழங்காலப் பழமொழி. சந்தியாகாலத்தில் சூரியகிரணங்கள் வானத்தில் பரவி, வடிகட்டப்பட்டுப் பூமிக்கு வருகின்றன. அப்போது சூரிய கிரணங்களிலுள்ள அறிவுச் சக்திகள், தெய்வசக்திகள் நீல வொளியாகப் பரவுகின்றன. மேலே விளக்கிய கூற்றுக்களிலிருந்து அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புபவன் விடியற்காலை கண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விழிக்க வேண்டும். மாணவர்களும், பிறரும் சூரியனின் அறிவுச் சக்தியை எளிய முறையில் பெறலாம். அதிகாலை 3½-4 மணிக்கிடையில் துயில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டு, துவைத்த ஆடைகளை அணிந்து கொண்டு, தரைமேல் துணிவிரித்து, அதன்மேல் கிழக்குமுகம் பார்த்தமர்ந்து, எதிரில் நீர்ப்பாத்திரம் வைத்து, கரண்டியில் நீர் எடுத்து, வலது உள்ளங்கையில் விட்டு, ஆசமன மந்திரம் தெரிந்தால் சொல்லி, மூன்று முறை உறிஞ்சிக் குடியுங்கள். இது ஆரோக்கியம் பெறுவதற்கான சாதனையாகும். உசத்கால சூரியஒளி "பின்ஊதா" (Ultra Voilet) கிரணங்கள். நீரில் எளிதில் கலக்கின்றன. அதனால் இப்படிக் கலந்த நீரை உள்ளங்கையில் விட்டுப் பருகி வந்தால் நோயில்லாமல் வாழமுடியும்.

சுமார் 5½ மணிக்கு, சூரியபிம்பம் அடிவானத்தில் தோன்றப் 15 நிமிடங்கள் முன், எழுந்து வெறுந் தரையில் கிழக்குமுகமாய் நின்று, கால்களைச் சற்றுப் பிரித்து வைத்து, முகத்தை முன், பின் வளைக்காமல் நேராக வைத்து, வாயை நன்றாக அகலத் திறந்து அதன் வழி மெதுவாக, நிறையக் காற்றை உள்ளிழுங்கள். பின்பு உதடுகளை மூடுங்கள், பின்பு காற்றைப் பந்தனம் செய்தபின் மூக்கின் வழியாக மெதுவாக முழுக்காற்றையும் வெளிவிட்டுவிடுங்கள். இப்படி 10 முதல் 15 நிமிடங்கள் செய்யுங்கள். பிறகு கீழே அமர்ந்து, சில நிமிடங்கள் சும்மாயிருந்தபின் சென்று உங்கள் நாள்வேலைகளைக் கவனியுங்கள். இந்தப் பயிற்சியே பலர் "சூரிய கிரணபானம்" எனச் சொல்கின்றனர். நீங்கள் காற்றை உள்ளுக்கு இழுக்கும் பொழுது சூரியனின் அறிவுக் கிரணங்கள் உள்ளே புகுகின்றன. நாளுக்குநாள் உங்கள் அறிவு வளர்ந்து, பிறகு அப்போது அறிவு பேரறிவாக வளர்ந்து, சில ஆண்டுகளின் தொடர் சாதனையின் பேரில் பிரம்ம ஞானமாக (Cosmic Intelligence) வளர்ச்சியடையும்.

தற்கால விஞ்ஞானிகள் சூரிய ஒளியை ஆராய்ந்து அது எப்படி அனைத்து உயிரினங்களையும் "போட்டோசிந்தசைஸ்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



படம் : சூரிய ஒளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் முறையில் இயங்குகின்றது எனக் கண்டு பிடித்துள்ளனர். சூரிய பேட்டரியால் இயங்கும் விளக்கு, மோட்டார், விமானம், செயற்கைக்கோள் என அறிவியல் பெருகிக் கொண்டே போகின்றது. சூரிய ஒளியை கேஸ் சிலிண்டரில் அடைக்க ஆராய்ச்சி செய்கின்றனர். சூரிய ஒளியை ஆயுதமாகப் பயன்படுத்தலாமா? என ஆராய்ச்சி செய்கின்றனர். மேலை நாடுகளில் சன்பாத் என்னும் சூரியக் குளியலால் உடல் உபாதைகள் நீங்கப் பெறுகின்றனர். சூரிய ஒளியை ஒரு முப்பட்டைக் கண்ணாடி மூலம் பிரிக்கையில் கீழ்க்கண்ட நிற மாலைகள் கதிர் வீச்சுக்கள் உண்டாகின்றன.

மேற்படத்தில் உள்ள 1,2,9,10 ஆகியவை கண்களுக்குத் தெரியாதவை. மனம், புத்தி, சித்தம், ஆணவம் ஆகியவை களுடன் தொடர்பு உடையவை. சூக்கும உடலைச் சார்ந்தவை. மேற்படி படத்தில் உள்ள 3,4,5,6,7,8 ஆகியவை நம் ஸ்தூல உடலுடன் சார்ந்தவை. கண்களுக்குத் தெரியக் கூடியவை. எண் 1க்கு உரியவர்கள் ரூபி என்னும் மாணிக்க மோதிரத்தை அணிவதன் மூலம் ஒளி சக்தியையும் அக்கினிச் சக்தியையும் பெறலாம். இன்னும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.

நம் நாட்டில் சூரிய நமஸ்காரம் பற்றிய அறிவு வேத காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. சூரிய புராணம் மற்றும் உபநிடதங்கள் இவ்வழிபாடு பற்றி விரிவாகச் சொல்கின்றன. ஒன்பது கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள சூரியனை நம் இரு கண்களால் காண்கின்றோம். சூரியனுக்கும் நம் வலது நாசிக்கும் தொடர்பு உண்டு. நம் முந்தைய பிறப்புகளுக்குச் சாட்சியாக இருந்தது சூரியன்தான். இனிவரப் போகும் பிறவிகளுக்குச் சாட்சியாக இருக்கப் போவதும் இந்தச் சூரியன்தான். சூரிய நமஸ்காரம் என்ற பெயரில் தண்டால், பஸ்கி எல்லாம் எடுத்து உடலை மட்டும் வலுப்படுத்துகின்றனர்.

சூரியன்தான் அனைத்து ஆற்றல்களுக்கும் மூலம். சூரியன் இல்லையேல் இந்நில உலகம் உயிரற்று வறண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போகும். அனேக ஆயிரம் ஆண்டுகளாக இந்தியர்கள் சூரியனிடமிருந்து ஆற்றல் பெறுவதை ஒரு விஞ்ஞானமாக வளர்த்து வந்துள்ளார்கள். மேலை நாடுகளில் தொழில் புரட்சி ஏற்பட்ட பிறகு மரஞ்செடி, கொடிகள் பல தொழில்களுக்கு மூலப் பொருளாக உபயோகப்படுவதைக் கண்டு பிடித்தனர். அதனால் அவை பெருமளவில் குறுகிய காலத்தில் அழிக்கப்படவே, அண்மைக் காலத்தில் அறிஞர்கள் வேறு வழிகளில் ஆற்றலைக் கண்டுபிடித்து அவற்றைத் தக்க கருவிகளின் மூலம் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். நமது நாட்டிலும் சூரிய வெப்பத்தில் இயங்கும் அடுப்புகளும், நேரடியாகத் தண்ணீரை ஆவியாக்கும் ஹீட்டர்களும் கண்டு பிடித்துள்ளார்கள். நமது உடலை ஆராக்கியமாக வைத்துக் கொள்ளவும் சூரிய வெப்பம் உபயோகமாகும். இது பல சோதனைகள் மூலம் உறுதியாகி யுள்ளது. சூரியன் உதயமானவுடன் அவன்முன் நின்று அவனது கிரணங்களை நம் உடம்புள் பாயவிடுவதனால் நம் உடம்பு தனக்கு வேண்டிய அன்றாட ஆற்றலில் ஒரு பகுதியைப் பெறுகிறது. உடலின் பகுதி அனைத்தும் ஆற்றல்பெற வேண்டுமானால் சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும். சூரிய நமஸ்காரங்கள் பன்னிரெண்டு. சூரிய நமஸ்காரம் ஜீரண நமஸ்காரம் ஜீரண மண்டலத்திற்கு உயிரூட்டி ஆற்றலை அறிகின்றது. கல்லீரல், வயிறு, மண்ணீரல், குடல்கள் எல்லாம் கசக்கிக் கசக்கிப் பிடித்துவிடுவது போன்ற மசாஜ் செய்யப்படுகின்றன. அதனால் செரிமானம் துரிதப்படுகின்றது. மலச்சிக்கல் மறையும், குன்மமும், பசியின்மையும் பறந்தோடும். வயிற்றுத் தசைகள் சூரிய நமஸ்காரத்தில் வலுப்பெறும். வயிற்றுக்குள் இருக்கும் அங்க அவயவங்கள் தாம் இயல்பாக இருக்க வேண்டிய இடங்களில் அமைந்து தத்தம் பணிகளைக் குறைவின்றிச் செய்யும். வயிற்றுறுப்புகளில் எக்காரணம் கொண்டும் இரத்தம் தங்காது. இவற்றால் உடல்நலம் உறுதிபெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரிய நமஸ்காரத்தில் உடல் அசைவுகளும், மூச்சு ஓட்டமும் இணக்கமாக நடைபெறுகின்றன. நுரையீரல்களில் காற்றோட்டம் தாராளமாகின்றது. இரத்தம் உயிர்க்காற்றால் நலம் பெறுகிறது. ஏராளமான கரிக் காற்றையும் பிற நச்சுப் பொருள்களையும் மூச்சு மண்டலத்திலிருந்து வெளியேற்றுவதன் மூலம் சூரிய நமஸ்காரம் உடலுக்குப் பெரும் நன்மை விளைவிக்கிறது. சூரிய நமஸ்காரத்தால் உடலில் உள்ள தசைகள் அனைத்தும் வலுவடைகின்றன. குறிப்பாகக் கழுத்து, தோள், கை, மணிக்கட்டு, வயிற்றுச் சுவர், தொடை, கெண்டைக்கால், கணுக்கால் முதலிய பகுதிகளின் தசைகள் பயிற்சியால் உரம் பெறுகின்றன. கொழுப்பால் வயிறு, தொடை, இடுப்பு, கழுத்து, நாடி முதலிய இடங்களில் உண்டாகும் மடிப்புகள் மறையும்.

மாறி, மாறி மடக்கி நீட்டி, நரம்பு மண்டலத்தை விழிப்புடன் இருக்க வைப்பதில் இணையானது சில யோகாசனங்களைத் தவிர வேறு எவ்வித உடற்பயிற்சியும் இல்லை. ஸிம்பதட்டிக், பாராஸிம்பதட்டிக் நரம்புகளின் செயல்களை நெறிப்படுத்துவதன் மூலம் நல்ல ஓய்வுக்கும், உறக்கத்துக்கும் வழிகோல உதவுகின்றது. இதனால் நினைவாற்றல் அதிகரிக்கின்றது. பிற உயிரணுக்களைக் காட்டிலும் நரம்பு உயிரணுக்கள் மிகமிகத் தாமதமாகவே விழிப்புற்று உயிராற்றல் பெறுகின்றன. இருப்பினும் இடையறா முறையான பயிற்சியாலும், சலியாத முயற்சியாலும் சிறுகச் சிறுக நரம்பு உயிரணுக்கள் தத்தம் சாதாரணக் காரியங்களைச் செய்யத்தக்க வலுவை அடைகின்றன. சூரிய நமஸ்காரத்தில் கழுத்து முன்பின் வளைகின்றது. இதனால் தைராயிடு, பாரா தைராயிடு சுரப்பிகளுக்கு இரத்தம் கிடைக்கின்றது. இவை செயல்படுவதால் எல்லா என்டோக்கிரைன் சுரப்பிகளும் தமக்குரிய இயல்பான காரியங்களைச் செய்கின்றன. ஆளுமை வளர்ச்சிக்கு இது முக்கியம். தோல் புத்துணர்வு பெற்றுப் பொலிவடைகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சூரிய நமஸ்காரத்தை முறைப்படி செய்யும்போது சிறிது வியர்வை உண்டாகும். ஏராளமாக உடலில் உள்ள நச்சுப் பொருள்கள் தோலின் வழியே வெளியேறும். நன்றாக வியர்க்கும் வரை இப்பயிற்சி செய்வது நல்லதென சூரிய நமஸ்கார வல்லுநர்கள் கூறுகின்றனர். எந்த அளவுக்குத் தோலின் மூலம் வியர்வை வெளி வருகிறதோ அந்த அளவுக்கு உடல்நலம் வளரும்.

சூரிய நமஸ்காரத்தால் உடல் சரியான அளவில் அமைவதால், அது எந்த விளையாட்டுக்கும், வேலைக்கும் எப்போதும் தயார் நிலையில் இருக்கும். இளமை, மணம், அழகு மூன்றும் ஒருங்கே அமைந்து உடலுக்கும், உயிருக்கும் சூரிய நமஸ்காரம் அழியா இன்பத்தைக் கொடுக்கவல்லது. சூரிய நமஸ்காரத்திற்குச் செலவொன்றுமில்லை. விலைக்கு வாங்க வேண்டிய கருவிகள் எதுவும் தேவையில்லை. வேண்டிய தெல்லாம் காலைச் சூரியனும் அவன் முன் நின்றும், குனிந்தும், நிமிர்ந்தும், வளைந்தும், கிடந்தும் செய்யச் சிறிதளவு நிலம் மட்டும் போதும். சூரிய நமஸ்காரத்தைப் பழகப் பழக இன்பம் அதிகரிக்கும். நோய் நொடிகள் அணுகா, வந்தவையும் இலகுவில், நாளடைவில் மறையும். நீரிழிவு, மனவியாதி, இரத்தக் கொதிப்பு, இருதய நோய் போன்றவை குணமடையச் சூரிய நமஸ்காரம் செய்யலாம். சூரிய நமஸ்காரத்தைப் போலவே யோகாசனங்களும் உடல் நலம் தரவல்லன. ஆனால் உடலுக்கு வேண்டிய வெப்பத்தைச் சூரியனிடமிருந்து நேரடியாகப் பெறுவது சூரிய நமஸ்காரத்தின் சிறப்பு. ஒரு நமஸ்காரத்தில் ஏழு ஆசனங்கள் இருக்கின்றன. இந்த ஏழு ஆசனங்களின் பலனும் ஒரு நமஸ்காரம் செய்வதால் கிடைக்கின்றது. ஆனால் இத்தகைய சூரிய நமஸ்காரத்தினை அனைவராலும் செய்ய முடியவில்லை. சைவ உணவு மன அமைதியை தரும். எத்தனையோ கோடி செலவில் மேல் நாட்டினர் சூரியனைப் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாம் ஓர் எளிய வழியில் சூரியனைப் பயன்படுத்தலாம். சூரிய ஆதிக்கத்தில் பிறந்த வசதியுள்ளவர்களும் பிறந்த 1 எண்காரர்களும் ரூபிகல் மோதிரம் வலது கைமோதிர விரலில் அணிந்து கொள்ளலாம். மற்றவர்கள் வெள்ளெருக்கு மணிமாலையைக் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். அதிகாலை எழுந்து காலைக் கடன் முடித்து முகம் கைகால்கள் அலம்ப வேண்டும். குளிக்க முடிந்தவர்கள் குளிக்கலாம். சூரிய காயத்திரி மந்திரம் தெரிந்தவர்கள் 21 தடவை ஜெபிக்கலாம். தெரியாவிட்டாலும் குற்றமில்லை. பின் நம் முகத்தைக் கண்ணாடியில் நன்றாகப் பார்க்க வேண்டும். பின் மாடி அல்லது உயரமான இடத்திலிருந்து சூரியன் உதயமாவதைப் பார்க்க வேண்டும். முழு அளவில் தங்கத் தாம்பாளம் போல் உதயமாகும். இரு கைகூப்பி அதை வணங்க வேண்டும். கண்ணாடியில் பார்த்த உங்கள் முகத்தைச் சூரியனில் பார்க்க முயலவேண்டும். 10 நிமிடங்களுக்கு மேல் பார்க்க முயலக் கூடாது. ஒரு நாளைக்கு 10 நிமிடப் பயிற்சி தான்.

சூரியன் உதயமாகிப் 10 நிமிடம் கழிந்துவிட்டால் பின் விசகலை என்னும் நீலக் கலர் சூரியனில் வந்து விடும். பரபரப்பு இல்லாமல் அமைதியாக சூரியனைப் பார்க்க முயல வேண்டும். இப்பயிற்சியைச் செய்து வரவர உங்கள் மனோசக்தி கூடும். மனோசக்தி கூடினால் ஆன்மிக சக்தி வளர்ச்சி அடையும். வெளியிடங்கள், வெளியூர்களிலோ அல்லது வேறு வெளிநாடுகளிலோ உள்ள உங்கள் நண்பரின் முகத்தை இங்குள்ள சூரியனில் எண்ணுங்கள். இந்தச் சூரியன் அங்கு ஒளி வீசும் போது நீங்கள் அனுப்பிய செய்தியை உங்கள் நண்பரின் மனதில் பதிய வைக்கும். மேலும் இப்பயிற்சி பல சாதனைகள் செய்ய உங்கள் மூளைக்கு அறிவுறுத்தும். அருட் பெருஞ்சோதியாகிய சூரியன் ஆக்கவும் செய்யும் அழிக்கவும் செய்யும் என்பதை அறியவும். இறைவனின் வடிவான சூரியனை வழிபட்டு நலன்கள் பல பெறுவோம்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. சோடசகலைத் தியானம்

ஆன்மிகம் என்று தனியாக ஒரு நிலை இல்லை. மணி, மந்திரம், ஔடதம் கலந்ததுதான் ஆன்மிகம். அதனால்தான் சித்தர்கள் பாடல்களில் ஜோதிடம், மந்திரம், மருத்துவம் கலந்திருக்கும். காலம் என்பது ஒன்றுஉண்டு அக்காலக் கணிதம் தெரியாமல் எது செய்தாலும் விருத்தியாகாது. வெற்றியைத் தராது. திருவள்ளுவர்கூட ஊழ்வினையைப் பற்றி எழுதியிருந்தாலும் காலத்தைப் பற்றியும் தனது குறளில் சொல்லியிருக்கின்றார். காலச்சக்கரம் (Time Wheel) தனிமனித வாழ்க்கையை, சமுதாய வாழ்க்கையை, ஒரு நாட்டின் வரலாற்றை மாற்றி அமைக்கின்றது. பெரும் வல்லரசான ரஷ்யா பல்வேறு துண்டுகளாகச் சிதறுவதை நம் கண்களாலேயே காண்கின்றோம். இதெல்லாம் காலம் செய்யும் கோலம். அமாவாசை, பௌர்ணமி, என்பது காலச்சக்கரத்தின் முக்கியமான நாட்கள். வாழ்க்கைச் சக்கரத்தையும் சலனப் படுத்துகின்றது. மேல் நாட்டில் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் அதிக இறப்புகள் ஏற்படுகின்றன. அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. மனநோயாளிகள் பாதிக்கப் படுகின்றனர். ஏன்? என ஆராய்ந்து வருகின்றனர்.

அமாவாசை என்பது சந்திரனும் சூரியனும் ஒரே ராசியில் சேரும் நாள். பௌர்ணமி என்பது சூரியனுக்கு நேர் எதிரில் தனியாகச் சந்திரன் பிரகாசிக்கும் நாள். அமாவாசை ஆண்களை வெகுவாகப் பாதிக்கின்றது. பௌர்ணமி பெண்களை அதிகமாகப் பாதிக்கின்றது. அனைத்து உயிரினங் களையும் இந்த இரண்டு திதிகளும் சலனப்படுத்துகின்றன. சந்திரன் ஸ்தூல உடலையும் சூரியன் சூட்சும உடலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயக்குகின்றன. அமாவாசை, பௌர்ணமி கண்டமான நாள் எனச் சாதாரண ஆட்கள் கூட சொல்லிவிடுவார்கள்.

அமாவாசை, பௌர்ணமிகளில் என்னென்ன செய்யலாம் அல்லது செய்யக் கூடாது என சோதிட சாத்திரங்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. வளர்பிறையில் பிரதமை முதல் பௌர்ணமி வரை 15 திதிகள் அதாவது கலைகள். தேய்பிறையில் பிரதமை முதல் அமாவாசை வரை 15 திதிகள். திதிகள் என்பது கலைகள். இதுதான் பஞ்சாங்கத்தில் உள்ளது. இக்கட்டுரையின் தலைப்பு சோடச கலை என்பது. இந்த 16வது எங்கிருந்து வந்தது? இதன் ரகசியம் என்ன? என்பது அனுபவித்தபின் ஆராய தக்கது. அனுபவம் முந்தியது சாத்திரம் பிந்தியது. அமாவாசை பூசை, பௌர்ணமி பூசை என்பதெல்லாம் இந்த சோடச கலையில்தான் நடத்த வேண்டும்.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியவர்களின் அம்சமான திருமூர்த்தி இந்த சோடச கலையில் தனது அருளைச் சில நொடிகள் மட்டும் பொழிகின்றார். சுமார் ஐந்து நொடிகள் அதாவது ஐந்து சொடக்குப் போடும் நேர மட்டும் திருமூர்த்தியின் அருள் உலக முழுவதும் பரவும். திருமூர்த்தியின் அருள் உலக முழுவதும் பரவும். திருமூர்த்தியைக் கிறிஸ்தவர்கள் Trinity எனச் சொல்வார்கள். இந்தப் 16வது கலையின் இரகசியத்தைச் சித்தர்களும் முனிவர்களும் நன்கு அறிந்திருந்தனர். இந்தச் சோடச கலையில் தியானம் செய்து அவர்களுக்குத் தேவையானதைப் பெற்றார்கள். இது குரு, சிஷ்யபரம் பரையில் அறியப்பட்டுச் சாதனை செய்து வருகின்றனர். வட இந்திய ஆஸ்ரமங்களில் மாதம் இருமுறை மட்டும் இந்த சோடச கலையில் தியானம் செய்து. அவர்களுக்கு வேண்டியதைப் பெறுகின்றனர். நாம் வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டமாதலால் நாமும் இக்கலையைப் பற்றி அறிய தகுதி உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அமாவாசை எப்பொழுது முடிகின்றது. பிரதமை எப்பொழுது ஆரம்பிக்கின்றது என்பதை அவரவர்கள் வசிக்கும் டிகிரிப்படி கணித்து உள்ளூர்ப் பத்திரிகைகள் வெளியிடும். அதைக் கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும். உதாரணமாக அமாவாசை காலை 10-20 வரை. பின் பிரதமை திதி ஆரம்பம் என எழுதியிருப்பார்கள். அமாவாசை திதி முடியுமுன் ஒரு மணி நேரம் முன்பே 9.20 க்கே தியானத்தில் உட்கார வேண்டும். பிரதமை ஆரம்பித்து ஒரு மணி வரை அதாவது 11.20 வரை தியானத்தில் இருக்க வேண்டும். இந்த இரண்டு மணி நேரத்திற்குள் ஒரு சில நொடிப் பொழுதுகள் (சுமார் 5 நொடிப் பொழுதுகள்) திரிமூர்த்தியின் ஆளுகைக்கு இந்த அண்டங்கள் எல்லாம் வருகின்றன.

அண்டங்களும் அனைத்து உயிரினங்களும் சூட்சுமமாக அதிரும். அந்த நேரம் மனதால் நாம் என்ன வரம் வேண்டுகின்றோமோ அது கிடைக்கும் கோரிக்கை ஒன்றாக இருக்க வேண்டும். பலவாக இருக்கக்கூடாது. ஒன்று நிறைவேறியபின் மற்றதை வேண்டாம். இதே மாதிரிதான் பௌர்ணமி திதி முடிந்து பிரதமை ஆரம்பிக்கும்போதும் செய்யலாம். மாறிமாறிச் செய்யும் போது சில மாதங்களில் சித்தியாகும். சிலருக்கு ஒரே தடவை தியானத்திலேயே கிடைத்து விடுகின்றது. இது அவரவர்கள் உடல் பூதியத்தை பொறுத்தது. மன ஒருமையைப் பொறுத்தது. திருமூர்த்தி சாதனை செய்வோருக்கு ஒலியாகவோ அல்லது ஒளியாகவோ அருள் வழங்குகின்றார். திருமணம், நோய் நீங்கல், வேலை வாய்ப்பு, வழக்கு வெற்றி, ஆராய்ச்சி படிப்புகள், உபாசனாசக்தி போன்ற நியாயமான கோரிக்கைகள் இறைவனால் ஏற்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் அருளப்படும்.

தியானம் வீட்டிலோ, கோயிலிலோ மற்றும் அமைதியான இடத்தில் செய்ய வேண்டும். வெறும் தரையில் உட்கார கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வயிறு காலியாக இருக்க வேண்டும். சைவ உணவு ஆன்மீக மன நிலையை உருவாக்கும். நிமிர்ந்து ஏதாவது ஒரு ஆசனத்தில் இருக்கலாம். உடைகள் இறுகலாக இருக்கக் கூடாது. திருஷ்டியைப் புருவ மத்தியில் (அல்லது) மூக்கின் நுனியில் வைக்கலாம். வாசியோகம் மெதுவாகச் செய்யலாம் (அல்லது) ஏதாவது ஒரு மந்திர ஜெபம் மனதுக்குள் உதடு அசையாமல் செய்யலாம். மன ஒருமைப்பாட்டில் தேர்ச்சி உள்ளவர்களுக்கு மேற்சொன்ன இரண்டும் தேவையில்லை.

அமைதியுடன் வடகிழக்குப் பார்த்துக் கோரிக்கையை நினைத்த வண்ணம் கண்களை மூடி இருந்தால் போதும். தியான நேரம் பட்டினி இருந்தால் கிரகக்கதிர் வீச்சுக்கள் நம்மை அதிகம் பாதிக்கா. லங்கணம் பரம ஔடதம். இந்தத் தியானம் ஜாதி, மதம், மொழி, தேசம் ஆகியவை கடந்தது. மன வைராக்யம் நிச்சயம் வெற்றி தரும். கோயம்புத்தூர் ஜோதிட மாநாட்டில் இந்தச் சோடச கலைத் தியானத்தைக் ''கால நிர்ணயம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றி மகரிஷி தயானந்த ஜோதி அவர்களின் ஆசியைப் பெற்றேன்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. உபாசனா சக்தி

உலகின் தோன்றிய ஆதிமனிதன் மிருக வாழ்க்கையை நடத்தினான். பின் இயற்கை சீற்றங்களைக் கண்டும் வேற்று மனிதக் கூட்டங்களைக் கண்டும் மிருகங்களைக் கண்டும் பயந்தான். அந்தப் பயத்தின் காரணமாகவே தெய்வ வழிபாடு உலகில் தோன்றியது. ஆவி வணக்கம், மரவணக்கம், மிருகவணக்கம், தனிமனிதவணக்கம், தெய்வவணக்கம் என அவரவர்களுக்குத் தோன்றிய எண்ணப்படி சிலைகள் வடித்து வழிபட்டனர். இன்றைக்கும் வழிபட்டு வருகின்றனர். பிற்காலத்தில் வந்த எத்தனையோ மஹான்கள் ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவைப் பற்றியும் அதையடையும் மார்க்கங்களை எடுத்துக் கூறியும் பெரும்பாலோர் ஏற்று கொள்வதாக இல்லை. தற்கொலை செய்து கொண்டவர்களையும், கொலை செய்யப்பட்டவர்களையும், விபத்தில் மாண்டவர்களையும், போரில் மாண்டவர்களையும், சதி என்னும் தீக்குளித்து மாண்டவர்களையும் கன்னியாக இறந்தவர்களையும் காவல் தெய்வமாக எண்ணி மக்கள் வழிபட்டு வருகின்றனர். அவைகளுக்குத் திருவிழா எடுத்துப் பலிகளும் கொடுக்கின்றனர்.

சமீபகாலத்தில் அவதரித்த ஜோதி இராமலிங்க சுவாமிகள் அன்பின் மூலமும் தயை என்னும் இரக்க குணம் மூலமும் ஜோதி வழிபாட்டின் மூலமும் அருட்பெருஞ் சோதி ஆண்டவரைத் தரிசிக்கலாம் என உபதேசித்தார்கள். அதையும் ஒரு சிலரே ஏற்றுக் கொண்டனர். “கடைவிரித்தோம், கொள்வாரில்லை. கட்டிவிட்டேன்” என மனவருத்தப்பட்டார். ஆண்டாண்டு காலமாக மக்கள் ஒரு வழிபாட்டில் நம்பிக்கை வைத்துள்ளபோது அதை மாற்றுவது எளிதல்ல எனப் பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மஹான்கள் அனுபவத்தில் கண்டனர்! வெகுஜன அபிப்பிராயத்துக்குத் தகுந்தபடி மதத்தலைவர்களும், மதங்களும் வளைந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது! ஆன்மிகத்தில் எல்லோரும் உடனே ஒரு உயர் நிலையை அடைவார்கள் என எதிர்பார்க்க முடியாது. படிப்படியாகத்தான் அடையமுடியும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. சிறு குழந்தைக்கு விளையாடப் பலவித பொம்மைகள் கொடுக்கின்றோம். சிறு குழந்தைகள் அந்தப் பொம்மைகளைக் குளிப்பாட்டி, ஆடை அணிவித்து, பின் ஆகாரம் ஊட்டுகின்றது. திருப்தியடைகின்றது. வயதான பின்தான் அவைகள் பொம்மை என்னும் அறிவு பின் ஏற்படுகின்றது!

ஆன்மிகத்தில் உள்ள சிறு குழந்தைகளும் சில விக்கிரக வழிபாட்டை முக்கியமாகக் கருதி வழிபட்டு இறுதியில் அவைகளை விட்டு வாசியோகம் அல்லது ஆத்ம விசாரணை என்னும் நிலைக்கு வருகின்றனர். அவரவர் மனோநிலை மற்றும் திடமான நம்பிக்கையின் அடிப்படையில்தான் உலகம் மற்றும் இறைசக்தி செயல்படுகின்றது. நம்பிக்கை என்னும் கோட்பாடு அனைத்து மதங்களிலும் உண்டு. மதங்களின் முதலீடே நம்பிக்கைதான். என்றைக்கு ஒரு மனிதன் தன் நம்பிக்கையை இழக்கின்றானோ அன்றே எல்லாவற்றையும் இழந்து விடுகின்றான். ஹிட்லருக்கு அசாத்தியமான தன்நம்பிக்கை இருந்தது. அதனால் உலகப் போரில் இறங்கி உலகத்தையே ஒரு கலக்கு கலக்கினான்.

மகாத்மா காந்திக்கு அகிம்சையின் மேல் அதீத நம்பிக்கை. அதன் விளைவாக விடுதலைப்போரில் நமக்குச் சுதந்திரம் வாங்கி கொடுத்தார். மேலைநாட்டு விஞ்ஞானமும் இந்திய நாட்டின் ஆன்மிகமும் இணைந்து இந்தியா இனி ஒரு வல்லரசாக மாறும் என்பது சுவாமி விவேகானந்தரின் நம்பிக்கை. அதுவே அவரது தீர்க்க தரிசனமாக வெளிப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாளைக்கு நமக்கு நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கையில்தான் மனிதன் காலத்தைக் கடக்கின்றான். அனைத்து மத பரிகாரங்களும் நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்படுவை.

உபாசனா தெய்வங்களில் வினாயகர், முருகன், ஆஞ்சநேயர், கருடன், காளி, வராஹி, மைக்கேல் எனப் பல சக்திகளை வணங்குகின்றனர். அவைகளின் அருளைப்பெற பலவகை உபாயங்களைக் கையாளுகின்றனர். விநாயகர் எனப்படும் யானை அனைத்து மதங்களுக்கும் பொதுவானது. ஆனைமுகன் வழிபாடு உலகம் முழுவதும் உண்டு. விநாயகரை வணங்காமல் எந்தத் தேவதையை வழிபட்டாலும் சிக்கலில் மாட்டித் தவிப்பர். அநேக துறவிகள் கணபதியை வணங்காததால் மாயை என்னும் பெண்கள் சிக்கலில் சிக்கி அவமானம் அடைந்தனர்.

ஒரு மனிதன் பிறந்தது முதல் இடுகாடு சென்ற பிறகும் விநாயகர் வழிபாடு பல கட்டங்களில் நடக்கும். வெள்ளெருக்கு சூரியனுடைய சக்தியைப் பெற்றிருப்பதால் ஒவ்வொருவர் வீட்டிலும் வெள்ளெருக்கு விநாயகர் வைத்திருப்பது நல்லது. விநாயகர் தவிர மற்ற தெய்வங்களை மந்திரம் சொல்லி வழிபாடுவர்கள் பல கஷ்டங்களை அடைந்தனர். அனேகருக்கு மனைவி, மக்கள் இல்லாது போயிற்று. ஏராளமான பேர் கைப்பொருளையும் இழந்தனர். நிறைய பேர்களுக்குச் சித்தப்பிரம்ம பிடித்து விட்டது. காரணம் மேற்படி தெய்வங்கள் எனச் சொல்லப்படுபவை. இறந்த ஆவிநிலைகளே. அவைகள் மந்திர சக்திக்குக் கட்டுப்படுவது அபூர்வம். மேலும் அபாயம் நிறைந்தது.

சில அருளாளர்களிடமும், ஞானிகளிடமும், யோகிகளிடமும் இவை தானாக வந்து ஏவல் செய்யும். ஒருவன் காளியின் அருளைப்பெற வேண்டுமானால் இராமகிருஷ்ண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமஹம்சரை வணங்கினால் போதும். ஒருவன் ஆஞ்சனேயரின் அனுக்கிரகத்தைப் பெற வேண்டுமானால் ஸ்ரீஇராமரை வணங்கினால் போதும். கருட உபாசனையில் சித்தி பெற வேண்டுபவர் கிருஷ்ண மந்திரம் ஜெபித்தால் போதும். ஹயக்கிரீவர் அருளை அடைய விருப்பம் உள்ளவர்கள் ராகவேந்திரரைப் பூஜித்தால் போதும். சக்தி வழிபாடு வேண்டுபவர்கள் ஆதிசங்கரரை வணங்கினால் போதும். திருமூலரை வணங்கினால் சிவகணங்கள் வசியப்படும்.

இயேசுவை வணங்கினால் மைக்கேல் தேவதை வந்து பணிந்து நிற்கும். அல்லாவைத் தொழுதால் மலக்குகள் நீங்கள் இட்ட கட்டளையை செய்யும். அனைத்துத் தேவதைகளும் அஷ்ட கர்மம் என்னும் எட்டுவிதச் செயல்களைச் செய்யும். அதில் நமக்கு வேண்டியது ஆகர்ஷணம் என்னும் சித்தி. அந்த ஆகர்ஷணத்திலும் தனஆகர்ஷணம் தான் அனைத்து மக்களாலும் விரும்பப்படுகின்றது. பணம் இருந்தால்தான் அனேககாரியங்கள் நடைபெறும். பணநெருக்கடியால் ஐக்கிய நாட்டுச் சபையே திண்டாடுகின்றது. மனிதன் என்பவனுக்கு ஆசை வேண்டும். அதனால் ஊக்கம் ஏற்படும். பேராசை கூடாது. பேராசை பெரும் நஷ்டம் மற்றும் பேரழிவு உண்டு பண்ணும்.

உங்களுடைய உபாசனா தெய்வத்திடம் நேர்வழியில் எனக்குப் பொருள் வேண்டும் என வேண்டலாம். மற்றவர் உடைமைகளைக் குறிப்பிட்டு வேண்டினால் அதனால் ஆபத்து உண்டாகலாம். நாம் செய்யும் நல்ல தொழில்களில் தனம் கிடைத்தால் போதும். நல்லவர்கள் பணம் கிடைத்தால் போதும். நல்லவர்கள் பணம்தான் நமக்கு வர பிரார்த்திக்க வேண்டும். இதுதான் நீடித்து நிற்கும். மேலும் நமக்கு வரும் பொருளில் நம்மால் இயன்றவரை வீடுவாசல், இல்லாதோர்க்கு அன்னதானம் செய்தல் வேண்டும். தான தருமங்கள் இல்லாத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாடு விரைவில் அழியும். அன்னதானத்தை விடச் சிறந்த யக்ஞமோ பூஜையோ யோகமோ கிடையாது. நீங்கள் இறைவனை எந்த ரூபத்தில் வணங்கினாலும் மூலாதாரச் சக்தி என்னும் குண்டலினி சக்திதான் செயல்படுகின்றது. அதுபுற உலகிலுள்ள ஐம்பூத சக்திகளை உங்களுக்குக் கீழ்ப்படிய வைக்கின்றது.

நற்சிந்தனை, நற்செயல்கள், இரக்க குணம் உள்ளவர்கள் மட்டும் நல்ல பயனை அடைவார்கள். தரையில் இருந்து ஜெபம் செய்வதை விட மாடியில் இருந்து மனதால் ஜெபம் செய்தால் பலன் அதிகரிக்கும். ஜெபம் செய்யும்போது ஒரு செம்புப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொள்ளவும். ஜெபம் முடிந்ததும் அதனைக் குடித்தால் மந்திர ஒலியலைகள் உங்களுள் பதிந்துவிடும். உபாசனா சக்திக்குத் தீப, தூப, நைவேத்தியம் வேண்டும். சங்கீதத்தின் மூலம் உபாசனா சக்தியைப் பெறலாம். சைவ உணவு உண்டு சாந்தமான தெய்வங்களை வணங்குவது நல்லது. ஒரு நபர் பல தெய்வங்களை உபாசனை செய்யக் கூடாது.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. வாசியோகம்

உலகம் உண்டாகக் காரணம் ஐம்பத்தொரு அட்சர ஒலிகள்தான். உலகில் ஆண்டவனால் படைக்கப்பட்ட மனிதனுக்கு முக்கியமானது நன்மை தீமை அறியக்கூடிய மனமும் அதை இயக்குகின்ற சுவாசமும் தான் பிரதானமானவை. எங்கு மூச்சு நிற்கின்றதோ அங்கு மனம் ஒடுங்கும். எங்கு மனம் ஒடுங்குகின்றதோ அங்கு மூச்சு ஒடுங்கும். நம் உடல் வலது மூக்கில் ஓடும் சூரியகலை சுவாசத்தாலும், இடது மூக்கில் ஓடும் சந்திரகலை சுவாசத்தாலும் வெப்பம் மற்றும் குளிர்ச்சி பெற்று இயங்குகின்றது. இதில் மாறுபாடு ஏற்படும் பொழுது உடல் சுகவீனம் ஏற்படுகின்றது. இதை ஒழுங்குபடுத்தவும் மனிதனுக்குள் இருக்கும் அதீத சக்தியை வெளிக் கொண்டு வரவும் ஆதியிலே அஷ்டாங்க யோகம் என்னும் முறையை உருவாக்கினர். அதன் அடிப்படையில் தோன்றியது தான் இதர யோகங்கள். ராஜயோகம், சிவராஜயோகம், ஹடயோகம், மந்திரயோகம், தந்திரயோகம், குண்டலினியோகம், நவகுண்டயோகம் முதலியன மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை சிரசில் கொண்டு சேர்க்கும் வேலையைச் செய்கின்றன. யோகம் என்றால் சேர்க்கை என்று பொருள்.

ஒரு மனிதன் போன ஜென்மத்திலேயே சரியை மற்றும் கிரியைகளை முடித்திருந்தால் தான் இந்த ஜென்மத்தில் யோக நிலையைப் பற்றிச் சிந்திப்பான். ஆதியில் நாக வழிபாடு இருந்தது. நாகம் சுவாசம் விடுவது போல் மனிதனும் விட்டான். பின் பல்வேறு சுவாச கதிகள் தோன்றின. சுவாசம் என்பதை மூச்சுக்காற்று வாசி எனவும் சொல்வார்கள். 18 சித்தர்களும் 18 வகையான மூச்சுப்பயிற்சியை உபதேசித்தனர். மூச்சுப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயிற்சி என்பது பிராணாயமம். கதி என்றும் சொல்வார்கள். குக்குடகதி, சிம்மகதி, ஸர்ப்பகதி எனப் 18 வகைக் கதிகள் உண்டு. இதை அடிப்படையாக வைத்துத்தான் பல்வேறு ஆசிரமங்களில் பல்வேறு யோக நிலைகளை உபதேசம் செய்கின்றனர். கோயம்புத்தூர் மதுக்கரை தர்மசாலாவில் குறைந்த செலவில் மகரிஷி தயானந்தஜோதி வாசியோகம் கற்பிக்கின்றார்கள். மதுரை சம்மட்டிபுரத்தில் இளங்கோ ஸ்வாமிகள் சிறிய காணிக்கையில் வாசியோகம் சொல்லித் தருகின்றார்கள். குற்றாலம் ஐந்தருவி சங்கராஸ்ரமத்தில் சித்தவேதம் சொல்லிக் கொடுத்து அஜபாகாயத்திரி என்னும் வாசியோகத்தை இலவசமாக உபதேசம் செய்விக்கின்றார்கள்.

மனிதன் எண்ணும் நல்ல எண்ணம் செயல்பட்டாக வேண்டும். எண்ணத்தின் சக்தி வலிமையுள்ளதாக இருக்க வேண்டும். பின் ஏன் மனித எண்ணங்கள் செயல்படாமல் தோல்வியில் முடிகின்றன? என்பது ஆராயத் தக்கது. 1. அசைவ உணவு. 2. அஜீரணம். 3. மலச்சிக்கல். 4. சுவாசம் தொப்புள் முதல் உச்சந்தலை வரை போகாமல் தடைபடுதல். 5. சுக்கிலம் என்னும் வீரியத்தைப் பல்வேறு வகையில் விரயப்படுதல் ஆகிய ஐந்தும் நம் தோல்விக்கு முக்கிய காரணம். எந்த யோகமாக இருந்தாலும் சரி. மூல வியாதி மட்டும் வராமல் இருக்க வேண்டும். வாசி யோகத்திற்குக் குருநாதர் அவசியம் வேண்டும். குருவிடம் அவ்வப்போது சாதனையைக் காட்டி விளக்கம் பெறுதல் வேண்டும். யோகிகளும் விநாயகரை வணங்குகின்றனர். விநாயகர் அகவலே ஒரு யோக நிலைவிளக்கம் தான்! அதைத் தினம் படிப்பது நல்லது. சத்துவகுண ஆகாரங்கள் சாப்பிட்டு மிகவும் பொறுமையாகவும், அடக்கமாகவும் இருந்தால் யோக நிலை சித்திக்கும். நம் உடலிலிருந்து ஆல்பா கதிர் வீச்சுக்கள் உண்டாகும். முதிர்ந்த யோகிகளுக்குத் தலையைச் சுற்றி ஒளிவட்டம் உண்டாகும்.

வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்றி உரை

இதுவரை என்னுடைய 20 ஆராய்ச்சி கட்டுரைகளைப் படித்துஓரளவு தங்களுக்குச் சில உண்மைகள் புலப்பட்டிருக்கும். பெரிய பெரிய மரங்களை வேரோடு பிடுங்கும் யானைக்குத் தன்பலம் தெரியாது. தெரிந்தால் அது ஒரு சாதாரண மாவுத்தன் பின் செல்லாது. அதுபோல் மனிதர்கள் தங்களுக்குள் இருக்கம் அளவு கடந்த சக்தியினை அறியாமல் இருக்கின்றனர். அதனால் பல்வேறு நபர்களின் பின் செல்கின்றார்கள். முதலில் தன்னுள் இருக்கும் அதீதச் சக்திகளை உணரவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் அருளுரை யாற்றினார்கள். மேற்படி 20 பயிற்சியையும் செய்ய முடியாதவர்கள் ஒரு திருவிளைக்கைப் பார்த்து மனதால் ஓம் ஓம் எனச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும் நாளா வட்டத்தில் அவர்களுக்கு அநேக விளக்கம் கிடைக்கும். என்னதான் பூஜை புனஸ்காரம், யோகம் என எது செய்தாலும் நம் கர்மாவை எளிதில் மாற்றக் வடிய சக்தி அன்னதானத்திற்கு உண்டு என்பதை அறியவும். வீடுவாசல் இல்லாத அனாதைகளுக்கு அன்னதானம் செய்வதுதான் சிறப்பு.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுக் குறைந்த விலையில் ஆன்மிக அன்பர்களுக்கு வழங்கியதற்காககப் என் உடன் பிறந்த சகோதரன் பண்டிட்ப ாலன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த ''ஆன்மிகத் திறவு கோல்'' அன்பளிப்புக்கு உரிய புத்தகம் என்பதில் சந்தேகமே இல்லை. இப்புத்தகம் ஒவ்வொரு நூலகத்திலும் இடம்பெற வேண்டியது அவசியம். வாழ்க அறமுடன். வளர்க அருளுடன்.

மிஸ்டிக் செல்வம்

ஆன்மிகத் தொண்டன்

தென்காசி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிஸ்டிக் செல்வம் என்பவரும் பண்டிட் பாலன் என்பவரும் ஓர்தாய் பெற்ற உடன் பிறந்த சகோதரர்கள். பிஸ்டிக் செல்வம் புறவழிபாடு முறையில் அறிஞர் என்றாள். பண்டிட் பாலன் அகவழிபாட்டில் பண்டிட் ஆவார். இவரே ஸ்ரீவராஹி பதிப்பக உரிமையாளருமாவார். மிஸ்டிக் செல்வம் வாழ்வாதாரத்திற்காக யாரும் உதவிக்கு வராத காலத்திலேயே உடன் பிறப்பினை 3 நூல்கள் எழுதச் செய்து அதனை வெளியிட்டு பொருளாதார செம்மை பெற்றார்கள்.

3 நூல்களின் பதிப்பு காப்புரிமைகள் பண்டிட் பாலன் அவர்களிடம் உள்ளது. இனியாரும் நகலெடுத்து வெளியிட்டால் சட்டபடி காவல்துறை நடவடிக்கை எடுக்கப்படும். மிஸ்டிக் செல்வம் பயிற்சி வகுப்புகள் எடுத்தார்கள்.

அதற்கு முன்பே பண்டிட் ஜி சூட்சம சக்தி வகுப்புகள் எடுத்துள்ளார்கள். இன்றும் வகுப்புகள் எடுத்து வருகின்றார்கள். இவரது சூட்சம சக்தி, பணம், ஸ்ரீவாராஹி ஆகிய நூல்களையும் நாங்களே மறுபதிப்பாக வெளியிட்டுள்ளோம். மேலும் விவரங்கள் வேண்டுவோர் panditbalan.blogspot.com வெப்சைட்டில் காண்க.

அன்புடன்

விதைவெளியீடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமரகசியம்! பரமரகசியம்! என்று மகான்கள் வெளியிடாமல் மறைத்து வைத்திருந்த ஞானப்புதையல்கள் எல்லோரும் அறியும்படி வெளிப்படையாக இந்த நூலில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இப்புத்தகத்தினுள்ளே உயிர் உள்ளவை முதல், உயிரற்றவை வரை உள்ள எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமான 'இறைவனை' நீங்கள் காணலாம். 'இறைவன்' என்பது ஒரு சிறு சொல்தான். ஆனால், அதனைச் சிறிது ஆராய்ந்து பாருங்கள். அது எவ்வளவு பொருள் பொதிந்த, உயிர்மிக்க சொல் என்பது உங்களுக்குப் புலப்படும். இந்த ஒரு சொல்லே, உலகிலுள்ள பொருள்களின் ரகசியத்தை வெளியாக்கும் திறவுகோலாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு ஆன்மிகச் செயலுக்கு ஒரு திறவு கோலாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் ஆன்மிக வழிகாட்டி மிஸ்டிக் செல்வம் ஐயா அவர்கள் கி.பி.1937-ம் ஆண்டு ராஜபாளையத்தில் சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். கி.பி.1960-ம் ஆண்டு சித்ரா பௌர்ணமியன்று ஐந்தருவி தவத்திரு.சங்கரானந்தாவிடம் அஜபா காயத்ரி உபதேசம் பெற்றார். பின்னர் ஆன்மிக அன்பர்கள், யோகிகள், சாத்திர வல்லுநர்கள், சித்தர்கள் ஆகியோரின் நட்பையும், ஆசியையும் பெற்றதுடன், பயிற்சிகளையும் மேற்கொண்டார். மிஸ்டிக் செல்வம் அவர்கள் சித்த மார்க்கம், அஷ்டகர்மம், அஷ்டாங்க யோகம், மானசயோகம், மூலிகை மர்மங்கள், சூட்சும உலகம், மந்திர ரகசியம், கிரக இயக்கங்கள், பிரபஞ்ச கதிர்வீச்சுகள், ஜோதி வழிபாடு, சூரிய வழிபாடு, மதங்களின் வணக்கமுறை, விஞ்ஞான சைவம் ஆகியவற்றைப் பற்றி முழுமையாக ஆராய்ச்சி செய்துள்ளார்.

₹ 225

வசு வெளியீடு

VV 038